பக்கங்கள் : முப்பத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 23 ஞாயிற்றுக்கிழமை (09.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 317

# இந்தியா, பாகிஸ்தானை நிலநடுக்கம் உலுக்கியது!

## 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் பலி!





இஸ்லாமாபாத்,ஒக்.9

பாகிஸ்தானின் வடபகுதியையும், வட இந்திய மாநிலங்களையும் பெரும் பூகம்பம் தாக்கியிருக்கின்றது.

இதில் 2ஆயிரத்து 500இற்கும் அதிகமா னோர் மாண்டுவிட்டனர். சொத்துகளுக்குப் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானிலேயேபேரழிவுகள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு உயிரிழந்தோர் தொகை ஆயிரமாக இருக் கும் என்று அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

நேற்றைய நிலநடுக்கம் பாகிஸ்தானின் இந்துகுஷ் மலையில் மையம் கொண்டிருந்ததாக நிலவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இஸ்லாமாபாத்தில் சில அடுக்குமாடி குடியிருப்புகள் இடிந்து விழுந்தன. சேத விவரம் தெரியவில்லை.

இந்த நிலநடுக்கம் 7.6 ரிச்டர் அளவுக்கு பதிவாகியுள்ளது. இதன் காரணமாக சுனாமி வர வாய்ப்பில்லை. கடலுக்குள் நிலநடுக்கம் ஏற்பட்டால்தான் சுனாமி அச்சம் உண்டு என்று சென்னை வானிலை மையம் தெரிவித்தது.

வட இந்திய மாநிலங்களைத் தொடர்ந்து அண்டை நாடான பாகிஸ்தானில் காலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதுகுறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அப்தாப் அகமத் கான் தெரிவிக்கையில் - (18ஆம் பக்கம் பார்க்க)

# கொலைகள், வன்செயல்களைப் புரிந்து புலிகள் மீது பழி சுமத்தும் அரசியல் சதி!

## கண்காணிப்புக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் முறையீடு

கிளிநொச்சி,ஒக்ரோபர்9

**“இலங்கை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள தமிழர் தாயகப் பகுதியில் கொலைகளும் வன்முறைகளும் கட்டு மட்டில்லாமல் அதிகரித்துள்ளன. இத்தகைய வன்முறைகளைப் புரிந்துவிட்டு புலிகள் மீது பழி சுமத்தும் அரசியல் சதித்திட்டம் ஒன்று அரங்கேறுகின்றது. இந்த மிக மோசமான நிலைமையைக் கண்காணிப்புக் குழு தனது கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அர்த்தமுள்ள வகையில் உறுதியான நடவடிக்கை எடுத்து அப்பாவிகளின் உயிரைக் காப்பாற்றவும் யுத்தநிறுத்தத்தின் மேன்மையைப் பேணவும் உதவுங்கள்.”**

- இப்படி இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை கடிதம் மூலம் கோரியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இதுதொடர்பாகக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு நேற்றுமுன்தினம் தாம் அனுப்பிவைத்த கடிதம் ஒன்றிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அந்தக் கடிதத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

இராணுவம் நிலைகொண்டுள்ள பிரதேசங்களில் வன்முறை மற்றும் கொலைச் சம்பவங்கள் கட்டுமட்டில்லாமல் அதிகரித்திருப்பது (18ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அமைப்புப் பிரதிநிதிகள் இவ்வாரம் வன்னி வருகின்றனர்

கிளிநொச்சி,ஒக்.9

சர்வதேச அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் பலரும் இந்தவாரம் வன்னிக்கு வருகைதந்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தலைவர்களோடு பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

உலக உணவு நிறுவனத்தின் ரோம் தலைமையக நிறைவேற்றுப் பணிப்பாளர் நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி வருகின்றார்.

யுனிசெவ் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாகப் புதிதாகப் பதவியேற்றுள்ள வெங்கர் பென் ஜே அனா அம்மையார் நாளைமறுதினம் கிளிநொச்சி வருகின்றார்.

இந்தப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடல்களை நடத்துவர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலை புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளின் பயணத்துக்குத் தடை விதிக்கப்பட்டபின்னர் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் வன்னிக்கு வருகைதருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## ஜே.வி.பிக்கு 115 லட்சம் ரூபா கொடுத்தார் சதாம் ஹுசைன்!

ரோகண விஜேவீரவின் மைத்துனர் பரபரப்புப்பேட்டி - உள்ளே

## மஹிந்தவின் பிரசாரம் இன்று அ'புரத்தில் ஆரம்பம்

கொழும்பு,ஒக்.9

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசாரத்தை இன்று அனுராதபுரத்தில் மகாபோதியில் விசேட வழிபாடுகளுடன் ஆரம்பிக்கின்றார்.

இன்று பிற்பகல் மகாபோதியில் விசேட சமய வழிபாடுகளில் கலந்துகொண்ட பின்னர் அங்கு இடம்பெறும் முதலாவது பிரசாரக்கூட்டத்தில் ராஜபக்ஷ உரையாற்றுவார்.

மஹிந்தவை ஆதரித்து ஜனாதிபதி 7 கூட்டங்களில் மட்டுமே உரையாற்றவிருக்கின்றார். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடக்கும் கூட்டத்தில் சந்திரிகா உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ரணிலின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்றுக் கண்டியில்

கொழும்பு,ஒக்.9

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க கண்டியில் மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டபின்னர் தனது முதலாவது பிரசாரக் கூட்டத்தை நேற்று நடத்தினார்.

கண்டியில் மதவைபவங்களுடன் அவர் ஆரம்பித்த பிரசாரத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்தினவும் இந்தப் பிரசாரத்தில் பங்கு கொண்டார். (ஐ-3)

## புலிகள் பிரதேசத்திலிருந்து வாக்களிக்க வருவோர் மீது தீவிர உடற் பரிசோதனை

கொழும்பு,ஒக்.9

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வாக்களிக்க வருகைதருபவர்கள் முழுமையான - தீவிர - பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்படவிருக்கின்றனர்.

முப்படைத்தளபதிகள், பொலீஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஆகியோர் இவ்வாரம் நடத்திய விசேட தேர்தல் காலப் பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்தில் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்டிக்கோவும் கலந்து கொண்டார்.

வடக்கில் முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய சோதனை நிலையங்கள் ஊடாகவும் - கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் நகருக்குள் பிரவேசிக்கும் சோதனை நிலையங்கள் ஊடாகவும் - வாக்களிக்க வரும் வாக்காளர்களை அங்குவைத்து தீவிர உடற்பரிசோதனை செய்த பின்னரே வாக்களிக்க அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் மூலமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதங்கள் மற்றும் குண்டுகள் கடத்தப் படக் கூடிய ஏது நிலை தற்சமயம் காணப்படுவதால் இச் சோதனைகளை நடத்தவேண்டியது அவசியமாகின்றது. (18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலிகள் பகுதி மக்கள் வாக்களிக்க மட்டக்களப்பில் 88 நிலையங்கள்

மட்டக்களப்பு,ஒக்.9

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களிக்க வசதியாக 88 கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்படவிருக்கின்றன.

கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாக்களிக்க உரிய நிலையங்கள் அமைப்பது என்பன பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல் கடந்த 6ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சி.புண்ணியமூர்த்தி தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இந்த வாக்களிப்பு நிலையங்கள் செங்கலடி, கிரான், வெல்லாவெளி, ஓட்டமாவடி, வவுணதீவு, ஆரையம்பதி, வாகரை, மட்டக்களப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் அமைக்கப்படும்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதி வாக்காளர்களுக்காக மட்டக்களப்பில் 4 நிலையங்களும் கல்குடாவில் ஒரு நிலையமும் பட்டிருப்பில் 2 நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் செங்கலடி, சித்தாண்டி, சந்திவெளி, கிரான், நாசிவன்தீவு, பனிச்சங்கேணி, மாங்கேணி, மண்முனைத்துறை, வவுணதீவு, மண்டூர், பட்டிருப்பு, அம்பிலாந்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர், 223ஆவது படைப்பிரிவு கட்டளைத்தளபதி, காரைதீவு விசேட அதிரடிப்படை தளபதி, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர், மட்டக்களப்பு விசேட அதிரடிப்படை அதிகாரி, மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-204)

## பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் சொற்பொழிவு

வடமராட்சி,ஒக்.9

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்ச்சியில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற ஆசிரியர் மா.பாலேந்திரம் சொற்பொழிவாற்றுவார். (ஐ-173)

## புத்தூரில் கடத்தப்பட்டவர் தாக்கப்பட்டு மரணம்!

அச்சுவேலி,ஒக்.9

புத்தூர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு பலமாகத் தாக்கப்பட்ட ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் கிருபைரத்தினம் (வயது57) என்பவரே மரணமானவராவார்.

பிரஸ்தாபநபர் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார் என்று கூறப்படுகிறது.

பின்னர் அவர் படுகாயங்களுடன் புத்தூர் அண்ணமார் கோயிலுக்கு அருகில் உள்ள காவலரணுக்குச் சமீபமாககிடக்கக் காணப்பட்டார். அங்கிருந்து மீட்கப்பட்ட அவர் பின்னர் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலன் அளிக்காத நிலையில் இரவு 10 மணியளவில் அவர் மரணமானார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் குறித்து விசாரணைநடத்திய மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (ஐ-3-7-11)

## கிளிநொச்சி ம.வித்தியாலயத்தில் இன்றும் சுகாதாரக் கண்காட்சி

கிளிநொச்சி,ஒக்.9

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று ஆரம்பமாகிய சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காசநோய், போசாக்கு குறைபாட்டு நோய்கள், நாய்க் கடியும் நீர் வெறுப்பு நோயும், வீதி விபத்துகள், தற்கொலை தொடர்பான பிரதான பிரச்சினைகள் மற்றும் ஏனைய சுகாதார பிரச்சினைகள் குறித்து இக்கண்காட்சியில் விளக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார், குழந்தைகளுக்கான மேலதிக போசாக்கு, சோயா மாவின் பாவனை, பயன்பாடு என்பன குறித்தும் கண்காட்சியில் செயன்முறை விளக்கம் அளிக்கப்படுகின்றது.

தரம் 7ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பயன்தரக்கூடியதாக இந்தக் கண்காட்சி அமைந்துள்ளதால் சகல மாணவர்களும் பார்வையிட்டுப் பயனடையலாம் எனக் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ஐ-204)

## மோ. சைக்கிளின் பின்னால் அமர்ந்திருந்தவர் வீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம்,ஒக்.9

நல்லூர் சட்டநாதர் கோயிலடியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த 9 பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைகளின் தந்தையான செல்லத்தம்பி செல்வராசா (வயது 43) என்ற கூலித் தொழிலாளியே உயிரிழந்தவராவார்.

கூலிவேலை ஒன்றுக்காக பிரஸ்தாப நபரை வேறு ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் அழைத்துச்சென்றார் என்றும் கூறப்படுகின்றது.

பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோயிலடியில் குறுக்கே வந்த சைக்கிள் ஒன்றுக்காக மோட்டார் சைக்கிளோட்டி திடீரென 'பிறேக்' போட்ட சமயம் பின்னால் அமர்ந்திருந்த இந்த நபர் கீழே வீழ்ந்து தலையில் காயமடைந்தார். சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்றுக்காலை அங்கு மரணமானார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை நடத்தி மரண விசாரணையின்பின் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டார். (ஐ-3)

## யாழ். அரச அலுவலர்களின் ஆதரவு கோரி மஹிந்த கடிதம்

வலி.தென்மேற்கு, ஒக்.9

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு வாக்களிக்குமாறு கேட்டு மஹிந்த ராஜபக்ஷவின் பெயரில் அச்சிட்ட கடிதங்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இக்கடிதங்கள் தனிச் சிங்கள மொழியில் மட்டும் இருப்பதால் அதனை தம்மால் வாசித்து விளங்கிக்கொள்ள முடியாதிருப்பதாக அக்கடிதம் கிடைக்கப்பெற்ற அரச அலுவலர்கள் சிலர் தெரிவித்தனர்.

அரச கரும மொழியாக தமிழ் மொழி உள்ளபோதிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதனை ஏற்காது தமிழ் மொழிக்கும் உரிய இடத்தை வழங்கத் தவறிவிட்டார் என்றும் அரச அலுவலர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

கடந்த செப்ரெம்பர் 7ஆம் திகதியிட்டு கணனியில் அச்சிடப் பட்ட இக்கடிதங்களில் உரியவர்களின் முகவரியும் இக்கடிதத்தில் தனிச் சிங்களத்திலேயே இருக்கக் காணப்பட்டது. (ஐ-135)

## பாரதி மன்றத்தின் ஆண்டு விழா

நல்லூர்,ஒக்.9

நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று இரவு 7 மணிக்கு நிலையத் தலைவர் இ. மயில்வாகனம் தலை மையில் நிலையக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விழாவில் முதன்மை விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வீ. கே.சிவஞானம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-111)

## அரிச்சுவடி விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

இணுவில் அண்ணா தொழிலகத்தினர் விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் மாணவர்களுக்காக அரிச்சுவடிகளை இலவசமாக வழங்கிவருகின்றனர்.

ஏடுகள் தேவைப்படுவோர் இணுவில் அண்ணா தொழிலகத்தில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என உரிமையாளர் எஸ். நடராஜா தெரிவித்தார். (எ-204)

## கருத்துப் பரிமாற்ற நிகழ்வு

புங்குடுதீவு,ஒக்.9

முன்பள்ளிக் குழந்தைகளுக்கான மனிதநேய அன்பளிப்பும் முன்பள்ளிகளின் சுயசார்பு நிலைக்கான கருத்துப்பரிமாற்றமும் நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா, ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாநிதி பிரகதீஸ்வரன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் கிழக்குச் செயலாளர் இ.மயில்வாகனம், மழலைக் கவிதைகள் நூல் வெளியிட்டாளர் தா. நாகலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-ரி-202)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு



இளங்கலைஞர் மன்றம்
நடத்தும் 2005ஆம் ஆண்டு
வாணி விழா
இடம் : இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்
நேரம் : மாலை 5.30 மணி முதல் 8.30 மணிவரை
09.10.2005 ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் நாள்
மாலை 5.25 மங்கல விளக்கேற்றல்
மாலை 5.30 -6.15 வீணை இசை
வீணை : குமுதா சோமசுந்தரக் குருக்கள்
மிருதங்கம் : S.துரைராசா
கெஞ்சிரா : P.சியாமகிருஷ்ணா
கடம் : A.செல்வரத்தினம்
மாலை 6.15 - 7.15 வயலின் கச்சேரி
வயலின் : இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணன்
உடன் வாசிப்பவர்கள்
சைந்தவி இராதாகிருஷ்ணன் தர்மிலா கணேசன்
மிருதங்கம் : S.துரைராசா மிருதங்கம் : K.கஜன்
கெஞ்சிரா : K.நந்தகுமார் கடம் : N.மாதவன்
முகர்சிங் : S.விமல்சங்கர்
இரவு 7.15 -7.30 பிரதம விருந்தினர் உரை
உயர்திரு. துரைசிங்கம் ரகு அவர்கள்
(மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர்)
இரவு 7.30 -8.30 வரை கொக்குவில் கலாபவனம் வழங்கும்
நாட்டியார்ப்பணம்
வழங்குபவர் : மகேந்திரன் தவேந்திரன்
நட்டுவாங்கம் : V.அநிருத்தன் மிருதங்கம் : S.மகேந்திரன்
பாட்டு : S.சூரியகுமார் வயலின் : A.ஜெயராமன்
சட்டநாதர் வீதி, நல்லூர். இளங்கலைஞர் மன்றம்.



A/L 2007&06
* C/MA - M.ராஜன்
* CHE. - Y.மகிழ்னன்
* PHY. - S.கபிலன்
* ENG. - K.ரமணன்
* கலை, வர்த்தகப் பிரிவு
O/L Paper
Gr. 6 Eng. med.
Gr.2 முதல் O/L வரை
SHAMROCK
J/ஈச்சமோட்டை.



யாழ்ப்பாணத்தில்
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப் பயிற்சி
இலவச அறிமுக உரை



நாள்:- நாளை (10.10.2005) திங்கட்கிழமை மாலை 6.00 மணி
இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.
பயிற்சி நாள்கள்:- 11.10.2005 முதல் 16.10.2005 வரை
பயிற்சி நேரம்:- மாலை 6.00 மணி முதல் 8.00மணி வரை
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544
அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்
அனைவரும் வருக!
www.artofliving.org www.srisriravishankar.org



பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள
சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி
அவர்கள் சிறந்த உடநலத்துடனும் உள நலத்துடனும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து மேன்மேலும் பணியாற்ற உளம் கனிந்து வாழ்த்துகின்றேன்.
கட்டைபறிச்சான்,
க.கனகசிங்கம்
நீராவியடி, யாழ்ப்பாணம்.



வாழ்த்துகிறோம்



(07.10.2005) வெள்ளிக்கிழமை அன்று
யாழ்.பல்கலைக்கழகத்தில்
பட்டமளிப்பு விழாவில்
பட்டம் பெற்ற
இணுவில்
சண்முகநாதன் கோவேந்தன்.
(B.Sc With Edu)
மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.
K.K.S Road Inuvil
College of Computer Staff

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## அரசியல் பேரப் பேச்சுக்கு போகாமல் தமிழர் தரப்பு ஒதுங்கியிருப்பதேன்?

இலங்கையில் அடுத்த அரசுத் தலைவரைத் தீர்மானிக்கும் சக்தியாக ('கிங் மேக்கர்'களாக) விடுதலைப் புலிகளே இருக்கின்றார்கள்.

முக்கிய அரசியல் நோக்கர்கள் மற்றும் பிரபல விமர்சகர்களை மேற்கோள்காட்டிச் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இராணுவ ரீதியாகவும் போரியல் சக்தி என்ற வகையிலும் வலுப்பெற்றுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு, தென்னிலங்கையின் அடுத்த தலைவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் அரசியல் சக்தியாகவும் வலிமை கொண்டு விளங்குகின்றது என்பதே இதன் அர்த்தம்.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டித் தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளுக்கும் பின்னால் ஏனைய கட்சிகள் எல்லாம் திரண்டுவிட்டன. ஈழத் தமிழர்கள் தாம் - அவர்களின் ஏக, அதிகாரபூர்வ பிரதிநிதிகளாக விளங்குகின்ற புலிகள்தான் - இந்தத் தேர்தலில் தாங்கள் யாரை ஆதரிப்பது என்பதை இன்னும் முடிவு செய்யாமல் இருக்கின்றனர். இந்த நிலையில் கணிசமான வாக்கு வங்கியைக் கொண்டிருக்கும் தமிழர் தரப்பின் தீர்மானம்தான் இலங்கைத் தீவின் அடுத்த அரசுத் தலைவரை முடிவுசெய்யப்போகின்றது என்பது தென்னிலங்கை அரசியல் அவதானிகளின் கருத்து.

*"நடக்கும் விடயங்களைப் பார்த்தால் யார் அரசுத் தலைவராவது என்பதைக் கடைசியில் தமிழர்களே நிர்ணயிப்பார்கள் என்பதை அவை எடுத்துக் காட்டுகின்றன. தமது மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறுவார்கள்"* - என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முன்னாள் ஆலோசகரும் அரசியல் நோக்கருமான ஹரி குணதிலக கூறுகின்றார்.

ஆனால், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கருத்தோ வேறு விதமாக இருக்கின்றது.

*"மஹிந்த ராஜபக்ஷ சிங்கள இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு தமிழர்களின் நியாயமான நிலைப்பாடுகளுக்கு எதிரான கருத்துகளை முன்வைத்துக் கொண்டுவருகின்றார்.*

*"ரணில் கூட இந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிங்கள இனவாதக் கட்சிகளின் இணக்கப்பாடு இல்லாமல் அமைதி முயற்சிகளைத் தொடங்குவது சாத்தியமில்லை; அவற்றின் இணக்கப்பாட்டைப் பெற்றுத்தான் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க முடியும் என்று கூறுகின்றார்.*

*"எனவே, இரு தரப்பிலிருந்தும் வருகின்ற கருத்துகள் தமிழர்களுக்கு நியாயம் செய்கின்ற அல்லது திருப்தி தருகின்ற அணுகு முறையுடையனவாகத் தெரியவில்லை"* - என்கின்றார் தமிழ்ச்செல்வன்.

இந்தக் காரணங்களினால் இவரைத்தான் ஆதரியுங்கள் என்றோ அல்லது இவரை எதிருங்கள் என்றோ கூறாமல் - தங்களின் கருத்தை தமது மக்கள் மீது திணிக்காமல் - அவர்களைச் சுதந்திரமாக, சுயாதீனமாக முடிவெடுக்க விடுவது என்ற தீர்மானத்துக்குப் புலிகள் வந்திருக்கிறார்கள்.

*"கடந்த காலங்களிலும் நமது மக்கள் தங்கள் அரசியல் அபிலாஷைகளை மிகத் தெளிவாக - ஆணித்தரமாக - சர்வதேசத்துக்கும் தெற்குக்கும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலிலும் எமது மக்கள் தெளிவான வெளிப்பாட்டைக் காட்டுவார்கள் என நினைக்கிறேன்"* - என்று உறுதியாகக் கூறியிருக்கிறார் அரசியல் பொறுப்பாளர்.

இதற்கு முந்திய பொதுத் தேர்தல் 2001 டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெற்றபோது அதற்குச் சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் இடம்பெற்ற வருடாந்த மாவீரர் தின உரையின்போது, அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் வாக்களிப்புக் குறித்துத் தலைவர் பிரபாகரன் சில விடயங்களைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

"தமக்கு வேண்டியது போரா, சமாதானமா என்பதைத் தென்னிலங்கை மக்கள் தீர்மானித்து வாக்களிக்க வேண்டும்" என்ற சாரப்பட அப்போது கருத்துக் கூறியதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்லாமல், தென்னிலங்கை மக்களுக்கும் அவர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை வழிப்படுத்திக் காட்டியிருந்தார் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

அதே புலிகள்தான், போரையும் சமாதானத்தையும் தென்னிலங்கையில் தீர்மானிக்கப் போகின்ற அதிகாரப் பதவிக்கு வருபவர் யார் என்பதை முடிவுசெய்யும் தேர்தலில் தமது மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதற்குத் திட்டவட்டமான வழிப்படுத்தலைக் காட்டாமல், தமிழ் மக்களின் சுதந்திரமான முடிவுக்கு அனுமதிக்கின்றார்கள். அதற்குக் காரணம் என்ன?

ஜனாதிபதித் தேர்தல் இப்போது நடக்கும் என்பது உறுதியானதுமே இரண்டு பெரும்பான்மைக் கட்சி வேட்பாளர்களின் சார்பிலும் புலிகளுக்குத் தூதுகள் பறக்கத் தொடங்கிவிட்டன.

ரணிலிடமிருந்து மட்டுமல்ல, தேர்தல் வெற்றிக்காகப் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளை அரவணைத்துக் கொண்டுள்ள மஹிந்தவிடமிருந்தும் கூட கிளிநொச்சிக்கு உத்தியோகப்பற்றற்ற தூதுவர்கள் பறந்தார்கள். ஆனால், பேரப் பேச்சு எதற்கும் புலிகளின் தலைமை இடமே கொடுக்கவில்லை, அது ஏன்?

நாட்டின் அதியுயர் பதவிக்கான தேர்தலை ஒட்டி இரு பிரதான கட்சிகளுடனும் விலாசமில்லாத உதிரிக் கட்சிகள் கூட பேரம் பேசி, ஒப்பந்தம் செய்து சுயலாபம் - அரசியல் ஆதாயம் - தேடும் போது, தமிழர் தரப்பு மட்டும் அதைப் பயன்படுத்தாமல் கோட்டைவிட்டு நிற்பது ஏன்?

தேர்தலை ஒட்டிய அரசியல் பேரப்பேச்சுக்குப் போகாமல் புலிகள் - தமிழர் தரப்பின் பிரதிநிதிகள் - ஒதுங்கியிருப்பதற்கு காரணங்கள் இரண்டு. ஒன்று - கொள்கை ரீதியானது. மற்றது - பட்டறிவின் பாற்பட்டது.

சிங்கள தேசம் தனக்குரிய தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. அதற்கான தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்களுமே சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயமானதைச் செய்வது குறித்துத் தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. ஒருவருக்கொருவர் போட்டியாக - ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளாக - பேரினவாதப் பிடியில் சிக்கியிருக்கும் போது ஒருவரை விட மற்றவர் மேல் என்ற முடிவுக்கு வந்து, அதில் ஒருவரை ஆதரிப்பதற்குத் தீர்மானிப்பதில் அர்த்தமில்லை. அப்படி முடிவெடுப்பது அபத்தமானதும் கூட.

அடுத்தது - கடந்த ஐந்து தசாப்த காலமாகத் தேர்தல்களுக்கு முன்னும் பின்னும் தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காக மிதவாதத் தமிழ்த் தலைமைகள் நடத்திய அரசியல் பேரப் பேச்சுகள் என்னவாயின, அந்தந்த வேளைகளில் தென்னிலங்கைத் தலைமைகள் அளித்த வாக்குறுதிகள் எவ்வாறு காற்றில் பறக்கவிடப்பட்டன அல்லது காகித ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன என்பவையெல்லாம் புலிகளின் தலைமைக்கு நன்குதெரிந்த விடயங்கள்.

ஜனநாயகத் தேர்தல் முறையின் கீழ் பெரும்பான்மை இனத்தவர் என்ற முறையில் தமக்கிருக்கும் அதிக வலுவோடு - பலத்தோடு - அரசியல் பேரம் பேசுவதற்கு வரும் தென்னிலங்கைத் தலைமையுடன், சிறுபான்மை இனத்தவர்கள் என்ற வலுக்குறைந்த நிலையில் இருந்து தமிழர்கள் பேசுவதை விட -

போரியல் சக்தியிலும் இராணுவ வலிமையிலும் விஞ்சி நின்று, சம தரப்பு என்ற சமநிலை அந்தஸ்தோடு பேசுவதில்தான் பயனும் பலனும் உண்டு என்பதை அனுபவப் பாடமாக நன்கு அறிந்தவர்கள் இப்போதைய தமிழ்த் தலைவர்கள்.

அதனால்தான் தேர்தலை ஒட்டிய அரசியல் பேரப் பேச்சுகளைப் பயனற்றவை என்று ஒதுக்கி, போரியல் வலுவோடு சமதரப்பு என்ற அந்தஸ்துடன் பேரம் பேசும் அமைதிப் பேச்சுக்கு இடமளித்துக் காத்திருக்கிறார்கள் தமிழர்கள்.

# இலங்கையில் அடுத்த அரசுத் தலைவரை தீர்மானிப்பவர்கள் விடுதலைப் புலிகள் தான்!

### அவர்களே 'கிங் மேக்கர்'களாக இருப்பார்கள் என விமர்சனம்

இலங்கையில் அடுத்த அரசுத் தலைவரைத் தீர்மானிக்கும் சக்தியாக ('கிங் மேக்கர்'களாக) விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள் என்று சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஏ.எவ்.பி. நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் கட்டுரை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உத்தேச அமைதிப் பேச்சுகள் முக்கிய விவகாரமாக முன்வைக்கப்படுகின்றன.

தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான சிங்கள வேட்பாளர்களுக்குப் பின்னாலும் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய சிறுபான்மைக்கட்சிகள் அனைத்தும் அணி சேர்ந்துவிட்டன.

இந்தச் சூழ்நிலை குறித்து அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் முன்னாள் ஆலோசகரும் அரசியல் நோக்கருமான ஹரிகுணதிலக கூறுகையில் -

"இவை அனைத்தும் யார் அரச தலைவராவது என்பதை கடைசியில் தமிழர்களே நிர்ணயிப்பார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. தமது மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறுவார்கள்" - என்றார்.

சிறுபான்மை முஸ்லிம்களின் கட்சி மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் கட்சி ஆகியவற்றின் ஆதரவைப் பிரதான எதிர்க்கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார். ஆனால், யாரை ஆதரிப்பது என்பது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இதுவரை முடிவு செய்யவில்லை. இது தொடர்பாக அவர்கள் த[illegible]பிலிருந்து எதுவித அறிக்கையும் இன்னும் வெளிவரவில்லை.

பெரும்பான்மைத் தீவிரவாத, சிங்கள இடதுசாரிக்கட்சியான ஜே.வி.பியின் ஆதரவை ஆளும் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ பெற்றிருக்கிறார்.

இந்தநிலையில், "இனப்பிரச்சினை தொடர்பான [illegible] விடயங்கள் நாளுக்கு நாள் உருவாகின்றன" என்று சுதந்[illegible] ஊடக இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய கூறுகிறார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தத் தேர்தல் பிரசாரங்களில் பங்கேற்காவிட்டாலும், அவர்களே தீர்மானிக்கின்ற வலுவானவர்களாக இருக்கிறார்கள் என்றும் சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மைச் சிங்களவர்களின் வாக்குகளை அரசியல் கட்சிகள் பிரித்துக்கொள்ளும் நிலையில், சிறுபான்மைத் தமிழர் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளே தொகுப்பாக இருப்பதால் அவர்களே 'கிங் மேக்கர்'களாக இருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழ் வாக்காளர்களுக்குக் கிடைக்கும் சமிக்ஞைதான் தேர்தல் களத்தில் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்று அரசியல் நோக்கர்களும் கொள்கை வகுப்பாளர்களும் கருதுகின்றனர். - இவ்வாறு ஏ.எவ்.பி.மேலும் தெரிவித்தது. (எ-க)

# தென்மராட்சிப் பிரதேச செயலக புதிய கட்டடம் திறந்து வைப்பு

சாவகச்சேரியில் நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேச செயலகக் கட்டடம் நேற்றுமுன்தினம் யாழ். அரச அதிபர் க.கணேஸினால் திறந்து வைக்கப்பட்டது.

முதலில் யாழ்.அரச அதிபர் உட்பட விருந்தினர்கள் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம், மாகாண கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகனேசன், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதேச செயலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக மலர்க் குழுவினால் ஆக்கப்பட்ட மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் க.கணேஸ் மலரை வெளியிட திட்டப்பணிப்பாளர் க.கேதீஸ்வரன் பெற்றுக்கொண்டார். (ஐ-31-117)




தென்மராட்சிப் பிரதேச செயலகப் புதிய கட்டடத்தை யாழ். அரச அதிபர் க.கணேஷும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.ரவிராஜும் இணைந்து நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்கள், திணைக்கள அதிகாரிகளையும் படங்களில் காணலாம். *(படங்கள்: சாவகச்சேரிச் செய்தியாளர்)*

# நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்த ஒத்துழையுங்கள்!

### வேட்பாளரிடம் தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு,ஒக்.9

நீதியும் நேர்மையும் நியாயமுமானதுமான ஒரு தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்குமாறு அவர்கள் தத்தமது ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்தவேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் சகல ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் கேட்டுக்கொண்டார்.

தேர்தல் செயலகத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைப் பெற்றுக்கொண்டபின் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதையொட்டி கொழும்பில் தேர்தல் செயலகத்திலும் மற்றும் பிரதான கேந்திர நிலையங்களிலும் முக்கிய சந்திகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய தேர்தல் ஆணையாளர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நான் ஏற்கனவே அனைத்துக் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளேன். அதேவேளை, பொதுமக்களுக்கும் தேசிய ஊடகங்கள் மூலம் அறிவித்துள்ளேன்.

தேர்தல் சட்டங்களை மீறுபவர்கள் எவராக இருந்தாலும் பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

ஏதாவது ஒரு தொகுதியில் அல்லது வாக்குச் சாவடியில் முறைகேடுகள் இடம்பெற்றதாக உறுதிப்படுத்தப்பட்டால் அந்த இடங்களில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். மீள்வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை அப்பிரதேசத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படமாட்டா.

இதனால், பெரிதும் அசௌகரியங்கள் ஏற்பட இடமுண்டு. எனவே, வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தமது ஆதரவாளர்களுக்கு உரிய முறையில் அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும்.

தேர்தல் விதிகளின்படி பொது இடங்களில் வேட்பாளர்களின் படங்கள் மற்றும் தேர்தல் சின்னங்கள், இலக்கங்கள் அடங்கிய விளம்பரப் பதாகைகளையோ சுவரொட்டிகளையோ பார்வைக்கு வைக்கக் கூடாது.

- இவ்வாறு காணப்படும் போஸ்டர்களையும், பதாகைகளையும் உடனடியாக அகற்றும்படி பொலீஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

தேர்தல் நடைபெறும் தினமான நவம்பர் 17ஆம் திகதி முடியுமான வரை அதிகாலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். ஒவ்வொருவரும் முடிந்தவரை தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களைத் தம்முடன் வைத்திருப்பது ஆள் மாறாட்டங்களைத் தடுக்க உதவியாக இருக்கும்.

முறைகேடுகள் அல்லது அசம்பாவிதங்கள் இடம்பெற்ற பிரதேசங்களில் நவம்பர் 21ஆம் திகதிக்கு முன் மீள் வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டு அதன் பின்னரே முடிவுகள் வெளியிடப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் வேட்பாளர்களிடம் தெரிவித்தார். (எ-க)

**நாளை**

*புரட்டாதி 24*
*திங்கட்கிழமை*
*10.10.2005*
திதி: ஸத்தமி
முற்பகல் 11.27 வரை
நட்சத்திரம் : பூராடம்
பின்னிரவு 04.23 வரை
சுபநேரம்: 12.[illegible]2 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02
(யாவும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நீ அடுத்தவனின் பாதையைப் பின்பற்றாதே. ஏனெனில் அது அவனுடைய பாதை; உன்னுடைய பாதையல்ல.

*- விவேகானந்தர்.*

*"காடு அழிப்பதைத் தடுத்து சூழலைப் பாதுகாப்போம்"*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று முன்தினம் (07.09.2005) அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமணிப் பட்டம் (B.Sc) பெற்ற **திரு.கனகரட்ணம் கஜபரன்** (நவாலி) அவர்களை இன்னும் பல பட்டங்கள் பெற்று நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

அச்சுவேலி சிவலிங்கம் மாமா குடும்பம்.

(41046) (39-17-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கதிர்காமலிங்கம்



ராமதாஸ் (B.A.Hons) மெய்யியல் 2 nd Upper

இவ்வாண்டின் சிறந்த ஆசிரியருக்கான விருதுபெற்ற எமது நண்பர் **திரு.மு.கதிர்காமலிங்கம்** மற்றும் 06.10.2005 அன்று கலைமாணி [சிறப்பு] பட்டம் பெற்ற **திரு.ந.ராமதாஸ் (ராம்)** [B.A.Hons 2 nd Upper மெய்யியல்] ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அல்வாய் மேற்கு, கொற்றாவத்தை.

நண்பர்கள்: நவம், ரஜனி, குமணன், பரணி, ராஜேஸ்கண்ணன்.

(48039) (39-17-13)

## இரசாயனவியல்

GROUP CLASS & PERSONAL CLASS

By: E.RANJAN (B.Sc)

0773- 203353

(41044)(39)

## ஒத்துமாறல்

மு/ஒட்டுசுட்டான் ம.வியில் கடமைபுரியும் வணிகமாணி பட்டதாரி ஆசிரியர் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு வலயங்களில் கடமையாற்றும் வணிக, முகாமைத்துவ பட்டதாரிகளுடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு:

0712361525, 0244588432

[சி-45510] [39-11-14]

## தேவை

வெள்ளவத்தையில் தங்கி இருந்து தையல் வேலை செய்யக் கூடிய அனுபவம் வாய்ந்த 40 வயதுக்குட்பட்ட பெண் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 112-505325

## UNIT

**VACANCY**

**1. Stock Keeper**

*Retired Govt. or Non Govt. candidates preferable.*

* Attractive Salary cum perx will be given

**2. Marketting Executives**

*Computer Hardware Knowledge prefered.*

*Basic Salary :5000/- + Attactive perx will be given*

* Perx covers with Commission, Travelling allowances & etc

* Both female and male candidates can apply

* Computer literacy preferable for appointment

விவரக் கோவைகளுடன் நேரில் வருகை தரவும்

10.10.2005(Monday) &11.10.2005(Tuesday) from 10.00 A.M to 5.00P.M

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.ப.சிவகரன் B.A. (Hons)



திரு.து.துஸ்யன் (B.Sc. Agriculture)

கடந்த 06.10.2005 வியாழக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இவர்களை வாழ்த்துவதுடன், இவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்.

நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலடி,கோண்டாவில். (41109) (39-11-17)

## மனமுவந்த பாராட்டும் வாழ்த்துக்களும் டாக்டர் விஜிதா பகீரதன்



07.10.2005 வெள்ளிக்கிழமை நடந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் "சித்தமருத்துவசத்திரசிகிச்சைமாணி" மருத்துவப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இராச வீதி, நீர்வேலி மத்தியைச் சேர்ந்த **டாக்டர் விஜிதா பகீரதன்** அவர்களை மருத்துவத் துறையில் மேலும் பட்டமும், புகழும் பெற்று வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அடிதொழுது, நாமும் அவரை உளமார அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

அன்புத் தம்பி

விக்கினேஸ்வரமூர்த்தி ஜெயகாந்தன், பொறியியல் பீட மாணவன், ஒன்ராறியோ M9W6A5 பல்கலைக்கழகம், கனடா.

(41048)(39-14-17)

## வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

# Foundation Degree Programme

**UK, Canada** போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவிதத் தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான **Student Visa** க்களை இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும் சான்றிதழ்களும் இப்பாடநெறிக்குக் வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில்வாய்ப்பிற்கான இலக்குகள் வெற்றியளிக்கின்றன.

வெளிநாட்டில் (UK,Canada) உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெறுக்கொள்வதற்கு பூரண வழிகாட்டுதல்கள் London Institute தினால் மேற்கொள்ளப்படும்.

**COURSE STRUCTURE**


- Information Technology
- English (Reading, Writing, Listening & Speaking - Leading to IELTS)
- Personality Development

**CERTIFICATES TO BE AWARDED**

- International Computer Driving Licence (ICDL-Asia Pacific, UK)
- First Certificate in English (UK)
- Diploma in Information Technology
- Certificate in Programming
- Certificate in Website Development
- Diploma in English Proficiency

**COURSE LENGTH**

- 3 Months - Full Time (Week Days)



எமது சர்வதேச இணைப்புகளும் அங்கீகாரங்களும்

THE UNIVERSITY OF BUCKINGHAM · Cornwall College · St James's Park College · Carmel College of Excellence - London

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION

25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788 Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk


## செயற்றிட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.9

கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரணையுடன், சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிற்சிநெறியின் 15 ஆவது பயிற்சி நெறி இன்று காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத்தலைவி திருமதி என்.ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சமாதானமும் அபிவிருத்தியும்- மக்களின் இயல்பு வாழ்க்கையும்' என்ற தலைப்பில் கோப்பாய் கிறிஸ்த வக் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சமும், 'பெண்களும் சமாதானமும்' என்ற தலைப்பில் இளைப்பாறிய சேவைக்கால ஆலோசகர் கே.செல்வப்பிரகாசமும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெறும். (எ-203)


# BBS இல் 12 ஆம் திகதி வித்தியாரம்பம்

## வளர்ந்தோருக்கான விசேட ஆங்கிலப் பாடநெறிகள்

புதிய பிரிவுகள் அடுத்த வாரம் ஆரம்பம்

**DIPLOMA IN ENGLISH** — Duration 3 Months

**CERTIFICATE IN ENGLISH** — Duration 3 Months

**IELTS by Top Lecturer** — Duration 2 Months

**BRITISH BUSINESS SCHOOL**

| | | | |
|---|---|---|---|
| இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய். |

HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL — Where Students Come First

## ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலை பாட விதானங்கள்

PLAY GROUP [2+ முதல் 3+ வரை]

MONTESSORI SCHOOL [3+ முதல் 4+ வரை]

PRE-SCHOOL [4+ முதல் 5+ வரை]

விசேட அம்சங்கள்

- ஆங்கில மொழி மூலமான சிறந்த கற்பித்தல் முறை
- தமிழ் ஒரு தனிக் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்

## சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்

5+ to 14+ சிறார்களுக்கு

- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

# விண்வெளியில் அமெரிக்கக் கோடீஸ்வரர்

# 2 கோடி டொலர் செலவில் உல்லாசப் பயணம்!

அமெரிக்க விண்வெளி உல்லாசப் பயணியுடன் விண்வெளிக்குச் சென்ற சோயுஸ் ரஷ்ய விண்வெளிக்கலம் ஏற்கனவே விண்வெளியில் இருந்துவரும் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைப்பை ஏற்படுத்தியிருப்பது ஒரு புறமிருக்க 2 கோடி அமெரிக்க டொலர் செலுத்தி அந்தக் கலத்தில் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டுள்ள அமெரிக்கரான கோடீஸ்வரர் கிறெக் ஒல்செனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் பிரி. பிரதமர் ரொனி பிளயரும் லண்டனில் சந்தித்தபோது.

பணம் இருப்பில் இருந்தால் மனிதரை என்னவெல்லாம் செய்யத்தூண்டுகிறது என்று இந்த மனிதரின் செயலைப் பார்க்கையில் எண்ணத்தோன்றுகிறது.

ணம் என்று ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தகவல் என்பது மிக முக்கியமான ஒன்று. இருந்தாலும் அதன் தேவை பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படுவதில்லையென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஒன்றியத்தின் செயற்பாட்டுத் தலைவி சூசான் ஜோன்சன் என்பவர் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டில் மாத்திரம் 2லட்சத்து 50 ஆயிரம் மக்கள் 719 தனித்தனியான இயற்கை அனர்த்தங்களினால் கொல்லப்பட்டுள்ளார்கள். வருடந்தோறும் இயற்கை அனர்த்தங்களினால் கொல்லப்படுபவர்களைவிட இந்த எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

வரட்சி, பஞ்சம், வெள்ளப் பெருக்கு, நிலநடுக்கம், சூறாவளி ஆகிய இயற்கை அனர்த்தங்கள் குறித்து அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 கோடி அறுபது லட்சம் மக்கள் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 11 கோடி பேர் பங்களாதேஷ், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகளினால் பாதிக்கப்பட்டவர்கள். உலகம் முழுவதும் இயற்கை அனர்த்த சேதங்களின் மதிப்பு 10 கோடியிலிருந்து 14 கோடியே 6 லட்சம் வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப எச்சரிக்கை அமைப்புகள் அவசியம் தான். ஆனால், அதுமட்டும் போதாது என்று செஞ்சிலுவை அறிக்கையின் ஆசிரியர் கூறினார். ''பொதுமக்களின் விழிப்புணர்வுக் கலாசாரம் ஒன்றை நாம் கட்டி எழுப்பவேண்டும் என்று அவர் கூறினார்.

தகவல் வழங்கப்படுவதின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கு இந்திய மீனவக் குடும்பம் ஒன்றும் அவர்களைச் சார்ந்த தலைவர்களும் காப்பாற்றப்பட்ட சம்பவமொன்றை செஞ்சிலுவை ஒன்றியத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பின்னலுக்குள் இந்தச் சிறுரக நீர்மூழ்கி சிக்கிக் கொண்டபொழுது அதனை மீட்பதற்கான வசதிகள் ரஷ்யாவிடமிருக்காததால் பிரிட்டிஷ் உதவி கோரப்பட்டது. பிரிட்டிஷ் கடற்படை சுழியோடிகள் நீருக்கடியில் செயற்படும் ரோபோக்கள் (இரும்பு மனிதர்கள்) சகிதம் சென்று ரஷ்ய நீர்மூழ்கியையும் அதன் மாலுமிகளையும் மீட்டார்கள். அவ்வாறு உதவிய பிரிட்டிஷ் கடற்படை வீரர்களுக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் தமது லண்டன் பயணத்தின் போது பதக்கங்கள் வழங்கிக் கௌரவித்தார்.

### ஐ.நா. பாதுகாப்புச் சபை எச்சரிக்கை

எரித்திரியாவுக்கும் எதியோப்பாவுக்குமிடையில் மீண்டும் எல்லைச் சண்டை ஏற்படக் கூடிய அபாயம் தோற்றியிருப்பதையொட்டி இருநாடுகளையும் ஐ.நா. பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது.

எரித்திரியாவின் வான் பிராந்தியத்துக்கு மேலாக ஐ.நா. வேவு விமானங்கள் பறப்பதைத் தடைசெய்யப்போவதாக அந்நாடு அறிவித்திருப்பதை வாபஸ்பெறும்படியும் பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது.

இருதரப்பும் உச்ச மட்டத்தில் பொறுமை காக்கவேண்டும். பரஸ்பரம் தாக்கிக்கொள்ளும் அளவுக்கு மீண்டும் செல்லக்கூடாது என்று பாதுகாப்புச் சபை ஒரு தீர்மானத்தில் கேட்டுக்கொண்டது.

அமைதிகாக்கும் ஐ.நா. படையினருக்கு உணவு மற்றும் பொருள் விநியோகத்திலும் கண்காணிப்பிலும் ஈடுபட்டிருக்கும் ஐ.நா.ஹெலிகொப்டர் விமானங்கள் தனது வான் பிராந்தியத்தில் பறக்கக்கூடாது என்ற எரித்திரியாவின் தீர்மானத்தை அது உடனடியாக மாற்றிக் கொள்ளவேண்டும் என்று பாதுகாப்புச் சபை வலியுறுத்தியது.

எதியோப்பியாவுக்கும்- எரித்திரியாவுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதில் 3,000 ஐ.நா. அமைதிகாக்கும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

### அப்பாஸ் - ஷெரோன் விரைவில் சந்திப்பு

காஸாவிலிருந்து இஸ்ரேலியப் படையினர் வெளியேறியதையடுத்து ஹமாஸ் தீவிரவாதிகளின் நிலைகள் தாக்கி அழிக்கப்பட்ட நிலையில் உருவான குழப்பகரமான சூழ்நிலையில் பலஸ்தீன அதிபர் முகம்மது அப்பாஸுக்கும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுக்குமிடையில் மீண்டும் ஒரு சந்திப்பு ஏற்படவிருப்பதாக ஜோர்தான் ராஜாங்க வட்டாரங்கள் அறிவித்துள்ளன. இருநாடுகளுக்குமிடையில் சமரச முயற்சியில் ஈடுபட்டிருந்த ஜோர்தான் அரசரின் பிரதிநிதிகள், இருதலைவர்களும் ஒக்ரோபர் 11ஆம் திகதி சந்தித்துப் பேசுவார்கள் என்று அறிவித்துள்ளனர்.

அமைதி முயற்சியை மேலும் முன்னகர்த்துவதற்கு ஜோர்தானிய மன்னர் இரண்டாவது அப்துல்லா எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக இந்தச் சந்திப்பு ஏற்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பு எங்கே இடம்பெறும் என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஜோர்தானில் நடக்குமானால் தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்று

# இயற்கை அனர்த்தங்களும் - தகவல் பரிமாற்றத்தின் அவசியமும்

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் ஏழ்மையிலும் கல்வி அறிவில்லாமலும் பசி பட்டினியிலும் போர்க் கொடுமைகளிலும் இயற்கையின் சீற்றங்களிலும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான மக்களின் துன்பங்களைத் துடைப்பதற்கு ஒல்சென் போன்றவர்களுக்கு மனம் விடுவதில்லை. தனிப்பட்ட வகையில் இன்பம் அனுபவிப்பதனால் உலகத்துக்கு என்ன பிரயோசனம்?

இப்படியானவர்கள் அமெரிக்காவில் மட்டுமா இருக்கிறார்கள் நம் நாட்டிலும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் பொழுதுபோக்கு உல்லாசக் கொண்டாட்டங்கள் வேறு விதமானவை.

ஒல்சென் அபாயகரமான ஒரு பயணத்தை மேற்கொண்டு விண்வெளிக்குச் சென்று திரும்புவதின் மூலம் விண்வெளியில் முதன்முதல் உல்லாசப் பயணம் மேற்கொண்ட கோடீஸ்வரர்களில் ஒருவர் என்றவகையில் சாதனை படைத்தவராகப் புகழ்பெற்றுவிட விரும்பியிருக்கலாம். ஆனால், இந்தச் சாதனையால் உலகத்துக்கு ஏதும் பயன் உண்டாகுமா என்பதே கேள்வி. இதற்கு விண்வெளி விஞ்ஞானிகள்தான் பதில் சொல்லவேண்டும்.

விண்வெளி வீரர்கள் அல்லாத மனிதர்கள் இவ்வாறான பயணங்களை மேற்கொள்வதனால் ஏற்படக்கூடிய முன்-பின் விளைவுகளை அவர்கள் ஆய்வுசெய்வதற்கு இது உதவக்கூடும். மேற்கொண்டும் இவ்வாறான பயணங்களை ஊக்குவிக்கலாமா என்பது பற்றி அவர்கள் தீர்க்கமான முடிவுகள் எடுக்க உதவக்கூடும். இன்னும் பல விடயங்கள் வெளிப்படலாம். அந்தவகையில் இந்த அமெரிக்கக் கோடீஸ்வரர் தன் சொந்தச் செலவில் உலகுக்கு உதவினர் என்ற பெருமையைத் தட்டிக்கொள்ளக் கூடும்.

கிறேக் ஒல்சென் என்ற இந்த அமெரிக்க கோடீஸ்வரருடன் ரஷ்ய விண்வெளி வீரர் ஒருவரும் அமெரிக்க விண்வெளி வீரர் ஒருவரும் கூடச்சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பெய்க்கனூர் என்ற ரஷ்ய நகரிலிருந்து புறப்பட்ட சோயுஸ் திங்கட்கிழமை சர்வதேச நிலையத்துடன் இணைந்தது.

இந்தப் பயணத்துக்காக 60 வயது ஒல்சென் 20 மில்லியன் அமெரிக்க டொலரைக் கட்டணமாகச் செலுத்தியுள்ளார். இவர் விண்வெளியில் பிரயாணம் செய்துள்ள மூன்றாவது தனிநபராவார். ஏற்கனவே அமெரிக்கரான டென்னிஸ் டிட்டோ என்பவரும் தென்னாபிரிக்கரான மார்க் ஷட்டில்வேர்த் என்பவரும் விண்ணில் பயணம்செய்துள்ளார்கள்.

★★★

### தகவல்களின் முக்கியத்துவம்

தகவல்கள் சரியாகக் கிடைக்குமானால் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றிவிடலாம். கடந்த வருடம் ஆழிப் பேரலையினால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தமைக்குச் சரியான எச்சரிக்கை அமைப்புகள் இல்லாதுபோனதும் அவசரகாலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள் பற்றிய முக்கிய தகவல்கள் கிடைக்காமல் போனதுமே கார

சிங்கப்பூரில் வாழ்ந்துவந்த இந்திய மீனவர் ஒருவரின் மகன் 'ஆழிப்பேரலை' தாக்குதல் வந்துகொண்டிருப்பதைத் தொலைக்காட்சியில் அறிந்து பார்த்து இந்தியாவிலிருந்த தனது வீட்டாருக்கு அறிவித்துள்ளார். அதன்மூலம் அப்பகுதியிலிருந்த 3,600 பேர் ஆழிப்பேரலைத் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★

### நெல்சன் மண்டேலா முதலிடம்

கற்பனையிலான உலக அரசு ஒன்றை வெற்றிகரமாக வழிநடத்தக்கூடிய தலைவர் யார் என்றவகையில் பி.பி.ஸி. நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் முன்னாள் தென்னாபிரிக்க விடுதலை வீரரும் முதலாவது தென்னாபிரிக்க ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலா முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

உலகம் முழுவதுமாக 15 ஆயிரம் பேர் இந்த நிகழ்ச்சிக்



# உலகத்தை ஆளும் தகுதி மண்டேலாவுக்கே உண்டாம்

காகப் பேட்டி காணப்பட்டனர். உலகத்திலுள்ள பெருந்தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், சிந்தனையாளர்களின் 100 பேர் கொண்ட பட்டியலில் 11 பேர் கொண்ட ஒரு குழுவைத் தெரிவுசெய்யும்படி கேட்கப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட அனைவரும் ஆண்கள். மியான்மார் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான்சுகீ 13ஆம் இடத்திற்குத் தெரிவாகியிருந்தார். மண்டேலாவுக்கு அடுத்து இரண்டாம் இடத்தில் முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தெரிவாகினார். தெரிவான 11 பேரின் வரிசைக் கிரமம் வருமாறு:

1. நெல்சன் மண்டேலா, 2. பில் கிளின்ரன், 3. தலாய் லாமா, 4. நோவாம், 5. அலன் கிறீன்ஸ்பான், 6. பில் கேட்ஸ், 7.ஸ்டீவ் ஜொங்ஸ், 8. அர்ச்விஷப் டெஸ் மொன்ட டூட்டு, 9. றிச்சச்ட் பிரான்சன், 10. ஜோர்ஜ் சொரொஸ், 11. கொபி அனான்.

★★★

### பிரி.வீரர்களுக்கு ரஷ்யப் பதக்கம்

பசுபிக் சமுத்திரத்தில் 190 மீற்றர் அடியில் சிக்கிக் கொண்ட ரஷ்ய நீர்மூழ்கியிலிருந்த வீரர்களைக் காப்பாற்றி உதவிய பிரிட்டிஷ் சுழியோடிகளை ரஷ்ய அதிபர் பாராட்டிப் பதக்கங்களும் வழங்கி கௌரவித்திருக்கிறார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் பசுபிக்சமுத்திரத்துக்கடியில் 190 மீற்றர் தூரத்தில் ரஷ்ய சம்மெரின் அதன் மாலுமிகளுடன் சிக்கிக்கொண்டது. மீன்பிடிவலைகள் மற்றும் கேபிள் வயர்

பலஸ்தீனத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### தலிபான் நபரை ஒப்படைக்கக் கோரிக்கை

பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்டுள்ள ஈராக்கிய தலிபான் இயக்கப் பேச்சாளரை நாடுகடத்தித் தங்களிடம் ஒப்படைக்குமாறு ஈராக்கிய அதிபர் ஹமிட் கார்சாயி பாகிஸ்தானிடம் கேட்டிருக்கின்றார்.

பதவியிலிருந்து அகற்றப்பட்ட தலிபான்களின் பிரதம பேச்சாளர் என்று 2004ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டிருந்த அப்துல் லத்திப் ஹக்கிமி என்பவர் அண்மையில் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்கப் படைகள் மீது நடத்தப்பட்ட பல தாக்குதல்களின்போது அவைகளுக்குத் தலிபான்கள் சார்பில் சர்வதேச ஊடகங்கள் மூலம் உரிமை கோரிவந்தவர் இவர். பாகிஸ்தானின் பலுகிஸ்தான் மாகாணத்தின் தென்மேற்குப் பகுதியில் கடந்த செவ்வாயன்று அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற பல்வேறு அட்டூழியங்களுக்குத் தன்னைப் பொறுப்பாளியென்று கூறிக்கொண்ட நபரைப் பாகிஸ்தான் அதிகாரிகள் கைதுசெய்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்று அதிபர் கார்சாயி கூறியுள்ளார்.

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

(நெடுந்தீவு மக்கள்)

### வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்து

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக்கொண்டு இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றி தற்பொழுது லண்டனில் வசிப்பவரான வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்து இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பரிசையும் பெற்றவர். அத்துடன். யாழ்.பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியதையிட்டு நெடுந்தீவு மக்களாகிய நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நெடுந்தீவு
இடம்பெயர்ந்தோர் சார்பாக.

Dr.ஆ.தியாகராசா,
சமாதான நீதிவான்,
ஆறுமுகம் வைத்திய நிலையம், அளவெட்டி.

(41032)(42.16.17)

## பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்



செல்வி
### நவரத்தினம் பாருமதி
B.B.A.(Hons)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 07.10.2005 நடைபெற்ற 24ஆவதுபட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி நிதி முகாமைத்துவத்தில் பட்டம்பெற்ற இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி நந்தகுமார்
குடும்பத்தினர்.

(4117)(42.16.17)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்பு
விழாவில் B.A. கலைமாணிப்
பட்டம் பெற்ற
செல்வி **தமிழினி செல்வராஜா**
அவர்களை
மென்மேலும் பல பட்டங்கள்
பெற்று, வளமுடன் வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.

(41106)(39.16.17.42)

உறவினர்கள்.

## பயிலரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.8

கொழும்பு மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் வட இலங்கை சர்வோதயம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்திட்டப் பயிலரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை துறையூரில் உள்ள வட இலங்கை சர்வோதய கிராம நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'சமாதான வாழ்க்கைக் குப் பெண்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் இளவாலை இளஞ் சுடர் இளைஞர் கழக அமைப்பாளர் திருமதி இ.யோகநாதனும் 'சமாதான எண்ணக்கருவும் கல்வி அபிவிருத்தியும் என்னும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் க.தர்மராசாவும் கருத்துரை வழங்குவர்.

(எ-202)

### மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.9

மானிப்பாய் றோட்டரக் கழகத்தின் வளர்ச்சி நிதிக்காக் மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை சவாரித் திடலில் நடைபெறவுள்ளது.

(எ-202)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### சின்னத்துரை பவன் B.S

[தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை]
யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் 07.10.2005 அன்று விஞ்ஞானமாணி B.Sc. பட்டம் பெற்ற சி.பவன் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

மானிப்பாய் வீதி,
தாவடி. (41110)(42.16.17)

சி.அப்புத்துரை (சித்தப்பா)
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## தேச சக்தி விருது



மன்னார் மாவட்ட இந்துமத பிரதமகுரு சிவாச்சாரிய திலகம் கமலபூஷணம்

### சிவஸ்ரீ சபா மனோகரக் குருக்கள்

(அகில இலங்கை சமாதான நீதிவான்) அவர்களுக்கு பிரதமர் மாண்புமிகு
மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் தேச சக்தி விருது வழங்கி
கௌரவிக்கப்பட்டதையிட்டு மனமகிழ்ச்சி அடைவதுடன்
மேலும் பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

மன்னார்.

(41049)(42.16.17)

குடும்பத்தினர்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

## Vacancy - Immediate

## Field Officer

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a dedicated professional with pronounced social skills to occupy the post of a **Field officer** in its **Water and Sanitation Department.**

The Field Officer will provide training and advice on best practice in the management and maintenance of safe-water points to village communities.

**Specific responsibilities** include:
◆ Inform the population about maintenance requirements, duties and tasks along various sorts of
safe water points, mainly rehabilitated hand pumps
◆ Training of the direct beneficiaries for executing basic maintenance and repairs
◆ Raise awareness within the population about the key responsibilities of the governmental maintenance system and for the necessity of good management practice
◆ Preparation of assessments, baseline surveys, proposals, reports, etc.,
◆ Assistance to and co-operation with national and expatriate colleagues in various fields.

The candidate should have the following **qualifications:**
◆ Balanced personality with a developed sense for cultural diversity,
◆ Ability to approach and motivate people
◆ High motivation and willingness to learn, resistance to stress, ability to work independently
◆ Good command of spoken and written English and Tamil
◆ Willingness to frequently travel inside the Vanni
◆ Computer literacy
◆ Valid driving permit for small motorbikes
◆ Mechanical background an asset

**Employment Conditions:**
Workplace: ICRC-offices in Kilinochchi, Puthukkudiyiruppu and Mallavi
According to ICRC's National Scale and employment conditions
Suitable candidates are invited to submit their complete CVs (incl. photocopies of relevant certificates) to ICRC's office in Kilinochchi until **Friday, 14th of October 2005.** Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iranaimadu Junction
Kilinochchi Phone: 071 237 56 97

## Vacancy - Immediate

## Civil, Hydraulic or Mechanical Technicians

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a highly competent, experienced **Civil, Hydraulic or Medical Technician** to occupy the post of a **Field officer** in its **Water and Sanitation Department.**

**Core responsibilities** include:
❖ Assisting in the development of the assistance approach in the area of access to water
❖ Preparation of proposals, bills of quantity, reports, etc.
❖ Independent implementation of supervision and assessment works
❖ Assistance to and co-operation with national and expatriate colleagues in various technical fields

The candidate should have the following **qualifications:**
❖ hydraulic, civil or/and mechanical degree, or considerable practice in mentioned fields
❖ Team spirit, reliability and professional commitment
❖ high motivation and willingness to learn, resistance to stress
❖ Good command of spoken and written English and Tamil
❖ Computer literacy
❖ valid driving licence an asset
❖ ideal age between 30 and 45 years

**Employment Conditions:**
Workplace: ICRC-offices in Kilinochchi, Puthukkudiyiruppu and Mallavi
According to ICRC's National Scale and employment conditions
Suitable candidates are invited to submit their complete CVs (incl. photocopies of relevant certificates) to ICRC's office in Kilinochchi until **Friday, 31st of October 2005.** Qualified candidates will be contacted for interviews.


**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi,
Iranaimadu Junction, Kilinochchi,
Phone: 071 237 56 97.

# கனவான்களின் விளையாட்டில் முத்திரை பதித்த சாதாரணன் - சனத்

**இலங்கையின் கிரிக்கெட் அணி இன்று உலகில் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளதற்கு முக்கிய காரணம் சனத் ஜயசூரியா. அண்மையில் அவர் தனது 100 ஆவது 'டெஸ்ட்' போட்டியில் பங்குபற்றியுள்ளார். அதனையொட்டி அவர் பற்றிய தகவல்களை இங்கு தொகுத்துத் தருகிறோம்.**

இலங்கையின் கிரிக்கெட் வரலாற்றில் 1996 ஆம் ஆண்டு மறக்க முடியாத ஆண்டாகும். சனத் ஜயசூரியாவின் பெயரும் கிரிக்கெட் ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்ட ஆண்டும் அதுவே. அந்த ஆண்டில் உலகக் கிண்ணத்தை இலங்கை கைப்பற்றியது. அந்தக் கிண்ணத்தைக் கைப்பற்ற அச்சாணியாக விளங்கியவர் சனத் ஜயசூரியா என்றால் அது மிகையாகாது.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் ஒரு வீரர் 100 டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்றியுள்ளார் எனில் அதற்குக் காரணம் அவரது திறமைகள் தொடர்ந்து வெளிப்பட்டுக்கொண்டிருப்பதேயாகும்.



கடந்த மாதம் 20 ஆம் திகதி கொழும்பில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக சனத் ஜயசூரியா விளையாடினார். இது அவர் பங்குபற்றிய 100 ஆவது 'டெஸ்ட்' போட்டியாகும்.

சனத் ஜயசூரியாவின் திறமைகள் அவரது பிறப்பிலே அமைந்தவை. அவர் கொழும்பு போன்ற பிரபல நகரங்களில் அமைந்த பாடசாலைகளில் தனது கல்வியை பயிலவில்லை. 1969 ஜூன் 30 ஆம் திகதி மாத்தறைப் பிரதேசத்தில் பிறந்த சனத், மாத்தறை புனித சவேரியார் கல்லூரியில் கல்வி கற்றார். பாடசாலை நாள்களில் கிரிக்கெட் விளையாட்டில் தனது திறமைகளைப் பெருமளவில் வெளிக்காட்டியதன் பயனாக 19 வயதிற்குட்பட்ட தெரிவுக்குழுவிலும் இலங்கை ஏ அணியிலும் அவரால் இடம்பிடிக்க முடிந்தது.

அவ்வணி சார்பில் 100 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய முதலாவது வீரராக சனத் திகழ்கிறார். உலகில் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வீரர்களின் எண்ணிக்கை சனத்துடன் 37 ஆக உயர்ந்துள்ளது.

முதன்முதலில் 1991 ஆம் ஆண்டில் வ[illegible]டன் நகரில் நியூசிலாந்து அணிக்கு எதிராக டெஸ்ட்போட்டி[illegible]ல் பங்குபற்ற சனத்திற்கு வாய்ப்புக் கிடைத்தது. இருப்பினும் இலங்கை அணியில் நிரந்தரமான ஓரிடத்தைப் பிடிக்க 1996 வரை சனத் கடும் முயற்சிகளை மேற்கொள்ள நேர்ந்தது.

1996 ஆம் ஆண்டு இலங்கை அணியின் ஆஸ்திரேலிய விஜயத்தின்போது இலங்கை அணியைச் சேர்ந்த பலர் நோய்வாய்க்குட்பட்டதால் அணியின் சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்க சனத்திற்கு வாய்ப்புக் கிடைத்தது. 'அடிலெயிட்' நகரில் இடம்பெற்ற 'டெஸ்ட்' போட்டியில் முதலாவது இனிங்ஸில் 48 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 112 ஓட்டங்களையும் பெற்றார் சனத். அந்த நிலையே அணியில் நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொள்வதற்கு அவருக்குச் சாதகமாக அமைந்தது. துடுப்பாட்டத்தில் தனக்கே உரியதான ஒரு தனிப் பாணியை அமைத்துக்கொண்டார் சனத். 1996 இல் சனத்தின் அதிரடி ஆட்டத்தைக்கண்டு உலகே வியந்தது. சனத் 'மாஸ்டர் ப்ளாஸ்டர்' (**Master Blaster**) எனப் புகழப்பட்டார்.

'டெஸ்ட்' மற்றும் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களில் சனத் பல சாதனைகளைப் படைத்துள்ளார். டெஸ்ட் விளையாட்டில் இலங்கை அணிசார்பில் ஒரு இனிங்ஸில் 340 ஓட்டங்களைப்பெற்று அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரராகத் திகழ்கிறார். 1997 இல் கொழும்பில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான போட்டியிலேயே இந்த ஓட்டங்களைப்பெற்ற சனத், றொஷான் மஹாநாமவுடன் இணைந்து 2ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 585 ஓட்டங்களைக் குவித்தார். உலக கிரிக்கெட் வரலாற்றில் எந்த விக்கெட்டுக்குமான ஆகக் கூடிய இணைப்பாட்டம் இதுவே (585). மேலும் இந்தப் போட்டியில் மற்றுமொரு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டது. அதுவரை ஒரு இனிங்ஸில் 903 ஓட்டங்களைப் பெற்றதே சாதனையாக விளங்கியது. ஆனால், இந்தப் போட்டியில் இலங்கை அணி ஆறு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 952 ஓட்டங்களைக் குவித்தது. இந்தச் சாதனையைப் படைத்தவர்களில் சனத் முதன்மையானவர்.

குறைந்த எண்ணிக்கையிலான பந்துகளில் சதத்தையும் (48 பந்துகள்) அரைச் சதத்தையும் (16 பந்துகள்) அடித்து சனத் சாதனை நிலைநாட்டியிருந்தார். ஆனால், இலங்கைக்கு எதிராக கென்யா நாட்டில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணிவீரர் அவ்டிறி 39 பந்துகளில் சதமடித்து சனத்தின் சாதனையை முறியடித்தார். இருப்பினும், அரைச் சதத்தைக் குறைந்த எண்ணிக்கையிலான பந்துகளில் அடித்த சனத்தின் சாதனை இன்றும் எவராலும் முறியடிக்கப்படவில்லை.

எதிரணியினரின் இணைப்பாட்டங்களை முறியடிக்க வேண்டியதேவை ஏற்படும்போது தனது இடதுகை சுழல் பந்துகளின் மூலம் எதிரணியினரைத் திணறடித்துள்ளார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சனத்தால் பல விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன. அதேபோலவே எதிரணியினர் மிக விரைவாக ஓட்டங்களைக் குவித்தவேளைகளில் சனத் தனது பந்து வீச்சின்மூலம் ஓட்ட எண்ணிக்கை வேகத்தைப் பல போட்டிகளில் கட்டுப்படுத்தியுள்ளார்.

மேலும் தடுப்பு, குறிதவறாது எறிதல் ஆகியவற்றில் சனத் தொடர்ந்தும் சிறந்து விளங்குகிறார். 1996இல் உலகக் கிண்ணத் தொடரில் கல்கத்தாவில் நடைபெற்ற ஆட் டத்தில் சனத்தின் களத்தடுப்பு மற்றும் பந்துவீச்சு காரணமாக இந்திய அணி நிலைகுலைந்தது. இந்தியாவுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருந்ததைப் பொறுக்கமுடியாத ரசிகர்கள் மைதானத்திற்குள் இறங்கிக் குழப்பம் விளைவித்தனர். ஆட்டம் நிறுத்தப்பட்டது. இலங்கைக்கே வெற்றி வழங்கப்பட்டது.



இதுவரை சனத் 100 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 6 ஆயிரத்து 358 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 14 சதங்களும் 29 அரைச் சதங்களும் அதில் அடங்குகின்றன. அவர் வீழ்த்திய விக்கெட்டுகள் 92.

ஒருநாள் போட்டிகளில் இதுவரை 10 ஆயிரத்து 122 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 10 ஆயிரம் ஓட்டங்களை இதுவரை நான்கு வீரர்கள் மட்டுமே கடந்துள்ளனர். (இந்திய அணியைச் சேர்ந்த டெண்டுல்கர் மற்றும் கங்கூலி, பாகிஸ்தான் அணியைச்சேர்ந்த இன்சுமாம் மற்றும் சனத்) ஒருநாள் போட்டிகளில் சனத் 267 விக்கெட்டுகளைவீழ்த்தியுள்ளார்.

பல வருடங்களாக இலங்கை அணிக்குத் தலைமை வகித்த அர்ச்சுண ரணதுங்க 1999 இல் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றபோது அணித் தலைவராக சனத் நியமிக்கப்பட்டார். அவ்வேளையில் அனுபவமிக்க மூத்த வீரர்கள் பலர் ஓய்வுபெற்றனர். இலங்கை அணிக்குத் தலைமைதாங்கிய சனத் சிறந்த இளம் வீரர்களை அணியில் சேர்த்தார். ரசல் ஆர்னோல்ட் மற்றும் குமார் சங்கக்கார போன்றோர் சனத்துடன் இணைந்து அவருக்குக் கைகொடுத்தனர். தற்போது சனத்திற்கு 37 வயது. தற்போதும் அவரிடம் திறமைகள் உள்ளதால் அணியில் இடம் பெறுவாரா என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்நிலையில் கிரிக்கெட்டில்இருந்து விடைபெறுவதுகுறித்து அவரே முடிவெடுப்பார்.

**- கஜனி -**

இலங்கை அணிக்கு 38 போட்டிகளில் சனத் தலைமை தாங்கினார். இவற்றில் 18 இல் வெற்றிசள் 12 இல் தோல்வி. 8 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.. ஒரு நாள் போட்டித் தரப்பட்டியலில் பல நாடுகளைப் பின்தள்ளி இலங்கை அணி கௌரவமான ஓர் இடத்தைப் பிடித்துள்ளதற்கு சனத் முக்கிய காரணமாவார்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் என்ன செய்ய உத்தேசம் என செய்தியாளர்கள் ஒருமுறை கேட்டபோது "நான் அது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. நான் தற்போது தேசிய அபிவிருத்தி வங்கியில் பணியாற்றுகிறேன். அங்கு எனக்குப் பெரிய அளவில் உதவி ஒத்தாசைகள் கிடைக்கின்றன. எனது அறிவு மற்றும் அனுபவங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க எனக்கு வாய்ப்புக் கிட்டுமானால் அதை எனது நாட்டிற்கு மேற்கொள்ள வேண்டிய கடமை என நினைக்கிறேன். நான் கிரிக்கெட் விளையாட ஆரம்பித்த நாள் தொடக்கம் என்னை வளர்த்த என்னை நேசித்த ரசிகர்களையும் ஊடகவியலாளர்களையும் என்றும் மறக்க மாட்டேன்" என சனத் தெரிவித்தார்.

# 'ஆஷஸ்' தொடரில் இழந்த பெருமையை 'சுப்பர் சீரிஸ்' இல் மீட்டது ஆஸ்திரேலியா




உலகில் தலை சிறந்த கிரிக்கெட் அணி என்ற பெருமையை ஆஸ்திரேலிய அணி மீண்டுமொரு முறை நிரூபித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இடம்பெற்ற சுப்பர் சீரிஸ் போட்டித் தொடரின் முதலாவது ஒருநாள் போட்டியில் உலக கலவன் அணியை 93 ஓட்டங்களால் தோற்கடித்ததன்மூலம் இழந்த பெருமையை மீட்டுச் சாதித்துக் காட்டியுள்ளது றிக்கி பொன்டிங் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி.

அண்மையில் இடம்பெற்ற முக்கோண போட்டித் தொடரில் உலக தரவரிசையில் பின்தங்கிய நிலையில் உள்ள பங்களாதேஷ் அணியிடம் ஓர் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி தோல்விகண்டது. அதுமட்டுமல்லாது இங்கிலாந்து அணிக்கெதிரான ஆஷஸ் கிண்ண டெஸ்ட் போட்டியில் 18 வருட காலமாகக் கட்டிக் காத்துவந்த வெற்றிக் கிண்ணத்தை இங்கிலாந்திடம் இழந்தது ஆஸ்திரேலிய அணி. இது அவ்வணி வீரர்களுக்கு மட்டுமல்லாது நாட்டுக்கே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

இதனால் அந்நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் ரசிகர்கள், அணி வீரர்கள்மீது வசைமாரி பொழிந்தனர். உச்சக்கட்டமாக ஆஸி. அணியிலிருந்து நான்கு முன்னணி வீரர்கள் தூக்கப்பட்டனர்.

கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்தவரையில் எந்தக் நேரத்திலும் எதுவும் நிகழலாம் என்பதனை நன்குணராத கிரிக்கெட் ரசிகர்களும் விமர்சகர்களும் ஆஸி. அணி அண்மையில் பெற்றுக்கொண்ட தற்காலிகப் பின்னடைவையும் அணியின் களையெடுப்பையும் வைத்துக்கொண்டு அவ்வணி பலவீனமடைந்துவிட்டதாகவும், உலகலெவன் அணியுடனான சுப்பசீரிஸ் போட்டியில் படுதோல்வி அடையும் என்றும் கருத்துகளை வெளியிட்டனர்.

இவை அனைத்தையும் தவிடுபொடியாக்கி மீண்டும் தம்மால் சாதிக்கமுடியும் என்று நிரூபித்துள்ளனர் ஆஸ்திரேலிய வீரர்கள். தமக்கு ஏற்பட்ட தற்காலிக தோல்வி, அனுபவம் வாய்ந்த வீரர்களை அணியில் இழந்த சோகம் என்பவற்றுடன் எப்படியாவது இழந்த பெருமையை மீளப்பெற வேண்டும் என்ற தாகத்துடனும் சுப்பர் சீரிஸ் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் களமிறங்கியது ஆஸி அணி. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியினர் ஆரம்பத்திலிருந்தே ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினர். ஆஸி அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 255 ஓட்டங்களைப்பெற்றது. உலக லெவன் அணி இந்த வெற்றி இலக்கைச் சுலபமாக அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உலகின் முன்னணி துடுப்பாட்டக்காரர்களான வீரேந்தர் சேவாக், குமார் சங்ககார, பிறைன் லாரா, ராகுல் ராவிட், பீற்றர்சன் மற்றும் அப்ரிடி போன்றவர்களையும் சகலதுறை ஆட்டக்காரர்களான ஷேன் பொலக், ஜக்கலிஸ் மற்றும் பிளின்ரொவ் ஆகியோரையும் உலக லெவன் அணி கொண்டிருந்ததே இந்த நம்பிக்கைக்குக் காரணமாகும். ஆனால், அவர்களால் ஆஸி. அணி வீரர்களின் பந்து வீச்சுக்கு நின்றுபிடிக்க முடியவில்லை. குமார் சங்ககார (65 ஓட்டங்கள்) தவிர ஏனைய முன்னணி வீரர்கள் இரட்டை இலக்க ஓட்டத்தைப்பெற பெரும் சிரமப்பட்டனர். 162 ஓட்டங்களுக்குள் சுருண்டது அவ்வணி.

இந்தப் போட்டியில் 93 ஓட்டங்களால் உலக லெவன் அணியைத் தோற்கடித்தது ஆஸி அணி. இதன்மூலம் தற்போது பலத்துடன்தான் இருக்கிறோம் என்ற செய்தியை கிரிக்கெட் ரசிகர்களுக்குக் கூறியுள்ளனர் ஆஸ்திரேலிய வீரர்கள்.




# சச்சின் மீண்டும் களத்தில்...



*இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் மீண்டும் களமிறங்குகிறார். இடது முழங்கை காயத்திற்கு சத்திர சிகிச்சை செய்துகொண்ட சச்சின் நான்கு மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் கிரிக்கெட் களத்தில் இறங்குகிறார். மொகாலியில் நாளை ஆரம்பமாகும் உள்ளூர் போட்டிகளில் ஒன்றான சாலஞ்சர் டிராவி ஒருநாள் தொடரில் இவர் பங்குபற்றுகிறார். இந்திய அணிக்காக மீண்டும் விளையாட முன்னர் பயிற்சிக்காக மேலும் சில உள்ளூர் போட்டிகளில் விளையாட சச்சின் முடிவுசெய்துள்ளார்.*

*எதிர்வரும் 20 ஆம் திகதி பரோடாவில் ஆரம்பமாகவுள்ள துலீப் டிராபி தொடரிலும் சச்சின் இடம்பெற்றுள்ளார். மேற்கு மண்டல அணியின் தலைவராக இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நான்கு நாள்கொண்ட முதல்லீக் போட்டியில் மேற்கு, தெற்கு மண்டல அணிகள் மோதுகின்றன. இப்போட்டியில் சச்சின் விளையாடுவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. இலங்கைத் தொடருக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 19ஆம் திகதி பெங்களூரில் நடக்கின்ற காரணத்தினாலேயே இப்போட்டியில் சச்சின் பங்குபற்ற மாட்டார் எனத் தெரிகிறது.*

# முன்னேறுகிறார் சானியா



**ஜப்பான் பகிரங்க டெனிஸ் தொடரில் இந்திய வீராங்கனை சானியா மிர்ஸா கால் இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.**

**முன்னணி வீராங்கனைகள் பங்குபற்றும் போட்டி டோக்கியோவில் நடந்துவருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நடந்தன. இதில் உலகத் தரப்பட்டியலில் 37ஆவது இடத்தில் இருக்கும் இந்திய வீராங்கனை சானியா மிர்சா ஜப்பானின் அகிகோ நகா முராவை எதிர்த்து விளையாடினார்.**

**ஆரம்பத்தில் இருந்தே சானியா முன்னிலையில் இருந்தார். அபாரமாக ஆடிய அவர் முதல் செற்றை மிகஎளிதில் கைப்பற்றினார். சொந்த மண்ணில் களமிறங்கினாலும் நகா முரா பலவீனமாக விளையாடினார். இதனால் இரண்டாவது செற்றையும் சானியா எளிதில் கைப்பற்றினார். இறுதியில் இவர் 6-1, 6-4 என்ற நேர் செட்டில் நகா முராவை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதிபெற்றார்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



# அமரர் வல்லிபுரம் பெரியதம்பி

# குலசேகரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி)

மண்மலர்வு
05.05.1923

விண்உதிர்வு
09.09.2005

09.09.2005 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் அனுதாப அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் தொலைபேசி, தந்தி ஊடாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி.
தொ.பே.:0776568166, 0776170686, 0773114314.

(40713) (39)

தகவல்:
இராமச்சந்திரன் குடும்பத்தினரும்
பேரப்பிள்ளைகளும்.

# பரீட்சைக்காகப் பட்டபாடுகளை பகிர்கின்றனர் சாதனையாளர்கள்

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறுகளில் வடபகுதியில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டு இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றார்கள் என்பதை, இனிவரும் மாணவர்களுக்கு எடுத்துக் காட்டும் முகமாக சாதனை படைத்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைத் தருகின்றோம்.

இந்த மாணவர்கள் எத்தகைய இலக்கினை நோக்கிச் செல்கிறார்களோ, அத்தகைய இலக்கினை வெற்றிகரமாக அடைந்து எமது தாயக மண்ணில் சேவையாற்ற வேண்டுமென்று ஊக்கமளிக்கும் வகையில் உதயனின் இந்தத் தொடர் அமைகிறது.

4

எல்லா மாணவர்களாலும் எல்லாத் துறையிலும் வளர முடியாது.என்னைப் பொறுதத வரை படிப்பையும் கவனித்து அத்துறையினையும் எதிர் கொள்ளமுடியாமல் போய்விட்டது. அதற்காக வேறுதுறைகளில் ஈடுபட்டால் கல்விக்குத் தடை என்று சொல்லவில்லை. என்னால் முடியவில்லை என்று தான் சொல்லவருகிறேன்.

இறுதியாக எந்தவொரு மாணவரும் தனக்குரிய ஆளுமை உள்ள துறையினைத் தேர்ந்தெடுத்துத் தன்னம்பிக்கையுடன் விடாமுயற்சி செய்தால் எதிலும் வெற்றி பெறாலாம்.

***

### எதையும் எதிர்கொள்ளும் மனவைராக்கியம் தேவை!



சதாசிவஐயர் நடராஜசர்மா
யாழ். இந்துக்கல்லூரி
கணிதப்பிரிவு

திருநெல்வேலியைச் சொந்த இடமாகக்கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை ஜோன் பொஸ்கோ பாடசாலையில் கற்றார். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் யாழ்.இந்துக்கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவருடைய தந்தை யாழ்.செயலகத்தில் வடக்கு - கிழகபு மாகாண உதவிப் பதிவாளர் நாயகமாகக் கடமையாற்றுகிறார். தாயார் பிரதேச செயலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றுகிறார்.இவர் தன்னுடைய சாதனை பற்றி இப்படிப் பகிர்ந்துகொள்கிறார்.

எனக்கு ஜீசி.ஈ. சாதாரண தரத்தில் 8ஏ,பி,சி, என்ற பெறுபேறு கிடைத்தது.உயர்தரத்தில் கணிதத்துறையில் கற்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை மட்டுமல்ல அப்பாவினதும் ஆசையும்கூட. அவரது எதிர்பார்ப்பு என்னை இன்ஜினியராக்க வேண்டும் என்பதே. அதற்கான ஆரம்பக் கட்டத்தினை அடைநது விட்டேன். எல்லையையும் தொடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. பரீட்சைக் காலத்தின்போது இரவு 8 மணியிலிருந்து 12 மணிவரையும் படிப்பேன். அன்றாடம் கிடைக்கின்ற பாடக் குறிப்புகளை உடனுக்குடன் படிச்சிடுவேன். ரியூசனுக்கு ஒழுங்காகப் போவேன்.

என்னைப் பொறுத்தவரையில் ஒரு மாணவன் வெற்றி அடையவேண்டும் என்றால் அவனுக்குள்ளே நம்பிக்கை உதிக்க வேண்டும்.அத்துடன், அவனை நல்லமுறையில் வழிநடத்துகின்ற ஆசிரியப் பெருந்தகைகள் வேண்டும்.

எல்லோரும் நினைக்கிறார்கள் கணிதத்துறை என்றால் கடினமானதென்று. ஆனால், அப்படியல்ல. அந்தத் துறையில் மிகவும் விருப்பத்துடன் இறங்கினால் சுலபமானது - என்றார்.

***

### முதல் தடவை சறுக்கிவிட்டது எனினும் மனம் தளரவில்லை!



கதிரவேலு கோபிநாத்
சென்.ஜோன்ஸ் கல்லூரி
கணிதப்பிரிவு

திருநெல்வேலியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்றார். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர்தான் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவருடைய தந்தை வங்கி ஒன்றில் பணிபுரிந்துவருகிறார். தாயார் வீட்டுப்பணி செய்பவர். இவருடைய சாதனை பற்றி இவரிடம் கேட்டோம்; இப்படி விவரிக்கிறார்.

எனகசு சாதாரணதரத்தில் 9ஏ, பி பெறுபேறு கிடைத்தது. 10 ஏ வரும் என எதிர்பார்த்தேன். ஆனால், கிடைக்கவில்லை.

கணிதத்துறையினை ஏன் தேர்தெடுத்தீர்கள் என்று கேட்டேன்...

சிறிய வயதிலிருந்து கணித பாடத்தில் எனக்கு விருப்பம். அதனால், அதனைத் தேர்ந்தெடுத்தேன்.

நான் முதல் தடவை உயர்தரப் பரீட்சை எழுதிய போது ஏ,பி,சி என்ற பெறுபேறுதான் கிடைத்தது. பலத்த எதிர்பார்ப்புடன் படித்த போதும் சறுக்கிவிட்டது என்ற உணர்வு என்னை உறுத்தினாலும் மனதைத் தளரவிடக்கூடாது என்ற வைராக்கியத்துடன் இரண்டாவது தடவையாக முயற்சித்தேன்.

நினைத்த இலக்கினை அடைந்துள்ளேன். என்னுடைய அடுத்த இலக்கு ஒரு கல்விமானாக வரவேண்டுமென்பதே. நிச்சயம் அதனையும் அடைவேன்.

இரவு நேரங்களில்தான் அதிகம் விரும்பிப் படிப்பேன். அதிகாலையில் படிப்பது எனக்குச் சரிவராது. பாடக் குறிப்புகளாக எடுத்துத்தான் படிப்பதுண்டு. சாதாரணதரம் வரைக்கும் பாடசாலையின் துடுப்பாட்டப் போட்டி அணியில் அங்கம் வகித்துள்ளேன். உயாதரத்தில் கற்கத் தொடங்கியதும் அதிலிருந்து விலகிவிட்டேன்.

கல்விக்கு அது தடையாக இருக்குமென்றா விலகினீர்கள்...

### நிறைவான பயிற்சி அவசியம்



குமாரசாமி முகுந்தன்
யாழ். இந்துக்கல்லூரி
கணிதப்பிரிவு

சாவகச்சேரியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஜி.சீ.ஈ. சாதாரணம் வரைக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்று உயர்தரத்தில்தான் யாழ்.இந்துக் கல்லூரியில் இணைந்துகொண்டார்.

தந்தை நிர்வாக கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். தாயார் ஆசிரியர். இவருடைய கற்றல் வழிவகைகள் எத்தகையது எனக் கேட்டேன்.

எனக்கு ஜீ.சி .ஈ. சாதாரணதரத்தில் 8ஏ, பி,சி, பெறுபேறு கிடைத்தது. புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்தேன்.

க்ணிதத்துறையில் எப்படி ஈடுபாடுவந்தது என்று கேட்டேன்.

ஜீ.சி.ஈ. சாதாரணதரத்தில் படிக்கிறபோது கணிதபாடமென்றால் நன்றாக விரும்பிப் படிப்பேன். அதனால், உயர் தரத்திலும் அந்தத் துறையினை விரும்பித் தெரிவுசெய்தேன்.

இரவு நேரங்களில் மட்டும்தான் 12 மணி வரையும் படிப்பேன். குறுகிய நேரம் படித்தாலும் நிறைவான பயிற்சிகளைச் செய்து கொள்ளுவேன். படிப்பைத்தவிர வேறு எந்தத்துறையிலும் ஈடுபடவில்லை.

**சந்திப்பு : அபிமானன்**

ஏன் அது கல்விக்குத் தடை என்று நினைத்தீர்களா?

அப்படி ஒரு போதும் நினைக்கவில்லை. முயற்சியிருந்தால் சகலதுறைகளிலும் பிரகாசிக்கலாம். என்னைப் பொறுத்தவரை சிறு வயதிலிருந்து வேறு துறைகளில் அக்கறை கொள்ளவில்லை.எந்தவொரு மாணவனும் முதலில் தனக்குரிய இலக்கினைத் தீர்மானித்து அதனை அடைவதற்கு முயற்சிசெய்து கொள்ளவேண்டும்.

ஆசிரியர் கற்பிக்கின்றபோது அதனை உடனே கிரகிக்கின்ற தன்மை இயல்பாக உருவாக வேண்டும். அத்துடன் பெற்றோர்களின் அன்பான ஆதரவும் ஆசீர்வாதமும் கிடைக்குமானால் எந்த விடயத்தில் கால் வைத்தாலும் வெற்றிகளைச் சூடிக்கொள்ளலாம்.

### விளக்கு வெளிச்சத்தில் தான்...



தங்கராசா பிரியங்கா
புத்தூர் சோமஸ்கந்தா
கல்லூரி
கலைப்பிரிவு

ஆவரங்காலைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஜீ.சி.ஈ. சாதரணதரம் வரைக்கும் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் கற்று உயர்தரத்துக்காக சோமஸ்கந்தாக் கல்லூரியில் இணைந்து கொண்டார். இவரது தந்தை விவசாயி. தாய் இல்லத்தரசி. இவர் தனது சாதனைக்கு மேற்கொண்ட முயற்சிகள் குறித்துக் கேட்போது. ஜி.ச.ஈ. சாதரணதரத்தில் 2ஏ, 6பி, சி என்ற பெறுபேற்றினைப்பெற்றேன். எனது அண்ணா பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் 3ஆம் வருடத்தில் கற்கிறார். அதனால்தான் நானும் அண்ணாவின் வேண்டுதலின் பேரில் கலைத் துறையினைத் தேர்ந்தெடுத்தேன்.

படிககும்போது எத்தகைய வழிகளைக் கையாண்டீர்கள்...?

இரவு நேரப்படிப்பு என்பது எனக்கு சரி வராது. அதனால் பகல படிப்பைத்தான் அதிகம் விரும்புவேன். படித்த மூன்று பாடங்களில் புவியியல்தான் எனக்கு கடினமானதொன்றாக இருந்தது. அதனை மிகவும் அதீத கவனத்துடன் ஆசிரியர்களின் திறமையான வழிகாட்டலில் படித்தேன். பரீட்சைக் காலங்களில் அதிக நேரம் எடுத்துப் படித்துக் கொள்வேன். கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணியில் அங்கம் வகித்து பல போட்டிகளில் பங்குபற்றி உளளேன். ஊரில் மின்சார வசதி இருக்கிறது. ஆனால், எங்களுடைய வீட்டிற்கு இன்னும் மின்சார வசதி கிட்டவில்லை. அதனால் விளக்கு வெளிச்சத்தில்தான் கற்பேன்.

# தடைகளைத் தாண்டி வெற்றிநடை போடும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி இந்த வருடம் பொன்விழா ஆண்டைக் கொண்டாடுகிறது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்மை பெறும் பாடசாலைகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் ஒன்றாகும். இவ்வாண்டு பொன்விழாவைக் கொண்டாடும் இக்கல்லூரி, தனது கல்வி வரலாற்றில் புரிந்த சாதனைகளையும் பெறுபேறுகளையும் விழாவின் போது மதிப்பிடுவது பாடசாலைச் சமூகத்தை மேலும் ஊக்குவிக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது.

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை என ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயமாகி இவ்வாண்டு முதல் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி என்று பெயர் பெற்றமை எமது கல்லூரியின் வேக வளர்ச்சிக்கான அடையாளமாகும்.

கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழல், எம்மக்களின் வாழ்க்கையில் நிலையான தன்மையை இழக்கச் செய்துள்ளது.

மலையத்தமிழர் இடப்பெயர்வு, முல்லைத்தீவு நகர மக்களின் இடப்பெயர்வு, யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வு, ஒட்டுசுட்டான் - கற்சிலைமடு - முத்தையன்கட்டு மக்களின் இடப்பெயர்வு, கிளிநொச்சி மக்களின் இடப்பெயர்வு யாவற்றையும் எதிர்கொண்டு அம்மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த கிராமம் புதுக்குடியிருப்பு.

அத்தோடு இவையாவற்றையும் மீறி அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பின் போதும் பாதிப்புற்ற மக்கள் தஞ்சமடைய வழிவிட்டது. இக்காலங்களிலெல்லாம் இப்பாடசாலை மக்களின் தங்குமிடமாக அமைந்ததால் மாதக்கணக்கில் கல்விச் செயற்பாடுகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுமிருந்தன. அதுமட்டுமன்றி ஆசிரியர்களும், மாணவர்களும் இம்மக்களுக்கு உணவு சமைத்து பரிமாறுதல், வர்த்தகர் தனியாரிடமிருந்து அத்தியாவசியப் பொருள்களைச் சேகரித்து வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர்.

'வந்தாரை வாழவைக்கும் வன்னி' என்ற பெருமையக் காத்து வந்துள்ளது இக்கல்லூரி.

இடப்பெயர்வுகளால் உண்டான அதீத மாணவர் அதிகரிப்பையும் தாங்கி மரநிழல்களிலும் தற்காலிக கொட்டகைகளிலும் வீடுகளிலும் கல்வி போதித்துப் பெருமை சேர்த்தவர்கள் இக்கல்லூரி ஆசிரியர்கள்.

### பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடுபட்ட பொதுமக்கள்!

கல்விக்கான செலவு பெருமை சேர்க்கும் முதலீடாகும் என்ற உண்மையைப் புரிந்து கெண்ட இக்கிராம மக்கள், இக்கல்லூரிக்கென 33 ஏக்கர் நிலத்தை உவந்தளித்துள்ளமை முன்னுதாரணமான செயலாகும்.

இதை அடியொற்றி, இப்பாடசாலையின் பழைய மாணவர்களும் இக்கல்லூரி வளர்ச்சிக்காகச் செலவிடும் மூலதனமானது அவர்களது சந்ததியினருக்கான முதலீடு என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மை.

இப்பாடசாலையில் கல்வி கற்ற, புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களது செயற்பாடு அனைவராலும் புகழப்படக்கூடியது. முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தமது பொன் விழா உரையில் "முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள ஏனைய 48 பாடசாலைகளுக்கும் இப்பாடசாலையின் பழைய மாணவர் செயற்பாடுகள் ஒரு முன்னுதாரணமாகவும் வழிகாட்டலாகவும் அமைகிறது" எனப் புகழ்ந்து பாராட்டினார்.

பல நாடுகளிலும் கிளைகளாகச் செயற்படும் பழைய மாணவர்கள், இக்கல்லூரியின் பௌதிகவள விருத்திக்குப் பெரும் பங்காற்றி வருகின்றனர். பழைய மாணவர் சங்க பிரான்சியக் கிளையினர் நிரந்தர வகுப்பறைக் கட்டடமொன்றை வழங்கியமை, நிரந்தரக் கட்டடமொன்றுக்கான முதற்படியாகும்.

அதன்பின்னர் பழைய மாணவரது ஐக்கிய இராச்சியக் கிளையினர் தண்ணீர்த் தாங்கி, சுற்றுமதிலுடன் கூடிய நுழைவாயில் இவை யாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் பொன்விழா மண்டபமான கேட்போர் கூடம் ஒன்றினையும் அமைத்து உதவியுள்ளமை இக்கல்லூரி சிறந்த ஆக்க கர்த்தாக்களை உருவாகியுள்ளது என்பது எடுத்துக்காட்டுக்களாகும்.

இக்கேட்போர் கூடம் 160 லட்ச ரூபாய்கள் செல்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அமர்ந்து கொள்ளக்கூடிய நவீன வசதிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

### சிறப்புற நடைபெற்ற பொன்விழா நிகழ்வுகள்

அண்மையில் பொன்விழா நிகழ்வுகள் மூன்று அமர்வுகளாக சிறப்புற நடைபெற்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# Welcome to the First Canadian campus in Sri Lanka

Cambrian College of Applied Arts and Technology

Cambrian College is the largest College of Applied Arts and Technology, in Northern Ontario, Canada.

## 2nd Intake

**We are Now in Canada**

**Subramaniam Thayananthan**



I'm happy to declare that my ambition to study in Canada has fulfilled through Governor's College.

**Prasad Rasika Mendis**



I have experienced true Canadian education from Governor's College before leaving to Canada for continuing my education.

## SCHOLARSHIPS
### Scheme Available

**Courses Offered**

- HOTEL AND RESTAURANT MANAGEMENT
- TRAVEL AND TOURISM MANAGEMENT
- SOFTWARE ENGINEERING TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION - ACCOUNTING

- ☑ Complete TWO semester (one year) at Sri Lankan campus, and transfer to CANADA
- ☑ Free ESL course (English as a second language)
- ☑ Course fee can be paid in installments
- ☑ Loan facilities on request

FOR THE SECOND INTAKE
Contact : Soumya / Kavitha



## GOVERNOR'S COLLEGE

"COLLEGE CAMPUS"
376, Galle Road, Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374
E-mail : governors@sltnet.lk

Advertise 3209

---

Sri Lankan - German Development Cooperation

NRP Northern Rehabilitation Project

Ministry of Relief, Rehabilitation & Reconciliation

kfw gtz German Technical Cooperation

## இலங்கை-ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனம் கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கான அறிவித்தல்

ஜேர்மன் சமஷ்டி குடியரசின் ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைச்சின் கீழ் செயற்படும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (GTZ) இலங்கையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருகிறது.

GTZ இலங்கை அரசாங்கத்தின் பங்காளியாக அதன் அபிவிருத்தி நோக்கங்களுக்கு ஆதரவாக அமைச்சு சார்ந்த அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப உதவிகளும், ஆக்கபூர்வமான மனிதாபிமான, பொருளாதார தீர்வுகளையும் வழங்கி வருகிறது.

GTZ வடபுனரமைப்புத் திட்ட நிர்வாகம் சுனாமி அனர்த்தத்தினால் அழிவடைந்த பல பாடசாலைகளை புதிய நிலையங்களில் நிர்மாணிப்பதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது.

**இதன் பொருட்டு கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்படுகிறது.**

- மணற்காடு — றோ.க.த.க.பாடசாலை
- செம்பியன்பற்று — றோ.க.த.க.பாடசாலை
- வெற்றிலைக்கேணி — பரமேஸ்வரா வித்தியாலயம்

இப் பாடசாலை நிர்மாணப் பணிகளை உரிய கால எல்லைகட்குள்ளும், உயர் தொழில்நுட்பத் திறனுடனும் நிறைவேற்றித்தரக்கூடிய அங்கிகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தங்கள் முழுமையான விபரங்களை 18.10.2005 திகதி பிற்பகல் 5 மணிக்கு முன்னர் GTZ வடபுனரமைப்புத் திட்ட அலுவலகத்தின் இல. 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் அல்லது இல 29/15இ விசாக்கா வீதி, கொழும்பு – 4 என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பந்தக்காரர்களை அவர்களது அனுபவம், திறன், வளம் ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யும் உரிமையை GTZ வடபுனரமைப்புத் திட்ட நிர்வாகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

அப்படி தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர்களுக்கு கட்டட ஒப்பந்தங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

**சிரேஸ்ட ஆலோசகர்**
**472, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

**ASIAN** மற்றும் CSC இந்திய உயர்கல்வி நிறுவனம் இணைந்து இலங்கையில் முதன் முறையாக G.C.E. O/L மற்றும் A/L பரீட்சையில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் Computer கல்விக்கான ஸ்கொலர்ஷிப் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

## MERIT 2005
**Bring your Result Sheet**

Student can now use their best result sheet



கீழ்குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழ் ஒன்றின் பிரதியுடன் எமது பயிற்சிமையங்களை நாடுங்கள்.

- பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டது
- பரீட்சை திணைக்களத்தால் வழங்கப்பட்டது.
- இணையம் மூலமாக பெறப்பட்டது.

Merit Scholarship
திட்டத்தில் சேர்வதற்கு பரீட்சை ஆண்டு மற்றும் வயதெல்லை கிடையாது.
சாதாரண தர அல்லது உயர்தர பெறுபேறுகள் எதுவானாலும் பயன்படுத்த முடியும்.
Eligibility : G. C. E. O/L

Registered with Tertiary and Vocational Education Ministry

**O/L or A/L சான்றிதழுடன் வாருங்கள் !**
**ஸ்கொலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள் !**

## ASIAN COMPUTERS

13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவையில்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2 G, Stanley Road, Jaffna. | Kodikamam Road Nelliyadi, | Kandy Rd, Chavakachcheri, |
| Tel : 021 - 222 5677 | Tel : 077-3122198 | Tel : 077-3039587 |

OUR NETWORK BRANCHES :
Kotahena, Wellawtta, Wattala, Mattakkliya, Negombo, Kandy, Trinco Vavuniya, Batticaloa, Chilaw, Kotagala, Valaichchenai, Akkaraipattu

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப் பட்ட சிறந்த அஞ்சலதிபர்களுக்கான போட்டி யில் மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்ற வல்வெட்டித்துறை அஞ்சலகத்தைச் சேர்ந்த

**உருத்திராபதி இரகுபதி**

அஞ்சலதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**அஞ்சல் சமூகம்,**
**வல்வெட்டித்துறை.**

(40992)(52-11-45)

---

## அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தால் 06-10-2005 வியாழக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்புவிழாவில் கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்ற **சைவபூசணம் வல்லிபுரம் கந்தசாமி, முல்லைமணி வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்** ஆகியோரை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சு. சண்முகவடிவேல் ஸ்தபதி**
*"அபிராமி சிற்பநிலையம்"*, **61, முதலாம் குறுக்குத்தெரு,**
**வவுனியா.**

(41016)(52-11-45)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (7-10-2005) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி பட்டம்பெற்ற

**பாலசிங்கம் பார்த்தீபன்**
B.BA(H.R.M. Spe)

அவர்கள் மேலும் பல உயர் பதவிகளைப்பெற வேண்டும் என வாழ்த்தி ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையாரை வேண்டுகிறோம்.

**ரமேஸ்,விமலேஸ் (மாமன்மார்கள்)**
**பழைய பொலீஸ் நிலைய வீதி, ஆனைக்கோட்டை**

இலங்கை அரசு

வடக்கு-கிழக்கு மாகாண சபை

வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

கடன் இலக்கம் - 2880 சி.இ.

தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

(குடிசார் வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

**ஐ.எவ்.பி. இல:ஜேஎ / நீர்ப்/சீஎல்ஜி/சிபி/07**
**ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/சீபி 08** திகதி 07.10.2005
**ஜேஎ/நீர்ப்/சிஎல்ஜி/சீபி/09**

1. வடக்கு -கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

**நம்பிக்கையின் கீழான வசதி (IDA)**

2. ***மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை*** அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் கட்டடத்தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

3. ***அட்டவணை***

| ஜஎவ்பி இல. | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1. ஜேஎ/நீர்ப்/சிஎல்ஜி/சிபி/07 | யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கட்டடம் மீளமைத்தல் - கட்டம் 11 | 158,000/- | 800.00 | 3 மாதங்கள் |
| 2. ஜேஎ/நீர்ப்/சிஎல்ஜி/சிபி/08 | வலி.கிழக்கு பிரதேச சபை கட்டடம் மீளமைத்தல் கட்டம் 11 | 44,000/- | 800.00 | 3 மாதங்கள் |
| 3. ஜேஎ/நீர்ப்/சிஎல்ஜி/சிபி/09 | வேலணை பிரதேச சபை கட்டடம் மீளமைத்தல் கட்டம் 11 | 56,000/- | 800.00 | 3 மாதங்கள் |

3.1 மீளளிக்கப்படாத கட்டணமாக காட்டப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ். மாவட்ட செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ **(Draft)** அல்லது தபால் அலுவலகத்தில் பெறப்பட்ட காசுக் கட்டளையாகவோ (**(Money Order)** மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் 08.11.2005ஆந் திகதி பிற்பகல் 15 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

3.2 ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இல. 021-222 2654**
**தொலைநகல் இல. 021-222 3410**

4. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 45 நாள்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும் . அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையையும் கேள்விகளுடன் இணைத்து ***அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கு 09.11.2005 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதேநேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

5. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாணக் குறிப்புக்கள் 3ஆம் பந்தி யில் சொல்லப்பட்ட நடைமுறைகளில் ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது இந்தக் கேள்விப் பத்திரத்தில் உள்ள ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பதும் ஒரு தனி ஒப்பந்தகாரருக்குத் தேவைப்படும். தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல்வேண்டும்.

6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**கே.கணேஷ்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

07.10.2005

(C/45502)(21.11.16)

## வருவாய்த்துறையில் அடையாள அட்டைகள்

தமிழீழ மீட்பு நிதி பெறுவதற்காக பளைக்கு சமுகமளித்தோரினால் தவறவிடப்பட்ட சில அடையாள அட்டைகள் தமது அலுவலகத்தில் உள்ளன என்று வருவாய்த்துறை அறிவித்துள்ளது.

அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்கள் அத்தாட்சிப்படுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

தவறவிடப்பட்ட அடையாள அட்டை பற்றிய விவரம் வருமாறு:-

✱ அழகம்மா நாகலிங்கம் (நெல்லியடி)- தே.அ. அட்டை இல.30850131 V

✱ நாகமுத்து துரைசிங்கம் (சாவகச்சேரி)- தே.அ. அட்டை இல: 262410838V

✱ சங்கிலி ஆறுமுகத்தான் (கைதடி தெற்கு)- அடையாள அட்டை இல. 84930. (எ-3)

## புங்குடுதீவு மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புங்குடுதீவு சமுர்த்திச் சங்கம் ஜே/22,ஜே/23 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியது.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 4ஆம் திகதி புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ஆசிரியமணி ந.இராசதுரையின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புங்குடுதீவு சமுர்த்தி வங்கி முகாமையாளர் சி. ஜெயசீலன், சமுர்த்தி உத்தியோகத்தர் க.அஜந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-ரி-202)

## யாழ்.வருகிறார் நெதர்லாந்துத் தூதர்

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை வருகை தரவுள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் கீழ் கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்ட விவசாய உபகரணங்களையும், யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட தளபாடங்களையும் பார்வையிடும் பொருட்டு சில விவசாய கேந்திர நிலையங்களுக்கும் பாடசாலைகளுக்கும் விஜயம் செய்வார். அத்துடன், யாழ். மாநகர சபைக்கு உழவு இயந்திரங்களையும் கையளிப்பார். இந்த நிகழ்வு திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும். (எ-204)

**LUXURY HOUSE WITH ALL MODERN FACILITIES AVILABLE FOR RENT N.G.Os ONLY**

An upstairs' house situated at 44/20,Sangiliyan road, Nallur. adjacent to the Nallur Kandasamy temple in 14 lachams of land with all modern facilities including garage is available for rent.

*Please contact telephone numbers:*
*021 222 9055,*
*0773 - 054974,;*
*0779-179919.*

(40912)(21-46-11-16)

**விசேட கழிவு கட்டணத்தில் யாழ்-கொழும்பு பிரயாண ஒழுங்குகள்**

விமான மூலமாக கட்டணம்
யாழ்-கொழும்பு - 6800/-
யாழ்-கொழும்பு-யாழ் - 11800/-

சொகுசு பஸ் (A/C BUS)
யாழ்-கொழும்பு - 1100/-

VAN மூலமாக
யாழ்-கொழும்பு - 1100/-

VAN மூலமாக செல்பவர்களை வீடுகளில் ஏற்றி கொழும்பிலும் அவர்களது இருப்பிடங்களில் பாதுகாப்பாக இறக்கிவிடப்படுவார்கள்

பிரத்தியேக VAN சேவை
யாழ்-கொழும்பு - 12000/- மட்டும்

* சர்வதேச நாடுகளுக்கான விமான ரிக்கற்றுக்கள் கொழும்பை விட குறைந்த கட்டணத்தில்

* தீபாவளியை முன்னிட்டு உலகநாடுகளுக்கான (PARCEL SERVICE) பொதிகள் சேவை இரண்டு கிலோவிற்கு மேல் அனுப்பும் போது மிகவும் குறைந்த கட்டணத்தில் நாமே பொதிகள் செய்து அனுப்பி வைக்கிறோம்.

(C/45478)

தொடர்புகளுக்கு:
**RAINBOW TRAVELS & TOURS**
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்)
தொ.இல: 0777 328219, 021 222 3237

## அழைப்புக் கட்டளை

[இல.16-பிரிவு 55 (1)]

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட/ நீதிமன்றத்தில்

**வலத்தியஸ் யோசப் செல்வரட்ணம்**
14/2, அடம்பன் றோட், குருநகர்.
யாழ்ப்பாணம்.

வழக்கு இல.மணநீக்கம்/601 எதிர் வழக்காளி/

**செல்வரட்ணம் பெண் பற்றிமா**
சென்.பற்றிக்ஸ் றோட், குருநகர்
தற்போது இத்தாலி.

எதிராளி/

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளி/க்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி,

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையிலான பதிவுத் திருமணத்தை ரத்துச் செய்யக் கோரி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாரதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2005ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 09 ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதி மன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளக்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தாணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகிறீர்.

**லிங்கா துரைராஜா** நீதிமன்றக் கட்டளைப்படி.
வழக்காளியின் பதிவாளர்
சட்டத்தரணி மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

குறிப்பு: விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுக்குமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்காகும் செலவை மேவுவதற்கு தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

சிறீமோகன்
கையொப்பம் பதிவாளர்

**2005 ஆண்டு ஐப்பசி மாதம் 07 ஆந் நாளாகிய இன்று**

(41041)(21.11.17)

# மரண அறிவித்தல்

## *அப்பாரத்தினம் சண்முகநாதன்*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இல. 75, கொக்குவில், சம்பியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாரத்தினம் சண்முகநாதன் (ஓய்வுபெற்ற அதிகாரி, தபால் தந்தித் திணைக்களம்) அவர்கள் 07.10.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாரத்தினம் - செல்லாச்சி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற தம்பையா - சோதிமதி தம்பதியரின் மருமகனும் பாலசிங்கம் (இளைப்பாறிய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி) அவர்களின் சகோதரரும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் மீனலோஜினி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி), ரமணி (கொழும்பு), சதானந்தன் (லண்டன்), காண்டீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வேலணை பிரதேச சபை), உதயா (கொழும்பு), லதா (லண்டன்), ரோகிணி (மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌதமி, றன்மழி, உத்பலா, கிரிராஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.உதயகுமாரன்
(மருமகன்).

*இல. 75, சம்பியன் வீதி,*
*கொக்குவில்.*

(41108) (11-33-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சென்யூட் இளவாலையைச் சேர்ந்த
செல்வி
**கொன்சாரிஸ் பீற்றர் கனிஸ் வினித்திரா**
(யா/ இளவாலை கன்னியர்மடம்)
2005 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 3 A சித்திபெற்று பாடசாலைக்கும் எமது கிராமத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ளமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**நிமால் குடும்பம், குமார் குடும்பம், புஸ்பா குடும்பம், லோறன்ஸ் குடும்பம், நிக்சன் குடும்பம்.**

சென்யூட்,
இளவாலை.
(41034) (24-11-19)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்





யாழ்.போதனா வைத்தியசாலை முன்னாள் பணிப்பாளரும் லயன்ஸ் கழக வைத்திய கலாநிதியும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான உப தலைவருமான

**செல்வி நவமலர் கனகரட்ணம்**

அவர்களுக்கு 07.10.2005 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது கௌரவ கலாநிதி பட்டம் பெற்றமைக்கும் 06.10.2005 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதி பட்டம் பெற்ற சைவப் புலவர்

**திரு.வ.கந்தசாமி**

அவர்களுக்கும் இருதினங்கள் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதி பட்டம் பெற்றவர்களுக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் நலம்பெற்று வாழவேண்டும் என்று நயினை நாகபூஷணி அம்பாளின் ஆசி யும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் ஆசியும் கிடைத்து மேலும் பல பட்டங்கள் பெற்று சிறந்து திகழ பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

சுதுமலை, நயினை தேவஸ்தானம்.
(41047) (42-11-19)

சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி
**சிவஸ்ரீ ஐ.மஹேஸ்வரக் குருக்கள்.**

## தடைகளைத் தாண்டி...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் அவர்கள் உட்பட, தமிழீழத்தின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை விழாவுக்கு மேலும் மெரு கூட்டுவதாக அமைந்திருந்தது.

அந்நிய தேசங்களில் வாழ்ந்தாலும் அறிவுக் கண்ணைத் திறக்கவைத்த கல்லூரியையும் சொந்த மண்ணையும் பண்பாட்டு விழுமியங்களையும் உணர்வு பூர்வமாக நேசிக்கும் எம் கல்லூரியின் பழைய மாண வர்கள் தம் குழந்தைகளின் பல்கலை ஆற்றல் களையும் பொன்விழாவில் மேடையேற்றி கூடி யிருந்தோரைப் பரவசப்படுத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலே இதுவரை நிகழ்ந்த பொன்விழா நிகழ்வுகள் யாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி யின் பொன்விழா நிகழ்வுகள் அமைந்திருந்தன. கல்லூரியில் சாதனைகளைப் படைத்த சகல மாண வர்களுக்கும் பரிசில் வழங்க முடியாவிட்டாலும் கடந்த எட்டு ஆண்டுகளின் சாதனையாளர்களுக்கு பொன்விழா மேடையில் முல்லைத்தீவு அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமார் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

தேசிய மட்டத்தில் மட்டுமன்றி சர்வதேச அள விலும் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து இரு தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட மாண வன ச.நிரஞ்சனுக்கு மாவட்ட ரீதியில் பல்துறை அமைப்புகளாலும் கௌரவிப்பு இடம்பெற்று வருகிறது.

இப்பொன்விழாவிலும் அம்மாணவன் கல்வி யிலும் விளையாட்டிலும் பெற்றுக்கொண்ட சாதனை களுக்காகப் பல பரிசில்கள் வழங்கிக் கௌர விக்கப்பட்டபோது மாவட்ட அரச அதிபர் மட்டு மன்றி கலந்துகொண்ட அனைவர் உள்ளங்க ளுமே புளகாங்கிதம் அடைந்தன. இயற்கையோடு இணைந்து கல்வி வழங்குதல் என்ற இயற்கை வாதக் கல்வித் தத்துவத்தை அடியொற்றி, இக் கல்லூரியில் நிறைந்து நிற்கும் விழுதுபரப்பிய ஆலமரச் சோலைகளைக் குறிப்பிடலாம்.

வகுப்பறைகளாக, புகலிடங்களாக, கலந் துரையாடல் மண்டபங்களாக மட்டுமல்ல கலை யரங்கமாகவும் அவை பாத்திரமேற்று வந்துள் ளன. முளைவிட்டு கிளைபரப்பிய எம் கல்லூரி 'விழுதுகள் பரப்பி வேரூன்றும் ஆலமரமாக வள ரட்டும்' என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப் பாளர் த.குருகுலராசா தனது ஆசிச் செய்தியில் கூறியிருந்தமை மேலும் ஒரு படிக்கல்லாகும்.

**- திருமதி லிங்கேஸ்வரி ரகுநாதன்**


## பணி நிலை வெற்றிடங்கள்

இலங்கையின் முன்னணி மென்பொருள் (Software)மற்றும் இணையத்தள சேவைகளினை வழங்கிவரும் எமது நிறுவனத்தின் யாழ் தலைமைக்காரியாலயத்தில் உள்ள கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்க ளுக்கு தகவல் தொழில்நுட்பத்துறையில் திறமையுள்ளவர்களை எதிர் பார்க்கின்றோம்.

* Receptionist /Cleark
* Computer Type Setter
* Trainee Programmers
* Trainee Web Developer
* Hardware Technician
* Network Technician
* Office Assistant
* Marketing Executives


வயதெல்லை 18-25 சம்பளம் பேசித்தீர்க்கப்படும் . விண்ணப்பத்தாரிகள் எதிர்வரும் 16.10.2005 இற்கு முன்பதாக உறவினர் அல்லாத இரண்டு பேரின் விவரங்களுடன் சுயவிவரக் கோவையினை தபால்மூலமாகவோ மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பிவைக்கவும்

**Speed IT Net**
72/28,Panikkar Lane,Off Palaly Road,Thirunelvely,Jaffna
e-mail:vacancy@speeditnet.com
(41014) (11-19)

எதிர்வரும் விஜயதசமி முதல் யாழ் ரெக் இல்
கீழ்வரும் கற்கைநெறியொன்றைக் கற்றிட செலுத்தவேண்டியது
ரூபா. 1500/- மட்டுமே!
முதலில் வரும் 100 பேர்களுக்கு அனுமதிக்கட்டணமும் இல்லை!!


**MS. Office XP** | **Typesetting** | **Multimedia**
**Photo Mixing** | **Video Mixing** | **Web Design**
**Computerized Accounting**
**Hardware Engineering**


விஜயதசமி அன்று அனைத்து கற்கைகளுக்குமான
முதல் பிரிவு ஆரம்பிக்கப்படும்



YTS
**யாழ் ரெக்**
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி,
கலட்டிச்சந்தி

**A/L கடினம்! பல்கலை அனுமதி மிகக்கடினம்!!**
**தொழில்வாய்ப்பு மிகமிகக்கடினம்!!**
**இதனால் எனது எதிர்காலம்????**
**என நீங்கள் நினைக்கலாம்**
**ஆனால் NIIT**
**எதிர்காலத்தை வளமாக்குகின்றது.**






**சர்வதேச B.Sc. / M.Sc. பட்டங்களை குறைந்த செலவில் பெற்றுக்கொள்வதற்கான மிகச் சிறந்த வழி**

| | |
|---|---|
| **Microsoft certified**<br>MCSE Windows Server 2003<br>MCSD on .NET Technologies | **Futurz**<br>Professional Diploma in Information Technology (DNIT)<br>(Direct Entry to the Final Year at B. Sc. (Hons) Degree at Northumbria |
| **CATS** Ready for the next level?<br>VB.NET & ASP.NET<br>JAVA & J2EE<br>C++ & Linux<br>XML & DHTML | **SWIFT**<br>Certificate in MS Office XP<br>Certificate in Web Designing<br>Macromedia Flash<br>Macromedia Dreamweaver |

ஆசியாவின் முதல்தர கணனி நிறுவனமான NIIT
வழங்கும் விசேட அதிரடிச்சலுகை

**Microsoft Office XP** இல் குறைந்த கட்டணத்துடன் சர்வதேச தரச் சான்றிதழை பெற்றிட **Sep 30** ற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

*Jaffna Branch :-*
347- 2/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 2227250, 021 4590567

**NIIT**
**www.mmbicyberskills.com**
Get Trained by the Leader
"IDC,USA has named NIIT as the Largest Asia-Based IT Training Provider"

**NIIT Branches**

| | | | |
|---|---|---|---|
| Union Place | 011 4 720790 | Gampaha | 033 4 673222 |
| Nugegoda | 011 4 408770 | Anuradhapura | 025 4 581003 |
| Kurunegala | 037 4 691000 | Bambalapitiya | 011 4 519111 |
| Kandy | 081 4 470900 | Trincomalee | 026 2 227767 |
| Jaffna | 021 2 227250 | Tissamaharama | 047 4 378930 |
| Rukmalgama | 011 4 304238 | | |

enabling the young professional for a better future

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

2 பெரிய ஆட்டுக்கடாக்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 21, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (40982)

நல்ல நிலையில் உள்ள 17000 KM ஓடிய HK-- தொடரிலக்கமுடைய TVS VICTOR G.L மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:077 6538060. (40999)

ஓட்டோமரிக் பாத்மிஷின், டீபிறிஜ், ஐஸ் கிறீம் கடைக்குரிய பந்தல், சுற்று அடைப்பு கள், கதிரைகள், மேசைகள், பிளாஸ்டிக் போட்டு கள், உழுந்து அரைக்கும் கிரைண்டர், 3 வேஸ், எயர் கெண்டிஷனர், டெக்னிக் செற் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.செல்வராணி, குலம் கிறீம் ஹவுஸ் அருகில், ஆலடிச் சந்தி, மானிப்பாய். (41140)

தனிப்பாவனையில் உள்ள Sony colour T.V.25", National Fridge, முதிரை மேசை ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.நமசிவாயம், இல.145, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, T.P.: 021 222 3770. (40945)

தரமான மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் வேலித் தூண்கள், கட்டடத் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்கார பூங் கீறகள், பூச்சாடிகள் என்பன வேண்டிய அளவு களில் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகிலன், 17, ஐயனார் கோயில் வீதி (செங்காதரன் வைத்தியசாலை அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 077 3144884. (40603)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கருவேலடி வீதியில் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக $1\frac{3}{4}$ பரப்பில் குழாய்க்கிணற்றுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவை இல்லை. தொடர்பு: காஞ்சனா பிரேம்குமார், கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.No. 021 4590359. (40779)

சுண்டிக்குளி, பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை வீதியில் 6 பரப்பில் அமைந்த பெரிய கல்வீடு உடன் விற்பனைக்குண்டு. கிணறு, கராஜ், தண்ணீர்த் தாங்கி ஆகிய சகல வசதிகளுடனும் ஒருவித திருத்த வேலை, வெள்ளையடித்தல், பெயின்ற் அடித்தல் தேவையில்லை. தொடர்பு: R.கோபாலரட்ணம், சட்டத்தரணி, சுண்டிக்குளி. (40971)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகர மத்தியில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தின் முன்னால் நல்ல தண்ணீர் கிணறுடனும் ஆறு அறைக் கட்டடத்துடனும் $7\frac{1}{2}$நிலப்பரப்பு காணியுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: நா.குமரகுருபரன், இல.2, சங்கிலியன் வீதி, நல்லூர். T.P.: 0777 111 388, 0777 176909, 021 222 2727. (40958)

இணுவில், பருத்தியடைப்பு பிள்ளையாரடி தெற்கு ஒழுங்கை, மூன்றாவது காணி 2 பரப்பு விரைவில் விற்பனைக்கு. தொடர்பு: சண்முகநாதன், இல.94, அம்மன்வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (41127)

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட மானிப்பாய் வீதியிலுள்ள $1\frac{1}{4}$ பரப்புக்காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: நா.குணலிங்கம், 219A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (41120)

திருநெல்வேலி கிழக்கு, இராஜபாதைக்கு அருகில் பொலீஸ் நிலையத்துக்கு அண்மையில் $4\frac{1}{2}$ பரப்புக் காணி உடன் விற்பனைக் குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 53/1, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (41101)

## காணி, வீடு விற்பனைக்கு

சில்லாலையில் கத்தோலிக்க சூழலில் கதிரைமாதா ஆலயத்திலிருந்து 100m இற்குள் கல்வீட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: போல் சாமிநாதன், மே/பா, அன்ரன் செல்வராசா, "ஆவே மரியா" சில்லாலை, பண்டத்தரிப்பு. T.P.No. 0777 270210 ஞாயிற்றுக்கிழமைகளில் 24 மணிநேரமும் ஏனைய தினங்களில் மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரையும் தொடர்பு கொள்ளலாம். (40841)

17/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தில் $2\frac{1}{2}$ பரப்பு நிலமும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0776176233. (41121)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

48 நாள்கள் நிரம்பிய நல்ல இன அல்சேசன் நாய்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தரன், நவாலி றோட், ஆனைக்கோட்டை. (41137)

## கார் விற்பனைக்கு

லான்சர் (வகன் மொடல்) கார் விற்பனைக் குண்டு. தொடர்பு: திரு.து.கணேசமூர்த்தி, மில்லேன், மல்லாகம் (ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். (41150)

## கார் உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மிற்சுபிசி லான்சர் 14-XXXX தொடர் இலக்கமுடைய வெள்ளை நிறக்கார் மலிவு விலையில் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 44/3, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. T.P.: 0777159721 (பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு காலை 8 - பிற்பகல் 3 மணி வரை). (41112)

## வீடு வாடகைக்கு

பலாலி றோட், பரமேஸ்வரா சந்திக்கு அருகில் 2 or 3 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட தனிப்பட்ட ANNEX உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: 021 222 7069. (40860)

## வீடு வாடகைக்குத் தேவை

கல்வியங்காடு, மானிப்பாய் ஆகிய இடங்களில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. தரகர் தேவை இல்லை. தொடர்பு: இ.கலைச்செல்வன், 'விவுசா இல்லம்' திருமகள் சோதி வீதி, நெல்லியடி. (41037)

## வீடு விலைக்குத் தேவை

கல்வியங்காடு, மானிப்பாய் ஆகிய இடங்களில் வீடு விலைக்குத் தேவை. தரகர் தேவையில்லை. தொடர்பு: இ.கலைச்செல்வன், 'விவுசா இல்லம்', திருமகள் சோதி வீதி, நெல்லியடி. (41036)

## தவறிவிட்டது

காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறையைச் சேர்ந்த வல்லிபுரம் சகுந்தலாதேவி ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல. 616558333V), விசேட அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ம.லோகேஸ்வரன், சூராவத்தை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி உதவவும். (41008)

அருட்பிரகாசம் கலைச்செல்வன் என்பவரது தேசிய அடையாள அட்டை 05.10.2005 அன்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக்கும் கோயில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 439, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரிக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும். (41136)

## மணமகள் தேவை

இங்கிலாந்தில் M.Sc. பட்டம் பெற்று அங்கு Local Council இல் Computer Programmer ஆக தொழில் புரியும் 31 வயது 5' 8" உயரம் உள்ள மணமகனுக்கு நன்கு படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 25 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. இந்துக்கள், கிறிஸ்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 2712, மே/பா. உதயன். (40970)

இங்கிலாந்தில் Barelays Bank இல் Engineer ஆக தொழில்புரியும் 34 வயது 6' உயரம் உடைய மணமகனுக்கு நன்கு படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான 25 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. இந்துக்கள், கிறிஸ்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விளம்பரஇல.2711, மே/பா.உதயன். (40172)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்ப பட்டப்படிப்பு படிப்பவரும் கொம்பியூட்டர் டிப்ளோமா செய்த வரும் 1978 இல் பிறந்த அழகான மணமகனுக்கும், B.A. பட்டதாரி 1978 இல் பிறந்த அழகான மணமகளுக்கும் கனடா, அமெரிக்கா நிரந்தர குடியுரிமையுடைய, கல்வித்தகைமையுடைய மணமக்கள் தேவை. மாற்றுத் திருமணமும் செய்யலாம். தொடர்பு: வ.சண்முகராசா அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (41142)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1971, பூராடம் முதலாம் கால், செவ்வாய் தோசமற்ற கிரக பாவம் $30\frac{3}{4}$ உடைய நிரந்தர ஆசிரியையாக கடமைபுரியும் மணப் பெண்ணிற்கு சிறு உத்தியோகம், சுயதொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்பு: இ.சகிதன், ராஜகிரி, வீரபத்திர கோயில் மேற்கு, உடுப்பிட்டி. T.P.: 0773066677. (41038)

## அமெரிக்க விசா

55050 அமெரிக்க விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்புகொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு. Penquin Book Shop, B2/F23 Bloemendhal flats, Colombo - 13, T.P.: 077 308 1764, 2438367, Internet மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப்படும். (சி/45419)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒருமுறை நாடுங்கள். இந்திய பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (40752)

## புனரமைப்புப் பணிகள்

புங்குடுதீவுமாவட்ட வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. புங்குடுதீவு வாழ் சுவிஸ் ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மாவட்ட வைத்தியசாலையின் முதற்கட்டப் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழுத் தலைவர் சுகருணாகரன் தெரிவித்தார். (எ-202)

## படிவம்

கொழும்பு, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக (வவுனியா வளாகம்) தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவுத்திகதி:14.10.2005
Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

## மணப்பெண் அலங்கார வதப்புகள்

வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்கார Facials, Wedding Structures, Rich Cakes, B'day Cakes தையல், Flower Decoradions என்பவற்றிற்கான Orders ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புகள் சான்றிதழுடன் நடைபெறுகின்றன. T.Luxmy, 18/B, Station Road, Wellawatte. Tel.: 2505325 (41027)

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 - 03 - 1950 | உதிர்வு 30 - 09 - 1995

அமரர் நடராசா கமலாம்பிகை

(இராசாத்தி)

திதி: சஷ்டி 09.10.2005

பத்து ஆண்டுகள் பறந்து போயின
நித்தம் நினைவுகள் நிலைத்து நிற்குதே
எத்தனை பாசமதை வைத்து இருந்தீர்
முத்தெனத் திகழ்ந்தாயே மறப்போமா
உம்மை!

இல.68, சுவகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

கணவன் சி.நடராசாவும் (ஓய்வுபெற்ற லிகிதர் வ.பி.போ.ச.) குடும்பத்தினரும்.

(41156)(42-11-45)

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் இராஜவினோதன்

(வினோ வீடியோ உரிமையாளர்)



K.K.S வீதி, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இராஜவினோதன் 04.10.2005 அன்று அகால மரணமானார்.

அன்னார் இராசரத்தினம் - பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் இராஜமோகன் (லங்கா சிமெந்து Ltd) ரஜனி (சுவிஸ்), ராஜ்குமார் (வவி - லங்கா சிமெந்து Ltd) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோகரன் (சுவிஸ்), கஜனி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் மதுரா, மிதுலன் பிராணி ஆகியோரின் மாமனாரும் மயூரிக்காவின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5.10.2005 புதன் அன்று பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, உடுவில்.

தகவல்: த.இராசரத்தினம், இராஜமோகன், இராஜ்குமார் (வவி).

(சி/45514)(46-11-45-42)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் வயிரமுத்து சின்னத்தம்பி
பிறப்பு: 04.04.1934
இறப்பு:08.09.2004



திருமதி யமுனா குலேந்திரன்
பிறப்பு: 20.02.1960
இறப்பு: 20.09.2004

(திதி: 09.10.2005)

'கண்ணை இமைக்காத்து
காவலாய் இருந்தீர் என்று
உறவினில் உயிர்ப்பூட்டி
உள்ளத்தில் விளக்கேற்றி

உத்தமரானோரே - எம்
அகமதில் தியை மூட்டி
அனைத்தாரோ அரன் தன் பாதம்
இவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு.

மகன் குலேந்திரன் குடும்பத்தினர்

(41026)(42-11-45)

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

வருட சந்தா ரூ300 மட்டுமே

தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272

ஆசிரியர் கல்வித்துறை சீர்திருத்தங்களை அறிந்துகொள்ள

வாசியுங்கள் அகவிழி

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் பொன்னம்மா**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (09-10-2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தால் இந்த நினைவுதினம் காரைநகர் சிவன் கோவிலில் இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(41123) (24-16-19)

பாலாவோடை, களபூமி, காரைநகர்.
தகவல்: சு.யோகநாதன் (மகன்).

## நெஞ்சை விட்டகலாத ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**வேலன் பசுபதி**

(ஊழியர், காங்கேசன்துறை மார்பு நோய் வைத்தியசாலை)

மண்ணுலகில் 25-10-1924
விண்ணுலகில் 20-09-2000

திதி: அமாவாசை (09-10-2005)

அன்புடனும் அரவணைப்புடனும்
எமை வளர்த்த பப்பாவே!
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
ஆறாது எம் துயரம்

உங்கள் ஆத்மசாந்திக்காக சந்நிதிமுருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:- பாவிட்டபுரம், தெல்லிப்பழை.
தற்காலிக முகவரி:- உடுவில் வீதி, 2ஆம் ஒழுங்கை, மானிப்பாய்.
என்றும் உங்கள் நினைவுகளுடன், மனைவி, குடும்பத்தினர்.

(41135) (46-24-16-19)


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

10-10-2005 - 15-10-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம் ★ நடுக்கம்
★ நித்திரைக் குறைவு ★ ஆண்மைக் குறைவு ★ நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பல் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).

(சி/45517) (24-16-19)



## விற்பனைக்கு

GB தொடர் இலக்கமுடைய பட்டர் கலர் புதிய ஆட்டோ விற்பனைக்குண்டு. (900 km ஓடியது).

தொடர்பு: செல்வம் ஆட்டோ கராச், ஆரியகுளம் சந்தி. அல்லது வேலவன் மிக்சர் பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(41124 (26-24-16-19)



## பொறியியலாளர் தேவையா?

வீடு கட்டுதலுக்கான நவீன படங்கள்/ ஒப்பந்த வேலைகள், அனுபவமிக்க மேசன் தொழிலாளர்களினால் குறித்த காலத்தில் செய்துகொடுக்கப்படும்.

கோயில் சிற்பவேலைகள் / விக்கிரகங்கள் கோயில் கட்டட வேலைகள் யாவும் கேரளாவின் பொறியியலாளர்களினால் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு: V.T. இஞ்சினியர், 141, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
077 6515517

(40712)(26-24-1-19)



## தேவை

எமது நிறுவனத்திற்கு (பழக விரும்பும்) விற்பனையாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் - நேரில் தொடர்புகொள்ளவும்:

தொடர்புகளுக்கு:
ஸ்ரீ கணேசன் புடவை மாளிகை,
இல.9, மத்திய சந்தை,
சுன்னாகம்.

(41122)(26-24-16-19)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**சுப்பையா - சதாசிவம்**

தோற்றம் 31-01-1926
மறைவு 09-09-2005

அப்பா என்றபோது முன்னே நின்றீர்கள்
தாத்தா என்றபோது என்ன என்றீர்கள்
சகோதரம் என்றபோது சந்தோஷப்படுவீர்கள்
சதாசிவம் என்றபோது புன்னகை புரிவீர்கள்
'அட்டா' அந்த உத்தமமான மனிதன் எங்கே?
'புனிதமான மனித ஜாதி கடவுளின் பாதங்களில் தீர்க்க தரிசனம்'

- குடும்பத்தினர்.

75, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(41134) (26-24-16-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு சிறந்த உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்ய நடை பெற்ற போட்டியில் வடமாகாணத்தில் இம் முறையும் தெரிவுசெய்யப்பட்டு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட எங்கள் தபால் அதிபர்

**V. அன்ரனிப்பிள்ளை**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அஞ்சல் குடும்பம், மானிப்பாய்.

(41151)(26-24-16-19)

## ஓராண்டு நினைவு நாள்



அமரர் **இரத்தினம் சரஸ்வதி**

தோற்றம் 20-10-1915
மறைவு 18-10-2004

திதி: பூர்வபக்க ஷஷ்டி (09-10-2005)

ஓராண்டு மறைந்தாலும் உங்கள் முகம்
எம் நெஞ்சில் ஓடியே வந்து தைக்கும்
பேராண்டு இம் மண்ணில் பெத்தவளாய் நீயிருந்து
உம் பணி முடித்து ஓடியே மறைந்தீரே!

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி: பெரியபளை, பளை.
கச்சாய் வீதி, கொடிகாமம்.
- குடும்பத்தினர்.

(41145)(26-24-16-19)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சபாரத்தினம்

(பங்காளர், மில்க்வைற்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சபாரத்தினம் அவர்கள் நேற்று (08-10-2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஸ்தாபகர், மில்க்வைற் தொழிற்சாலை) - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் சிவலட்சுமியின் அன்புக் கணவரும் கலைவாணியின் (ஆசிரியை, பெரியபுலம் மகா வித்தியாலயம்) பாசமிகு தந்தையும் பிருதிவிராஜின் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) மாமனும் கிஷோர்ராஜ், அபிராமி, அபிசுஜா, ஹரிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-10-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 7455
(41129) (24-16-19)
தகவல்: த.பிருதிவிராஜ் (மருமகன்).

### முருகேசு ஆறுமுகம்



காரைநகர், களபூமி, கொம்பாவோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகேசு ஆறுமுகம் வெள்ளிக்கிழமை 07-10-2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - வள்ளியம்மையின் மகனும் காலஞ்சென்ற கந்தப்பு தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் சோமசுந்தரம் (திருமகள் புடவையகம்- நெடுங்கேணி), கணேசன் (கோபால் - நெடுங்கேணி), தனபாலன் (அவுஸ்திரேலியா), தில்லைநாதன் (ஜேர்மனி), சோதிநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகாம்பிகை, சிவலட்சுமி, பானுமதி, நாகேஸ்வரி, கிருஸ்ண வேணி ஆகியோரின் மாமனாரும் நிமலரூபன், நிர்மலரூபன், சுகன்யா, திவ்வியா, சிறிரங்கநாதன், பகிரதன், யசோபிகா, சேந்தன், நிறைஞ்சினி, பிரியந், மதுரா, மயூரா, செழியன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, கனகரட்ணம் (மலேசியா), காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-10-2005) காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொம்பாவோடை, களபூமி, காரைநகர்.
(41143) (24-16-19)
தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### தம்பு மாணிக்கம்

(மாணிக்காச்சி)

வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பு மாணிக்கம் 04-10-2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புவின் மனைவியும் காலஞ்சென்ற கந்தன், முருகன் மற்றும் வேலுப்பிள்ளை, சின்னத்தங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும் மாணிக்கம், செல்லம்மா, கிருஷ்ணன் (டென்மார்க்), மலர்மணி, யோகநாதன் (கனடா), கந்தசாமி ஆகியோரின் பாசமிகு தாயும் பொன்னம்மா, கிருஷ்ணன், பூரணம் (டென்மார்க்), சங்கரப்பிள்ளை, சரோசா (கனடா), செல்வராணி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-10-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் தெற்கு சின்னத்தம்பி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில்.
(41133) (24-16-19)
தகவல்: கந்தசாமி (கந்தோ - மகன்).


அனைவருக்கும் HND பட்டப்படிப்பு
யாழ்.மாணவர்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு!

நல்லூர் றோட்டரக்ட் கழக அனுசரணையுடன்
IDM நிறுவனம் வழங்கும்
HND கணனிக் கல்விக்கான

## மாபெரும் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் -2005

காலம்:- 09-10-2005
நேரம்: பிற்பகல் 3.30 (New Time)
இடம்:- நாவலர் கலாசார மண்டபம்

IDM HND Gift! 50,000/-

எனும் மேற்படி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வானது நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் HND கணனிக் கல்வியைக் கற்கவிரும்பும் மாணவர்கள் அனைவரும் இப்புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தில் பங்குபற்றி IDM நிறுவனம் HND கற்கை நெறிக்கு வழங்கும் ரூபா 50,000/= (ஐம்பதாயிரம்) பெறுமதியான Cash Voucherஇனைப் பெற்று HND பட்டப் படிப்பினை யாழ். மண்ணில் தொடரமுடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இந்த நிகழ்வில் A/L மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் பங்குபற்றிப் பயன்பெற்றுக்கொள்ளவும்.

மாணவர்களே! உங்கள் ஒளிமயமான வாழ்க்கையை இன்றே தெரிவுசெய்யுங்கள்!

T.P.:0777 110862 (சி/45520) (24-16-19) - நல்லூர் றோட்டரக்ட் கழகம்.

# இந்தத் தேர்தலிலும் தமிழரின் வாக்குகளுக்கே முக்கியத்துவம்!



ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத்தாக்கல் பூர்த்தியாகியுள்ளது.

ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஐ.தே.கட்சியின் வேட்பாளராக அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் களம் இறங்கியுள்ளனர்.

ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற தமிழர் விரோதபேரினவாதச் சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து, தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமான கொள்கைகளை முன்வைத்து வேட்பாளராக வந்துள்ளார் மஹிந்த ராஜபக்ஷ.

அரசு - புலிகளுக்கிடையில் கைச்சாத்தாகி நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டைத் தகர்த்து, தமிழ்மக்கள் மீது களின் விளைவே ஐரோப்பிய ஒன்றியத்தின் இப்போதைய தடை என்றும் கருதப்படுகின்றது.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை மூன்றரை வருடம் பின்னடைவு காணச்செய்த அவர் ஆட்சிக்கு வந்தால் தமிழர் போராட்டம் மேலும் சர்வதேசத்துக்குள் சிக்கி நிரந்தரமாகவே சமாதி கட்டும் நிலைக்குத் தள்ளப்படலாம் எனத் தமிழ்மக்கள் அஞ்சுகின்றனர்.

ரணில் ஜனாதிபதியானால் உடனடியாகத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைத்தேடும் பணியில் அவர் ஈடுபட வாய்ப்புக் குறைவாக இருக்கும்.

அவர் வெற்றிபெற்று பிரதம நீதியரசர் முன் சத்தியப் பிரமாணம் எடுக்கும் போது, அவருக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்து அவரது செயற்பாடுகளை முடக்க எதிரணியினர் இரகசியமாகத் திட்டம் தீட்டியுள்ளனர் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.



யுத்தத்தைத் திணிக்கும் கோஷத்துடன் களம் இறங்கியுள்ளார் மஹிந்த என்றே தமிழர்கள் கருதுகின்றனர்.

சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு முரணாகத் தமது கட்சி வேட்பாளர் போட்டியிட அனுமதிக்கமாட்டேன் என கர்ஜித்த சந்திரிகாவின் குரலை இறுக்கி, பேரினவாதப் போக்குடன் - ஜனாதிபதியானால் போதும் என்ற பதவி ஆசையுடன் களத்தில் குதித்துள்ள மஹிந்த ஜனாதிபதியானால் தமிழர்களுக்கு விடிவுகிட்டுமா என்பது தமிழ் மக்கள் மனங்களில் எழும் கேள்வியாகும்.

1994 ஆம் ஆண்டு சமாதானத் தேவதையாகத் தோற்றம் காட்டி வந்து பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் போரைத் திணித்த சந்திரிகாவின் வழியில், மறைமுகமாக இல்லாமல், பகிரங்க யுத்தப் பிரகடனத்துடன் மஹிந்த உருவெடுத்துள்ளார் என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

மஹிந்த ஜனாதிபதியானால், தனக்கு அணி திரட்டிய கட்சிகளின் சொற்படி நோர்வேயை வெளியேற்றி, யுத்த நிறுத்த உடன்படிக்கையை நெருக்கடிக்குள்ளாக்கி, தமிழர் மீது யுத்தம் ஒன்றை அவர் திணிப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும் என நோக்கர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

தான் கூட்டுச் சேர்ந்த கட்சிகளின் சொல் கேட்காமல் அவர் செயற்பட முனைந்தால் அவருக்கு எதிரான யுத்தம் அரசுக்குள்ளேயே வெடிக்கலாம். இதைக் கருத்தில் கொண்டு அவர் கூட்டுக்கட்சிகளின் சொற்படி செயற்படுவது அவசியமாக இருக்கும்.

### ரணிலின் போக்கு

மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து வரும் கருத்துக்களை நோக்கும்போது, அவரும் இந்தப் பேரினவாதச்சக்திகளின் சொற்படியே கேட்டுச் செயற்படுவார் போன்றே தெரிகின்றது.

தான் வெற்றிபெற்றால் சுதந்திரக்கட்சியுடன் இணைந்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று அவர் கூறும் கருத்தைத் தமிழ்மக்கள் நம்பும் நிலையில் இல்லை.

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டதன் மூலம் அவர் யுத்தத்தை நிறுத்தி தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கே கூடுதலான நன்மைகளைக் குவித்துள்ளார்.

இதேவேளை-

விடுதலைப் புலிகளுக்கு- தமிழ்மக்களுக்கு - எதிராகச் சர்வதேச மட்டத்தில் அவர் உருவாக்கிய வலைப்பின்னலின் விளைவை இப்போது தமிழ் மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். அவர் உருவாக்கிய இணைத் தலைமை என்ற வலைப்பின்னல் ஒருதலைப்பட்சமாக உருவானது. அதன் தொடர் நடவடிக்கை

### நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்

சுதந்திரக்கட்சி -ஜே.வி.பி - ஹெல உறுமய ஆகியன இணைந்து ஸ்திரமான ஆட்சியை நிலை நிறுத்துவதைத் தடுக்கும் வகையில், பதவியேற்றதும் ரணில் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு அழைப்பு விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமது ஆட்சியைத் தக்க வைப்பதற்காக ரணிலின் செயற்பாடுகளை முடக்கும் நோக்கில அவருக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணையை அரசுத்தரப்பு சமர்ப்பித்தால் , 18 மாதங்களுக்கு அவரால் செயற்பட முடியாமற் போகும். நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் முடியாதநிலை தோன்றும் . அந்தப் பிரேரணை விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அவர் பதவியை விட்டு விலக வேண்டிய நிலைகூட நேரிடலாம்.

அவர் ஜனாதிபதியானால் நாடாளுமன்றில் அவருக்கு எதிரான கட்சி ஆட்சி நடத்தும் போது அவரால் எதுவும் செய்ய முடியாத நிலையே ஏற்படும்.

இப்படி பல்வேறு வகையான காய்நகர்த்தல்கள் தெற்கில் தேர்தலுக்குப் பின்னரும் அரங்கேறப்போகின்றன. இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்பது கானல்நீராகவே இருக்கப் போகின்றது.

ஒருவர் யுத்தப் பிரகடனத்துடன் வருகின்றார். மற்றவர் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்குச் சமாதிகட்டும் நோக்கில் புறப்பட்டு நிற்கின்றார் என்கின்றனர் தமிழ் மக்கள்.

இந்த நிலையில் தாம் என்ன செய்ய வேண்டும்? இந்தத் தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும்? என்ற கேள்விகள் தமிழ்மக்கள் மனங்களில் எழுவது நியாயம் தான்.

### தமிழர்கள் என்ன செய்யலாம்?

கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களை பின்நோக்கிப் பார்க்கும் போது சிறுபான்மை மக்களின் வாக்குகளே தேர்தல் முடிவுகளை மாற்றியமைத்துள்ளன.

கடைசியாக 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த தேர்தலில் சந்திரிகாவும் ரணிலும் போட்டியிட்டனர். அந்தத் தேர்தலில் சந்திரிகாவுக்கு 42 லட்சத்து 12ஆயிரத்து 157 வாக்குகளும் ரணிலுக்கு 36 லட்சத்து 2ஆயிரத்து 78 வாக்குகளும் கிடைத்தன. அந்தத் தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பி. வேட்பாளர் நந்தன குணதிலகவுக்கு 3 லட்சத்து 44 ஆயிரத்து 173 வாக்குகளும் கிடைத்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் செலுத்தப்பட்ட ஒரு லட்சத்து 17 ஆயிரம் வாக்குகளில் சந்திரிகாவே ஆகக் கூடுதலாக 52 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தார். உடுப்பிட்டி, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய தொகுதிகள் தவிர்ந்த ஏனைய தொகுதிகளில் சந்திரிகாவே கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தார்.

வடக்கு - கிழக்கில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ரணில் கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தார்.

தெற்கில் தற்சமயம் சமமான நிலையில் கருதப்படும் இருவரில் ஒருவருக்குத் தமிழ் மக்கள் அளிக்கும் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கப்போகின்றது என்று கடந்த கால முடிவுகளை அலசி ஆராய்ந்த புத்திஜீவி ஒருவர் கூறுகின்றார்.

தமிழ்மக்களுக்கு விரோதமான கருத்துக்களைக் கொண்டு களமிறங்கியுள்ள இரு பிரதான வேட்பாளர்களுக்கும் தமிழ்மக்கள் தமது

## அதனால் பயன் உண்டா?

வாக்குகளை வழங்கும் சூழல் இப்போது காணப்படவில்லை என்றுதான் கருதவேண்டியுள்ளது.

கடந்த வருடம் நடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியத்தின் சார்பில் வடக்கு - கிழக்கில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சிக்கு 6 லட்சத்து 33 ஆயிரத்து 634 வாக்குகள் கிடைத்தன.

தமிழ் மக்கள் தமது அபிலாசைகளைத் தெற்கிற்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்டும் வகையில் அந்தத் தேர்தலைப் பயன்படுத்தியிருந்தனர்.

அப்படி இந்தத் தேர்தலிலும் தமிழ்மக்கள் தமது அபிலாசைகளை நிறைவேற்றும் வேட்பாளர் எவர் என இனங்கண்டு வாக்களிப்பார்களேயானால் நிச்சயம் தமிழ்மக்களின் ஆதரவுடன் அவர் ஜனாதிபதியாவது உறுதியாகும்.

தமிழ் மக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய எவருமே இத்தேர்தலில் போட்டியிட வரவில்லை என்றே மக்கள் கூறுகின்றனர்.

தமிழர்கள் தேர்தலைக் கண்டும்காணாத போக்கை அல்லது பகிஷ்கரிப்புப்போக்கை கடைப்பிடிக்கவேண்டிய சூழல்தான் இப்போது காணப்படுகின்றது என்கின்றனர் அவர்கள்.

### புலிகள் நிலைப்பாடு

இந்நிலையில் தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளான - அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளான - விடுதலைப் புலிகள் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தெரிவித்துள்ள கருத்துகள் இன்றுள்ள நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

தமிழ்மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக - வாக்குறுதிகளை ஜனாதிபதி வேட்பாளர்கள் அள்ளி வீசிவரும் நிலையில் - விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் புலிகளின் நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

''ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் எங்கள் கருத்துகளை எங்களுடைய மக்கள் மீது திணிக்க விரும்பவில்லை. தமிழ் மக்கள் சுதந்திரமாக முடிவு எடுப்பார்கள்.

''கடந்த காலங்களிலும் அவர்கள் தங்கள் அரசியல் அபிலாசைகளை மிகத் தெளிவாக - ஆணித்தரமாக - சர்வதேசத்துக்கும் தெற்கிற்கும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

''அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலிலும் எமது மக்கள் தெளிவான வெளிப்பாட்டைக் காட்டுவார்கள் என நினைக்கிறேன்''

- இப்படி தமிழ்ச்செல்வன் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கியுள்ளார்.

மக்களின் அபிலாசைகள் என்ன? வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் தாம் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான். அந்த நிலையை வலியுறுத்தி வவுனியாவில் எழுச்சிப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர். அந்தப் பிரகடனத்தை வலியு றுத்தி வடக்கு - கிழக்கில் சகல மாவட்டக்களிலும் எழுச்சியுடன் ஒன்று கூடி சர்வதேசத்துக்கும் தெற்குக்கும் தமது விருப்பை உரத்துக்கூறிவருகின்ற னர்.

இன்றுள்ள நெருக்கடியான சூழலில் இருந்து விடுபட மக்கள் எதிர்பார்க்கும் அபிலாசைகளை நிறைவுசெய்ய ஜனாதிபதி வேட்பாளர்களால் முடியுமா?

**வாராந்த அரசியல் அலசல்**
**குகா**

எமது அபிலாசைகளுக்கு எதிரான கோஷங்களுடன் வரும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டுமா?

வாக்களிப்பதைத் தவிர்த்து எமது நிலைப்பாட்டைச் சர்வதேசத்துக்கும் தெற்கிற்கும் புரியவைப்போமா?

ஜனாதிபதித் தேர்தலைப் புறந்தள்ளிவிட்டு எமது அபிலாசைகளை நிறைவுசெய்யும் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்துவோமா?

இவைதான் இன்று மக்கள் மனங்களில் எழும் சிந்தனைகளாகும்.

மக்களின் மனதில் எழும் சிந்தனைகள் தீவிரமாகும்போது அவர்கள் சுதந்திரமாக முடிவெடுப்பர். தமது சுயத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை அவர்கள் முன்நகர்த்துவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அப்போதுதான் சர்வதேசமும் தெற்கும் விழித்துக்கொள்ளும். ✱

# அரசு - புலிகள் நேரடிப்பேச்சு உடன் நடக்கும் சாத்தியமில்லை

## நோர்வேத் தரப்பில் தெரிவிப்பு

யுத்தநிறுத்த ஏற்பாடுகளைச் செம்மையாகக் கடைப்பிடிப்பது குறித்து அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களை இரண்டு தரப்பினருக்கும் பொதுவான ஓர் இடத்தில் எந்தவேளையிலும் ஆரம்பிக்க முடியும். ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு வரும்வரை அதற்காகக் காத்திருக்கத் தேவையில்லை என்று விடுதலைப் புலிகள் கூறியுள்ளபோதிலும் -

அத்தகைய பேச்சுக்கள் உடனடியாக நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லையென அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வே தெரிவித்திருக்கின்றது.

அரசு, புலிகள் ஆகிய இருதரப்பினருடனும் பேசுவதற்கான அனுசரணையாளர்களான நோர்வே, தமது விசேட பிரதிநிதியாக, கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறுஹொவ்டேயை அடுத்தவாரம் இரு தரப்பினரிடமும் அனுப்பவுள்ளது.

அத்தகைய சூழ்நிலையில், அந்த விசேட பிரதிநிதியின் சந்திப்பு நடந்து, நிலைமை குறித்துத் தெளிவான பார்வைகிட்ட முன்னர், மேற்படி சந்திப்புகள் மிகவிரைவில் நடைபெறும் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றது என நோர்வேத் தரப்பில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று தெரிவித்தது.

''யுத்தநிறுத்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடிப்பது தொடர்பாக அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினருமே தத்தமது யோசனைகளையும் சிபாரிசுகளையும் முன்வைப்பதற்கு ஜெனரல் புறுஹொவ் டேயின் தற்போதைய வருகை உதவும் என்றும் நோர்வே தெரிவித்திருக்கின்றது. (எ-க)

## வலிகாமம் மேற்கில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

வலி.மேற்கு, ஒக்9

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு குடும்பப் பதிவு அட்டைகள் வழங்கப்படுமென்றும்-எனவே, சகல குடும்பத்தலைவர்களும் பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்து குடும்பப்பதிவு அட்டைகள்ளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (ஏ-175)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சல்





அமரர்
சின்னையா சண்முகநாதன்
தோற்றம் 17-02-1921 மறைவு 20-09-2004

திருமதி
பவளரத்தினம் சண்முகநாதன்
தோற்றம் 25-05-1924 மறைவு 02-12-2003

திதி.09.10.2005

எங்கள் அன்புத் தெய்வங்களே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் அன்பு எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:- மகன் ச.மனோகரன்
உரும்பிராய் வடக்கு,
(முன்னைய வதிவிடம் பன்குளம், திருகோணமலை).

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(40749)



# IMMEDIATE VACANCY

solidar
An INGO consortium incl. NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGOs-Arbiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH)

We are currently at the planning stage for the phase 3 Tsunami Shelter construction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in Kilinochchi/Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please send in your applications to reach us on or before 11th October 2005. 156, Jaffna Road, Paranthan.

**Position: Head of Administration**

At least 2 years of experience in a similar role which should include the following: Staff management and office organization, management of relevant database systems, Good command of written and spoken English would be essential. Working knowledge on Word, Excel, PowerPoint and Access is a requirement .

**Position: Administrative Officer**

Provide administative support to the head of Administration Duties will include maintenance of filing system, preparation of travelpasses, arranging accommodation for guests. photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

**Position : Accountant**

Excellent knowledge in maintaining company accounts with at least 3-5 years experience. Must be able to work in MS Excel and Ms Access. Fluency in written and spoken English is a must.

**Position : Translators** (2 Positions)

Should be capable of both verbal and written translations from Tamil to English and vis versa. Ability to translate Sinhalese into English will be an added Qualification

**Position : Telephone Operator cum receptionist**

Experience in handling a PABX system would be an advantage though not essential. Good command of spoken English is a must.

Norwegian People's Aid
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Swiss Labour Assistance SAH



# JTI மீண்டும் தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம.

மத்திய கிழக்கு நாடுகளில், ஐரோப்பிய நாடுகளில் இலகுவான முறையில் தொழில் வாய்ப்பைப் பெறக்கூடிய முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

**RADIO, T.V AND VIDEO DECK REPAIRING**

சகல இன ரேடியோ, ரி.வீ, டெக் மற்றும் எலற்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

**MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**

சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

**AIR CONDITIONING AND REFRIGERATION**

சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

**MOTOR CYCLE MECHANISAM**

சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)

**HARD WARE ENGINEERING AND ELECTRONIC**

(காலம் 04 மாதங்கள்)

ஆரம்பம் :- 07.10.2005, 09.10.2005

O/L, A/L படித்த மாணவர்கள் அனுமதிக்கப்படுவார் மேலதிக விபரங்களுக்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Regd No 15251 T.P:- 021-222 3335


## பருத்தித்துறையில் பரிசாரகர் பயிற்சி

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மூன்றாவது தொகுதி பரிசாரகர்களுக்கான பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது . கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இப்பயிற்சியில் சுமார் 56 ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமை புரியும் சிற்றூழியர்களிடையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களே இந்தப் பயிற்சி நெறியில் பங்கு பற்றுகின்றனர். இவர்களுக்கு 3 மாதகாலப் பயிற்சி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-170)


# அவசர வேலைவாய்ப்பு (கட்டடப் பணியாளர்கள்)

கிளிநொச்சி பூநகர் பகுதியில் அமைக்கப்படவுள்ள விவசாய பீட கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவை.

1) Site Engineer:-(பொறியியலாளர்)
தகைமை :- B.Sc. Degree உடன் 2 வருட கட்டட நிர்மாண அனுபவம் தேவை.

2) தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தகைமை:- N.D.T உடன் 2 வருட கட்டட நிர்மாண அனுபவம்
or
N.C.T உடன் 5 வருட கட்டட நிர்மாண அனுபவம்

3) கட்டட நிர்மாண மேற்பார்வையாளர்.
தகைமை :- N.C.T உடன் 2 வருட கட்டட நிர்மாண அனுபவம்

4) களஞ்சியக்காப்பாளர்.
தகைமை :- 4 வருட அனுபவம்.

5) காவல் தொழிலாளர்.

மேலதிக விபரங்களுக்கு:-

**V.V. RAMANATHAN COMPANY**
Hospital Circular Road, Vavuniya.
T.P.: 024 222 1229
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

(40891)(52-13-11)



## திருமணசேவை

தங்கள் தேடல் பொருத்தமான மணமகளா?... கவலை வேண்டாம். வேல் அமுதனிடம் 690 மணமகள்மாரின் கடிதக்கோப்புகள் இன்று கைவசம் உண்டு. 690 கடிதக்கோப்புகளுள் 140 வெளிநாட்டு மணமகள்மார். 550 உள்நாட்டு மணமகள்மார். அதிகுறைந்த மணமகளின் வயது 18, அதிகூடிய மணமகளின் வயது 52. இன்னுமா தயக்கம்?... இன்றே பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர். "சுயதெரிவுமுறை" முன்னோடி குரும்பசிட்டியூர் மாயெழு



வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுங்கள்
சந்திப்பு முன்னேற்பாடு ஒழுங்குமுறையில் மாத்திரம்.

மேலதிக விவரங்களுக்கு:-
திங்கள், புதன், வியாழன், வெள்ளிக் கிழமை நாள்களில்
மாலை மணி 4.30-8.30 வரையிலான நேர காலத்துள் தொடர்பு கொள்க.
தொலைபேசி : 2360488 தொலைபேசி/ தொலைநகல் : 4514396

முகவரி:-
Reputed Marriage Focilitater,
Kurumpasiddyoor Mayelu Vel Amuthan.
8/3/3/ Metro Apartment (Via 33rd Lane, Opposite Wellawatte Police),
55th Lane, Colombo-06.

(C/45469)(52-11-13)

# மரண அறிவித்தல்கள்

## சிவசுப்பிரமணியம் பொன்னம்மா



(தங்கமுத்து)

மூளாய், காளிகோயிலடியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் பொன்னம்மா நேற்று (08.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி- நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் திருமதி குணரத்தினம் சாரதாதேவி (சுவிஸ்), திருமதி தில்லை நாதன் சரஸ்வதி, சிறிதரன் (ஜேர்மனி), திருமதி நாகேந்திரன் சத்தியசிவகாமசவுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு மாலை 3 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*மூளாய்.*

(41171)
(54-18-15)

**தகவல்:**
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**
**பீட்டப்பிள்ளைகள் மற்றும்**
**அவரது குடும்பத்தினர்.**

## முருகர் இரத்தினம்



கரவெட்டியைச் சேர்ந்த முருகர் இரத்தி னம் 05.10.2005 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் முருகர்-செல்லாச்சி தம்பதி யரின் அன்பு மகனும் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் கலாநிதி, கலாவதி (ஜேர்மனி), கண்மணி (கனடா), கருணா கரன் (கனடா), ஜானகி, கிருஸ்ணமூர்த்தி, வசந்தன் ஆகியோரின் தகப்பனாரும் கிருபாகரன், அன்புக்குமார் (ஜேர்மனி), விஜயரூபன், ஜெனிதா (கனடா), சுயாதா ஆகியோரின் அன்பு மாமனும் றோகினி, கஜீபன், கயூரன், அஜித்தா (ஜேர்மனி), கதுர்சன் (ஜேர்மனி), கார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் வேரொண்டை இந்து மயானத் தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக் கும் அறியத்தருகின்றோம்.

*காளிகோயிலடி,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(41159)
(54-18-15)

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# கணக்கு உதவியாளர்

**நெல்லியடி மற்றும் சாவகச்சேரி கிளை**

இலங்கையில் ஆயுள் காப்புறுதித் துறையில் தலைமைத்துவம் வகிக்கும் செலிங்கோ இன்சூரன்ஸ், இலங்கையில் அதிகளவில் நிதிதிரட்டலை கொண்டுள்ள வெற்றிகரமான நிறுவனமாகும். துறைசார் தலைமைத்துவத்தை தக்கவைத்துள்ள செலிங்கோ லை∴ப், தனது நெல்லியடி மற்றும் சாவகச்சேரி கிளைக்கு மேலும் புதியவர்களை இணைத்துக் கொண்டு நிபுணத்துவம் மிக்க தனது அணியை மேலும் விரிவுபடுத்த உத்தேசித்துள்ளது.

செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட்டின் (ஆயுள் பிரிவு) நெல்லியடி மற்றும் சாவகச்சேரி கிளையின் நிதி முகாமைக் குழுவிற்கு துடிப்பும், செயல்திறன் மிக்க ஆளுமையுடைய இளம் கணக்கு உதவியாளர் ஒருவரின் சேவையை எதிர்பார்க்கின்றோம்.

நீங்கள் AAT யில் ஒரு உறுப்பினராக அல்லது அதன் இறுதித் தேர்வில் சித்திபெற்றவராக அல்லது இதற்கு சமனான தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கல்விப் பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கணனி அறிவும், ஆங்கிலத்தில் திறமையுடையவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே நிறுவனம் ஒன்றில் வேலை செய்த அனுபவம் மேலதிக தகைமையாக கணிக்கப்படும்.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கவர்ச்சிகரமான ஊதியத்துடன் வருடாந்த மேலதிக இலாபப் பங்கு மற்றும் மருத்துவக் காப்புறுதி போன்ற மேலதிக சலுகைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் தொழில் ரீதியாக எதிர்காலத்தில் சிறந்த பலன்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

உங்கள் சுயவிபரக் கோவையுடன் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் மற்றும் உறவினர் அல்லாத இரு நன்மதிப்பாளர்களின் விபரங்களையும் இணைத்து, jobs@ceylife.com இல் இந்த விளம்பரம் வெளியாகி பத்து வேலை நாட்கள் நிறைவு பெறுவதற்குள் எமக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வையுங்கள். தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி/கிளை என்பவற்றை உங்கள் அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

"செலிங்கோ காப்புறுதி நிறுவனமானது சமவாய்ப்புக்களை வழங்கும் ஒரு தொழில் நிறுவனமாகும்."

மனிதவள முகாமையாளர்,
**செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட்**
134, காலி வீதி, கொழும்பு 3.



PHOENIX O&M

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சிலம்)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.
(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்
இன்றுமுதல் இளையதளபதி விஜய், ஜோதிகா, விவேக் நடித்த
**திருமலை**
11.10.05 முதல் பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
குண்டக்க மண்டக்க...
காட்சிநேரம்:- 10.30, 2.30 6.30, 9.30, (பு.நே.)
(அ-44110)

## அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழா

யாழ்ப்பாணம்,ஒக்.9

தாவடி ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத் தின் அறநெறிப் பாடசாலையின் ஆரம்பவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

ஆச்சிரம உபதலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த தவத்திரு செல்லத்துரை சுவாமிகளும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேர நாதன், தாவடி இ.த.க.பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுலகுமரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-202)

## காரைநகரில் இன்று சைவசமயப் பரீட்சை

காரைநகர்,ஒக்.9

காரைநகர் இந்து இளைஞர் கழகம் நடத்தும் சைவ சமய பாடப்பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மூன்று நிலையங் களில் நடைபெற வுள்ளது.

காரைநகர் சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாசாலை,பாலா வோடை அ.மி.த.க பாடசாலை, ஊரி அ. த.க. பாடசாலை மாண வர்களுக்கு சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாசாலையிலும் யாழ்ற்றன்கல்லூரி, மெய்கண்டான் அ.த.க.பாடசாலை, வியாவில் சைவ வித் தியாசாலை மாண வர்களுக்கு யாழ்ற் றன் கல்லூரியிலும்-

காரைநகர் இந்துக் கல்லூரி, வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை மாண வர்களுக்கு காரை நகர் இந்துக் கல்லூரி யிலும் பரீட்சை நடைபெறுவதாக வும்-

இப்பரீட்சையில் சுமார் ஆயிரம் மாண வர்கள் தோற்றுவதா கவும் மன்றத் தலை வர் எஸ்.சுரேஸ் குமார் தெரிவித்தார்.

(எ-73)

# ஆறாம் மாத நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை சரவணப்பெருமாள்**
(முகாமி மின்னியலாளர் - வடகடல் நிறுவனம் - குருநகர்)
அம்பிளா களபூமி, காரைநகர்
**திதி: சஷ்டி 09.10.2005**

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 07-09-1948 | 14-04-2005 |

*மங்கள நாண் சூடி வெள்ளி விழாக்கண்டு*
*மனமகிழ்ந்து களித்திருந்தேன்*
*ஐயிரண்டு வருடம் தவமிருந்து என்னை ஈன்றெடுத்து*
*சொத்தாக என்னை காத்த அப்பாவே!*
*பாதி வழிதனிலே என்னை தவிக்க விட்டு*
*கொடுங் கோலன் கூற்றுவன்தான் வந்துயிரைப் பறித்தானோ*
*கதறியழுகின்றோம் எங்கள் குரல்தான் கேட்காதோ*
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்*

தற்காலிக முகவரி:
17/2, ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(41033) (54-18-15)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 22.12.1939 | 15.10.1999 |

அமரர்
## ஆறுமுகம் கமலநாதன்
(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் -வலிகாம வலயம்)
*திதி: சஷ்டி 09.10.2005*

*ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்*
*நெஞ்சமலர் வாடுகின்றதே*
*உங்கள் நேசமொழி கேளாது*
*என்றும் உங்கள் நினைவுடன்!*

திருமதி ச. கமலநாதன்
கோக்குவில் மேற்கு, கோக்குவில்.

(41103)
(54-18-15)

அன்பு மனைவி,
மருமகன், சந்திரன்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி செந்தில்குமரன்



**(அகில இலங்கை சமாதான நீதிவான், கணக்காளர், இலந்தைக்குளம் பிள்ளையார், பழனிஆண்டவர் ஆலய அறங்காவலர்)**

கொழும்புத்துறை மேற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி செந்தில்குமரன் 07.10.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2005)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*02, விதானையார் வீதி,*
*கொழும்புத்துறை.*

(41166)
(54-18-15)

தகவல்:
**திருமதி செ. தெய்வமாலினி**
**(மனைவி).**

## மதியாபர்ணம் நகுலேஸ்வரன் (நாதா)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிட மாகவும் கொண்ட மதியாபர்ணம் நகுலேஸ்வரன் (நாதா) நேற்று முன்தினம் (07.10.2005) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மதியாபர்ணம்-நாகம்மா தம்பதிய ரின் புத்திரனும் அருந்தவமலர் (கனடா), மகேஸ்வரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (கனடா), அருள்மலர் (குஞ்சு - உரும்பிராய்), சபேசன் (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

(41155)
(54-18-15)

தகவல்:
**பூ. ஸ்ரீரஞ்சன் மைத்துனர்.**
**T.P.: 0712 707325**

## திருமதி சண்முகநாதன் கனகாம்பிகை

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் கனகாம்பிகை நேற்று (08.10.2005) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இலட்சுமிப் பிள்ளை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முக நாதனின் அன்பு மனைவியும் காண்டீபன், பிரபாகினி (லிகிதர் வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்), முரளிதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஸ்வநாதன், சுப்பிரமணியம், தவனேஸ்வரி, காலஞ் சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் தர்மவதி (கொழும்பு) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி (கனடா), பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனி யும் பரமேஸ்வரியின் அன்பு மாமியாரும் நிரோசா, டிலக்ஷன், நிக்ஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் சந்தி,*
*புத்தூர்.*

(41166)
(54-18-15)

தகவல்:
**பிள்ளைகள், சகோதரர்கள்.**

# இந்தியா, பாகிஸ்தானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தானின் பல கிராமங்கள் இந் நிலநடுக்கத்தால் கடுமையாக சேதமுற்றதாக தகவல்கள் வந்துள்ளன. இதுவரை 1000 பேர் வரை இறந்திருக்கலாம் என அஞ்சப் படுகின்றது என்றார்.

இந்நிலநடுக்கம் 7.9 ரிச்டர்கள் எனப் பதிவாகியுள்ளது. இஸ்லாமாபாத்தில் 10 தளங்களைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்ததில் பல உயிர்சேதம் ஏற்பட்டிருக்கும் என அஞ்சப்படுகின்றது.

சனிக்கிழமை என்பதால் பள்ளிகளுக்கும் பெரும்பாலான தனியார் நிறுவனங்களுக்கும் விடுமுறை. ஆகவே, இறந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

வடக்கு பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் 120இற்கும் மேற்பட்ட கிராமங்களில் பல வீடுகளும் அடுக்குமாடி கட்டடங்களும் இடிந்து விழுந்துவிட்டன.

### பிரதமர், சோனியா பாதுகாப்பாக வெளியேற்றம்

பாகிஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட பலத்த பூகம்பத்தின் அதிர்ச்சி, சண்டீகரில் நடைபெற்ற காங்கிரஸ் முதல்வர்கள் மாநாட்டையும் சில நிமிடங்கள் உலுக்கியது. அதைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, 15 மாநில முதல்வர்கள், கட்சித் தலைவர்கள் பாதுகாப்பாக வெளியே அழைத்து வரப்பட்டனர்.

மாநாட்டின் 2ஆம் நாளான நேற்றுக் காலையில் பிரதமர் மன்மோகன்சிங் தமது அரைமணிநேர உரையை நிறைவுசெய்த சில நிமிடங்களில் (காலை 9.22 மணி) திடீரென்று பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அதையடுத்து மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன. பாதுகாப்பு கருதி அந்த அரங்கை விட்டு வெளியே வருமாறு மன்மோகன், சோனியா உட்பட தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

அதையடுத்து அவர்கள் வெளியே உள்ள புல்வெளிக்கு வந்து சிறிதுநேரம் காத்திருந்தனர். நிலநடுக்கம் நின்றுவிட்டதென என உறுதிப்படுத்தப்பட்டவுடன் 3 நிமிடங்களுக்குப் பின் மாநாடு தொடர்ந்து நடந்தது.

### காஷ்மீரில் பேரழிவு

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மிகப் பெரிய அளவில் பூகம்பம் ஏற்பட்டது. இதில் நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

சில கிராமங்கள் முழுவதுமாக நாசம் அடைந்தன. அதிக அளவில் இஸ்லாமாபாத்தும் முஸாபராபாத்தும் பாதிப்புக்குள்ளாயின. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. கட்டடங்கள் இடிந்தன.

பீதிக்குள்ளான மக்கள் வீடுகளை விட்டு வெளியில் வந்து தெருக்களில் திரண்டனர்.

இந்திய நேரப்படி காலை 9.20 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது. பல கிராமங்கள் கூண்டோடு நாசமாகி உள்ளன என்றும் அமைச்சர் ஷெபாவ் தெரிவித்துள்ளார். உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. ஆப்கானிஸ்தானிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஜம்முகாஷ்மீரில் ஏற்பட்ட பூகம்பத்தில் 16 படைவீரர்கள் உட்பட 38 பேர் இறந்தனர். 300 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

(ஐ-9)

# கொலைகள், வன்செயல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது இயக்கத்தையும் பொதுவாகத் தமிழ் மக்களையும் குழப்பத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றது. திட்டமிட்ட கிரமப்படி, நேர வரிசையில் அதற்குரிய பாணியில் இந்த அதிகரிப்பு இடம்பெற்றிருப்பது புலிகளுக்குக் கெட்டபெயர் ஏற்படுத்துவதையே சுட்டுவதாக உள்ளது. இந்தப் பிரதேசங்களில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த எமது உறுப்பினர்களைப் பாதுகாப்புக் கருதி நாம் அங்கிருந்து விலக்கிக் கொண்டபின்னரே இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமானதாகும்.

நுட்பமாகத் திட்டமிட்டு எமது இயக்கத்தின் மீது பழியைச் சுமத்தும் அரசியல் நோக்கங்கள் இந்த வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னால் உள்ளன என்பதில் எங்களுக்குச் சந்தேகம் ஏதுமில்லை.

அப்பாவி மக்களை இலக்குவைத்துக் கொன்றபின்னர் இந்த இயக்கத்துடன் அரசியல் தொடர்பு இருப்பதற்காக அல்லது புலிகளை எதிர்ப்பதற்காக என்று அக்கொலைகளுக்குக் காரணம் காட்டுவதன் மூலம் அரசியல் வஞ்சம் தீர்க்கும் செயற்பாடு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது.

இவ்விவகாரங்களில் ஒழுங்கான விசாரணைகளுமின்றி - பயன்தரக்கூடிய குற்றத் தடுப்பு முறைகளையும் அறிமுகப்படுத்தாமல் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பான யுத்தநிறுத்த ஒப்பந்த விதிமுறைகளையும் நடைமுறைப்படுத்தாமல் அரசும் அதன் இராணுவப் பேச்சாளரும் புலிகள் மீது சேற்றை வாரிப் பூசும் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

யுத்தநிறுத்தத்தை பற்றுறுதியோடு ஏற்றுக் கொண்ட தரப்பு என்ற முறையில் இந்தக் குற்றச்சாட்டுக்களை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். யுத்தநிறுத்த உடன்பாட்டின் 1.8 பிரிவு குறித்தும் அந்தப் பிரிவை மீறும் வகையில் தமது அரசியல் எஜமானர்களுக்காக இத்தகைய இழிசெயல்களைப் புரியும் இலங்கை இராணுவம் மற்றும் அவற்றின் கூலிப்படைகள் குறித்தும் தங்களுக்கு உள்ள வரையறைகளுக்குள் அர்த்தமுள்ள வகையில் தலையீடு செய்யுமாறு கண்காணிப்புக் குழுவை நாங்கள் சிரத்தையோடு கோருகின்றோம்.

வன்செயல்களும் கொலைகளும் ஆபத்தான எல்லைக்கட்டத்தை அடைந்துள்ளன.

முக்கியமாக இந்த யுத்தநிறுத்த காலத்தில குறிப்பாக அமைதியிலும் அமைதியான ஜனாதிபதித் தேர்தலிலும் கரிசனையுள்ள அனைவரினதும் கவலைக்குரிய விடயமாக இது உள்ளது.

வன்செயல்களைத் தடுப்பதற்கு எங்களின் முழு ஒத்துழைப்பையும் தங்களுக்குத் தருவோம் என்று உறுதியளிக்கிறோம். என்றாலும் இலங்கை இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள - இலங்கை அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எனத் திட்டவட்டமாக வரையறை செய்யப்பட்டுள்ள பகுதிகளிலேயே இந்தப் படுகொலைகளும் வன்முறைகளும் இடம்பெறுகின்றன என்பதாலும் எங்களின் சட்டமும் ஒழுங்கு முறையும் அங்கு செயற்படுவதில்லை என்றாலும் இந்த விடயத்தில் எங்களின் செயற்திறன் பங்கு மிகமிக மட்டுப்படுத்தப்பட்டதே என்பதையும் கவலையுடன் தங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

எனவே, இந்த மோசமான சூழ்நிலையைக் கவனத்தில் எடுத்து இந்தத் தொடர் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பாவிகளின் உயிரைக் காப்பாற்றவும் யுத்தநிறுத்தத்தின் மேன்மையைப் பேணவும் உதவும்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை மனப்பூர்மாக வேண்டுகின்றோம் - என்று உள்ளது. (உ)

# புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்வது தாமதமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-3)

## மரண அறிவித்தல்கள்

### தனுஷா மாதவராஜா

*(2ஆம் வருட கலைப்பீடம் - யாழ். பல்கலைக்கழகம்)*

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனுஷா மாதவராஜா நேற்றுமுன்தினம் (07.10.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மாதவராஜா - அனுசியா தம்பதியரின் அன்பு மகளும் துவாரகனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*அண்ணாவியார் வளவு,*
*கே.கே.எஸ். வீதி,*
*சுன்னாகம்.*

(சி/45534) (18-33-12)

**தகவல்:**
**மாதவராஜா (தந்தை).**

### பவுலீஸ் அப்புகாமி பந்துவதி (வவா)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பவுலிஸ் அப்புகாமி பந்துவதி (வவா) அவர்கள் நேற்று (08.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மசேனா - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பவுலிஸ் அப்புகாமியின் அன்பு மனைவியும் லலிதா (டென்மார்க்), பிறிடா (கொழும்பு), அன்ரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகிபாலா (புத்தா - யாழ்ப்பாணம்), சந்திரா (உடுப்பிட்டி), தர்மா (யாழ்ப்பாணம்), அனுரா (பிரான்ஸ்), ஜயந்தா (பிரான்ஸ்), காலஞ்சென்ற றொபின்சன், ஜொபிற்றா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அரியரட்ணம் (உடுப்பிட்டி), திருச்செல்வம் (யாழ்ப்பாணம்), சந்திரா (யாழ்ப்பாணம்), வனிதா (பிரான்ஸ்), டொறின் (பிரான்ஸ்), கலாநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் சுஜி, யஸ்மின், பிரபா, நொய்லின், ஜெனி, சுதாகரன், சுதர்சினி (வவா), சிரோன் மெலினி, றொனிறுக்மன், வரூன்கிளனிற், ஏஞ்சலாஅஸ்வின், நிரோஸ், தீபிகா, தெரிக்கா, ஜெனிஷா, கொட்பிறி, கபிரியல், ரீனா (செபானி), ஷாரிக்கா, ஷானியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பிற்பகல் 3.30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தி.தர்மாவதி,*
*327/6, கதிற்றல் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(சி/45530) (12-33-18)

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


இப்பொழுது உங்கள் புத்தக நிலையங்களில்

**Information Technology 2005 / 2006**

ஜெ.பிரதீபன் B.Sc.(Hons)
LECTURER IN INFORMATION TECHNOLOGY
SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNICAL EDUCATION

1. பூபாலசிங்கம் புத்தகசாலை-(யாழ்ப்பாணம்)
2. Sri Lanka Book Depot - (யாழ்ப்பாணம்)
3. Book Lab - பரமேஸ்வரா சந்தி
4. கனகா - திருநெல்வேலி சந்தி
5. பாக்கியா - கொக்குவில் இந்து முன்பாக
6. CB Computer Accadamy - கோண்டாவில்
7. Luxmy புத்தகசாலை - நெல்லியடி

**பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



இ.சாந்தகுமார்
(B.A. Hind Spl.)
(அராலி)



து.ஜேந்திரன்
(B.B.A. FM Spl)
(கோண்டாவில்)

06,07-10-2005 அன்று யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின்போது (B.A.Hind Spl.) பட்டம் பெற்றுக்கொண்ட இ.சாந்தகுமார், (B.B.A. FM Spl.) பட்டம் பெற்றுக்கொண்ட து.ஜேந்திரன் ஆகிய இவர்களை அகமகிழ வாழ்த்துவதுடன் எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பெரும்பங்காற்றிவரும் இவர்கள் மேன்மேலும் பல பட்டங்களையும் பெற்று வளமுடன் வாழ எமது நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

C.B COMPUTER ACADEMY
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

**புலமைப் பரிசில் திட்டம் 2006**

மாணவர்களே நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த எமது அடுத்த கல்வியாண்டிற்குரிய புலமைப்பரிசில்களிற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று (12.10.2005) புதன்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்றையதினம் பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களிற்கு பதிவுக்கட்டணத்தில் விசேட சலுகை வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு 12.10.2005 உதயன் பத்திரிகையை எதிர்பாருங்கள்.

(சி/45522) இயக்குநர் IIS யாழ்ப்பாணம்.

**ELECTRONIC REPAIRS**

Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PCs
UPS
VCD/DVD players
Hi-fi systems

மற்றும் அனைத்து இலத்திரனியல் உபகரணங்கள்

**MICRO PC SYSTEMS**
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
MPCS Building,
127, K.K.S Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் விசேட கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் எதிர்வரும் 12-10-05 வரை பெற்று பதிவுகளை மேற்கொள்ளலாம்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்கான விசேட கணனிப் பயிற்சி

Special On-Line Class

* Dip.in PC Application & Office Management Based on Ms-Office (Week days only)

வகுப்புக்கள் ஆரம்பம்- 12-10-05

Centre for Information Technology

-Executive Officer




EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஏனைய செல்லிடப்பேசிகள் இயங்காத இடங்களிலும்
அல்கடெல் இயங்கும்.
எனவே நீங்கள் ஒருபோதும் மேலும் கீழும் விழிக்கவேண்டியதில்லை.




THE cbe GROUP OF COMPANIES

**காட்சியறைகள்**

| | |
|---|---|
| வன் ஸ்டொப் ஷொப் | 237 0370 |
| யூனியன் ப்ளேஸ் | 267 9679 |
| திருகோணமலை | 026-2225280 |
| யாழ்ப்பாணம் | 021-2227283 |
| மாத்தறை | 041-2232633 |
| களுத்துறை | 0777-237878 |
| குருனாகல் | 0777-265566 |
| கண்டி | 077-3055305 |

Dialog A·R·C·A·D·E

| | |
|---|---|
| கொழும்பு | 0777-592592 |
| நுகேகொடை | 0777-363666 |
| கண்டி | 0777-306878 |
| காலி | 0777-707474 |
| வென்னப்புவை | 0777-584348 |
| குருனாகல் | 0777-508408 |

ALCATEL

அபூர்வத்தின் ஆளுமை

ஐரோப்பிய சங்கத்தின் தராதரத்திற்கு அமைய சரீர நலத்திற்கு தீங்கு ஏற்படாதிருக்க கதிர்வீச்சு விகிதம் 2.0 W/Kg இற்கும் குறைவானதாக இருப்பது அவசியம். அல்கடெல் கையடக்கத் தொலைபேசிகளின் கதிர்வீச்சு விகிதம் 0.40 W/Kg – 0.82 W/Kg இடைப்பட்டதாகும்.

අන්‍යෝන්‍ය සහ අවබෝධාත්මක සංගමය
சிநேகம் புரிந்துணர்வுக்கான அமைப்பு
SOCIETY FOR LOVE AND UNDERSTANDING

அன்பு சமாதானத்தைப் பிறப்பிக்கும்

# விரும்பியதொரு மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம்



இலங்கை வாழ் மக்களுக்கு,

மதச் சுதந்திரம் என்பது அச்சமோ, தடைகளோ இன்றி தம் சுய விருப்பத்திற்கேற்ப மதமொன்றை வழிபடுவதற்கும் பின்பற்றுவதற்கும் உள்ள உரிமையாகும். இது நமது சட்டத்திலுள்ள மிகவும் விலை மதிப்புள்ள புனிதமிக்க ஒன்றாகும். இது அன்பு, பொறுமை, இரக்கம், பிறர் மட்டிலுள்ள அக்கறை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது.

புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யும் இந்நேரத்தில், வெறுமனே வாக்குறுதி அளிப்பதோடு மட்டுமல்லாது சமாதானத்தையும் மதச்சுதந்திரத்தையும் வழங்கக்கூடியவரை தெரிவு செய்வதன் மூலம் எமக்குள்ள அரிய பொக்கிஷத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவூட்டுவதற்காகவே இந்த மலரானது தொகுக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், இந்த உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு எம் அனைவருக்கும் உரியது.

இலங்கைத் திருநாடானது இரண்டாயிரமாம் புதிய நூற்றாண்டில் நம் அனைவருக்கும் சுவர்க்க பூமியாக திகழ வேண்டும்.



தேசமான்ய கலாநிதி லலித் கொத்தலாவல
ஸ்தாபகத் தலைவர்
சிநேகம் புரிந்துணர்வுக்கான அமைப்பு



அம்பிட்டிய, வண. சுமன ரத்ன தேரர்
ஸ்ரீ மங்களாராம விகாரை,
மட்டக்களப்பு.

### நல்லாட்சியாளர்களே!

நல்ல ஆட்சி முறை பற்றி மேற்குலக சிந்தனையாளர்கள் சொன்னவற்றையும், நமது "அக்கஞ்ஞ" சூத்திரத்தில் நல்லாட்சி பற்றிப் புத்த பகவான் சொன்வற்றையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து அவை ஒன்றையே கூறுகின்றன. தற்போது நாட்டில் நடக்கும் அராஜகங்களையும் நீதிக்குப் புறம்பான விடயங்களையும் நோக்குமிடத்து தகைமையுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது கேள்விக்குறியே.

தேவநம்பியதீசன் காலத்திலிருந்து இலங்கையை ஆட்சி செய்த அரசர்கள் யாவரும், பௌத்தர்கள் என்பது தெளிவு. உள்நாட்டு ஆக்கிரமிப்புகளுக்கும், அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கும் மத்தியிலும் அவர்கள் செம்மையாக ஆட்சி நடத்தியது பௌத்த வழிநின்றே. இங்கு எல்லாள மன்னனையும் நினைவு கூற வேண்டும். "இலங்கையை ஆள்பவர் பௌத்தனாக இருக்க வேண்டும்" என நிசங்கமல்ல அரசர் பிரகடனப்படுத்தினார்.

பௌத்த ஆட்சியின் மூலதர்மங்கள் ஏராளம். அதுபற்றி இங்கு விபரிக்க முடியாது. அத்தோடு பேர் குறிப்பிடவும் முடியாது. பத்து வகையான சக்திகள் (சக்கவர்த்தி சிங்கநாத சூத்திரம்) பத்து வகையான அரச தர்மம். ஏழு பிரமாண தர்மங்கள் (மகா பரிநிர்வாண சூத்திரம்) நாலு தடைகளையும் மீறுதல் (சிங்காலோவாத சூத்திரம்) முதலானவை அவற்றுள் சிலவாகும். இந்த பௌத்த அடிப்படை வாதங்களைப் பின்பற்றி நல்லாட்சி நடத்திய மன்னர்களை சரித்திரத்தில் காணலாம். துட்டகைமுனு, பராக்கிரமபாகு, சிறீசங்க போதி முதலானவர்கள் சரித்திர நாயகர்களானதற்குக் காரணம் அவர்கள் பௌத்த வழி நின்று நல்லாட்சி புரிந்ததே.

மக்கள் சமாதானமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது ஆட்சியாளர்களின் தலையாய கடமையாகும். சமாதானத்தின் மூலம் சமயமும் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

மேற்குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு நடப்பவரே நல்லாட்சி புரிபவர் என்ற தகைமையைப் பெறுபவர். இப்பேர்ப்பட்டவர். ஆட்சியில் இருக்கிறாரா? தகைமையுள்ளவரைத் தெரிந்தெடுக்கும் உரிமை மக்களுடையது.

(தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க)



சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள்
பிரதம குரு, ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்,
குடியிருப்பு, வவுனியா.

### சமாதானமும் சமயமும்

மனித இனத்தை மாண்புறச் செய்வதே சமயங்களின் நோக்கமாகும். மனிதனுடைய தெய்வத்தன்மையை வளர்த்து அதன் மூலம் சமூகத்தில் சமாதானமும் நல்லொழுக்கமும் மனச் சாந்தியும் ஏற்படுத்துவதே சமயங்களின் முக்கிய நோக்கமாகும்.

உங்களுக்கு மேல் ஒருவர் இருக்கிறார். உங்களுடைய செய்கைகளை அவதானித்துக் கொண்டிருக்கிறார். எதை விதைத்தீர்களோ அதை அறுப்பீர்கள் என்றெல்லாம் அறிவுறுத்துவதே சமயங்களின் நோக்கமாகும்.

"எல்லாப் படைப்புகளிலும் மிகவும் நன்றாக படைக்கப்பட்டவன் மனிதன். அவனை மற்றைய படைப்புகளுக்கு மேலாக வைத்துள்ளார் அல்லா" என்று இஸ்லாம் கூறுவதுடன் சகோதரத்துவத்தை வற்புறுத்துகின்றது. கிறிஸ்தவம் "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்று கூறுகின்றது. இந்து சமயம் "அன்பேதான் சிவம்" என்கின்றது. பௌத்தம் சகல உயிர்கள் மீதும் கருணையாக இருக்கும்படி வேண்டிக்கொள்கின்றது.

எல்லாச் சமயங்களுமே நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது வீதம் ஒத்துப்போகின்றன. பொய்கூறுதல், கொலைசெய்தல், விபச்சாரம், பிறரை ஏமாற்றுதல் என்பவற்றை கண்டிக்கின்றன. தருமம் செய்தல், பிறருக்கு பிரயோசனப்படும்படி வாழுதல், தியாக சிந்தை, நல்லொழுக்கம் என்பனவற்றை வற்புறுத்துகின்றன.

ஆனால் சுயநலம் பிடித்தவர்கள் அவற்றை தமக்குச் சார்பாக புரட்டி சமூகத்தில் பிளவுகளையும் பகைமையையும் வெறுப்பையும் உண்டாக்குகின்றனர். இது சமயங்களுக்கு செய் யப்படுகின்ற அநீதியாகும்.

இந்து சமயமானது பஞ்சமா பாவங்களை கைவிடும்படியும் ஐந்து வகையான யாகங்களை (கடமைகளை) செய்யும்படியும் வற்புறுத்துகின்றது. தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் ஆகிய இடங்களில் அறம் செய்யும்படி கூறுகின்றது.

(தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க)



ஸ்ரீ முஸ்லிம் சமாதானச் சபைத் தலைவர்
''கீர்த்தி ஸ்ரீ'' ''ஸாமமான்ய''
அல்ஹாஜ் நியாஸ் மௌலவி

### சகோதரத்துவம் நிறைந்த சமாதான வாழ்வும் மத சுதந்திரம் என்ற தலைப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் சமாதானச் சபைத் தலைவர் "கீர்த்தி ஸ்ரீ" "ஸாமமான்ய" அல்ஹாஜ் நியாஸ் மௌலவி வழங்கிய செய்தி

சமயங்களின் வழிகாட்டிகள் என்பவர்கள் சமூகத்தை சமயத்தினூடாக சமாதான வழியில் நற்போதனைகள் மூலம் சமயம் கலந்த பிரஜைகளை உருவாக்குபவர்களே.


ஏனெனில் மனிதன் என்பவன் மனிதத்தன்மையைக் கொண்டவனாக ஆகுவது அறிவால், ஆற்றலால், ஆடையால், அந்தஸ்தால், குலக் கோத்திரத்தால் அல்ல. மாறாக சமயத்தின் மூலமாக குடிகொண்ட நற்குணம், மனிதநேயம் ஆகியவற்றினாலேயாகும்.

சர்வகலாசாலைகளில் சகல கலைகளையும் கற்றுப்பட்டம் பெற்றாலும் சமயக்கல்வியும் சமயத்தொடர்பும் இல்லையெனில் அவன் மனித உருவம் கொண்ட மிருகமாகவே நடமாடுவது நிதர்சனமாகும். இக்குணம் கொண்டவர்களால் தான் சமூகத்தில் அமைதி குலைந்து சமூக பிரிவினைகளும் உருவாகி சமயங்களுக்கு எதிராக ஏனைய சமூகங்களுடன் வன்முறைகளும் உருவாகி விடுகின்றன.

எனவே சமயத்தை அவர்களுக்கு ஔடதமாக ஊட்டும் பொறுப்பு சமய வழிகாட்டிகளினதும் சமய போதகர்களினதும் பொறுப்பாகும். ஒரு சமயத்தை தொடர்வது மனித சுதந்திரம். அது மனிதனின் உரிமை. அவரவரின் தெரிவு. இவைகளை தடைசெய்து பிரிவினை கருத்துகளை சமயம் எனும் பெயரால் பரப்பப்படுமானால் அது ஒரு சமயமே அல்ல.

சமூகத்தை அழிக்கும் பிரிவினைகளை உருவாக்கும் ஒரு இயக்கமாகவே அது கருதப்படும். அதுபோலவே சமய வழிகாட்டிகள் தங்கள் போதனைகள் மூலம் குழப்பத்திற்கும் இனங்களுக்கிடையிலே பிரிவினைக்கும் வழிகாட்டினால் அவர்கள் ஆன்மீகத்திலிருந்து நீங்கிய ஒருவகை பயங்கரவாதிகள் என்றே எடைபோட முடியும்.

(தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க)



பேராயர் அதி. வண. ஒஸ்வால்ட் கோமிஸ்
தலைவர் - இலங்கை கத்தோலிக்க
ஆயர் பேரவை

### உத்தேச மதமாற்ற தடைச்சட்டம் பற்றி இலங்கையின் கத்தோலிக்க ஆயர் பேரவை விடுக்கும் அறிக்கை

எமது நாட்டில் அண்மைக் காலத்தில் மத சார் குரோதம் வளர்ந்து கொண்டு வருவது பற்றி எமது ஆழ்ந்த ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றோம்.

இவ்வேளையில் ஒன்றுபட்ட இலங்கையில் சகல மத மக்களும் கௌரவத்துடனும் பரஸ்பர மரியாதையுடனும் சமாதானமாகவும் வாழ்வார்கள் என்ற நம்பிக்கைகைய மீளவும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஒழுங்கு முறையற்ற மதமாற்றத்தினால் ஏற்பட்ட ஆதங்கமே காரணம் என்பதை உணர்கின்றோம். இது போன்று நெறியற்ற வழிகளைப் பயன்படுத்தி ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாற்றும் நடவடிக்கைகளுக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

நாம் மதங்களிடையே சந்தேகமற்ற ஒரு சிநேகபூர்வமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெனில், வலுவான வழிமுறைகளை வகுத்துக் கொள்வது முக்கியமானது. மதங்களிடையே ஒற்றுமையை உருவாக்கி அவற்றிடையேயான கெடுபிடி நிலையைத் தணிக்க வேண்டுமெனில் நியாயமானதும் கௌரவமானதுமான ஒரு வழிமுறையை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நெறிமுறையற்ற மதமாற்ற விடயத்தைக் கையாள்வதற்கு சட்டவாக்கம் கொண்டு வருவது தொடர்பான யோசனைகள் பற்றி, நாம் விசனத்துடனும், கவனமாகவும் ஆராய்ந்துள்ளோம். இவ்வாறு ஒழுங்கு முறையற்ற மதமாற்ற நடவடிக்கைகளைக் குற்றமாக்குவது, நிலையை இன்னும் மோசமாக்கவே செய்யும்.

உதாரணமாக நெறிமுறையற்றதெனக் கருதப்படும் நடவடிக்கைக்கு எதிராக குற்றவியல் வழக்கொன்று நாட்டின் ஒரு பகுதியில் நடத்தப்படுமேயானால், நீதிமன்ற எதிர்வாத நடவடிக்கைகளின் விளைவாக மதங்களிடையேயான உறவு பாரதூரமாகப் பாதிக்கப்படலாம்.

(தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க)



**தர்ம ரக்சித மங்காலங்கார**
**சாஸ்ரபதி கம்புருகமுவே பஞ்ஞாஜீவ தேரர்**
**அபிநவாராமய கம்புருகமுவ ஸ்ரீ சுபத்ராராமய**

**ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் தமது மதங்களை அனுஷ்டிக்கும் சுதந்திரம் இருப்பது அவசியம்.**

புத்த பெருமானைப் போன்றதொரு ஆன்மீக சத்தியவந்தரொருவரை காண்பதென்பது அரிதிலும் அரிதானது. உபாலி என்ற குடிமகனொருவர் புத்தபெருமானிடம் சென்று அவரது தார்மீகம் சத்தியமானதெனத் தெரிவித்து தானும் பௌத்த மதத்தை அனுஷ்டிக்க விரும்புவதாகத் தெரிவித்தபோது மற்றொரு முறை உனது தீர்மானத்தைப் பற்றி சிந்தித்துப்பார் எனக் கூறினார். திரும்பத் திரும்ப அவன் வற்புறுத்தவே "உனது வீட்டில் தரப்படும் அன்னதானத்தை மேற்கொண்டும் தவறாமல் தருவேன் என வாக்குறுதி தரவேண்டும்" என்றார். இதிலிருந்து ஏனைய மதங்களை புத்தபகவான் எவ்வளவு கண்ணியமாக மதித்தார் என்பது புலனாகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்களிடம் நாம் எதிர்பார்ப்பது எந்தவொரு மதத்திற்கும் இடையூறு ஏற்படாமல் பொதுமக்கள் தத்தமது மதங்களை அனுஷ்டிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்பதேயாகும். அத்தோடு எவரினதும் கட்டாயத்திற்கு உள்ளாகாமல் தனி மனித உரிமை அனைவருக்கும் கிடைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

சமாதானத்தைப் பொருத்தவரை ஜனாதிபதி வேட்பாளரிடம் நாம் எதிர்பார்ப்பது நிரந்தர சமாதானம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதேயாகும். இந் நாட்டில் தமிழர், முஸ்லிம்கள் அனைவரும் அக்காலத்தில் சிங்களவருடன் சமாதானமாக வாழ்ந்து வந்தது அனைவரும் அறிந்ததேயாகும். சகல மனிதரும் சமமானவர்களே என்பதை உணர்ந்து நாட்டினர் அனைவரும் இலங்கையர் மட்டுமே என்பது எமது எண்ணமாகும்.

சகல மனித உரிமைகளும் பொதுவாக ஒவ்வொருவருக்கும் உரிமையாக வேண்டும். இதற்கொப்ப வெளிநாட்டவருக்கு வேண்டிய விதமாக அன்றி எமது நாட்டுக்குப் பொருந்தும் வகையில் அவர்கள் செயல்பட வேண்டியது அவசியம்.

சமாதானத்திற்காக எடுக்கப்படும் முன்னெடுப்புக்கள் வெளிநாட்டினரை மகிழ்விப்பதாக அமையாமல் இலங்கை மக்கள் அனைவரையும் மகிழ்விப்பதாக அமையுமென்பது எமது நம்பிக்கையாகும்.

தேசிய புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் மற்றும் அறிஞர்கள் போன்றோர் ஒன்றிணைந்து எமக்குப் பொருந்தக்கூடியதான சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதி வேட்பாளரிடம் நாம்



**வெலிபதயாயே ஞானதஜ தேரர்**
**நெலும் வில ரஜ மஹா விகாரை,**
**சீனிகம.**

**சமாதானமும் ஆன்மீக சுதந்திரமும்**
**நஹிவேரேன வேரானீ - சம்மன்தீத குதாசனங் அவேரேனச சம்மன்தி - ஏச தம்மோ சனந்தனோ**

இவ்வுலகில் எக்காலத்திலும் விரோதத்தை விரோதத்தால் வெல்லமுடியாது விரோதமற்ற தன்மையாலேயே வெல்ல முடியும். இது நிரந்தரமானதொரு தர்மமாகும்.

ஒரு நாட்டில் அல்லது ஒரு சமூகத்தில் சமாதானம் இல்லாதொழிய காரணம் ஒன்றுண்டு. அதாவது நாட்டில் அல்லது சமூகத்தில் குழுக்கள் பெருகி அவர்களிடையே அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவதால் பிரச்சினைகள் உருவாகி சமாதானம் உருக்குலைகின்றது. குடும்பத்திலும் சமூகத்திலும் ஒரே விதமான கருத்துக்கள் நிலவுமாயின் சமாதானமான சமூகமொன்று உருவாகும். ஆனால் அப்படியாக எப்போதும் நடப்பதில்லை. என்றாலும் சமூகத்தின் பிரதிபலிப்பு தார்மீகத்துவமாகும். தார்மீக சமூகமொன்றில் வாழும் மக்கள் தார்மீகக் கொள்கைகளை உடையவர்களாவர். எனவே அங்கே எப்போதும் சமாதானம் நிலவும்.

பௌத்த கதையொன்றின் மூலம் (வட்டுக்குருலு ஜாதகய) கற்றுத்தரப்படுவது சமாதானத்தின் சக்தி என்பதாகும். ஒரு குழு இருக்குமிடத்தில் பிரச்சினைகள் உருவாவது இயற்கையானதொரு நிகழ்வாகும். என்றாலும் ஒவ்வொருவரின் வித்தியாசமான கருத்துக்களைத் தெரிந்து கொள்ளும் போது சமூகத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட எவ்வளவோ வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆயினும் சமாதானம் என்பது மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும். சமாதானம் என்பது தவம் செய்வதைப் போன்றதென்றால் மிகையாகாது.

கடந்த வருடம் டிசம்பர் 26 அன்று இடம்பெற்ற சுனாமியின் பாதிப்புக்குள்ளான மக்கள் ஒன்றுசேர்ந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டது புனித ஸ்தலங்களிலாகும். இங்கே அவர்கள் மத வேறுபாடுகளைக் கடந்து செயற்பட்டதன் காரணம் அவர்களது நோக்கம் ஒன்றாக இருந்ததாகும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்ற மேலான குறிக்கோளுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். அதாவது உணவு, உடை, உறையுள் போன்ற ஆத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வது அனைவரதும் கடமையாக வேண்டும். அத்தோடு மரணமடைந்தோரின் உறவினருடன் இணைந்து அவர்களது சோகத்தையும் பகிர்ந்துகொண்டு செயல்படுவதோடு, மத பேதமின்றி இறந்தோரின் பூதவுடல்களுக்கு அவர்களது மதத்தவர்களுடன் சேர்ந்து அவர்களது ஆன்மாக்கள் சாந்தி பெற பிரார்த்திப்பதாகும். இதன்மூலம் ஆன்மீகத் தேவைகள் சரிமுறையாக அவதானிக்கப்படும். எனவே ஒரே இடத்தில் தத்தமது மதங்களை நினைவுபடுத்திக் கொள்வது எவரொருவரின் எதிர்ப்புகளுமின்றியே. தனியொருவரோ அல்லது தனிப்பட்டவர்களின் இயக்கமொன்றோ கஷ்ட நிலைக்குள்ளாகும் போது உடைந்து போன மனதைக் குணப்படுத்த மதமொன்று அவசியமென்பது அச்செயலால் தெளிவானது.

சமாதானமும் மதமும் கைகோர்த்து செயல்படுகின்றன. அதன்மூலமாக நல்லதொரு சமுதாயம் உருவாகும். என்றோ ஒருநாள் இவ்விரண்டில் ஒன்று இல்லாமல் போகும்போது சமுதாயம் அழிவுக்குள்ளாகும்.



**சாஸ்ரவேதி வண. வட்டரக்க விஜித தேரர்**
**ரொமலவெல மஹாவலி மஹா விகாரை**
**அதிபதி**

இலங்கையின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கும் தலைவரின் பொறுப்புகள் மிக விசாலமானவையாகும். அவற்றுள் பிரதானமானவை நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது, பொருளாதாரத்தை வளமுள்ளதாய் ஆக்குவது என்பவையாகும்.

கடந்தகால யுத்தத்தின் கசப்பான அனுபவங்கள் எமக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றன. இனியும் யுத்தம் அவசியமில்லை. இலங்கை பல்வேறு இனத்தினரும் பல்வேறு மதத்தினரும் வாழும் ஒரு நாடு. அவர்கள் அனைவரதும் உரிமைகளை எவரொருவருக்கும் அநீதி இழைக்காத வகையில் பாதுகாப்பதற்கு வருங்காலத் தலைவர் முன்வர வேண்டும். பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனம் எனும் வசனங்கள் வருங்காலத் தலைவரின் அகராதியிலிருந்து உடனடியாக நீக்கப்பட வேண்டும். அனைத்து மக்களும் இலங்கையர் என மட்டுமே நினைக்கப்படவும் நடத்தப்படவும் அவர் முன்வர வேண்டும்.

உலகம் வேகமாக முன்னேற்றமடைந்து வரும் போது இலங்கையையும் புதியதோர் யுகத்திற்கு கொண்டு செல்லக்கூடிய முன்னேற்றகரமான அறிவொளி அவரிடம் இருக்க வேண்டும். அப்படியான குணாதிசயமுடைய தலைவர் ஒருவருக்கு மட்டுமே நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக்கூடிய தகுதி இருக்கும்.

**இம்மண்ணில்**
**மீண்டுமொரு யுத்தம்**
**வேண்டாம்.**

**எங்கள்**
**விருப்பத்திற்கேற்ப**
**விரும்பிய மதத்தை**
**பின்பற்ற**
**விரும்புகின்றோம்**

**எவ்வித அச்சமுமின்றி**
**விரும்பிய மதத்தை**
**பின்பற்றுவதற்கு**
**எமக்கு உரிமை**
**வேண்டும்**

සෙනෙහස සහ අවබෝධාත්මක සංගමය
சிநேகம் புரிந்துணர்வுக்கான அமைப்பு
SOCIETY FOR LOVE AND UNDERSTANDING

13, டிக்மன்ஸ் வீதி,
கொழும்பு 4.



**அருட்தந்தை ரஞ்சித் டிமேல் அவர்கள்**
**உதவி பங்குத்தந்தை**
**ஆயர் இல்லம், அனுராதபுரம்.**

இந்த விநாடியில் எனது உள்ளத்தை நிரப்புவது யேசு பிரானின் வதனமாகும். யேசு பிரானின் மலைமேல் பிரசங்கத்தில் சொன்ன வசனங்களாகும். "எவரும் எனக்காக உங்களை நிந்தை செய்து பலவிதமான செய்யாத குற்றங்களைச் சுமத்தும்போது நீங்கள் பாக்கியவான்களாகிறீர்கள். அதற்காக மகிழ்ச்சிக்கொள்ளுங்கள். நான் மோட்சத்தில் உங்களுக்கு உயரிடம் ஒதுக்குவேன் (மத் 5:11-12)

நான் பொலன்னறுவை, பலுகஸ்தமன பங்கிற்கு வந்தது 2000ம் ஆண்டிலாகும். புலஸ்திகம பலுகஸ்தமன பங்கிற்குச் சேர்ந்த மற்றுமொரு கிராமமாகும். இங்கு வாழும் ஜனங்கள், காட்டு மிருகங்கள், விஷப்பாம்புகள், வரண்டுபோன நிலங்கள், வறுமை இவையனைத்திற்கும் மேலாக யுத்தக் கொடுமை என்பவற்றால் மிகவே பாதிக்கப்பட்டவர்களாகும். இங்கே தமது மத அனுஷ்டானங்களைச் செய்வதற்குச் தென்னை ஓலைகளால் வேயப்பட்ட குடிசைப் கோவிலொன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிறிய குடிலை அழகியதொரு கோவிலாக்கித் தரும்படி புலஸ்திகம வாசிகள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். புலஸ்திகம கிறிஸ்தவர்களின் முன்னெடுப்புடன் பிறமதத்தவர்களின் உதவியுடன் 2002 இல் திருச்சிலுவை தேவாலய வேலைகள் முற்றுப்பெற்றன.

டிசம்பர் 22 இடம்பெற்ற திறப்பு வைபவத்தில் கொழும்பு மேற்றாணியார் வண. ஒஸ்வால்ட் கோமிஸ் அவர்கள் சோமாவதி விகாரதிபதி உட்பட்ட மேலும் பல பௌத்த குருமாரும் பங்குபற்றினர்.

காரணம் எதுவாக இருப்பினும், 2003 டிசம்பர் மாதம் மனவேதனை தரும் நிகழ்வொன்று இடம்பெற்றது. அது நுகேகொடை பௌத்த கலாசார அமைப்பின் செயலாளர் திருச்சிலுவை தேவாலயத்திற்கு எதிராக கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ததேயாகும். இந்த செய்தியைக் கேட்ட எனது மனதில் தோன்றியது வட மத்திய மாகாணத்தில் வாழும் எமது சிறுவர்களாகும். இளைஞர் யுவதிகளை பிழையான பாதைக்குத் திருப்பி அழிவை நோக்கி இட்டுச் செல்லும் அமைப்புகளும் தனிநபர்களும் இருக்கின்றார்களென்பது கவலைக்குரியது அல்லவா?

இந்த அமைப்புகளும் தனிநபர்களும் தடையேதுமின்றி இவ்வாறான பாவகாரியங்களில் ஈடுபட்டு வரும் வேளையில் ஜனங்களை தேவனை நோக்கி போகச் செய்யும் நற்காரியத்திற்காகப் பாடுபட்டு தேவாலயமொன்றை கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட வண. பிதா ஒருவரை நீதிமன்றத்திற்கு இழுத்தவர்கள் நாட்டினை அழிவுப்பாதையில் இட்டுச் செல்பவர்களாகும். 2005 ஜூலை 16 அன்று அதைவிட பயங்கரமானதொரு செய்தி கிட்டியது. எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையில் கட்டியெழுப்பப்பட்ட திருச்சிலுவை தேவாலயத்தை இனந்தெரியாத நபர்கள் எரியூட்டி நாசப்படுத்தியதுடன் தேவாலயத்திற்கென தமது காணியை இலவசமாக வழங்கிய திரு. என்டனி அவர்களையும் கத்தியால் குத்தியுள்ளார்கள் என்பதே அச்செய்தி.

(தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க)



**அபயபுர திருச்சிலுவை தேவாலயத்திற்கு தீ வைத்தமை பற்றி கத்தோலிக்கன் என்ற வகையில் எனது தனிப்பட்ட கருத்து**

**என்டனி கிறிஸ்டோபர் பர்னாந்து**
**அபயபுர, புலஸ்திகம, பொலனறுவை**

இறைவன் மனிதனைப் படைத்தது சமமான அந்தஸ்துடனும் சமமான கௌரவத்துடனுமாகும். மனதாலும், வார்த்தையாலும் நடத்தையாலும் நாம் அனைவரும் உத்தமர்களாக இருக்க வேண்டும். மனதால் உயர்ந்த நாம் சுதந்திரமான பிறவி எடுத்துள்ளோம். எனவே கௌரவத்திலும் அந்தஸ்திலும் சமமாக ஒருவருடன் ஒருவர் பிணைக்கப்பட்டுள்ளோம். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் வாழ்ந்து நன்மை தீமைகளை நன்குணர்ந்து நேர்மையுடனும் கடமைப்பாட்டுடனும் செயற்படுதது வதற்கு நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அயலாரை நேசிக்க வேண்டும். இரக்கம் காட்ட வேண்டும். அவர்களை ஆதரித்து சகோதரத்துவத்தைப் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும். விரோதத்தை விரோதத்தால் அழிக்க முடியாது என்பது புத்த பெருமானின் போதனையாகும். ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றக் கன்னத்தையும் திருப்பிக்கொடு என்பது யேசு பிரானின் அருள்வாக்கு.

இதன்படி எமக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து, அதிர்ச்சிக்கு உள்ளாக்கி திருச்சிலுவையின் கைகால்களை சுக்குநூறாக உடைத்து, தேவாலயத்திற்கு எரியூட்டி நாசமாக்கிய மிலேச்சர்களுக்கு மன்னிப்பளிக்க நாம் விரும்புகிறோம். இன்று முளைத்துள்ள பயங்கரவாதக் குழுக்கள் கோவில்கள், பௌத்த கோவில்கள், பள்ளிவாசல்கள் என்பவற்றை நாசமாக்கினாலும், எரியூட்டினாலும் கொன்றுபோட்டாலும் எமது இதயத்திற்குள்ளிருக்கும் ஆன்மாவை இவர்களால் அழிக்க முடியுமா? இவ்விதமான செயல்களால் எமது ஆன்மீக நம்பிக்கைமென்மேலும் வளருமேயல்லாமல் குறைந்து விடப்போகிறதா?

ஆயினும் இந்த பயங்கரவாதிகள் பற்றியும் ஏனைய சக்திகள் மற்றும் குழுக்கள் பற்றியும் இவற்றின் பின்னணியில் இருப்போர் யாரென்பது பற்றியும் ஆராய வேண்டுமென்பது அவசியம். இதுவரை கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான பல தேவாலயங்கள் இடிக்கப்பட்டுள்ளன. இவை சம்பந்தமாக எவரொருவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாக எந்தவொரு ஊடக மூலமாகவும் செய்தி வெளியிடப்படவில்லை. மென்மேலும் இச்செயல்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. அபயபுர திருச்சிலுவை தேவாலயத்திற்கு தீமூட்டி ஒருவரைக் கத்தியால் குத்தி மரண அச்சுறுத்தல் விடுத்தது இதற்கொரு உதாரணமாகும். கிறிஸ்து பக்தர்களின் முதல் வந்தனைக்குரிய திருச்சிலுவையின் கைகால்களை உடைத்துப் புரிந்த இந்த நிந்தனைச் செயலை இன்று முழு உலகமுமே கண்டிக்கின்றது. இதில் சம்பந்தப்பட்டவர்களாகக் கருதப்படும் தனிப்பட்டவர்களையும் குழுக்களையும் இயக்கங்களையும் பற்றி தெரிந்திருந்தும் அரசோ அல்லது மக்கள் பிரதிநிதிகளோ இது பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்காதது கவலைக்குரியதாகும்.

நான் வழிபடும் கத்தோலிக்க மதத்தின்படி இந்த பயங்கரவாதிகள் இவர்களுக்குப் பின்னால் செல்லும் புத்தியற்ற அடிவருடிகள் அரசியல் புறம்போக்குகள் போன்றவர்களை மன்னிப்பளிக்க வேண்டும். என்றாலும் சமூக மட்டத்தில் சட்டத்தை உரிய விதத்தில் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகிறது. பள்ளிவாசல், பௌத்த கோவில்கள், தேவாலயங்கள் போன்ற அழகிய கட்டிடங்களை நாசம் செய்யலாம். ஆனால் எமது ஆன்மாவை அழிக்க முடியாது. நாம் இறைவனில் வைத்துள்ள நம்பிக்கை எமது பயபக்தி, எமது பந்தம் அனைத்துமிருப்பது எமது இதயத்தினுள் யேசு பிரானின் மூலமாக எமக்கு அருளப்பட்ட அந்த சக்தியும் நம்பிக்கையும் இன்றும் என்றென்றும் எம்முடனிருக்கும். பௌத்த கோவில்கள், பள்ளிகள், கோவில்கள், தேவாலயங்கள் போன்ற அனைத்துமிருப்பது எம்மனைவரையும் நல்வழிப்படுத்துவதற்காகும்.

நாம் இந்த அனைத்து மதங்களுக்கும் மதிப்பளிக்கும் அதேவேளை எமக்கு யேசு பிரரன் காட்டியுள்ள வழியையும் நித்திய ஜீவனையும் பின்பற்றி வாழ்ந்து அனைவருக்கும் நலமே நடக்கவேண்டுமென அதற்காக முயற்சிப்பதே எமது குறிக்கோளாகும்.



இது இந்நாட்டில் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள சிநேகம் புரிந்துணர்வுக்கான அமைப்பின் (SOLO-U) செய்தியாகும்.
இவ்வரைபடத்திலுள்ள நான்கு கரங்களும் நான்கு பிரதான மதங்களும் நட்புறவு மற்றும் அமைதிக்காக ஒன்றிணைந்துள்ளதை காட்டுகின்றது.

# விரும்பியதொரு மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம்

### வண. சுமன ரத்ன தேரர் அவர்கள் வழங்கிய செய்தியின் தொடர்ச்சி

அரசியற் கட்சிகளின் தலைவர்கள் நடந்து கொண்ட முறை, நடந்து கொள்ளவுள்ள முறை கள் பற்றி அறிவுபூர்வமாகச் சிந்திக்குமிடத்து நாம் நினைப்பது போன்ற தலைவரொருவர் இன்னும் பிறக்கவில்லை.

போஸ்ரரையும், பதாதையையும் கண்டு ஏமாறும் மக்கள் இன்றில்லை. மக்கள் மத்தியில் இருந்து கொண்டுதான் அவர்களது குறை குற்றங்களை அறிந்து அவர்களுக்குச் சேவை செய்ய முடியும். மட்டக்களப்பில் வசிக்கும் பௌத்த பிக்குவான நான் இங்குள்ள மக்களுடன் வாழ்ந்து அவர் களின் குறைபாடுகளை நன்கு அறிந்துள்ளேன். அவர்களுக்கு உதவிபுரிய மனமிருந்தும் அதற்கான வசதிகள் என்னிடமில்லை. எனவே நான் அதுபற்றி அரசியல்வாதிகளிடம் கூறினேன். எவரும் அதைக் கருத்தில் கொள்ளவில்லை. இந்த விகாரையைப் பாதுகாத்துத் தரும்படி இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் வதியும் பிரமுகர்களிடமும், தூதர்களிடமும் ஆட்சியாளர் களிடமும் முறையிட்டு எதுவித பதிலும் இன்னும் கிடைக்கவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்த ஒரேயொரு பௌத்த விகாரையான ஸ்ரீமங்களாராம விகாரை மக்களுக்குச் சேவை செய்துள்ளதா என்பது கேள்விக்குறியே. பௌத்த மதத்தைப் பாதுகாப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு இதுபற்றி எவ்வளவுதான் எடுத்துக்கூறியும் பலன் கிடைக்கவில்லை. அண்மையில் அரசியல் தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். அவரிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவென் றால் வட கிழக்கிலுள்ள பௌத்த ஆலயங்க ளைப் பாதுகாக்க ஒரு நல்ல திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்பதுதான். நான் வசித்து வரும் ஸ்ரீ மங்களாராம விகாரையை முன்னேற்ற எந்த ஒரு அரசியல்வாதியும் உதவி புரியவில்லை. எனது சேவையை மதித்து எனக்கு உதவி புரிந்த ஒரேயொரு இலங்கையர் தேசமான்ய கௌரவ லலித் கொத்தலாவல அவர்களேயாவார்.

### சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள் அவர்கள் வழங்கிய செய்தியின் தொடர்ச்சி

பிராணிகள் மீது தருணையுடன் நடக்கும்படி கூறுகின்றது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றும் பாவம் செய்கிறவர்களை அறஞ்சூழும் என்றும் இன்னாசெய்தார்க்கும் நன்மை செய்யச்சொல்லி வலியுறுத்துகின்றது. இதைப்போன்றே எல்லாச் சமயங்களும் சமாதா னத்தை வலியுறுத்துகின்றன.

### அல்ஹாஜ் நியாஸ் மௌலவி அவர்கள் வழங்கிய செய்தியின் தொடர்ச்சி

இந்த சமய வழிக்கு சுதந்திரம் இல்லையெனில், நாட்டின் தேசியக் கொடியை நாலாபக்கமும் பறக்கவிட்டு கண்டுகளிப்பதால் அது ஒரு சுதந்திரம் மூலம் காணும் சுகமாக ஆக முடியாது.

இஸ்லாமிய வரலாற்றில் அதன் இரண்டாவது ஜனாதிபதியாக ஆட்சி செய்த மேதை உமர் (ரழி) அவர்கள் ஜெருஸலத்திலுள்ள கிறிஸ்தவ கோவிலுக்கு விஜயம் செய்த போது தனக்குரிய தொழுகை நேரம் வந்ததும் அவரது சுதந்திரப்படி அதை நிறைவேற்ற கிறிஸ்தவ பாதிரிமார் ஏற்பாடு செய்து கொடுத்ததானது மத சுதந்திரத்தைக் காட்டும் ஒரு வரலாறேயாகும்.

இது ஜெருஸலத்தில் அந்நாளில்- இந்நாளில் நமது நாட்டில் ஒரு வரலாறு உண்டு. பாகிஸ்தான் நாட்டிலிருந்து நமது நாட்டுக்கு வந்த சமய சமாதானப் பாதை யாத்திரைக் குழுவொன்று தென்னிலங்கைப் பகுதியில் யாத்திரை செய்தபோது, தொழுகைக்கான நேரம் வந்ததும் கண்களுக்குத் தென்பட்ட பௌத்த விகாரையை அண்மித்த போது விகாரையின் பிக்குகள் உடனடியாக அவர்களின் மதக்கிரியைகளைச் செய்வதற்கு ஏற்பாடுகளை செய்துகொடுத்த முன்மாதிரிகளையும் எடுத்துக்காட்டத்தான் வேண்டும். இவையெல்லாம் தொடரப்படுமானால் சமாதானம் தானாகவே மலராதா?

"சமாதானம்" "சமாதானம்" எனக்குரலெழுப்பு வோர் வெறுமனே வெள்ளைப் புறாக்களைப் பறக்கவிட்டுப் பல்லின சமூகத்துடன் கைகோர்த்து ஊடகத்துக்கு காட்சி கொடுத்தும் மட்டுப்பட்டு விட்டனர். இதைச்செய்து காரியத்தை மட்டுப் படுத்துவதனால் சமாதானம் மலரப்போவதில்லை. இது பலா மரக்கன்றை நாட்டி வாழைக்குலையை வழிபார்ப்பதைப் போன்றதாகும்.

சமாதானம் என்பது சமூகம் சகல பேதங்களையும் மறந்து நாம் அனைவரும் ஒரே இறைவனின் படைப்பு எம் அனைவரின் உடல் உறுப்புகள் அமைப்பும் ஒன்றே. உயிரும் ஒன்றே. பசியும் மரணமும் ஒன்றே. இரத்தமும் வியர்வையும் ஒன்றே. அப்படியிருக்க நாம் ஏன் வேறுபட வேண்டும் என இதயத்தால் ஒன்றுபட வேண்டும். இந்த உணர்வுகள் இன்றி பேசப்படும் சமாதானம் பிளாஸ்டிக் ஆப்பிள் பழம் போன்றதேயாகும்.

இன்று முழு உலகிலும் மனித சமூகம் அமைதியின்றி தடுமாறுகின்ற ஒரு மிகப்பெரிய பயங்கரம் அது புற்றுநோய், எய்ட்ஸ், கொலரா போன்று பரவிக்கொண்டே செல்கின்றது. உலகில் நோய்கள் பரவாமல் தடுக்கப் பல பிரயத்தனங்கள் சர்வதேச மட்டத்தில் உடனுக்குடன் எடுக்கப்படுவதையும் நாம் அறிவோம். அதன் பயனால் வேகமாக பரவுகின்ற இந்நோய்கள் அவசரமாக கட்டுப்பாட்டுக்குள் வருவதும் எமக்குத் தெரியும்.

மனித சமூகம் எதிர்நோக்கும் நோய்களில் மிகப்பெரிய நோய் (பிரச்சினை) அமைதி இன்மையாகும். நமக்கு சுகவாழ்வேயாகும். அப்படியானால், இந்த சமூகத்தை கண்காணித்து, யுத்தங்கள் மூழாமல், சண்டைகள் பரவாமல் தடுத்து சமாதானத்தை உருவாக்க சர்வதேச மட்டத்தில் இல்லாவிட்டாலும் கூட நம் சமூக மட்டத்திலாவது ஏன் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படவில்லை?

இவ்வகையிலான முயற்சிகளுக்கு "முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தால், மனித சமூகத்தில் இன்று எத்தனையோ பெறுமதியான, உயிர்களைக் காத்திருக்கலாம். டாக்டர்களுக்கும் விஞ்ஞானி களுக்கும் நோய்க்கட்டுப்பாடு ஏற்படுத்தும் பொறுப்பு இருப்பது போலவே சமய போதகர்கள், சமய தலைவர்களின் மிகப்பெரிய பொறுப்பு ஐக்கியம், ஒருமைப்பாடு, சமாதானம் மூலம் சமூகத்தைப் பிரிவினைகளிலிருந்து பாதுகாக்க தங்களின் கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்ற சமயத்தலைவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

இத்துடன் இணைந்த இன்னுமோர் நோக்கு சுதந்திரம் பற்றி சுகமாகப் பேசும் நம்மவர்கள் தங்களின் நாடுகளுக்கு சுதந்திரம் கிடைத்த தினத்தை பெருமிதத்தோடு கொண்டாடுவதை தேசபக்தி எனக் கூறப்படுகிறது.

உண்மையில் அது தேசத்தில் மீதுள்ள பாசம்தான். ஒருவகையான பக்தியும்தான். ஆனால் மனிதனைப் புனிதனாக்கும் இறைபக்தியை ஏற்படுத்தும் தனது சமய அனுஷ்டானங்களை எவரின் இடையூறும் இல்லாமல் அனுஷ்டிக்க வாய்ப்பு கிடைக்குமானால் அதுவே சரியான சுதந்திரம்.

அடுத்தவரின் உரிமைகளை மதிக்கத் தெரியவேண்டும். நாம் துயறும் சமயம் இதைத் தூண்டுவதாகவே அமையவேண்டும். அவனே மனிதன். அதுவே சமயம். இறைவன் படைத்த காற்றை அவனே வேறுபாடின்றி அனைவருக்கும் சமமாக வழங்கும்போது அதைவாங்கிக் கொள்ளும் மனிதன் இந்த மண்ணுக்காகப் பிரிந்து செல்வதில் என்ன அர்த்தம் இருக்கின்றது.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தங்கள் போதனையில் பூமியில் உள்ளவர்களுக்கு அன்பு காட்டுங்கள். அப்போது வானத்தில் உள்ளவர்கள் உங்களுக்கு அன்பு காட்டுவார்கள். என்றும் எவரிடமிருந்து மனித சமூகத்திற்கு நன்மை கிடைக்குமோ அவனே மனிதரில் சிறந்தவன் என்றும் அருளியது சிந்தனைக்கு விருந்தாகும்.

எமது நாட்டின் மிகப்பெரிய பொருளாதாரத் தேவை இன சௌஜன்யமும் அதன்மூலம் மலரும் சமாதானமுமே நமது நாட்டின் தலைவர்களுடைய குறிக்கோளும் இதுவே. இந்த உணர்விற்கு ஆக்கமூட்டும் சிலின்கோ நிறுவனத் தலைவர் "தேசமான்ய" "தர்மபுத்ர" கலாநிதி லலித் கொத்தலாவல அவர்களின் உணர்வை நான் பாராட்டுகின்றேன். மதத்தால் அவர் கிறிஸ்தவர். ஆனால் சகல சமயங்களையும் இனங்களையும் தன்னைப் போலவே மதிப்பவர் என்பதன் ஓர் முன்மாதிரி சிலின்கோ நிறுவனத்தின் சுமார் இருநூற்றுக்கும் அதிகமான கிளைகளில் முஸ்லிம் சமயத்தவரை தனது நிறுவனத்தில் பணிப்பாளர்களாகவும் உதவித் தலைவர்களாகவும் நியமித்துள்ளமை முஸ்லிம் சமயத்தை கௌரவப்படுத்த அந்த சமயத்தவரின் மதச் சுதந்திரத்தைப் பேண வட்டியில்லா வங்கி முறைக்கு சிலின்கோ Profit Sharing என்ற பெயரில் அனுசரணை வழங்கியதும், சகல இன மக்களின் துயர் துடைக்க பலவிதமான அபிவிருத்தி திட்டங்களை சிலிங்கோ நிறுவனம் மூலம் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருவதும் இன சௌஜன்யத்தின் மிகப்பெரிய முன்மாதிரியாகும்.

சமீபத்தில் முஸ்லிம் சமூகம் அவரை "தர்மபுத்ர" என்ற கௌரவப் பட்டம் அளித்து கௌரவித்ததும் சமூக ஒற்றுமைக்கு ஓர் உதாரணமாகும். இன ஐக்கியமும் மன அமைதி கொண்ட சமாதானமும் முழு உலகிலும் மலரட்டும் என இறைவனிடம் வேண்டுவோமாக.

### பேராயர் அதி. வண. ஒஸ்வால்ட் கோமிஸ் அவர்கள் வழங்கிய செய்தியின் தொடர்ச்சி

வழக்கு முடிவில் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டாலும், அவர் தம் மதத்தினர் மத்தியில் ஒரு வேதசாட்சியாகவே கருதப்படுவார். இத்தகைய செயற்பாடுகள் நிலமையை முன்பிருந்ததைவிட மோசமானதாக மாற்றி மதங்களிடையே மாறாத வடுவை உருவாக்கலாம்.

ஒருவர் மதம் மாறுவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு மனிதரைப் பொறுத்த வரையிலும் இம் மதமாற்றத்திற்கான காரணங்கள் தனிப்பட்ட தாகவும், இணையற்றதாகவும் இருக்குமெனில் அது மிகையன்று. ஆகவே ஒருவரது மதமாற்ற த்திற்கான காரணங்கள் இவையாக இருக்கலாம் எனவும், இக்காரணங்கள் ஏற்புடையன்வல்ல எனவும் இக்காரணங்களைக் குற்றங்களாக்க வேண்டுமென ஒருமனப்பட்டுக் கூறுவதும் முடியாத விடயமெனலாம்.

சகல மதங்களும் அவற்றைப் பின்பற்றுப வர்களுக்கு ஏதோ ஒரு வகையில் ஆறுதலைக் கொடுக்கின்றன. ஒரு மதம் ஒருவருக்குக் கொடுக்கும் எழுச்சி அவருக்கே உரித்தானது. ஆகவே அவரது உள்நோக்கங்களின் நியாத் தன்மை மீது மற்றவர்கள் நீதி பரிபாலனம் செய்ய முடியாதீ. ஈற்றில் அந்த உள் நோக்கங்களைச் சரிசெய்து ஒருமைப்படுத்தும் விடயத்தை அந்த நபரிடமே விட்டு விட வேண்டும்.

தடுப்புச் சட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் சிறுபான்மை மதங்கள் மீதான துஷ்பிரயோகம், அலைக்கழிப்பு மற்றும் அச்சுறுத்தல் ஆகியவற் றிற்கான கருவியாக மாறலாம் என்பதையும் நாம் அறிவோம். இதனாலேயே தமிழ்நாட்டுச் சட்ட சபை மதமாற்றத்தை மட்டுபடுத்தும் ஒரு சட்டத்தை கொண்டுவர முனைந்த பொழுது பௌத்தர்கள் கிறிஸ்தவர்களுடன் இணைந்து அதனை ஆட்சேபித்து எதிர்த்தனர். மேலும் அண்மைக்காலத்தில் குஜராத்தில், பௌத்த சமயத்திற்கு மதம் மாறிய ஆயிரக்கணக்கானோர் இது போன்ற சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது அதனை பகிரங்கமாக எதிர்த்து நடவடிக்கை களில் ஈடுபட்டனர்.
குறுகிய நோக்கம் கொண்ட பெரும்பான்மை மொழிச்சட்ட மூலமாக ஒரு பாடத்தை படித்திருக்க வேண்டிய இலங்கையராகிய நாம், ஒத்த உந்துதல்களால் சமய ரீதியான ஒரு பிளவை ஏற்படுத்த முனைவது நன்றன்று. குற்ற வியல், மான நஷ்ட சட்டத்தை இல்லா தொழிப்பதற்கான நடவடிக்கைகள் செயற்படுத்தப் பட்டது எமக்கு ஊக்கமளிக்கின்றது. இவ்விடயத்தில், கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் அடிப்படை உரிமையென ஏற்றுக் கொள்ளப்பட்டதும் மற்றும் "தர அமுல்படுத்தல்" சாதனமாக ஊடக முறைப்பாட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட்டதும் எமக்கு ஊக்கம் அளிக்கின்றது. இவ்வாறான தனி மனித சுதந்திரம் பற்றிய எமது நாட்டின் முற்போக்கான ஏற்பாடுகளைப் போன்று "நெறிமுறையற்றவை" எனக் கருதப்படும் மத மாற்றங்களைப் பற்றிய முறைப்பாடுகளை விசாரிக்கவும், மதங்களுக்கிடை யேயான ஒரு சபை நியமிக்கப்பட வேண்டுமென நாம் சிபாரிசு செய்கிறோம். மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சபையின் கண்டிப்பான வழிகாட்டல்கள், இவ்வாறான செயல்களுக்கு சிறந்த ஒரு மாற்று வழியாக இருக்கும். மதங்களுக்கிடையேயான பரஸ்பர நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கு இவ்வாறான சபை முன் முயற்சிகளையும் எடுக்கலாம். எம்மைப் பொறுத்தவரை நாம் இவ்வாறான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பினை வழங்குவோம். தற்போது எழுந்துள்ள மதங்களுக்கிடையேயான குரோத உணர்வை வளர்க்கும் சூழ்நிலையை தடுப்பதற்கு சட்டங்களை விட இவ்வாறான நடவடிக்கைகள் ஒரு மேலான தீர்வாக அமையும் என நாம் ...கின்றோம்.

...ிக்க திருச்சபையானது, மத ...்றி இந்நாட்டில் சகல மக்களுக்கும் சேவை செய்கின்றதென்பதையும், மற்ற மதங்களைப் போல் எமது படிப்பினைகளையும் சகல மக்களுக்கும் தெரியப்படுத்த விரும்பு கின்றோம். நாம் எவரையும் எமது சபைக்குச் சேருமாறு கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் எந்தவொரு தனி மனிதரும் தாம் விரும்பும் மதத்தில் சேருவதற்கும், பின்பற்றுவதற்குமான உரிமையை கொண்டுள்ளனர் என்பதை வலியுறுத்துகின்றோம். சொல்லப்போனால் உலகிலுள்ள சகல மதங்களும் தம் வசம் மதம் மாறியோரைக் கொண்டுள்ளன. அன்றேல் அவை வளர்ச்சி பெற்றிருக்க முடியாது. இந்நாட்டி லிருக்கும் சகல முக்கிய மதங்களும் வேறு நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டு அந்நாட்டு மக்களால் தழுவப்பட்டவையே. இன்றும் கீழைத்தேச மதங்களாகிய பௌத்தம், இந்துமதம், இஸ்லாம் ஆகியவை அவற்றைப் பரப்பும் நடவடிக்கை களினாலேயே இன்று மேலைத்தேசத்திலிருந்து பலரும் அவற்றை தழுவுகின்றனர்.

எமது மக்கள், தற்போதைய மத குரோதங் களைத் தாண்டி, மற்றைய மதத்தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து, தற்போதைய ஆதங்கங் களை மனதிற்கொண்டு ஏற்கனவே பிளவுபட்டி ருக்கும் எமது சமூகத்தில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தக்கூடியதும், எதிர்விளைவு களைக் கொண்டுவரக்கூடியதுமான சட்டத்தை இயற்றுவ தற்குப் பதிலாக, அர்த்த பூர்வமான நடவடிக்கை களில் ஈடுபடக்கூடிய மதங்களுக்கிடையேயான ஒரு சபையை உருவாக்குவதற்கான நெகிழ்வுத் தன்மையைக் கொண்டுள்ளனர் என கத்தோலிக்க ஆயர் பேரவை நம்புகின்றது.

எமது நாட்டினதும் அதன் மக்களினதும் வேறுபாடுகளுக்கு மதிப்புக்கொடுத்து இன்னும் முக்கியமாக அதன் பல்லின, பல்மத, பன்மொழித் தன்மைக்கு மதிப்புக்கொடுத்து ஒரே நாட்டின் மக்களென்ற ரீதியில் எமது சமுதாயத்தினை ஒன்றுபடுத்தி அதற்குள் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை களில் நாம் ஈடுபட வேண்டும்.

### அருட்தந்தை ரஞ்சித் டிமேல் அவர்கள் வழங்கிய செய்தியின் தொடர்ச்சி

என்றாலும் எம்மால் கூறக்கூடியது ஒன்றுதான். கிறிஸ்தவர்களாகிய நாம் எம்மை நிந்தனை செய்த அனைவருக்கும் மன்னிப்பு வழங்குகின்றோம். ஆயினும் நாட்டில் நீதி என்று என்றுள்ளது சிறுபான்மையினரின் உரிமைகள், ஆன்மீக அனுஷ்டானங்களைப் பாதுகாத்தல் என்பன அவற்றுள் அடங்கும். அவற்றைச் செய்துதர வேண்டியது ஆட்சியிலிருக்கும் ஜனநாயக அரசின் பொறுப்பாகும். ஆன்மீக ஒற்றுமை மற்றும் சமாதானத்தை பெற்றுத் தருவது அதன் கடமையாகும்.என்றாலும் அவ்வாறானதொரு நிலைமையை இல்லா தொழிக்கும் நேரத்தில் அரசு குறுகிய அரசியல் லாபத்தைப் பாராமல் அவற்றுக்கு எதிராக செயல்படாவிடில் நாட்டின் எதிர்காலம் பிரச்சினைக்குரியதாகிவிடும். எனவே எமது நாட்டின் தலைவர்களை நாம் கேட்டுக்கொள்வது மத மற்றும் இன ரீதியாக மக்களுக்கு இம்சை தராமல் அவர்களது உரிமைகளை பாதுகாத்துத் தரவேண்டும் என்பதேயாகும்.

SOLO-U
සෙනෙහස සහ අවබෝධාත්මක සංගමය
சிநேகம் புரிந்துணர்வுக்கான அமைப்பு
SOCIETY FOR LOVE AND UNDERSTANDING





# சேமிப்பு மாதமாக ஒக்டோபர் மக்கள் வங்கியால் பிரகடனம்

மக்கள் வங்கி ஒக்டோபர் மாதத்தை 'சேமிப்பு மாதமாகப்' பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த மாதம் முழுவதும் சேமிப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நாடுமுழுவதும் புதிய தொடர் நடவடிக்கை ஒன்றை அது ஆரம்பித்துள்ளது.

இதற்கென நாடுமுழுவதும் ஆயிரம் மாணவர்கள், வங்கி நடைமுறைகள் தொடர்பாகப் பயிற்சியளிக்கப்பட்டு பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள், வீடுவீடாகச் சென்று சேமிப்புப் பற்றிய முக்கியத்துவத்தை விளக்குவர். அத்தோடு வங்கி நடைமுறைகளையும் மேற்கொள்வர்.

புதிதாகக் கணக்கைத் தொடங்குதல், வைப்பிலிடுதல் உள்ளிட்ட அனைத்து வங்கிச் சேவைகளும் இதில் அடங்கும். அந்த இடத்திலேயே பற்றுச்சீட்டும் வழங்கப்படும். அந்தந்த பிரதேச மாணவர்கள் அந்தந்தப் பிரதேசத்தில் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

இந்த மாணவர்களை அந்தந்தப் பிராந்திய மக்கள்வங்கி முகாமையாளர்களே தெரிவுசெய்துள்ளனர். அவர்களே இந்த மாணவர்களை வழிநடத்துவர். இந்த விழிப்புணர்வு நடவடிக்கை இம்மாதம் முழுவதும் இடம்பெறும்.

இதுபற்றி மக்கள் வங்கியின் தலைவர் பி. அமரசிங்க கூறியதாவது:-

ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டும் என்றால் சேமிப்பு மிகவும் முக்கியம். இலங்கைச் சனத்தொகையில் 14 வீதமானோரே சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். இந்தநிலை மாறவேண்டும். சேமிப்பின் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களைச் சேமிப்புப் பழக்கத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யவேண்டும். அப்போதுதான் எமது நாடு அபிவிருத்தியில் தன் நிறைவு அடையும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே நாம் இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

இந்த ஒருமாத விசேட நடவடிக்கையின்போது மாத்திரம் 300 கோடி ரூபாவை வைப்புத் தொகையாகப் பெறுவதற்கு நாம் குறிவைத்துள்ளோம்.

இந்த நடவடிக்கையின்போது புதிய கணக்குக்குள் எவையும் அறிமுகப்படுத்தப்படமாட்டாது. மாறாக, எம்மிடமுள்ள பத்து பல்வேறுபட்ட கணக்குகள் மேலும் முன்னேற்றப்படும்.- என்றார்.

வங்கி பற்றியும், வங்கியின் பல்வேறுபட்ட செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிட்ட அமரசிங்க, மக்கள் வங்கி 1961 இல் ஆரம்பிக்கப்பட்டது, அன்றுமுதல் இன்றுவரை இந்நாட்டு மக்களுக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் மக்கள் வங்கி பெரும் பங்காற்றி வருகின்றது - என பெருமிதத்துடன் கூறினார்.




# பனைவளம் கொழித்தால் மனைவளம் சிறக்கும்...!



*செப்பஞ் செய்யாழ்ப் பாணமுடன்*
*தென்றமிழ்நாட்டின்*
*வெப்பஞ் செய்யும் ஒப்புநிலத்து*
*மேவிடுவார்*
*துப்பிற் கென்றே தோன்றிய அன்னே!*
*சுவையீய*
*அப்புத் தேடிப் பாதலஞ் சேறல்*
*அளியன்றே*
*- பனைநூறு*

தமிழ்ப் பெருங்குடிகளின் வாழ்விடங்களை அடையாளங் காட்டி அலங்கரித்து நிற்பது பனைமரம். தமிழ்நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும், பூநகரி, தீவு, வன்னி, மன்னார்ப் பகுதிகளிலும் முற்காலத்தில் பனை மரங்களை பனங்கூடலாக, பனந்தோப்புகளாக, பனங்காடுகளாக, வடலிகளாக, நாம் கண்டுகளித்து பேருவகை அடைந்தோம். இன்று அந்த நிலை இல்லை. மாறாகப் பனங்கூடல்கள் அற்ற காணிகளாக, வெற்றுக்காணிகளாக இருப்பதைக் காணக் கவலைதருகிறது. பனை, தென்னைகள் எமது முன்னோர் விட்டுச் சென்ற முதுசம். இந்த மூலதனம் போர் காரணமாகக் கடந்த மூன்று தசாப்த காலமாக வெட்டித்தறிக்கப்பட்டு பதுங்கு குழிகளிலும் காவற் கட்டுகளிலும் அடுக்கப்பட்டுள்ளன. மேலும் எறிகணை வீச்சாலும் குண்டுத்தாக்குதலாலும் வேரோடு சாயந்தும் தலை கொய்யப்பட்டும் மிளிரும் பனை தென்னைகள் தான் எத்தனை எத்தனை! நாங்களும் எமது தேவைக் காக தறித்த பனைகள் ஏராளம் ஏராளம்! நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும். மாரி காலம் நெருங்குகிறது. பனை விதைகளை ஒன்று சேர்போம். வேலிகளிலும் வெற்றுக்காணிகளிலும் தரவைகளிலும் நமது தேசத்தின் நலன் கருதி பனை விதைகளை நாட்டுவோம். நமது எதிர்காலச் சந்ததிக்காக இந்தப் பசுமைப் புரட்சியைச் செய்வோமாக! பருவமழை பெய்ய உயர்ந்த பனை மரங்க ளும் ஓர் காரணம் என்பதை மனதில் இருத்து வோம்.

பனை மரததைக் கற்பகதரு, தாகம், பஞ்சம் தீர்க்கும் அருமருந்து என்று நம் முன்னோர் கருதினர். பனை மரங்கள் செம்மண், மணற்பிரதேசம், உவர்நிலம், காட்டு நிலங்களிலும் செழித்து வளர்ந்தன. பனை ஒரு வரண்ட பிரதேசப் பயிர் ஆகும். பனையை வான்பயிர் என்பர். எமது முன்னோரின் பசிப் பிணியைப் போக்கியது பனை. பஞ்சகாலங்களில் தமிழ் மக்களுக்கு உணவு தந்து, உயிர் காத்து வந்தது பனை. வானுயர வளர்ந்த பனைகள் காற்று மண்டலம் மாசடையாமல் இருக்கப் பெரிதும் உதவுகிறது.

## பனம் பழம்

பனம்பழம் பழுத்து வீழுந்ததும் மனிதனுக்கும் அனைத்திற்கும் சுவை மிக்க உணவு ஆகிறது. அதன் விதை மழை பெய்ததும் முளைத்து, வடலி ஆகி பனை மரமாக ஓங்கி வளர்ந்து பயன்தர ஐம்பது வருடம் வரை செல்லும். இளம் நுங்கு கற்கண்டு போல இனிக்கும. இளம்நுங்கை சீவி பசுவின் உணவாக்கலாம். முற்றிய நுங்கு சுவை ஆகாது. பனங்காய் முற்றிப் பனம்பழம் ஆகும். பனம் பழத்தின் களியைக் கறந்து பன்ங்காய்ப் பணியாரம் செய்தால் உண்ண மிகுந்த சுவை தரும். தீயில் சுட்ட பனம்பழம் உண்பதும் ஒரு வகைச் சுவையாகும். பனங்களியில் ஜாம் தயாரிக்க முடியும். பனங்களியைக் கறந்து உயர்ந்த அரணில் பனம் பாய் விரித்து, நாளாந்தம் கறக்கும் களியைப் பரவி ஊற்றி வெய்யியில் பல நாள் உலர விட்டால் தடித்த பனாட்டாகும். இந்தப் பனாட்டை வெட்டி மடித்து சேமித்து வைத்து மாரிகால உணவாகக் கொளவர். பாணிப் பனாட்டை உண்ண உண்ண சுவை மிகும்.

## பனங் கிழங்கு

பனம் பாத்தியை மூன்று அடி உயரத்திற்கு மேடுபடுத்தி அந்த மேட்டிலே மாரி தொடங்க பன விதைகளை அடுக்கி, விதைகளுக்கு மேல் மண் இட்டு ஆறு மாதமளவில் பனங்கிழங்கு முற்றியதும் பனம் பாத்தியைப் பிரித்து கிழங்கை அகழ்ந்து எடுப்பர். பனங்கிழங்கின் விதையைப் பிளந்து பிரித்து சுவையான பூரானை உண்பர். அவித்த பனங்கிழங்கைப் பிரித்து தும்புவார்ந்து தேங்காயச சொட்டுடன் உண்ணலாம். மேலும் அவித்த பனங்கிழங்கைப் பிரித்து வெய்யிலில் நன்றாக உலர வைத்தால் புழுக்கொடியலாகும். பச்சைக் கிழங்கைப் பிரித்து வெய்யிலில் இட்டால் ஒடியலாகும். நன்றாக உலர்ந்த ஒடியலை மாவாக்கி பிட்டாகவும் கூழாகவும் அருந்த முடியும். ஆடிப் பிறப்புக்கு தமிழ் இல்லங்கள் தோறும் பனங்கட்டிக் கூழ் காய்ச்சுவது மரபு.

*"ஆடிப்பிறப்புக்கு*
*நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே*
*கூடிப் பனங்கட்டி*
*கூழும் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம்*
*தோழர்களே"*

- நவாலியூர் சோமந்தரப் புலவர்.

எங்கள் தங்கத் தாத்தாவின் கவிதையிலே பனங்கட்டிக் கூழின் சுவை நிரம்பி வழிகிறது.



## பனைமரம்

நமது முன்னோர் செய்த தவப்பயனாக தமிழர் வாழும் இடங்களில் கற்பகதருவான பனை வளையாமல் கோணாமல் வான்நோக்கி உயர்ந்து வளரும். இது நீர் வளம் குன்றிய நிலப்பரப்பிலும் வாடாமல், கருகாமல் செழித்து வளர்கிறது. பனை மரங்களில் ஆண்பனை, பெண்பனை வயிரச் சோத்திப் பனைகள் உண்டு. பனை மரத்தை கறுப்பி என்று தமிழ் கூறும் நல்லுலகம் செல்லமாக அழைக்கும். பனை மரத்தை தறித்தலாகாது. பனை எமது தேசியச் சொத்து. இருந்த போதும் எம்மவர் தமது அவசியத் தேவைக்குப் பனையைத் தறித்து இரு கூறாகப்பிளந்து வாச்சியால் சீவி, இணைத்து அச்சுலக்கை, நெஞ்புகள் இறுக்கி, பனந் துலாவாக கிணற்று நீர் அள்ளப் பயன்படுத்துவர். வயிரப் பனைகளைக் கண்டறிந்து தறித்துப் பிளந்து சீவி வீடு கட்ட வளையாகவும் பரவு மரமாகவும் சலாகை ஆகவும் மர ஆணியாகவும் மொத்தயன்னல் கம்பியாக உருட்டியும், கம்புகளாகவும் பனை பயன்படுகிறது. பனை மாட்டு வண்டில் துலாவாகவும் நுகமாகவும் கிட்டியாகவும், வண்டில் கூடாரமாகவும் உழவு கலப்பையாகவும் சங்கடப் படலையாகவும் எழுத்தாணியாகவும் நவீன அலங்காரப் பொருள்களாகவும் அட்டாளை அல்லது கோர்க்காலியாகவும் கொத்தாகவும் தோட்ட நீர்ப் பீலியாகவும் பனை பல்வேறு வகைகளில் மனிதப் பயன்பாடகியது. இன்றும் பனை உயர்ந்த இராஜகோபுர கட்டுமான வேலைகளுக்கு முழுப்பனையாக அடித்தளங்களில் நாட்டுவர்.

## பனை ஓலை

பனங்காட்டு நரி சலசலப்பிற்கு அஞ்சாது, என்பர். காற்றுக்கடுமையாக வீசும் போது பனங்கூடல்களில் பனை ஓலைகளின் சலசலப்பு மிகுதியாக இருக்கும். 'காவோலை வீழ குருத்தோலை சிரிக்கும்' என்பது முதுமொழி. அண்மைக்காலங்களில் முதியவர்களைப் பேணி மதியாத சமூகம் ஒன்று உருவாவதைக் காண வேதனை தருகிறது. பனங்குருத்து பனை வட்டில் இருக்கும். தறித்த பனைகளில் இருந்து இவற்றைப் பிரித்து எடுத்து உண்ணச் சுவை தரும். குருத தோலை சார்வு எனப்படும். சார்வை வெட்டி விரித்து நிழலில் சில நாள்களுக்கு உலர விட்டு, வார்ந்து, ஈர்க்கு நீக்கி சட்டம் சட்டமாக நறுக்கி ஒன்று சேர்த்துக் கட்டினால் ஏட்டுச் சுவடி ஆகும். இந்த ஏட்டுச் சுவடிகளில் எழுத்தாணியால் எழுதி நூலாக எமது முன்னோர் கல்வி கற் றனர். இன்று கூட மங்களமாக, சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்ய பனை ஓலை தானே பயன்படுகிறது. சேர, சோழ பாண்டியர்கள் கூட தம்மிடையே செய்திப் பரிமாறலுக்குப் பனை ஓலையையே பயன்படுத்தினர். இதை ஓலை அனுப்புதல் என்பர்.

மேலும் பதப்படுத்திய சார்வோலைகளை பெட்டி, அடுக்குப்பெட்டி, கடகம், படுக்கைப் பாய், பெரும்பாய், களப் பாய் (சூடடிக்க), நெடுங்கூடைகள் நெல் சேமிக்க (கொள்கலனாக), நீத்துப்பெட்டி ஆக வீபூதிக்குட்டானாக, பனங்கட்டிக் குட்டானாக, விசிறி, சட்டுவம் (உண்கலம்), பிளா கள்ளு, கஞ்சி அருந்த, கோலிய பட்டை (நீர் மொள்ள), பாரிய ஐந்து கோணப் பட்டை நீர் இறைக்க, சிறுவர்களுக்கான ஊது குழல், கொட்டைப் பெட்டி உமல், மீன் பறி, பனை ஓலைத் தொப்பி போன்றவைகள் செய்யு பனை ஓலைச் சார்வு பயன்படும். முற்றிய பச்சை ஓலைகள் ஈர்க்கு நீக்கி கிழித்து பால் தரும் பசுவிற்குத் தீனியாக இடுவர். பனை ஈர்க்கை கூரை வேயப் பயன்படுத்துவர். பனை ஈர்க்கினால் சுளகு, குல்லம், முளம், திரு கணை, உறி போன்றவைகள் புனைவர்.

பனை ஓலையை வெட்டி காலால் மிதித்துப் பதப்படுத்தி கரம் போட்டு அமர விட்டு சில வாரங்களுக்குப் பின் கூரை வேயவும் வேலியடைக்கவும் உபயோகிப்பர். பனை ஓலையால் வேய்ந்த கூரையின் கீழ் படுத்து உறங்குவதே ஓர் இன்பம். பனை ஓலைக் கூரை உக்கியதும் அந்த உக்கிய ஓலையை நெல் வயல்களுக்கு உரமாகப் புதைப்பர். வேலி அடைத்த பனை ஓலையையும் இவ்வாறே பசளை ஆக்குவர். பசளைக்காகப் புதைத்த பனை ஓலை நெல் வயலில் தேங்கி நிற்கும் நீரை நிலத்தின் கீழ் கசிய விடாது தாங்கும் படையாகவும் பயன்படுவ தோடு, புதைத்த பனை ஓலைப்படை வேண்டாத களைகளை வளர விடாது தடுக்கும் தன்மை வாய்ந்தது. காவோலைகளை மழையில் நனையாமல் குடைபோல எம்மவர் பிடித்துச் செல்வர்.

பனைமட்டையை அழகாக வேலி அடைக்கவும், நார் உரித்து கயிறு போலப் பாவிக்கவும் பயன்படுத்துவர் நார்க் கடகம் இழைக்கவும் வேலிக்கு வரிச்சுக்கட்டவும் கைவினை அலங்காரப் பொருள்க்ள் உற்பத்தி செய்யவும் பனை மட்டை பெரிதும் பயன்படுகிறது.

## எரிபொருள்

பனஞ்சிராம்பு, ஊம்ல், கருக்குமட்டை, கொக்காரை, ஆண்பனைப் பாளை, பன்னாடை போன்ற பனையின் அனைத்துப் பொருள்களும் நல்ல எரிபொருளாகும்.

இளம் பனம் பாளையைச் சீவினால் கள்ளுச் சுரக்கும். சுரக்கும் கள்ளைச் சேகரிக்க முட்டியைக் கட்டிவிடுவர். புளித்த கள்ளு வெறிக்கும். கள்ளைக் கருப்பணியாக வெறிக்காத பானம் ஆக்க முடியும். பனங்கள்ளைக் காய்ச்சி பனங்கட்டி, பனஞ்சீனி, கல்லக்காரம் போன்ற சுவைமிகு உப உணவுக் பொருள்களைத் தயாரிக்க முடியும். வடமராட்சி திக்கத்தில் பனங்கள்ளிலிருந்து பனஞ்சாராயம் வடிக்கப்படுகிறது. பனங்கள்ளைப் போத்தலில் அடைத்து வருவாயைத் தேடமுடியும்.

## பனை அபிவிருத்தி

தமிழ் நாட்டில் பனை வள அபிவிருத்திக்காக கடந்த பல தசாப்த காலமாக அரச ஆதரவுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு. பனை பயிரிடுதல், பனை உணவு தயாரித்தல் அலங்காரப் பொருள்கள் உற்பத்தி போன்றவைகள் குடிசைக் கைத்தொழிலாக பெரு வளர்ச்சி கண்டு மக்களுக்குப் பெரு வருவாயைத் தருகிறது. ஈழத் திருநாட்டிலும் பனை அபிவிருத்தி சபை அரச ஆதரவுடன் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்ட போதும் போர் காரணமாக பெருவளர்ச்சி பெற முடியவில்லை. மறைந்த சிவதரும வள்ளல் மில்க்வைற் அதிபர் கனகராசா அவர்கள் கடந்த காலங்களில் பனை விதைகளை ஒன்று சேர்த்து தனது வாகனத்தில் ஏற்றி மாரி காலத்தில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் புதைத்ததை தமிழ்ச் சமுதாயம் நினைவு கூர வேண்டும். இந்தப் பணி மாரிகாலத்தின் ஆரம்பத்தில் வருடா வருடம் இடம்பெறுவது அவசியம். ஆகவே, பனை பயிரிடுதல் சம்பந்தமான போதனை, சாதனை ஆக மாற வேண்டும். பத்திரிகைகள் பாடசாலைகள் அனைத்தும் ஆதரவு நல்குதல் நல்ல பயனைத் தரும். நல்லூர் பொன்னம்பல முதலியாரின் 'பனைநூறு' நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் 'தால விலாசம்' போன்ற நூல்கள் மறு பிரசுரம் செய்யப்பட்டு மலிவு விலையில் வெளிவர வேண்டும். இந்தப் பணிகள் புரட்டாதி மாதந்தோறும் வருடா வருடம் பனம்பழக் காலத்தில் ஆரம் பமாக வேண்டும். ஆவன செய்வோமாக!



— பொ.சிவப்பிரகாசம்

# விழிப்பின் பதிவுகள்

உதயன் TV

# மலையக தமிழர்கள் சபிக்கப்பட்ட சமூகமா?

மலையகத் தமிழர்கள் சபிக்கப்பட்ட சமூகமா என்ற கேள்வி பெரும்பாலானவர்களுக்கு நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. பொதுவாக சகல இனங்களும் தமது அபிவிருத்தி, சுதந்திரம், உரிமைகள் என அடித்துப் பிடித்து அடைந்து கொண்டிருக்கின்ற வேளையில் மலையக தமிழ் மக்கள் மட்டும் பிரித்தானியர் காலத்தில் அடிமைகள் போல வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட அதே சூழலில் இன்றும் எவ்வித அபிவிருத்தியும், சுதந்திரமும், உரிமைகளும் அற்ற சமூகமாக வாழ்கின்றனர். சுமார் 15 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குப் பலத்தினைக் கொண்ட இந்த மலையக தமிழ் மக்களது நிலைக்கு யார் காரணம்?

இந்த கேள்வி பெரிதாக கல்விமான்களால் ஆராயப்பட வேண்டிய ஒன்றல்ல. இந்த கேள்விக்கான விடை அதே சமூகத்தின் தொழிற்சங்க அரசியல் தலைமைகள்தான் என்பதை சகலரும் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள்.

வடகிழக்கு ஆயுத போராட்டமானது அச்சமூகத்தின் கடந்த கால அரசியல் தலைமைகள் செய்த தான்தோன்றித்தனம் சுயநலம் அதிகார போட்டி மேலும் துரோகத்தினால் ஏற்பட்டது. ஜி.ஜி. பொன்னம்பலம் என்றால் என்ன, அமிர்தலிங்கம் என்றால் என்ன இவர்கள் அனைவருமே இந்த மாபெரும் தவறினை இழைத்திருக்கிறார்கள். இவர்களைப் போன்ற தமிழ், தலைவர்களது செயற்பாடுகள் இலங்கை



சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே காணப்பட்டன என்றால் அது தவறில்லை.

இந்தியா சுதந்திரமடைந்த போது இந்திய அரசியல் தலைவர்களுடன் மிக நெருக்கமாகவும், சுதந்திர போராட்டத்தின் பங்காளியாகவும் இருந்த முகமது அலி ஜின்னா இறுதி நேரத்தில் முஸ்லிம் மக்களுக்காக பாகிஸ்தானை பிரித்து கேட்டு அதில் வெற்றியும் பெற்றார். இன்று வரை அந்த சாணக்கியம், தமது சமூகத்தின் மீதான தூரதிருஷ்டியான அக்கறை முஸ்லிம் சமூகத்தினால் பாராட்டப்பட்டு வருகிறது. ஏன் இலங்கையில் கூட முஸ்லிம் சமூகமானது தமிழர் போராட்டம் இன்னும் தொடருகின்ற சூழலில், அரசியல் தீர்வு கண்ணுக்கு எட்டாத சூழலில் இடைக்கால அல்லது இறுதி தீர்வுக்கான எந்தவித அறிகுறியும் தென்படாத சூழலில் கூட தென்கிழக்கு அலகு, நிலத் தொடர்பற்ற முஸ்லிம்களின் அலகு, தனியான பிரதேச அலகு என்று வலியுறுத்தி அச்சமூகத்தின் அரசியல் தலைவர்கள் கொடி பிடிக்கின்றனர். மக்கள் மீதான அக்கறையை காட்டுகிறது.

ஆனால் இந்த வடக்கு தமிழ் அரசியல் தலைவர்கள் பிரித்தானியர் கொடுக்க தயாராக இருந்தும் வாங்காது இருந்து ராஜ விசுவாசத்தை காட்டிவிட்டனர். விளைவு சுமார் ஒரு இலட்சம் வரையான தமிழர்களின் மரணம். எனினும் வடகிழக்கு ஆயுதப்போராட்டமானது இந்த துரோகத்தனமான அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தமிழ் மக்களது உரிமைகளை அலட்சியப்படுத்தி - தமது சுயநலத்திற்காகவும், பதவி பட்டங்களுக்காகவும் செயற்பட்டவர்களுக்கு எதிராக துப்பாக்கிகள் திரும்பின. இன்று நிலமை என்ன?

பலமான ஒரு ஆயுத, அரசியல் சக்தியாக விடுதலைப்புலிகள் இருக்கின்றனர். அவர்களை கடந்தகால அரசியல் தலைவர்கள் போல விலைக்கு வாங்க முடியாதுள்ளது. தமிழ் மக்களது உரிமைகள், சுதந்திரம் தொடர்பில் அவர்களது நிலைப்பாடு முழு உலகத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நீண்ட வரலாற்று உண்மை இன்றும் மலையகத்தை தொடவில்லை. எப்படி வடகிழக்கு அரசியல் தலைமைகள் செயற்பட்டனவோ அதைவிட மோசமாக இந்த மலையக அரசியல் தலைமைகள் செயற்பட்டு வருகின்றன.

**- என். ஜீவேந்திரன்**

கடந்த காலங்களில் 'கிங்மேக்காஸ்' என வர்ணிக்கப்பட்ட சௌமிய மூர்த்தி தொண்டமான் தமது சமூகத்துக்கு செய்தது என்ன, அதேபோல் அவரது சமகால மலையக அரசியல்வாதிகள் செய்தது என்ன, இந்த மலையக அரசியல் தலைமைகள் பல தசாப்த காலங்கள் தமது சமூகத்தை தமது பிடியில் வைத்திருந்து வாக்கு அடிமைகளாக நடத்தி அதன் மூலம் அரசாங்கத்துடன் பேரம்பேசி தனது பணபலத்தையும், பதவிபட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். மக்களை அதே அடிமை வாழ்க்கை நிலையில் தமது தொழிற்சங்கத்திற்கு சந்தாப்பணம் வழங்கும் அடிமைகளாக வைத்திருந்ததில் வெற்றி கண்டனர். இவ்வளவு நடந்த பின்னும் அந்த மலையக சமூகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆறுமுகம் தொண்டமான் தனது பாட்டன் எதனைச் செய்தாரோ அதனையே செய்கிறார். தேர்தலின் போது தமது மக்களது உரிமைகளை முன்வைக்க வேண்டியவர்கள் கோடிகளை முன்வைத்ததாக ஊடகங்கள் புட்டுப்புட்டு வைக்கின்றன.

இவ்வளவு இருந்தும் அந்த மலையக தமிழ் சமுதாயத்திலிருந்து எழுந்த பிரதிபலிப்புக்கள் என்ன? தமது உரிமைகளுக்காக மலையகத்தமிழர்கள் வெளிப்படுத்திய உணர்வுகள் என்ன? போராட்டங்கள் என்ன? மாற்று அரசியல் கட்சிகளது போராட்டங்கள் என்ன?

எதுவுமில்லை. வழமைபோல ஒரு காய்ச்சல்காரனின் அனுங்கிய பலவீனமான முனகல் மட்டுமே. எனவே சுயநல அரசியல் தலைமைகள் தூர எறியப்படும் நாளே உண்மையில் மலையகத்தமிழரின் சுதந்திர தினமாகும்.

# சர்வதேச சமாதான தினம்

அன்னையர்தினம், தந்தையர்தினம், சிறுவர்தினம் என்று மட்டுமல்லாமல் உலக எய்ட்ஸ் தினம், வறுமையொழிப்பு தினம் என பல விதமான விடயங்களை நினைவு கூரும் தினங்கள் உலகெங்கிலும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இவற்றுள் சர்வதேச சமாதான தினமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுவதோடு நம் நாடாகிய இலங்கை முழுவதும் மக்கள் இரங்கி வேண்டுவதும் அந்த சமாதானத்தையேயாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 1981ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு தீர்வையின் காரணமாக நிறுவப்பட்ட சர்வதேச சமாதான தினமானது 1982 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 திகதியன்றே முதன்முறையாக கொண்டாடப்பட்டது. உலகினில் சமாதானமும் அமைதியும் நிலைவேண்டும் எனும் நோக்கோடு அனுஷ்டிக்கப்படுவதற்கென உருவாக்கப்பட்ட இந்த சர்வதேச சமாதான தினமானது இலங்கையில் எவ்வாறு பொருந்துகின்றது அல்லது பொருத்தப்பட வேண்டும் என்பது பற்றி சற்று ஆராய்வது அவசியமானதொன்றாகும். ஏறத்தாழ 50 வருடங்களுக்கு மேற்பட்ட இனப்பிரச்சினை காரணமாகவும் இரு தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட யுத்தத்தினாலும் சீாகுலைந்துள்ள எமது நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி என்பன பல நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைகளுக்கான சிறந்த நிரந்தரமான தீர்வாக சமாதானம் காணப்படுகின்றமை யாவரும் அறிந்த ஒன்றே. உலக சமாதான தினத்தன்று மட்டுமன்றி சமாதானத்தையும் இன ஐக்கியத்தையும் உருவாக்கும் செயற்பாடுகளில் பல நிறுவனங்களும் அமைப்புகளும் தொடர்ந்தேச்சையாக ஈடுபட்டுவருகின்றன. சமாதானக்கருத்துகளை பரப்புகின்ற காண்பியற்கலைக்காட்சிகள், ஓவியப்போட்டிகள், பாசறைகள், கருத்தரங்குகள் என பல செயற்திட்டங்கள் இடம்பெறுவதை எம்மால் மறுக்கமுடியாது. இருந்தபோதும் இச்செயற்திட்டங்களின் மூலம் வெளிக் கொண்டுவரப்படும் செய்திகள் அனைத்து மட்டங்களையும், பாதிப்புக்குட்பட்ட மக்களையும் சென்றடைகின்றனவா என்பது எப்போதும் ஒரு கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. அடிமட்டங்களில் வாழ்பவர்கள், வறுமையில் வாழுபவர்கள் என அனைவரையும் அமைதியை உருவாக்கும், அமைதியை காக்கும் செய்திகள் சென்றடைய, வேண்டுமாக இருந்தால் அத்துடன் முக்கியமான இன்னும் ஒரு அம்சம் சேர்க்கப்பட வேண்டுமாகும். பெரும்பாலும் அரச சார்பற்ற அல்லது சிவில் சமூக அமைப்புக்களினாலேயே இவ்வகையான சமாதான சார் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதனால் இவற்றில் அரசியலின் பங்கு அல்லது அரசியலின் சேர்க்கை குறைவாகவே காணப்படுகின்றது. இலங்கை நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் அரசியலில் ஓரளவேனும் ஆர்வம் கொண்டவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். யார் ஆட்சிக்கு வந்தால் நல்ல பயன் கிடைக்கும் யார் வந்தால் பயன் பெற முடியாது என்பதற்காகவும் ஒரு சாரார் அரசியலில் ஈடுபாடுகாட்டுவதையும் நாம் காணலாம். சமாதானம் சார் நடவடிக்கைகளில் அரசியலின் கலப்பு அவசியம் என்பதோடு சமாதானத்தின் தேவையை மக்கள் தமது சொந்தத் தேவையாக கருதவேண்டியதன் அவசியமும் தெளிவாகின்றது. அமைதிக்கும் சுபீட்சத்திற்கும் என உருவாக்கப்பட்ட சாவதேச சமாதான தினத்தை வெறுமனே அழுத்தம் குறைந்த அமைதிகாக்கும் செயற்திட்டங்கள் இடம் பெறும் ஒரு தினமாக பார்க்காமல் பல இனங்களையும் மதங்களையும் சேர்ந்த நம் நாட்டவர் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படும் முழுமையான செயற்திட்டங்களைக் கொண்ட ஒரு தினமாக மாற்றவேண்டும். சாவதேச சமாதான தினத்தை இலங்கையைப் பொறுத்தமட்டில் மக்கள் அனைவராலும் பெரிதும் மதிக்கப்படுகின்ற ஆராதிக்கப்படுகின்ற நாளாக மாற்றுவதோடு அத்தினத்தன்று நிலவும் சமாதானமானது அமைதியின் அழகையும் சாந்தியையும் மக்களுக்கு புரியவைக்கும் ஒரு தினமாக உருவாக்கம் பெற வேண்டும். எனவே சமாதர்ன ஐக்கிய செயற்பாடுகளில் போதுமானளவு தரமான சுயலாபமற்ற அரசியல் கலக்கப்படுவதோடு சுயலாபம் இனவாதம் ஆகியவற்றை தவிர்த்த அரசியல்வாதிகளின் ஈடுபாடும் பங்களிப்பும் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க இன்றியமையாதவை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

**- ருவனி ரஜீத்**

# குறைந்து செல்லும் மைற்கற்கள் புலம்பெயரும் மனிதவளம்

ஒரு நாடு அபிவிருத்தியடைய பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப ரீதியாக அது பலமடைய வேண்டும். எனினும் இம்மூன்றினதும் வளர்ச்சிக்கு அடிப்படையாக நாட்டின் கல்வி தங்கியுள்ளது. அந்நாட்டின் கல்வித்துறை வீழ்ச்சியடைகின்ற போது அதன் அனைத்து துறைகளும் வீழ்ச்சியடைகின்றன. கல்வியானது நாட்டின் அனைத்து துறைகளுக்கும் தேவையான மனித வளங்களை உருவாக்குகின்றது. எனவேதான் கல்விமான்கள் ஒரு நாட்டின் பிரதான வளமாகும் அந்தவகையில் இலங்கையைப் பொறுத்த வரையில் கல்விக்கு பிரதான இடம் கொடுக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆரம்ப கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையிலான இலவச கல்வித்திட்டம் மேற்படிப்புக்கான பல்வேறு வசதி வாய்ப்புக்கள், கல்விக்கான சிறந்த சூழல் என்பன இங்கு காணப்படுகின்றன. இதன் மூலம் நாடு ஏராளமான கல்விமான்களையும் துறைசார் நிபுணர்களையும் உருவாக்கியிருக்கிறது. எனினும் இவர்களின் மூலம் எதிர்பார்க்கின்ற சிறந்த விளைவுகள் நாட்டிற்கு கிடைக்கின்றதா என்பதே இன்றெழுந்துள்ள கேள்வியாகும். இவர்களிடமிருந்து முழுமையான விளைவுகளை காண முடியாதிருக்கின்றது. இதற்கு பல காரணிகள் காணப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவது அவசியமான விடயமாகும். இதற்கு பிரதானமாக தொழில் ரீதியான பிரச்சினை மற்றும் நாட்டின் இனப்பிரச்சினை என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

தொழிலை எடுத்து நோக்கும் போது எழுகின்ற முக்கிய பிரச்சினை தான் இவர்களின் தகுதிக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்கள் நாட்டில் காணப்படாமையாகும். அல்லது. அவர்களது தகுதிக்கேற்ற ஊதியம் பெறமுடியாதிருப்பதாகும். இதில், நாட்டின் பொருளாதாரம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவர்களுக்கு அவசியமான தொழில் வாய்ப்புக்களையும் அதற்கான ஊதியத்தையும் கொடுக்கும் அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் இல்லை. அதேநேரம் விஞ்ஞானிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் தமது துறையிலேயே தொழிலில் ஈடுபடுவதற்கும் ஆய்வுகள், மேம்பாட்டு நடவடிக்கைளை மேற்கொள்வதற்கும் உகந்த சூழல் காணப்படாமையும் அத்தோடு அவர்களுக்கு தேவையான வசதி வாய்ப்புக்கள்





வழங்கப்படாமையும் பிரதான காரணங்களாகும். இத்தகைய காரணிகளினால் நாட்டின் பெறுமதிமிக்க கல்வி வளத்தை பெற்ற மனித வளங்கள் வேலை வாய்ப்புகளுக்காகவும் அதேபோல் ஆய்வு நடவடிக்கைகளுக்காகவும் வெளிநாடுகளுச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவ்வாறு வெளிநாடு செல்வதனால் இவர்களினால் நாட்டின் அபிவிருத்திக்கு எத்தகைய பங்களிப்பும் பெறப்படுவதில்லை.

**- ஏ. உசாமா**

இவ்வாறு தொழில் ரீதியாக காணப்படுகின்ற பிரச்சினைகளினால் பட்டப்படிப்பை மேற் கொள்கின்ற மாணவர்கள் கூட தமது படிப்பை இடையில் நிறுத்திக்கொண்டு மேற்கத்தைய நாடுகளுக்கு தொழில்வாய்ப்பை நாடிச் செல்கின்றனர். இது எதிர்காலத்தில் மேலும் பல சிக்கல்களை தோற்றுவிக்கும் என்பது திண்ணமாகும்.

மேலும் நாட்டில் நீண்டகாலமாக நிலவுகின்ற இனப்பிரச்சினையினால் ஏற்பட்டிருக்கின்ற பாதுகாப்பற்ற சூழலின் காரணமாகவும் அநேகமான நாட்டின் கல்விமான்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். கடந்த காலங்களில் நாட்டில் பல புத்திஜீவிகள் இனப்பிரச்சினைக்கு பலியானதோடு பல்வேறு ஆபத்துக்களுக்கும் முகங்கொடுத்துள்ளனர். குறிப்பாக வட கிழக்கில் வாழ்ந்த ஏராளமான கல்விமான்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர். நாட்டின் இனப்பிரச்சினை தொடர்கின்றமையால் அவர்கள் நாட்டிற்கு வர அஞ்சுகின்றனர்.

ஆகவே, இவ்வாறான நிலைகளினால் கல்விமான்களின் பங்களிப்பு நாட்டிற்கு கிடைக்காமல் போகின்றபோது நாட்டில் மேற் கொள்ளப்படுகின்ற கல்வித் திட்டங்களினால் எத்தகைய பலனும் கிடைக்காது போகின்ற நிலை ஏற்படுகின்றது. எனவே இப்பிரச்சினைகளுக்கெல்லாம் பிரதான காரணமான இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படுவதோடு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும் இன்றுள்ள தேவையாகும்.


## இவ்வார விழிப்பில்...

- தீர்வுகள் குறித்து வர்த்தக சமூகம்
- சமாதான தினமும் நிகழ்வுகளும்
- புரிந்துணர்விற்காக பாலர் பாடசாலை
- சமாதான தின கோரிக்கைகள்


விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# அன்புக்குரிய இலங்கைப் பிரஜைகளே,

## நான் எதற்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன்?

## யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவே

### உங்கள் அனைவருக்கும்

வர்க்க வேறுபாடுகளின்றி யுத்தம் புரியும் அனைவரையும் ஒன்றிணைத்தல்

தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் பறங்கி இனத்தவர்களை ஒன்றிணைத்து செயற்படவைக்கும் அரசியல் யாப்பொன்றை உருவாக்குதல்

விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்காக தானிய வங்கிகளை உருவாக்குதல்

நமது இளைஞர் யுவதிகளுக்கு ஏற்ற முறையில் கல்வி முறையை சீர்செய்தல்,

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் நிரந்தர வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ள வழிசெய்தல்

இளைய சமுதாயத்துக்கு பிரகாசமான எதிர்காலமொன்றை அமைத்துக் கொடுப்பதற்கான நல்ல சூழ்நிலை

சீர்குலைந்த சட்டம், ஒழுங்கு என்பவற்றை மறுபடி நல்ல நிலைக்குக் கொண்டு வருதல்

வன்முறை, லஞ்சம், தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி

மத, ஜாதி, இன வேறுபாடுகளுக்கு ஒரு முடிவு

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிரந்தர நிவாரணம்

பொருளாதார முன்னேற்றத்திற்கான செயற்பாடுகள்

சுனாமியால் நலிவுற்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்புதல்

57 வருட சாபத்திலிருந்து மீண்டுவருதல்

சர்வதேச சமூகத்திடம் நமது கட்சிகள் குறித்து நல்ல அபிப்பிராயம் இல்லை. எமது தலைவர்கள் பொய்யர்கள் என்றும் ஏமாற்றுக்காரர்கள் என்றும் நீண்டகாலத் திட்டங்கள் அற்றவர்கள் என்றும், வெளிநாட்டு



### இறையாசீர் கிட்டட்டும்

நான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அல்லது எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்ஹவின் கருவி அல்ல. இதை ஆரம்பத்திலேயே நான் தெளிவுபடுத்திவிட வேண்டும். நான் வாக்குகளைச் சிதறடிக்கச் செய்யவே தேர்தலில் நிற்பதாக அரசியலில் தெளிவான அறிவற்ற சுயமாக சிந்திக்கத் தெரியாதவர்கள் கூறக்கூடும்.

கடந்த ஐந்து வருடங்களாக இலத்திரனியல் ஊடகங்கள் வழியாக பத்திரிகைகள் வாயிலாக தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் மக்களை அறிவுறுத்தி வந்துள்ளேன். பல்வேறு விடயங்கள் குறித்து அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி நெறிப்படுத்தியுள்ளேன்.

கடந்த ஒன்றரை வருடங்களாக வெத ஹன்டா நிகழ்ச்சி மூலம் ஆயர்வேத நல்வாழ்வு முறைகளை மக்களுக்கு கற்பித்து வருகின்றேன்.
வசந்த வாசல் தொலைக்காட்சித் தொடர்மூலம் நான் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு சோர்வினை அகற்றி சொந்தக்காலில் நிற்பதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வருகின்றேன். நல்ல அர்த்தமிக்க விடயங்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல் பற்றி அவர்களுக்குக் கற்பித்து வருகின்றேன். வரவு செலவுகளை எப்படி நிர்வாகம் செய்தல் போன்ற காரியங்களில்

சர்வதேச சமூகத்திடம் நமது கட்சிகள் குறித்து நல்ல அபிப்பிராயம் இல்லை. எமது தலைவர்கள் பொய்யர்கள் என்றும் ஏமாற்றுக்காரர்கள் என்றும் நீண்டகாலத் திட்டங்கள் அற்றவர்கள் என்றும், வெளிநாட்டு நிதியுதவிகளில் நேர்மையற்றவர்கள் என்றும் நிதியுதவிகளை பிழையான தலைமைத்துவத்தின்கீழ் துஷ்பிரயோகம் செய்பவர்கள் என்றும் அவர்கள் அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் அவரின் வாக்குகளை நான் சிதறடிக்கப்போகின்றேன் என்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்ஹவின் ஆதரவாளர்கள் அவரின் வாக்குகளை நான் சிதறடிக்கப்போகின்றேன் என்கிறார்கள். இரு கட்சிகளின் ஆதரவாளர்களும் நான் வாக்குகளை பெறுவேன் என்கிறார்கள். அவர்களின் கூற்றில் உண்மை இருக்கின்றது. அவர்களுக்குச் செல்லவேண்டியவாக்குகளையே நான் பெற்றுக்கொள்ளவிருக்கின்றேன். அவர்களுக்குச் செல்லவேண்டிய வாக்குகளோடு நேரிய வழியில் சிந்திக்கும் ஏனைய மக்களின் வாக்குகளையும் பெற்று சித்தாலேப வைத்தியரான நான் ஜனாதிபதியாவேன்.

சுவரொட்டிகள், விளம்பரப்பதாகைகள், கட்-அவுட்கள், பொலித்தின் அலங்காரங்கள் மற்றும் இசைநிகழ்ச்சிகள் என்பவை எனது பாணி அல்ல. அவ்வகையான பிரச்சாரங்களை நான் அனுமதிப்பதில்லை. அவற்றின் மூலம் மக்களை தொந்தரவு செய்யவோ சுற்றாடலை மாசுபடுத்தவோ எனக்கு விருப்பமில்லை. என்னிடம் வீண் செலவு செய்ய பணம் இல்லை. நான் கடினமான முறையிலே பணம் சம்பாதித்தேன்.

கடந்த 57 வருடங்களாக ஜாதிகளைப் பெருக்குவதிலும், மதப்பிரிவினைகளை உண்டாக்குவதிலும், குலவேற்றுமைகளை உருவாக்குவதிலும், வன்முறைகளைத் தூண்டுவதிலும், உட்கட்சிப்பூசல்களை பெரிதாக்குவதிலுமே எமது கட்சிகள் கவனம் செலுத்தி வந்துள்ளன.



சித்தாலேப ® வைத்தியர்
விக்டர் ஹெட்டிகொட

விடயங்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல் பற்றி அவர்களுக்குக் கற்பித்து வருகின்றேன். வரவு செலவுகளை எப்படி நிர்வாகம் செய்தல் போன்ற காரியங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றேன்.

சித்தாலேப மற்றும் ஆயர்வேத இயற்கை மருந்து வகைகளை யாத்திரை ஸ்தலங்களுக்கு 27 வருடங்களாக இலவசமாக விநியோகித்து வருகின்றேன். அதுமட்டுமின்றி மலசலகூடங்கள், குளியலறைகள், யாத்திரிகர் விடுதிகள் போன்றவற்றை கதிர்காம தேவாலயம், சமண தேவாலயம், கெட்டபரு தேவாலயம் மற்றும் சீனிகம தேவாலயம் ஆகிய இடங்களில் நிர்மாணித்திருக்கின்றேன்.

தேவையான இடங்களில் குப்பைத்தொட்டிகளையும் அமைத்திருக்கின்றேன். யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத் திருவிழா நடந்த நாட்களில் தினமும் வருகைதரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு கொத்தமல்லித் தண்ணீர் மற்றும் சித்தாலேப ஆகியன இலசவமாக விநியோகிக்கப்பட்டன. கடந்த ஐந்து வருடங்களில் ஐந்து மில்லியன் ரூபாய்களுக்கும் மேலானதொரு தொகையினை இவற்றுக்காக செலவிட்டிருக்கின்றேன். இவற்றின் மூலம் நான் மஹிந்தவினதோ ரணிலினதோ கருவி அல்ல என்பதை நீங்கள் நன்கு புரிந்திருப்பீர்கள்.

சித்தாலேப வைத்தியர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவார், சமாதானமும் சிறந்த எதிர்காலமும் கொண்டதொரு நாட்டைக் கட்டியெழுப்புவார் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருப்பின் உங்களது பெறுமதிமிக்க வாக்கினை எனக்கு அளியுங்கள்.

S.V.H.

# கட்சியின் பணத்தையும் தங்கத்தையும் திருடி மோசடியில் ஈடுபட்ட சோமவன்ஸவுக்கு மரண தண்டனை விதித்தது ஜே.வி.பி.!



ஜே.வி.பியின் உத்தியோகபூர்வ நிதியையும், அந்த அமைப்பினால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தங்கத்தையும் மோசடி செய்து, தனது குடும்பத்தவர்களின் பெயர்களில் சொத்துக்களை வாங்கினார் என்பதால் ஜே.வி.பியின் அதியுயர் பீடம் சோமவன்ஸ அமரசிங்கவுக்கு மரண தண்டனை விதித்திருந்தது என 'வன்முறைகளற்ற பாதையில் ஜே.வி.பி.' என்ற அமைப்பின் சர்வதேச அமைப்பாளர் டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோ திடுக்கிடும் தகவல்களை இப்போது வெளியிடுகின்றார்.

'உதயனு'க்கு அளித்த விசேட பேட்டி ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவை அவரது றொஸ்மிட் பிளேஸ் இல்லத்தில் இருந்து கடத்துவதற்குத் திட்டமிட்டவரும் இதே சோமவன்ஸதான். மருதானையில் உள்ள வீடு ஒன்றில் கூடி ஐவர் கொண்ட குழுவை அமைத்து 1971 ஏப்ரல் 5ஆம் திகதி சிறிமாவைக் கடத்த அவர் திட்டமிட்டார். ஆனால், அம்முயற்சி முறியடிக்கப்பட்டது. இல்லையேல் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்கவைக் கொலை செய்வதற்கு முன்னர் ஜனாதிபதியின் தாயார் சிறிமாவோவை இவர்கள் கொலை செய்திருப்பார்கள்'' என்றும் டாக்டர் பெர்னாண்டோ பழைய விடயங்களைப் புட்டுப் புட்டு வைக்கிறார்.

''ஜே.வி.பியினரின் மரண தண்டனைக்குப் பயந்து, அன்று ஐக்கிய தேசியக் கட்சியில் அதிகாரமிக்க ஒருவராக இருந்த சிறிசேன கூரேயிடம் தஞ்சம் அடைந்தார் சோமவன்ஸ அமரசிங்க. அவருடைய உதவியின் மூலம் கள்ளத்தோணியில் இந்தியாவுக்குத் தப்பி ஓடினார்.

''அந்தச் சமயத்தில் இந்திய அமைதி காக்கும் படையை இலங்கையில் இருந்து திருப்பி அனுப்பியதற்காக அப்போது இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாஸ மீது கடுப்பாக இருந்தது இந்தியா. அந்தச் சூழ்நிலையை வசமாக - வகையாக - பயன்படுத்திக் கொண்டார் சோமவன்ஸ. இந்தியாவில் 'றோ' இவருக்கு சகல பாதுகாப்பையும் வழங்கியதுடன், லண்டன் செல்லவும் உதவியது.'' - என்றும் டாக்டர் பெர்னாண்டோ சுட்டிக் காட்டினார்.

## ஜே.வி.பிக்கு 115 லட்சம் ரூபா கொடுத்தார் சதாம் ஹுசைன்!

''சோமவன்ஸ அம்ரசிங்க கட்சியின் பணத்தையும் தங்கத்தையும் மோசடி செய்தார் எனக் கூறினீர்கள். அவ்வளவு பணமும் தங்கமும் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?'' - சர்சைக்குரியது என்றாலும் இப்படியும் ஒரு கேள்வியை டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோவிடம் நாம் கேட்டோம். எம்மை அதிர்ச்சியடையச் செய்த ஒரு பதிலை அவர் அள்ளி வீசினார்.

உலகளாவிய ரீதியில் சர்ச்சைக்குரிய மனிதரான சதாம் ஹுசைன் தான் ரோஹண விஜேவீரவுக்கு அதிகளவு பணத்தை அள்ளி வழங்கினார் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவலை அவர் வெளியிட்டார்.

''தலைவர் ரோஹண் விஜேவீரவும், முன்னாள் ஈராக் அதிபர் சதாம் ஹுசைனும் நண்பர்கள். 1989 ஆம் ஆண்டு விஜேவீரவின் பிறந்த நாள் பரிசிலாக 115 லட்சம் ரூபாவை அவர் வழங்கினார். இலங்கையில் இருந்த ஈராக் தூதுவரே இதனை நேரடியாக ரோஹண விஜேவீரவிடம் ஒப்படைத்தார்.

''அந்தப் பணம் முழுவதையும் ரோஹண விஜேவீர கட்சிக்கே அன்பளிப்பாக வழங்கிவிட்டார். அதே வேளை, தலைவர் ரோஹன விஜேவீர தலைமறைவாகி இருந்த வேளையில் பணம் தேவைப்பட்டது. இதனால், வங்கிகளில் கொள்ளையடித்து தங்கத்தைச் சேகரித்தோம். இவ்வாறு திரட்டப்பட்ட தங்கம் வறக்காப்பொல- பசியாலயிலும், களுத்துறையிலும் புதைத்து வைக்கப்பட்டிருந்தது.

''பசியாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட போது, களனி பாலத்தில் வைத்து பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

''களுத்துறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த தங்கத்தை சோமவன்ஸ சிறிது சிறிதாகக் கடத்தி மோசடி செய்ததுடன், தமது சகோதரர் மற்றும் குடும்பத்தவர்களின் பெயர்களில் சொத்துக்களையும் அவர் குவித்து விட்டார். கட்சிக்குச் செய்த துரோகம், நிதி மோசடி என்பனவற்றிற்காக ஜே.வி.பியினால் சோமவன்ஸவுக்கு மரண தண்டனை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.'' - என்றார் டாக்டர் பெர்னணாண்டோ. தான் கூறிய விடயங்கள் அனைத்திற்கும் தன்னிடம் சான்றுகள் உள்ளன என்றும் அவர் அடித்துக் கூறுகின்றார். அதனை எந்தவிதத்திலும் யார் முன்னிலையிலும் வெளிப்படுத்தத் தயார் என்றும் அவர் சவால் விடுக்கிறார்.

### சோமவன்ஸ தலைவரான கதை

''உண்மையான ஜே.வி.பிக்குத் துரோகம் இழைத்தவராகக் கூறப்படும் சோமவன்ஸ அமரசிங்க எப்படிப் பின்னர் கட்சிக்கே தலைவரானார்?'' - என்று டாக்டர் பெர்னாண்டோவிடம் கேட்டோம்.

''இது நியாயமான கேள்விதான். சோமவன்ஸ அமரசிங்க நான்கு ஐந்து தடவைக்கு மேல் கூட ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீரவை நேரடியாகச் சந்தித்தவரல்லர். பிரதான தலைவர்கள் கொல்லப்பட்டபின் பணத்தையும், தங்கத்தையும் சுருட்டிக்கொண்டு ஓடிய சோமவன்ஸ சிறிது காலம் சென்ற பின்னர் தன்னைத்தானே தலைவராக மகுடம் சூட்டிக் கொண்டார். அதுதான் உண்மை'' எனத்தெளிவுபடுத்தினார் பெர்னாண்டோ.

### ஜே.வி.பியுடன் தொடர்பு

''தொழில் ரீதியாக நீங்கள் ஒரு டாக்டர் உங்களுக்கும் தீவிரவாத இயக்கத் தலைவர் ரோஹண விஜேவீரவுக்கும் எப்படி உறவேற்பட்டது?'' - என்று கேட்டோம்.

**சந்திப்பு : சிகா**

''எனது சகோதரர் எச்.எஸ்.பெர்னாண்டோ அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்தவர். அவர் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர். எனது சகோதரரும், ரோஹண விஜேவீரவும் நண்பர்கள்.

''1965ஆம் ஆண்டு கொழும்பு மருத்துவக் கல்லூரி விடுதிக்கு ரோஹண விஜேவீரவை அழைத்து வந்து எனக்கு அறிமுகப்படுத்தினார் எனது சகோதரர்.

''வைத்தியபீட மாணவர் விடுதியில் இருந்தே ரோஹண விஜேவீர தனது ஜே.வி.பி. இயக்கம் தொடர்பான பாட விதானங்களைத் தயாரித்தார். மிகவும் அன்பாகவும் அமைதியாகவும் பழகுவார்.

அரசியலிலும் ஈடுபட வேண்டும். அரசியலில் இளைஞர்கள் ஈடுபடாவிட்டால் முதலாளித்துவவாதிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற முடியாது என உபதேசம் செய்வார். அவருடைய பேச்சும் போக்கும் மாணவர்களாகிய எங்களை அவர் பால் ஈர்த்தன.

''நான் வைத்தியபீட ஜே.வி.பி. மாணவர் அணியின் தலைவரானேன். அதேபோன்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் பிரிவுத் தலைவர்களாக முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர, எம்.ஏ.மெண்டிஸ், ஈரிய கொல ஆகியோர் முன்நின்று செயறபட்டனர். ஆரம்பம் முதலே எங்களுடைய தொடர்பு இறுக்கமானதாக இருந்தது. இப்படித்தான் எங்களுக்கிடையில் தொடர்பு ஏற்பட்டன'' உணர்ச்சிகரமாக தனது இளமைக் கால நினைவுகள் மலர விவரிக்கின்றார் டாக்டர்.

''சுபாஷ் சந்திரா பெர்னாண்டோ என்பது உங்களுடைய இயற் பெயரா? அல்லது இயக்கப் பெயரா?'' இது எமது கேள்வி.

''அது என்னுடைய இயற் பெயர்தான். இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ் இறந்த செய்தியை இந்திய வானொலி அறிவித்த தினத்திலேயே நான் பிறந்துள்ளேன். சுதந்திர வெறியுடையவரான எனது தந்தை அப்போதே சுபாஷ் சந்திர பெர்னாண்டோ என்று எனக்குப் பெயர் வைத்துள்ளார்.'' சிறுபுன்னகையுடன் டாக்டரிடமிருந்து பதில் வருகிறது.

''டாக்டராகப் பணிபுரிந்த உங்களை எப்போது பொலிஸார் கைது செய்தனர்?''

''1970ஆம் ஆண்டு இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்பிரதேசத்திலுள்ள பிரபலமான தனியார் வைத்தியசாலை உரிமையாளரான டாக்டர் ஒருவர் (அவரின் பெயர் இப்போது ஞாபகம் இல்லை) அரசாங்க வைத்தியசாலையில் இருந்த சில அதிகாரிகளின் உதவியுடன் மருந்து வகைகளைத் திருடிக் கொண்டிருந்தார்.

''இம்மோசடியைக் கண்டு பிடிப்பதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் அன்டன் ஜயசூரியவுக்கு நான் உதவினேன். இது அந்தத் தனியார் வைத்தியருக்கு எரிச்சலை மூட்டியது.

''இந்தத் தனியார் டாக்டர் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த வாசுதேவ நாணயக்கார, நந்தா எல்லாவல ஆகியோரின் தேர்தல் செலவுகளுக்குப் பெருந்தொகைகளை வழங்குபவர்.



சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ



சோமவன்ஸ

''படித்தால் மட்டும் போதாது; படிப்போடு

(தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்)

டாக்டர் சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ ஆரம்பகாலத்தில் ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜய வீரவின் நண்பர். பின்னர் அக்கட்சியின் அனுதாபியாகிப் பின் தீவிர உறுப்பினராகவும் மாறியவர்.

இவர்களுடைய உறவு நட்பு ரீதியானது, கட்சி ரீதியானது என்பதையும் தாண்டியது. டாக்டர் பெர்னாண்டோவின் சகோதரி ஸ்ரீமதி சித்திராங்கனியை ரோஹண விஜயவீர திருமணம் முடித்தார். அதன்மூலம் குடும்ப உறவு முறையில் அவரது மைத்துனரானார்.

# மோசடியில் ஈடுபட்ட சோமவன்ஸவுக்கு . . . .

**(முன்பக்கத்தொடர்ச்சி)**

''இவருடைய செல்வாக்கினால் வாசுதேவ நாணயக்காரவும், நந்தா எல்லாவலையும் இரகசியப் பொலிஸாருக்கு அனுப்பிய முறைப்பாட்டின் படியே இரகசியப் பொலிஸார் என்னைக் கைது செய்தனர்.'' - என்றார் டாக்டர் பெர்னாண்டோ.

**சாவின் விளிம்பு வரை**

''இந்த விவரம் உங்களுக்கு எப்படி தெரிய வந்தது?'' - என்று கேள்வி எழுப்பினோம்.

''1971 புரட்சியின்போது வாசுதேவ நாணயக்காரவும் கைது செய்யப்பட்டு எங்களுடன் சிறையில் அடைக்கப்பட்டார். அந்தச் சந்தர்ப்பத்திலேயே வாசுதேவ இந்த உண்மையை ஒப்புக்கொண்டு என்னிடம் மன்னிப்புக் கேட்டார்'' - என்று விளக்கினார் டாக்டர் பெர்னாண்டோ.

''இரத்தினபுரி வைத்தியசாலையில் இருந்த எமது விடுதிக்கு ரோஹண விஜேவீர அடிக்கடி வருவார். எனது அறையிலேயே ஜே.வி.பி. தொடர்பான அறிக்கைகள் மற்றும் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. என்னுடன் கைதுசெய்யப்பட்ட நான்குபேர் இரத்தினபுரி மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன் உயிரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர். என்னை நிர்வாணப் படுத்தி பெட்ரோல் ஊற்றி தீவைக்க முற்பட்ட போது தெய்வாதீனமாக அங்குவந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீல் வீரசிங்க என் உயிரைக் காப்பாற்றினார்'' - எனத் தனக்கு நேர்ந்த திகில் அனுபவத்தை எம்மோடு பகிர்ந்து கொள்கிறார் டாக்டர்.

**மறக்க முடியாத அனுபவம்**

''உங்களுடைய சிறை அனுபவம் தொடர்பாக மறக்க முடியாத சம்பவங்கள் ஏதும் உண்டா?''

''விட்டு விட்டும், தொடர்ந்தும் நான் 17 வருடங்கள் மொத்தமாகச் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளேன். கொடுமையான சித்திரவதைகளையும் அனுபவித்துள்ளேன். ஆனால், இரண்டு தமிழ்ப் பெரியார்கள் எனது உயிரைக் காப்பாற்றியுள்ளனர். ஒருவர் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்த விக்னேஸ்வரன். அடுத்தவர் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகராக இருந்த கந்தையா. இவர்கள் இல்லாவிட்டால் இன்று நான் உயிருடன் இருக்கமுடியாது'' -என்றும் பெர்னாண்டோ கண்ணீர் மல்கக் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றும் ஒரு முக்கியமான விடயத்தையும் கோடிட்டுக் காட்டினார் டாக்டர் பெர்னாண்டோ.

''ரோஹண விஜேவீர கைது செய்யப்பட்டு யாழ். சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது லொக்கு அத்துல, அத்துல நிமலசிறி, ஜயசிங்க ஆகியோர் மாற்றுக் குழு ஒன்றை அமைத்து விஜேவீரவைக் கொலைசெய்யவும் திட்டமிட்டனர். ஆனால் அது பலிக்கவில்லை. இவர்களுக்கு உடந்தையாக சோமவன்ஸதான் செயற்பட்டார்'' -என்றும் குறிப்பிட்டார் பெர்ணான்டோ.

**83 கலவரத்தில் ஜே.வி.பியின் பங்கு**

''1983ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக் கலவரத்திற்கு ஜே.வி.பிதான் காரணம் என்று கூறப்படுகின்றதே. இது சரிதானா?''- என்ற



கேள்வியை எழுப்பினோம்.

''இது தவறு. 1983 ஜூலை மாதம் ரோஹண விஜேவீர எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார் - யூ.என்.பி. குண்டர்களும், சிறில்மதியூ மற்றும் சிறிசேனகுரே ஆகியோரின் அடியாட்களும் இனக்கலவரத்தை ஏற்படுத்திவிட்டு அப்பழியை ஜே.வி.பி. மீது போடத் திட்டமிட்டுள்ளனர். நான் எனது மனைவி பிள்ளைகளுடன் தலைமறை வாகிப் போகின்றேன்; நீரும் எப்படியாவது தலைமறைவாகிவிடவும்.' - என அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அக்கடிதம் இன்றும் என்னிடம் உள்ளது'' - என்றார் பெர்ணான்டோ.

''அப்படியானால் நீங்கள் எப்படி கைதானீர்கள்?'' - இது எமது சந்தேகம்.

''இனக்கலவரம் உக்கிரமாகிக்கொண்டிருக்கும்போது கம்பஹாவில் என்னிடம் சிகிச்சை பெறும் கந்தையா என்ற முதலாளி ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு வீதியில் கிடந்தார். அவரைக் காப்பாற்றும்படி கம்பஹா பொலிஸில் முறையிட்டேன். - நீர் உமது வேலையைப் பாரும். தமிழ் நாய்கள் பற்றிக் கவலைப்படாதீர்- எனக்கூறி என்னை விரட்டினர். நான் திம்பி வரும்போது கந்தையா முதலாளியை அவரது வீட்டுக்குள் போட்டு தீவைத்துக் கொளுத்தி விட்டனர். ஆனால், மறுநாள் என்னைக் கைது செய்தனர். இனக்கலவரத்தைத் தூண்டி விட்டேன் எனத் தெரிவித்து நாடாளுமன்ற குண்டு வெடிப்பு உட்பட பலவற்றுடன் தொடர்புபடுத்தி, 17 குற்றாச்சாட்டுகளைச் சுமத்தி மீண்டும் என்னை சிறையில் தள்ளிவிட்டனர். ஆனால், எந்த ஒரு குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை. நான்கு வருடங்களின் பின் விடுதலை செய்தனர்.

''இந்தச் சந்தர்ப்பத்தில் சோமவன்ஸ அமரசிங்க, சிறிசேன குரேயிடம் தஞ்சம் புகுந்தார். தங்களுக்கு எதுவுமே தெரியாது, எல்லாவற்றிற்கும் ரோஹண விஜேவீரதான் காரணம் எனக்கூறி விட்டார் அவர். அவர் இரகசியப் பொலிஸாரின் ஒற்றனாகச் செயற்பட்டு ஜே.வி.பி யினரை காட்டிக் கொடுத்துவந்தார்.

''ஜே.வி.பி. தலைவர் ரோஹணவிஜேவீர பண்டாரவளையிலும், உலப்பனையிலும் மாறி மாறி மறைந்து வாழ்ந்து வந்தார். இந்தத் தகவலை சோமவன்ஸவின் நண்பர்களும் மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்களுமான ஆனந்த, ஹேரத் ஆகிய இருவரும் அவரிடம் தெரிவித்த பின், அவர்களைப் பொலிஸில் மாட்டிவிட்டு அவர்கள் மூலமாக ரோஹண விஜேவீரவின் மறைவிடத்தைப் பொலிஸாருக்கு காட்டிக் கொடுத்தார் சோமவன்ஸ. என்றாலும் தான் நல்ல பிள்ளைபோல் வெளியே காட்டிக்கொண்டார்.

''கொடுக்கப்பட்ட தகவலின்படி ரோஹண விஜேவீர உலப்பனையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு அன்றிரவே சுட்டுக்கொல்லப்பட்டார். அதேயிரவில் சோமவன்ஸ கொடுத்த தகவலின்படி ஆயிரத்திற்கும் அதிகமான ஜே.வி.பி. உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.'' - என்றும் டாக்டர் பெர்ணான்டோ கட்சியின் பயங்கர அனுபவங்களை எடுத்துக் கூறினார்.

**ஜே.வி.பி. ஆயுதம் தூக்கிய வரலாறு**

''புரட்சிகர அரசியலில் ஈடுபட்ட ஜே.வி.பி எப்படி ஆயுதம் தூக்கியது?'' -என வினாவினோம்.

அது ஒரு சுவாரஸ்யமான கதை என்றபடியே அதைச் சொல்லத் தொடங்குகின்றார் டாக்டர். ''ரோஹண கைதுசெய்யப்பட்டு யாழ். சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தென்பகுதியில் எமது இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். இதனால், லொக்கு அத்துல, ஆயுதத் தாக்குதலில் ஈடுபடவேண்டும் என்றார். ஆனால், தலைவரின் அனுமதியின்றி ஆயுதம் தூக்க முடியாது என்று கட்சி உறுப்பினர்கள் கூறிவிட்டனர்.

''இதன்படி லொக்கு அத்துல, ஒஸ்மன் சில்வாவின் [illegible]யார் ஆகியோர் உட்பட ஒரு தூதுக் குழுவினர் யாழ்ப்பாணம் சென்று ரோஹண விஜேவீரவைச் சந்தித்து விடயத்தைக் கூறினர்.

''அன்றைய நிலையில் எம்மிடம் இருந்தவை ஒரு சில ரைபிள்களும், கட்டுத் துவக்குகளும், வெடிகுண்டுகளும் மட்டும்தான். இதை வைத்துக் கொண்டு பலமிக்க இராணுவம், பொலிஸுடன் மோத முடியாது. எனவே, ஆயுதங்களைப் பதுக்கி வைத்துவிட்டு தற்காலிகமாக இயக்க நடவடிக்கைகளை நிறுத்தி வையுங்கள் என ரோஹண விஜேவீர தன் கைப்பட கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். ஆனால், ரோஹண விஜேவீரவின் கடிதத்தை லொக்கு அத்துல மறைத்து விட்டு தலைவர் ஆயுதத் தாக்குதலை நடத்தும்படி உத்தரவிட்டுள்ளார் எனக் கூறி தாக்குதலை ஆரம்பித்தார். இதனால், எங்களுடைய ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிந்தது'' என்று டாக்டர் பெர்ணாண்டோ பதில் அளித்தார்.

இறுதியாக இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமானால், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, எதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஒத்த கருத்துடன் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாக பேசுவதன் மூலமே அதனைச் சாதிக்க முடியும், எனவும் தாம் கருதுகிறார் என டாக்டர் பெர் னாண்டோ கூறி விடை பெற்றார்.

# பட்டறிவுப் பகிர்வு

ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்தப் பின்னணியில் துப்பாக்கிச் சூடும் அரசியல் தலைவர்களைப் பதம் பார்த்து விடலாம என்ற அச்சமும் தலை தூக்கியிருக்கின்றதாம்.

தேர்தல் களேபரத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களுக்கு இலக்கு வைக்கப்பட லாம் என்று ஏற்கனவே முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

சேவல் கட்சித் தலைவருக்கு இதே காரணத்துக்காகப் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தகவல். அவரது போக்குவரத்து அணியில் பாதுகாப்புப் படையினரின் வாகனங்கள் மட்டும் ஆறுக்கு அதிகமாம.

1994, 1999 களில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலும் பல பெரும் தலைகள் உருண்டன. பெரும தலைகளை உருட்ட முயற்சிகள் நடந்தன. அதேபோன்று இம்முறையும் முயற்சிகள் நடக்கலாம் என்று பல தரப்பிலும் அச்சம். ஏற்கனவே பலரையும் அந்தப் பயம் கிலிகொள்ள வைத்துவிட்டது.

கதிர்காமர் கொலையை அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் கையைப் பிடித்து, காலில் விழுந்து புலிகளுக்கு எதிராக அறிக்கை ஒன்றை வெளியிட வைத்ததும் இந்த நோக்கத்தில்தானாம். அதாவது, ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி பெரும தலைகளை உருட்ட முயற்சி எடுக்கப்பட்டால் விளைவு விபரீதமாக அமையும் என்று முற்கூட்டியே புலிகளுக்குக் குட்டுப் போட்டு வைக்கும் கைங்கரியம்தானாம் அது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தென்னிலங்கையில் பெரு மகிழ்ச்சி கொண்டாடப்படுகிறது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் புலிகளின் பிரதிநிதிகள் தமது ஒன்றிய நாடுகளுக்கு வருவதற்கு தடைவிதிக்கவில்லை. அத்தகைய பிரதிநிதிகள் வருமபோது அவர்கள் தமது அரசுகளால் வரவேற்கப்படமாட்டார்கள், உபசரிக்கப்படமாட்டார்கள் என்றே அவை கூறியிருக்கின்றன. ('They will no longer be received in any of the EU member states').

இந்த வரவேற்பு மறுப்பும் கூட மறு அறிவித்தல் வரையான ஒரு தற்காலிக ஏற்பாடுதான்.

இதைத்தான் புலிகளுக்கு எதிரான பெருவெற்றியாகக் கொண்டாடுகிறது தென்னிலங்கை.

புலிகளின் பிரதிநிதி ஒருவர் இப்போது ஐரோப்பிய ஒன்றிய நாடு ஒன்றுக்குச் சென்றால் அந்த நாட்டுக்குள் செல்லவிடாமல் அவர் தடுக்கப்படுவார் என்று அர்த்தம் அல்ல. அங்கு அவருக்கு அரச ரீதியான வரவேற்பு ஏதும் கிடைக்காது என்பதுதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய அறிவிப்பின் சாரம் என்று விடயமறிந்த ஒருவர் விளக்கினார்.

* * *

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகைப் பக்கம் சில தினங்களுக்கு முன்னர் சூட்டுச்சத்தங்கள் சில கேட்டன. அதனால் சற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், அது பின்னர் அடங்கிவிட்டது - அப்படிப் பெரிதாக அசம்பாவிதம் ஏதும் நடக்காததால்.

உண்மையில் நடந்தது என்ன தெரியுமா? தேர்தல் பிரசாரத்தை ஒட்டி பொதுமேடைகளில் தோன்றி உரையாற்றும் பிரதமரின் பாதுகாப்புக்கருதி நான்கு கண்ணாடிப் பெட்டிகளை அமெரிக்காவில் வசிக்கும் அவரின் ஆதரவாளர் ஒருவர் அனுப்பியிருந்தார். அவை ஒவ்வொன்றினதும் பெறுமதி 35 லட்சம் ரூபாவுக்கு அதிகமாம். அவற்றின் பயனைப் பரிசோதித்து அறியவிரும்பினார் பிரதமர். அதனால், அவர் முன்னிலையில் அந்தக் கண்ணாடிப் பெட்டிகளுள் ஒன்றை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. அதனால்தான் அந்தச் சூட்டுச் சத்தம் எழுந்ததாம்.

கண்ணாடிகளின் உறுதியைப் பார்த்து பிரதருக்கு முழுத்திருப்தி, கடந்த வெள்ளியன்று கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த அக்கரைப்பற்றில் இத்தகைய கண்ணாடிப் பெட்டி ஒன்றுக்குள் இருந்துதான் உரையாற்றினார்.

- அற்பன்







குழந்தைக்கு முதலில் பரிசளித்தது அப்பா. அது மக்கள் வங்கியின் "இசுறு உதான" கணக்கு. பாலகனை பார்க்க வந்த தாத்தா பாட்டி மாமா மாமி நண்பர்கள் அனைவரும் "இசுறு உதான" சான்றிதழ்களை பரிசளித்தனர். குழந்தையோடு சேர்ந்து கணக்கும் வளருவதால் பிள்ளை பாடசாலை செல்லும் போது பெரிய தொகையொன்று சேமிக்கப்பட்டிருக்கும். புதிதாக பிறந்த குழந்தையொன்றை பார்க்க செல்லும்போதெல்லாம் கொண்டு செல்லக்கூடிய புத்திசாலித்தனமான பரிசு மக்கள் வங்கியின் "இசுறு உதான" பரிசுச் சான்றிதழ்களே. மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக அருகிலுள்ள மக்கள் வங்கிக்கு வாருங்கள்.

"இசுறு உதான" தரும் பரிசுகள்

வைப்புத் தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப அழகிய கோப்பை, பாடசாலை பேக் மற்றும் பல பரிசுகள் உங்கள் பிள்ளைக்குக் கிடைக்கும்.

போனஸ் வட்டி

கணக்கில் வைப்புத் தொகை ரூபா 10.000/- க்கு மேற்படின் சாதாரண வட்டிக்கு மேலதிகமாக 0.5% போனஸ் வட்டியும் வழங்கப்படும்.

* ஆயுள் மற்றும் மருத்துவ காப்புறுதி

"இசுறு உதான" கணக்கில் ரூபா. 25,000/- 6 மாதங்களுக்கு மேல் வைப்பில் இருந்தால்.

- வைப்புத் தொகையைப் போல் 10 மடங்கு, (அதிகபட்சம் ரூபா 1,000,000/-) ஆயுள் காப்புறுதி தாய், தந்தை அல்லது பாதுகாவலருக்கு
- இதற்கு மேலதிகமாக 10 கடும் நோய்களுக்கெதிராக, ரூபா. 75,000/- வரையிலான சிகிச்சை மற்றும் மருத்துவமனைக் கட்டண* காப்புறுதி

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது



குழந்தைகளுக்கு வழங்க புத்திசாலித்தனமான பரிசு

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
09.10.2005



# நியாயத்தின்பால் உறுதியாக நிற்பதே ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தமிழர்கள் விடுக்கக் கூடிய செய்தி...!

சபேசன்
ஆஸ்திரேலியா

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் செல்வதற்குத் தடை விதித்திருப்பதாக, ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது. அது மட்டுமல்லாது, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதக் குழுக்களின் பட்டியலில் சேர்ப்பது குறித்தும், பின்னர் தீர்மானிக்கப் போவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது, சமாதானத் தீர்வு ஒன்றில் நம்பிக்கை கொண்டுள்ள பல தரப்பினருக்கும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அறிக்கை அதிர்ச்சியையும், அதிருப்தியையும் அளித்திருக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அறிக்கையின் பின்னணி குறித்தும், இது உருவாக்கக் கூடிய பின் விளைவுகள் குறித்தும், தமிழ் மக்களினதும்–குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழீழ மக்களினதும்–தார்மீக கடமை குறித்தும், பல கருத்துகளைத் தர்க்கிப்பதுவே இக்கட்டுரையின் நோக்கமாகும்!

மூன்றாவது உலக நாடுகள், பொதுவாகவே ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பவையாகும். அதிலும், குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளும், தேசிய இனங்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது நம்பிக்கை கொண்டிருப்பதற்குத் தகுந்த காரணங்களும் உண்டு. மற்றைய மேற்குலக நாடுகள், பொதுவாகவே நியாயத்தின்பால் நின்றதில்லை. பல தேசிய இனங்களின் உரிமைக்காக போராட்டங்களை ஏற்றுக் கொண்டதுமில்லை.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் பெரும்பாலும் நியாயத்திற்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்கிறது. நியாயத்திற்கு ஆதரவாக செயல்வடிவம் கொடுக்காமல் போனாலும் நியாயத்திற்கு ஆதரவாக வார்த்தை வடிவத்தில் கருத்துருவாக்கத்தைத் தெரிவித்திருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் தத்தமது நாடுகளின் கருத்துருவாக்கத்திற்கு ஏற்ப செயல் வடிவமும் கொடுத்துள்ளார்கள். உதாரணத்திற்கு ஈராக் மீதான போரின் போது, அமெரிக்காவின் அழுத்தத்தையும் மீறி, தமது படைகளை ஈராக்கிற்கு அனுப்ப மறுத்த ஜேர்மன், பிரான்ஸ் நாடுகளைச் சுட்டிக்காட்டலாம். ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பிரித்தானியாவின் விருப்பத்திற்கு மாறாகவே இந்த நாடுகள் நடந்து கொண்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படிப்பட்ட பல கருத்துருவாக்கங்கள், மற்றும் செயற்பாடுகள் காரணமாகவும் இலங்கைத்தீவில் ஏற்பட்ட சமாதான முன்னெடுப்புகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்த, காட்டிய, ஆதரவு காரணமாகவும் தமிழ் மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது, அதிகமான நம்பிக்கையை வைத்திருந்தார்கள் என்பதும் உண்மையே! ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை, தமிழ் மக்களும் சமாதான விரும்பிகளும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையைச் சீர்குலைய வைத்து விட்டன.

ஏனென்றால், இது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கை மட்டும் அல்ல! ஒட்டு மொத்த தமிழினத்திற்கும் எதிரான நடவடிக்கை!! சமாதான முயற்சிகள் பலவற்றிற்கும் எதிரான நடவடிக்கை!!

சமாதானத் தீர்வு ஒன்றை முன்வைக்க முடியாத நிலையில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றையும் எதிர்கொள்கின்ற தற்போதைய சிறிலங்கா அரசு, மிக அண்மைக்காலத்தில் முடுக்கி விட்டிருந்த பரப்புரைகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அவசர முடிவுக்குக் காரணமாக இருக்கலாம் என்ற கருத்தும் வலுவுடைய ஒன்றுதான். அதேவேளை சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க அரசின், தெற்காசிய நாடுகளுக்கான உதவிச் செயலாளர் 'கிறிஸ்டினா ரொக்கா' கூறிய கருத்தையும் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.!

விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பயணத்தடையை வரவேற்றுள்ள 'கிறிஸ்டினா ரொக்கா' மேலும் ஒரு கருத்தையும் தெரிவித்துள்ளார். மேலோட்டமாகப் பார்க்கும்போது அக்கருத்து விடுதலைப் புலிகளை நோக்கி விடுக்கப்பட்டதாக இருந்த போதிலும் அதன் உட்கருத்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ள வேண்டுகோளாக–இல்லை ஒரு வலியுறுத்தலாகவே–எமக்குத் தென்படுகின்றது.

விடுதலைப் புலிகள் மீதான இந்தப் பயணத்தடை, அதனுடைய நோக்கம் நிறைவேறும் வரை அமுலில் இருக்கும் என்று அமெரிக்கா நம்புகின்றது என்று கிறிஸ்டினா ரொக்கா தெரிவித்துள்ளார். இக்கருத்தானது சில தர்க்கங்களை முன்வைக்க வேண்டிய அவசியத்தையும் உண்டாக்குகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் என்ற அமைப்பு அமெரிக்காவின் பொருளாதார மற்றும் பிராந்திய மேலாண்மைச் சவாலை சந்திப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஐரோப்பிய ஒன்றியம் தமது சொந்த நலன்கள் பாதிக்கப்படும்போதோ அல்லது தமது வர்த்தக நலன்கள் பாதிக்கப்படும்போதோ அமெரிக்காவுடன் 'இறுக்கமான நிலையை' மேற்கொண்டே வந்துள்ளது. மற்றைய சந்தர்ப்பங்களில் அமெரிக்காவுடன் நெகிழ்ச்சிப் போக்கினையே கடைப்பிடித்து வருகின்றது. இந்த வகையில் ஐரோப்பிய ஒன்றியம் கண்ணுக்குப் புலப்படாத எல்லைக்கோடு ஒன்றினை தனக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் வகுத்து வைத்துள்ளது.

அந்த 'எல்லைக்கோட்டினை' கிறிஸ்டினா ரொக்கா தற்போது மீறியுள்ளார்.

அதாவது 'அமெரிக்கா நம்புகின்றது' என்ற சொல்லாடலின் மூலம் அமெரிக்காவின் விருப்பத்தை சிறிலங்காவின் பரப்புரையை கிறிஸ்டினா ரொக்கா அடிக்கோடிட்டு உள்ளார். இது சற்று வெளிப்படையாகவே நடைபெற்று இருப்பதுதான், எமக்குச் சற்று வியப்பைத் தருகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் என்ன செய்ய வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுக்க முனைகின்றது.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உள்ளரங்கமாகவும் வெளிப்படையாகவும் அமெரிக்கா அழுத்தம் கொடுக்க முனைகின்றது என்றால் திரைமறைவில் பல முரண்பாடுகள் இருக்கின்றன என்கின்ற தர்க்கம் சரியானதாகத்தான் இருக்கக்கூடும்.!

ஆயினும் அமெரிக்காவின் அழுத்தத்திற்கு ஓரளவு ஐரோப்பிய ஒன்றியம் பணிந்து கொடுத்து விட்டது என்பது உண்மையானால் நாம் முன்னர் கூறியதுபோல் ஐரோப்பிய ஒன்றியம் தனக்குரிய நம்பிக்கையை இழந்துவிட்டது என்றே கூறவேண்டும்.!

இதனடிப்படையில் நாம் சில தர்க்கங்களை முன்வைக்க விழைகின்றோம்.

## குற்றமும் அநியாயமும்

ஒரு பேரினவாத அரசின் அராஜகச் செயல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்காமல் இருப்பதே குற்றமான விடயமாகும்.! ஆனால் அதனை ஆதரித்துப் பேசுவதோ, அதற்கு அனுசரணையாக நடப்பதோ, அநியாயமான செயலாகும். இங்கே குற்றத்தையும், அநியாயத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் ஒருங்கு சேரப் புரிந்திருக்கின்றது!. இங்கே ஐரோப்பிய ஒன்றியம் தனக்குரிய நம்பிக்கையை இழந்து விட்டது.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ள சிறிலங்காவின் இரண்டு பிரதான சிங்கள கட்சிகளும் சமாதானத் தீர்வு குறித்துத் தெளிவான திட்டமொன்றை, இன்றுவரை முன்வைக்கவில்லை. ஏன் தெளிவான கருத்தைக் கூட முன்வைக்கவில்லை. கடந்த மூன்றாண்டு காலத்திற்கும் மேலாக நிலவி வருகின்ற 'சமாதானத்திற்கான' காலத்தின் போது கூட சிறிலங்கா அரசுக்குள் எந்த விதமான உருப்படியான செயல் திட்டத்தை உருவாக்கவுமில்லை. அமுலாக்கவும் இல்லை! இது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் பெரிதாக அலட்டிக்கொள்ளவும் இல்லை. இங்கேயும் ஐரோப்பிய ஒன்றியம் தனக்குரிய நம்பிக்கையை இழந்து விட்டது!

ஐம்பது ஆண்டு காலத்திற்கும் மேலாக சிறிலங்காவின் சிங்கள அரசுகளால் தமிழினம் சந்தித்த அழிவுகள் ஒருபுறம் இருக்கட்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கும் ஒருமுறை கூட வராத, ஆழிப்பேரலை தந்திட்ட அழிவுகளுக்கு முகம் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்புக்கு சிறிலங்காவின் நீதித்துறை இடைக்காலத் தடை விதித்ததே?– அப்போது கூட ஐரோப்பிய ஒன்றியம் தனது நீதியான குரலை முறையான விதத்தில் எழுப்பவில்லையே, ஏன்? ஐரோப்பிய ஒன்றியம் தனக்குரிய நம்பிக்கையை மீண்டும் இழக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளைத் தாமே தன்னிச்சையாக மேற்கொண்டு போர் நிறுத்தம் அறிவித்து, சமாதானத்திற்கான கதவுகளையும் அகலத் திறந்து கடந்த மூன்றாண்டு காலத்திற்குள் சிறிலங்கா இராணுவத்தின் போர் நிறுத்த மீறல்களால் பல போராளிகளையும் அரசியல்துறைச் செயற்பாட்டாளர்களையும் இழந்தும் கூட சமாதானத்திற்கு வாய்ப்புக் கொடுத்து நிற்கின்ற விடுதலைப் புலிகளின் நெகிழ்ச்சிப் போக்கினை பாராட்டாமல், சிறிலங்கா அரசின் கடும் போக்கிற்கு ஐரோப்பிய ஒன்றியம் துணைபோகும் போது, ஐரோப்பிய ஒன்றியம் தனக்குரிய நம்பிக்கையை இழப்பதோடு மட்டுமல்லாது தன்னையே சந்தேகத்திற்கும் உள்ளாக்கி நிற்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்டவாறு தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களையாதது மட்டுமல்லாது கருணா குழுவினருக்கு அடைக்கலம் வழங்கி தமிழினத்திற்கும், சமாதான முயற்சிகளுக்கும் எதிராகச் செயற்பட்டு வரும் சிறிலங்கா அரசிற்கு தனது கண்டனத்தைத் தெரிவிக்காமல் இருக்கும்போதே, ஐரோப்பிய ஒன்றியம் தனக்குரிய தகுதியையும் நம்பிக்கையையும் இழக்கத் தொடங்கி விட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் சில நாடுகள் இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் அங்கம் வகிக்கின்றன. தமது நாடுகளுக்கு விடுதலைப் புலிகள் வருவதற்கு தடை விதித்துக்கொண்டு அதேவேளையில் கண்காணிப்புக் குழுவிலும் பணியாற்ற முனைவதானது முரண்பாடான செயல் மட்டுமன்றி ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது ஐயத்தையும் உருவாக்க கூடியதாகும்.!

இதேவேளை மிகவும் கவலைக்குரிய வேறு ஒரு ஐயப்பாடும் எமக்கு தோன்றுவதை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். சிறிலங்காவின் பிரதான சிங்களக் கட்சிகள் சமாதானத் தீர்வு குறித்து இதுவரை உருப்படியான திட்டம் ஒன்றை முன்வைக்காத நிலையில் கூட ஐரோப்பிய ஒன்றியம் தமிழ் மக்களுக்குத் தேவையற்ற ஓர் அழுத்தத்தைக் கொடுக்குமேயானால் எதிர்காலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் என்ன செய்யக் கூடும்.? என்ற கேள்வியும் பெரிதாக எழுகின்றது. ஒருவேளை–அதாவது ஒருவேளை–எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒரு கட்டத்தை நோக்கி நகரக்கூடிய நிலை ஒன்று ஏற்பட்டால், அப்போது தமிழ் மக்கள் ஏற்க முடியாத தீர்வுத் திட்டம் ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் தமிழ் மக்கள் மீது திணிக்கக் கூடுமோ? என்ற ஐயம் இப்போது எமக்குள் எழுவதை எம்மால் தவிர்க்க முடியவில்லை. இது ஒரு மிக முக்கியமான தர்க்கமுமாகும்.

இப்பயணத்தடை குறித்து சிலர் வேறு ஒரு பார்வையைத் தரக்கூடும் பேச்சுகள் எதுவும் பலன் அளிக்காத நிலையில், சிங்களப் பிரதானக் கட்சிகளின் செயற்பாடுகளும் அவநம்பிக்கையை அளிக்கத்தொடங்கி விட்ட நிலையில், வேறு வழியின்றி தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்கக் கூடும். அதனை தடுப்பதற்காகத்தான் இந்தத் தடையுத் தரவு–என்று கூட 'சிலர்' தர்க்கிக்கலாம். அப்படியானால் அது பிழையான கருத் துருவாக்கத்தில் உருவாகிய தவறான தடையுத்தரவு என்றே நாம் கருதுகின்றோம்.

(VIII ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் குழப்பம்



இந்து மத நம்பிக்கைகள் , தத்துவங்கள் அர்த்தம் மிக்கவை. காலத்தால் என்றும் அழியாதவை. கலாசார அடையாளத்தை நிலை நிறுத்தும் வகையில் அமைபவை.

இன்று நேற்றல்ல, காலங்காலமாக யாழ்ப்பாணத்தார், குறிப்பாக இந்துக்கள் தமது வாழ்க்கை நடைமுறைகளில், சுபநேரத்துக்கும், சுப சகுணத்துக்கும் முக்கியத்துவம் வழங்கிச் செயற்படுவது பலரும் அறிந்ததொன்று. தமது வீட்டு மங்கள நிகழ்வுகளை, அதற்குரிய சுப வேளையில் நடத்துவதற்கு அவர்கள் அக்கறை காட்டிச் செயற்படுவதுண்டு. புதுமனைப்பிரவேசம், பூப்புநீராட்டு, திருமணவிழா, புதிதாகத்தொழில் முயற்சி ஆரம்பித்தல் போன்ற பல மங்கள காரியங்களை ஆகம விதி முறைகளுக்கு அமையவும், பாரம்பரிய சம்பிரதாயங்களை ஒட்டியும் நடத்துவதற்கு அவர்கள் அக்கறைகாட்டிச் செயற்படுவதுண்டு. இவற்றுடன் வேறுபல மங்கள காரியங்களிலும் சோதிட சாஸ்திர முறைக்கமைந்த சுபவேளைக் கணிப்புக்கமைந்து தமது நிகழ்வுகளை நடத்தி முடிப்பது அவர்களது வழக்கமாய் அமைவதொன்று.

இன்றைய காலகட்டத்தில் நமது நாளாந்த செயற்பாடுகளில் கூட, கால நேரத்துக்கு முன்னுரிமையளித்துச் செயற்படவேண்டிய இயந்திர மய வாழ்க்கை வாழ வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

ஒரு நாட்டில் பொது மக்களது அன்றாடத் தேவைகளை, சிக்கல்களை இனங்கண்டு தீர்வு வழங்கி உதவ வேண்டியது அந்தந்த நாட்டின் ஆட்சியாளர்களது கடமை என்பது எழுதாத விதியாகும்.

அந்த வகையில் தமது நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றவேண்டிய எத்தனையோ முக்கிய பணிகள் இருந்தபோதிலும், அவற்றை ஒருபுறம் ஒதுக்கிவைத்து, அநாவசிய செயற்பாடுகளை மேற்கொண்டு தாமும் குழம்பி, நாட்டுமக்களையும் குழப்பமுற வைப்பது இந்த நாட்டை ஆள்பவர்களது வழக்கம்.

1996ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு மேற்கொண்ட அவ்வாறானதொரு செயற்பாடு காரணமாய் தொடர்ந்த பல ஆண்டுகளாய் நாட்டு மக்கள் குழப்பமும் சிரமமும் அனுபவிக்க நேர்ந்தது.

மின்சார பாவனையைச் சிக்கனப்படுத்துவதற்கான வழி எனக்காரணம் காட்டி, அதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த நாளின் நேரக் கணிப்பீட்டை ஒரு மணித்தியாலம் முன்தள்ளிக் கடைக்கொள்ளும் நடைமுறையை அப்போதைய அரசு அறிமுகப்படுத்தியது. நாட்டு மக்கள் அந்தப் புதிய நடைமுறைக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக்கொண்ட வேளையில், ஐந்தே மாதங்கள் கழிந்த நிலையில், கிறீன்விச் - சர்வதேச நேரத்துக்கும் நம் நாட்டு நேரத்துக்கும் ஆறு மணித்தியால இடைவெளி இருக்கத் தக்க நடைமுறையெனக் கூறி, தான் ஏற்கனவே அறிமுகப்படுத்திய நேரக் கணிப்பினின்றும் மற்றொரு புதிய நேரக்கணிப்பாக அரைமணி நேரத்தைப் பின் தள்ளிக்கடைக் கொள்ளும் நடைமுறையை நிர்ணயித்தது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில" என்பது சான்றோர்வாக்கு. ஆனால், அவசியமற்றதொரு புதியதைப் புகுத்த முனையும்வேளை சிக்கலும் குழப்பமுமல்லவா மிஞ்சுகிறது?

1996ஆம் ஆண்டு கால வாக்கில், கையில் கடிகாரம் அணிந்திருக்கும் ஒருவரிடம் வழியில் யாராவது நேரம் என்னவென வினாவினால் உரிய நேரத்தைக் கூறுவதோடு மட்டும் அவர் தப்பித்து விட முடியாது "பழைய நேரமா? புதிய நேரமா?" என அடுத்துவரும் கேள்விக்கும் அவர் பதிலளிக்க வேண்டி நேர்ந்தது.

இந்தப் பழைய - புதிய நேரச் சிக்கல் தொடர்ந்தும் பல ஆண்டுகளாய் பொது மக்களுக்குச் சிக்கலையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி வந்தது. ஏன் அண்மையில் கூட பழைய நேரமா, புதிய நேரமா? என்ற சந்தேகத்தைத் தீர்க்க வேண்டிய சந்தர்ப்பமொன்று எனக்கு ஏற்பட்டதுண்டு.

பத்திரிகைகளில் வெளிவரும் மரண அறிவித்தல் விளம்பரம் முதல், திருமணம், பூப்பு நீராட்டு போன்ற மங்கள நிகழ்வுகள், கோயில் உற்சவம், பொதுக்கூட்டம் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகள் இடம்பெறுவது குறித்த அறிவித்தல்களில் இவ்வித பழைய, புதிய நேர அறிவிப்புக்கள் பொதுமக்களை சிரமமுறவும், குழப்பமுறவும் வைத்த சந்தர்ப்பங்கள் ஏராளம்.

ஆனால், இவை எவற்றாலும் குழம்பாத - குழப்பமுடியாத ஒரு தரப்பினரும் நம் மத்தியில் இருக்கவே செய்கின்றனர். விளம்பரமொன்றிலோ அல்லது அழைப்பிதழ் ஒன்றிலோ நிகழ்வு குறித்த நேரம் பழைய நேரமெனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சரி, புதிய நேரமெனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சரி , அது குறித்து சம்பந்தப்பட்ட இந்தத் தரப்பினர் அலட்டிக்கொள்வதில்லை. மாறாக பழைய, புதிய நேரமெல்லாம் தாண்டி, சாவகாசமாக, காலம் தாழ்த்தியே குறிப்பிட்ட நிகழ்வில் கலந்துகொள்வது அவர்களது வழக்கமான போக்கு.

ஒரு கோணத்தில் நோக்கினால் அது கூடத் தவறாகப் படவில்லைத்தான். அந்தத் தரப்பினர் யாழ்ப்பாணத்தாரின் சுபாவம் குறித்து நன்றாகத்தெரிந்து வைத்துள்ள புத்திசாலிகள். யாழ்ப்பாணத்தாரின் பெரும்பாலான சடங்கு, சம்பிரதாயங்கள் அதற்குரிய வேளையில் நடந்தேறுவதில்லை என்பது அவர்கள் ஏற்கனவே கற்றுக்கொண்டுள்ள அனுபவப் பாடம்.

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. (ஆ-ர்)

குறிப்பிட்ட நிகழ்வொன்றை குறித்த நேரத்தில் நடத்தி முடிக்காத எங்களது இயலாத்தனத்தை - திட்டமிட்டுச் செயற்பட்டுப் பழகாத பலவீனத் தன்மையை ஒரு புறம் ஒதுக்குவோம்.

ஆன்மீகத்துறையில் ஆகம விதிகளையும், கலாசாரத்துறையில் பாரம்பரிய நடைமுறைகளையும் உரிய முறையில் கடைக்கொள்ள முனைவதாலேயே இவ்வித தாமதங்கள் ஏற்படுவதாக சப்புக் கட்டு கட்டிக்கொள்கிறோம்.

ஆன்மீக நம்பிக்கையின் ஓர் அங்கமான சோதிடக்கலையைத் தீவிரமாக நம்பும் நாம், சோதிடத்தின் அடிப்படையில் அமையும் நேரகால வேளைக் கணிப்பீட்டில் கூடத்தானும் ஒருமித்த கருத்தைக்கொண்டில்லையே!

புத்தாண்டைக்கொண்டாடப் புறப்பட்டால் கூட - ஆரம்பத்திலேயே இடறுகிறதே. இந்து மத நடைமுறைப்படி இது பார்த்தீப ஆண்டு. தமிழ்க் கணக்கீட்டுப்படி பங்குனி மாதம் 31ஆம் திகதி முன்னிரவு 10.17 மணிக்கு பார்த்தீப வருடம் பிறக்கிறது என்கிறது வாக்கிய பஞ்சாங்கம். அன்றிரவு 12.39 மணிக்கே சித்திரைப் புத்தாண்டு உதயமாகிறது என்கிறது திருக்கணித பஞ்சாங்கம். குழப்பம் அங்கேயே உருவாகத் தொடங்கி விட்டது. புத்தாண்டுக்கு முதல் நாளே பத்திரிகைகள் இரு பஞ்சாங்கங்களின் படி இன்ன இன்ன நேரத்தில் வருஷம் பிறப்பதாகச் செய்திவெளியிட்டுத் தப்பித்துக்கொள்கின்றன. சும்மா மெல்லுகிற வாய்க்கு அவல் கிடைத்ததுபோல, மாலை வேளையில் வாசிகசாலை வாசலில் கூடும் பழசுகளின் வாதப் பிரதிவாதங்களுக்கு விடயம் கிடைத்துவிட்டது.

"இதிலை எது சரி? எது பிழை?" என்கிறது ஒரு பழசு.

"வாக்கிய பஞ்சாங்கப்படியென்றாலென்ன, திருக்கணித பஞ்சாங்கப்படியென்றாலென்ன, வருஷம் ஒருமுறைதான் பிறக்கும்" என்கிறது மற்றொரு பழசு.

"இது மட்டுமில்லை சகல கணிப்பீடுகளிலும் பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கம் வேறுபாடாய்த்தான் இருக்கிறது" என்கிறார் மற்றொருவர்.

"என்றைக்குத் தமிழர்கள் சுதந்திரமாக வாழ முடிகிறதோ, அன்றைக்குத்தான் புதுவருஷம் பிறக்கும்" என்கிறது பழசுகளுடன் கூடி வம்பளக்கும் இளசொன்று.

ஏன் இந்த முரண்பாடு; ஏன் இந்தக் குழப்பம். இந்த இருதரப்பும் ஒன்றிணைந்து கணிப்பீடு செய்ய முடியுமானால் இத்தனை தூரம் குழம்பவேண்டிய அவசியம் ஏற்படாதல்லவா?

ஆனானப்பட்ட அரசியல் வாதிகளே, தத்தம் அரசியல் செயற்பாடுகளைச் சுபநேரம் தேர்ந்தெடுத்து ஆரம்பிக்க அக்கறை காட்டும் இந்த நாளில் நாமெல்லாம் - சாமானியர்கள்; எங்கள் மத நம்பிக்கை - சம்பிரதாயங்களை இலேசில் கைவிட்டு விட மனம் ஒப்பாது.

இரு தசாப்தகாலப் போர் வடுக்களால் குழம்பிப்போய் இருக்கும் நாம் இந்த நாள், நட்சத்திரம், ராகுகாலம் பார்த்து மேலும் குழப்பவேண்டுமா?

"நாள் என்செயும்; கோள் என்செயும்; நம்மை நாடி வந்த கூற்றென்செயும்" என எண்ணி நம் வீட்டின், சமூகத்தின், இனத்தின் ஏற்றத்துக்காய் உழைக்க உறுதிகொள்வதே புத்திசாலித்தனமான செயற்பாடாய் அமையும்.

— பொன்வேளன்

## எங்கடை இருப்பிடம்...



சிந்தனையைச் சிதறவிட்டபடி நூலகத்தில் அமர்ந்திருந்தேன். எதிரே உள்ள ராக்கையில் கிடைத்தற்கரிய பல புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன.

அனுமதி பெறாமலே புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிவிட்டது காற்று.

'ங்'......என்ற இரைச்சலுடன் பறந்து போனது ஒரு குழவி.

மற்றைய குழவியின் கொடுக்கில் சற்று முன்னர் பிடித்த புழு துடிதுடித்தது.

இராமாயணத்திற்கும் பாரதத்திற்குமிடையே அவை புகுந்து கொள்கின்றன. அவற்றின் நிரந்தர இருப்பிடம் அது.....!

தங்களது மொழியில் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கின்றன.

வஞ்சகமில்லாக் காற்று அதையும் வாங்கிவந்து......... மொழிபெயர்த்து என் காதில் திணித்தது.

''எங்கடை மூதாதையர்கள் வெயிலுக்கையும் மழையுக்கையும் கல்லிடுக்குகளிலை வாழ்ந்தவையளாம். அவற்றிலை சில தடயங்கள் இண்டைக்கும் இருக்குது''

''நாங்களும் எங்கடை சந்ததியும் இப்படிக் கஷ்டப்பட வேண்டிய தேவையே இருக்காது?''

''ஏன்...?'' என்று காதல் தோய்த்த நாணத்துடன் கேட்டது மற்றைய குழவி அந்தக்காலத்திலை புத்தகம் படிப்பவர்கள் நிறையப் பேர் இருந்ததாலை நம்மடை ஆள்கள் இந்தப் பக்கம் வாறதேயில்லை. வந்தாலும் நிலைத்திருக்க முடியுறதில்லை.

''எங்களாலை மட்டும் எப்படி முடியுது???''

இக்கால இளைஞர்களெல்லாம் நூலகப்பக்கம் வாறதேயில்லை. அவர்களுக்கு அது தேவையும் இல்லைப் போல....

''அப்ப நாங்கள் எண்டைக்கும் இங்கேயே இருக்கலாம்'' என்று கூறிக் கண்ணடித்தது ஆண் குழவி.

அவை உல்லாசமாகத் தமது உள்அறைக்குள் நுழைந்து கொண்டன. கருட புராணத்திற்கும் கந்த புராணத்திற்கும் இடையிலும் கூடு கட்டத்தயாராக ஒரு இடுக்குத் தெரிந்தது.

ந.வினோதரன்

## நீ தானே...!

வழி தெரியா
என்
வாழ்வுக்கு
முகவரியிட்டது நீ!

உண்மைக்கும்
பொய்மைக்கும்
இடைவெளி
காட்டியதும் நீ!

உறவென்ற ஒன்றை
உருவாக்கியதும் நீ!

மனதிலே மாண்பை
வளர்த்ததும் நீ!

கல்வியின்
பரிணாமங்களை
தெளிய வைத்ததும் நீ!

இன்று
ஒற்றையடிப் பாதையிலே
என்னை
நடக்க வைத்ததும்
நீதானே......!

அ.சூரியன்

# புதிய உறவுகளைப் புரிந்து கொள்வோம்!

மனிதர்கள் பல்வேறு குணக்கலவைகளை உடையவர்கள். அந்தக் குணக்கலவை சில இடங்களில் நன்மை பயத்தாலும் பல இடங்களில் நம் உறவுகளைப் பிரிப்பனவாகவே அமையும். எம்மேல் அன்பு காட்டிய ஒருவர் வேறொருவர் மீது அன்பு காட்டினால் உடனே பொறாமையும் கோபமும் ஏற்படும். யார் மீது அன்பு செலுத்தப்படுகிறதோ அவர் மீது பொறாமையும் யார் அன்பு செலுத்துகிறாரோ அவர் மீது கோபமும் ஏற்படும்.

உதாரணமாக உங்கள் அண்ணாவின் செல்லத் தங்கை நீங்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர் எதுவாங்கினாலும் உங்களுக்காகவும் உங்கள் விருப்பத்திற்கேற்பவுமே வாங்குவார். அவருக்குத் திருமணமானதும் தன் மனைவிக்கென்று அவர் வாங்கி வருபவற்றைப் பார்க்கும்போது உங்கள் மனதில் ஒரு குமைச்சல் ஏற்படுகிறது. அண்ணன் மேல் கோபம் கோபமாக வருகிறது. அண்ணியின் மீது பொறாமை ஏற்படுகிறது. உங்கள் அண்ணனை வசியப்படுத்தி உங்களிடமிருந்து பறித்துக் கொண்ட சாத்தான் போல் அவள் தோன்றுகிறாள். இதேபோன்ற எண்ணங்கள் தாய் சகோதரர்களுக்கும் ஏற்படுவது வழக்கம். இப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்பட்ட பின்னர் அவர்களிடையேயுள்ள உறவு சுமுகமானதாக இருக்கமுடியாது. கசப்புணர்வே தொடரும்.

புதிதாக வந்த உறவிற்குரிய முக்கியத்துவத்தை நீங்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். மனித மன உணர்வுகளை மதிக்கவேண்டும். உங்கள் மகனோ, மகளோ, சகோதரனோ, சகோதரியோ தம் இல்லற வாழ்வை எவ்வளவு மகிழ்ச்சியாக நடத்துகிறார்கள் என்று எண்ணிச் சந்தோஷமும் பெருமையுமடைய வேண்டும். புதிதாகத் திருமணம் செய்த மகனோ, மகளோ எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென நீங்கள் கூறவேண்டியவற்றை முதலிலேயே சிந்தித்து, அவர்களது ஆனந்தமான இல்லறத்திற்கு அறிவுரை கூற ஆயத்தமானீர்களேயானால் உங்கள் மனமும் உங்கள் வீட்டில் நிகழப்போகும் மாற்றத்திற்குத் தன்னைத் தயார்படுத்தி விடும்.

'அண்ணா! இதுவரை நடந்தமாதிரி எனக்கு நல்ல உடைகளாகத் தேர்ந்தெடுத்து வாங்கி வராதீர்கள். அண்ணிக்குத்தான் இனி முதற் தேர்வாக இருக்க வேண்டும். உங்களை நம்பி வந்தவள் கவலைப்படக்கூடாது' என்று அறிவுரை கூற எண்ணினாலே போதும். உங்கள் மனம் அண்ணனிடம் மாற்றத்தைக் காணத் தயாராகிவிடும். அதன்பின் பொறாமை, கோபம் என்பன வரத் தயங்கும்.

நீங்கள்தான் புதிதாக மணம் முடித்தவராக இருந்தால் உங்கள் கணவன் தன் பெற்றோரிடமும் சகோதரியிடமும் காட்டும் அன்பு உங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தலாம். பெற்று வளர்த்து ஆளாக்கி, இதுவரை உடனிருந்த உறவுகள் முக்கியமானவை. அந்த நிலையில் நாம் சிந்திக்கவேண்டும். 'என்னைப் பற்றி அக்கறையே இல்லை' என்று அலுத்துக் கொள்ளக் கூடாது. சிறிது ஆரஅமர இருந்து சிந்தித்தீர்களானால் கோபம் உங்கள் மனதிலேற்படுத்திய கொந்தளிப்பினால் உங்கள் மேலே காட்டப்பட்ட அக்கறையை நீங்கள் உணரத் தவறிவிட்டீர்கள் என்பது புலப்படும்.

புதிதாகத் திருமணமான பெண்களைப் பொறுத்த வரை இதுவரை தம் பெற்றோருக்குச் செய்த பணிவிடைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது கணவனில் அக்கறை காட்ட நேரிடுகிறது. சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்ச்சி இன்னும் எனது மனதில் பசுமையாக இருக்கிறது. எனது நெருங்கிய உறவுப் பெண்ணுக்குத் திருமணம் நடந்தது. திருமண நாளன்று எனக்குப்போக முடியவில்லை. பின்னர் ஒருநாள் போயிருந்தேன். மணமகளின் அம்மா காலமாகிவிட்டதால் ஒரே மகளான அவள்தான் வீட்டு வேலைகளெல்லாம் செய்வாள். தந்தைக்கு ஒரு காலில்லை.

தந்தைக்கு உணவு பரிமாறுவதற்காக கைகழுவச் செய்து தட்டை எடுத்து வைத்துக் கொண்டிருக்கையில் வெளியே சென்ற மணமகன் உள்ளே வந்து தனது அறையை நோக்கிச் சென்றார். அவள் தொடங்கிய வேலையை அப்படியே விட்டுவிட்டு, அவரின் பின்னே சென்றாள். கணவனின் தேவைகளைக் கவனித்து உணவு பரிமாறி அவர் உணவு உண்ட பின்தான், அவள் தந்தையின் அறைக்கு வந்தாள். நான் உணவு பரிமாறுவதையும் அவளின் தந்தை விரும்பவில்லை. அதுவரை வெறும் தட்டின் முன் உட்கார்ந்து என்னுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வுக்கு யார் காரணம்? மணமகன் தவறு செய்ததாக நான் கருதவில்லை. புதிய வீட்டின் சூழலைப் புரிந்து புதிய உறவுகளுடன் நெருங்கிப் போக இங்கு பெரும்பாலான ஆண்களுக்கு நீண்ட நாள்கள் தேவைப்படுகின்றன. பாரததேசத்தின் புகுந்த வீட்டில் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்களென்றால், இங்கு மேற்குறித்த காரணத்தினால் பிறந்த வீட்டில் பல சிக்கல்களில் சிக்கித்தவிக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் திருமணமாகித் தாம் வாழ்கின்ற வீட்டு நிலையை அறிந்து கொண்டு, மனைவியின் உறவினருடன் ஆண்கள் பாசமாகப் பழக ஆரம்பிக்கவேண்டும். மனைவி செய்யவேண்டிய மற்றக் கடமைகளுக்கும் உதவுவோராக இருக்கவேண்டும். மனைவி வீட்டு உறவினருக்குப் பணிவிடை செய்ய வேண்டியிருக்கலாம். காரியாலயத்தில் பணியாற்றுபவளானால் அந்த வேலைகள் ஏதாவது இருக்கலாம். இவற்றுக்குக் குறுக்கே நிற்கும் ஒருவனாகக் கணவன் அமையக்கூடாது. இத்தகைய புரிந்துணர்வு வீட்டில் ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும்.

ஈஸ்வரி

## மன்னித்து வாழ்ந்து மனிதராவோம்!

இன்று மன்னித்தல் என்பது நம் எல்லோரிடமும் மிக அரிதாகவே காணப்படுகின்றது. 'பிறர் குற்றங்களை நீ மன்னிப்பது போலவே உன் குற்றங்களும் மன்னிக்கப்படும் என்பது' கிறீஸ்தவர்களின் இறைவாக்கு. இவ்வாறே ஏனைய மதங்களிலும் மன்னித்தல் இறைவனுக்கு ஏற்புடைய ஒன்று என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆனால், இன்று நாம் மன்னிக்க மறந்தவர்களல்ல. மன்னிக்க மறுக்கும் மனிதர்களாகவே காணப்படுகின்றோம்.

*'மன்னிக்கக் காத்திருப்பவன் - இறைவன்*
*மன்னித்து வாழ்பவன் - புனிதன்*
*மன்னிக்க நினைப்பவன் - மனிதன்*
*மன்னிக்க மறந்தவன் - பைத்தியக்காரன்*
*மன்னிக்க மறுப்பவன் - மிருகம்'* என்ற நற்கருத்தொன்றைப் பெரியவர் ஒருவர் கூறக்கேட்டேன்.

புனிதனாக வாழ முடியாவிட்டாலும் மனிதனாக வாவது நாம் வாழ முயலவேண்டும்.

தவறு செய்யாதவர்கள் யாருமேயில்லை என்பதை நாம் முதலில் உணரவேண்டும். தவறுகளை மன்னித்து வாழும் போது, நம் குடும்ப உறவு மட்டுமல்ல நம் நட்பு, சூழல் எல்லாமே எம்மை விட்டு அகலாமல் இருக்கும்.

ஒருவர் எமக்கெதிராகக் குற்றம் செய்தால் இதே போன்ற ஒரு செயலை, குற்றத்தை, நாம் செய்த சந்தர்ப்பத்தை மீண்டும் நினைவு கூருவோம். இதனால் எமக்கெதிராகச் செய்த குற்றம் ஒன்றுமேயில்லாமல் ஆகிவிடும்.

ஒருவர் செய்த பிழையைத் தொடர்ந்து நினைத்துக் கொண்டேயிருப்பதால் அந்தக் குற்றம் இல்லாமல் போய் விடாது. எனவே, வேறு நல்ல விடயங்களில் நம் கவனத்தைத் திசை திருப்பவேண்டும். வேறு யாருக்காகவும் வேண்டாம், நமக்காக நாமே முயற்சிப்போம்.

ஆம், கோபம் நம் மன உணர்வுகளை மட்டுமல்ல உடலையும் பாதிக்கக்கூடியது. எனவே, கோபத்தை விரட்டி மன்னிப்பளித்து வாழ முயற்சிப்போம்.

சிலர் தங்களுக்கு மற்றவர்களால் இழைக்கப்பட்ட குற்றங்களையெல்லாம் வரிசைப்படுத்தித் தொடர்ந்து நினைத்துக் கொண்டேயிருப்பார்கள். நினைவுகளைக் கிண்டிக் கிளறி வெறுப்பை வளர்த்துக் கொண்டேயிருப்பார்கள். காலப்போக்கில் இது. இவர் என் நண்பி - நண்பன் என்பதைக் கூட மறக்கடித்தும் விடும்.

நாம் வாழும் வரை தவறுவிடக்கூடியவர்களென்றும், நாமும் மற்றவர்களை வேதனைப்படுத்தினோம் என்ற உண்மையை ஏற் றுக்கொண்டோமானால் மன்னிக்கவும் மன்னிப்புக் கேட்கவும் தயங்கமாட்டோம்.

- தீபா



## சந்தியாவின் கடிதங்கள்

### பிரியமுள்ள பிரியாவிற்கு,

அண்மையில் பத்திரிகை ஒன்றில் கட்டம் கட்டப்பட்டு செய்தி ஒன்று வெளியாகியிருந்தது. அச்செய்தி என்னை மட்டுமல்ல நம் நாட்டிலுள்ள அனைவரையும் திகைக்கவும் வேதனைப்படவும் வைத்திருக்கும்.

'இலங்கையில் நாளொன்றுக்கு 4ஆயிரம் கருக்கலைப்புகள்' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி உண்மையில் நாம் வேதனைப்பட வேண்டிய ஒன்றே. அதற்கு முதல் நாள் வெளிவந்த செய்தி ஒன்று 'திருமணமாகாத பெண்களுக்குப் பிறந்த குழந்தைகள் 14 லட்சம் - இச்சாதனை இங்கல்ல; அமெரிக்காவில்' என்றிருந்தது. இதை வாசித்ததும் 'அப்பாடா எமது நாட்டுப் பெண்கள் போற்றப்பட வேண்டியவர்கள். குழந்தைச் செல்வத்தை உயிராகப் மதிக்கின்றார்கள்' என்று எண்ணினேன் - எண்ணினோம்.

அதைப்பற்றி என் தோழிகளுடன் அளவளாவிப் பெருமைப்பட்டேன்.

அது ஒரு நாள் மட்டுமே நடந்தது. மறுநாள் பத்திரிகையின் வந்த செய்தியைப்' பார்த்ததும் வேதனைதான் ஏற்பட்டது. கருக்கலைப்பு சாதாரண ஒரு விடயமா? உலகில் இன்றும்கூடக் குழந்தைச் செல்வத்திற்காக எத்தனையோ தம்பதிகள் ஏங்கித் தவிக்கின்றார்கள். எமக்கு ஒரு மழலை வராதா? அதனை நாம் கொஞ்சி மகிழமாட்டோமா? என்று அங்கலாய்க்கிறார்கள்.

இவர்கள் நடுவில் ஒரு குழந்தையை - கருவை அழிக்க சில இல்லை பல ஆயிரம் பெண்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை மிகுந்த வேதனையைத் தருகின்றது. வருங்காலத்தை வளமாக்குவது, விரும்பி வரவேற்பது, எதிர்கால நம்பிக்கையை வளர்ப்பது, நல்ல சமுதாயம் உருவாக உதவுவது எல்லாமே குழந்தை. அந்தக் குழந்தைச் செல் வத்தை நாம் வெறுக்கலாமா?

அண்மையில் வாசித்த ஒரு தகவல். திருமணமான அன்று கணவன் - மனைவி இருவரும் இணைந்து ஒப்பந்தம் ஒன்று செய்தனர். அதாவது தமக்கு ஒரு குழந்தை மட்டும் பிறந்தால் போதும். ஆனால், அந்தக் குழந்தையுடன் இன்னுமொரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கவேண்டும் என்பதுதான் அந்த ஒப்பந்தம்.

ஒப்பந்தத்தின் படியே அவர்கள் நடந்தும் கொண்டார்கள். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு இரண்டு வயது ஆகும்போது தமது ஒப்பந்தத்தை மறக்காமல் ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுத்தனர்.

இன்றுவரை தமது சொந்தக் குழந்தைக்கும் தத்தெடுத்த குழந்தைக்கும் இடையே எந்தவிதமான பாகுபாடுமின்றி வளர்த்து வருகின்றார்கள். இது ஓர் உண்மைச் சம்பவம். இப்படியான உள்ளங்கள் வாழும் உலகத்தில் உருவாகும் உயிரை அழிக்கும் தாயுள்ளங்களும் இருக்கின்றதென்பது வேதனையைத் தருகின்றதல்லவா?

கருக்கலைப்புக் செய்பவர்கள் ஒன்று, அந்தக் கரு உருவாகாமல் பாதுகாக்க வேண்டும் அல்லது குழந்தையைப் பெற்று, குழந்தைக்காக ஏங்குபவர்களிடம் கொடுக்க வேண்டும் இல்லையா?

பிரியமுடன் சந்தியா

## கல்யாண 'சீசனில்' சில ஆலோசனைகள்

### மணமகளுக்கான மேலும் சில ஆலோசனைகள் இதோ....

- உங்களுடன் இணையவிருக்கும் மணமகனே உலகின் தலைசிறந்த ஆண் மகன் என்பதை மனதில் நிலைநிறுத்துங்கள்.
- தினமும் ஒரு தடவையாவது உங்கள் முகத்தை ஐஸ் தண்ணீரால் கழுவுங்கள். (ஜலதோசம், ஆஸ்மா போன்ற வியாதிகள் உள்ளவர்கள் இதைத் தவிர்ப்பது நலம்)
- உங்கள் பாதங்களில் அதிக கவனம் செலுத்துங்கள் (ஏனெனில் திருமண தினத்தன்று உங்களவர் கால்களை உற்றுப் பார்ப்பார்; மெட்டி அணிவதற்காக)
- வெதுவெதுப்பான நீரில் சிறிது உப்பு கலந்து அதில் உங்கள் கை, பாதங்களைச் சிறிது நேரம் ஊறவிடுங்கள்.
- நகங்கள் மற்றும் ஓர வெடிப்புக்களை ஆழகாகச் சுத்தப்படுத்துங்கள்.
- உங்கள் திருமண ஆடைகளைத் தெரிவு செய்வதில் அதிக கவனத்துடன் செயற்படுங்கள்.
- திருமணத்திற்கான அலங்காரத்தில் கூந்தலுக்கு நிறம் தீட்டுவதைத் தவிர்ப்பது நலம்.
- திருண தினத்தில் உங்கள் மனநிலை மட்டில் அதிக கவனம் செலுத்துங்கள். எக்காரணம் கொண்டும் மனதைச் சோர விடாதீர்கள். ஏனெனில், அன்று எல்லோர் பார்வையும், கவனமும் உங்கள் மேலேயே இருக்கும்.

*அடுத்த வாரம் திருமணத்திற்குச் செல்வோருக்கான சில ஆலோசனைகளுடன் ...*

மேரி

# "...சிங்களவர் செய்த கொடுமைகளே எங்களைப் போராடத் தூண்டியது..."



தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தை பல்வேறுவழிகளிலும் வளர்ச்சியடையச் செய்தவர்கள் சிங்களவர்களே.

தமிழ்மக்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாதிகளும் காடையர்களும் மேற்கொண்ட ஈவிரக்கமற்ற - மனிதாபிமானம் இல்லாத - கொடூரச் செயற்பாடுகளே தமிழினத்திலிருந்து இளம் சமுதாயம் வீறுகொண்டெழுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தன. காலத்துக் காலம் தெற்கில் இனக் கலவரங்கள் என்ற பெயரில் தமிழர்கள் தாக்கப்பட்ட போது - வெட்டியும் கொத்தியும் படுகொலை செய்யப்பட்ட போது - படுகாயப்படுத்தப்பட்டபோது அந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றும் தமிழ்மக்களின் இதயங்களில் தீயை மூட்டின.

அந்தத் தீயே விடுதலை நெருப்பாகி எங்கும் பரவியது. குறிப்பாக 1983 ஆம் ஆண்டு தெற்கில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் தமிழ்மக்கள் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டனர்; துரத்தியடிக்கப்பட்டனர்.

இத்தகைய கொடூரங்களை - இராணுவ அடாவடிகளை சிறு வயதி லிருந்தே கண்டு கேட்டு அதன் மூலம் ஆத்திர உணர்வு கொண்டு விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டவர்களில் ஒருவர் மூத்தபோராளி தமிழவள். தான் இயக்கத்தில் இணைந்து கொள்வதற்கு ஏதுவாக இருந்த காரணங்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார் தமிழவள்.



தமிழவள்

1977 ஆம் ஆண்டளவில் காங்கேசன்துறைக் கடற்கரையில் கொழும்பிலிருந்து தமிழ் ஆக்களை வெட்டிக்கொத்தி காயங்களுடன் கொண்ட வந்து இறக்கிச்சினம் அப்ப எங்களுக்கு ஒண்டுமே தெரியாத வயது.

நாங்கள் கேட்டதுக்கு சிங்களவன் கொழும்பில வெட்டிப் போட்டானாம் எண்ட பதில்தான் கிடைச்சது. பிறகு 83 ஆம் ஆண்டு கொழும்பில கலவரம் நடந்தது. அப்பவும் கப்பலில் கொண்டு வந்து ஆக்களை இறக்கிச்சினம் அப்போது எனக்கு புரிந்து கொள்ளக் கூடியவயது.

அந்தக் கலவரத்தில அடிவாங்கி வெட்டு வாங்கி வந்த ஆக்கள் நடேஸ்வரா கல்லூரியில் வைத்துப் பராமரிக்கப் பட்டனர். அவர்கள் பட்டபாடு களை பார்த்தபிறகுதான் சிங்களவனைச் சுட வேணும் எண்ட கோபம் எனக்குள் வந்தது. அப்போது பல இயக்கங்கள் இயங்கிக் கொண்டிருந்தது தெரியும். ஆனால், எந்த இயக்கமாக இருந்தாலும் சரி துவக்குத் தாறவனிட்ட போனால் சரி எண்ட உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

1983 இறுதிப் பகுதியில் காங்கேசன்துறையில் அப்போது போராளிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. எங்கட மாமாக்கள் சிலர் இயக்கத்தில் இருந்தார்கள். அவர்களிடம் போய் நாங்கள் இயக்கத்துக்கு வரப்போகிறோம் என்று கேட்டோம். அவர்கள் எங்களைத் துரத்திவிடுவார்கள்.

**போராளிகளைக் காண்பதேயே பெருமையாகக் கருதினோம்!**

அந்த நேரததில் போராளிகள் மிகக்குறைவு. ஏசியா சைக்கிளில் சாரம் கட்டிக்கொண்டு வந்தால் எங்களுக்குத் தெரியும்.

எங்கையாவது 'ஏசியா' சைக்கிளைக் கண்டால் பின்னுக்கும் முன்னுக்கும் திரியிறதுதான் எங்கட வேலை. அவர்களைக் கண்டாலே அது எங்களுக்குப் பெருமைதான். ஒவ்வொருவரிடமும் 'இண்டைக்குக் கண்டனான்' எண்டு சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்வோம்.

**பொலீஸ்காரரின் அடாவடி!**

எங்கட வீட்டில இருந்து 600 மீற்றர் தூரத்தில் பொலீஸ் நிலையம் இருந்தது. அங்க இருக்கின்ற பொலீஸ்காரர் நாங்கள் பள்ளிக்கூடம் போகேக்க பல்லைக்காட்டுவாங்கள், பகிடிவிடுவாங்கள். எனக்கு ஒரே எரிச்சலா இருக்கும்.

எங்கட அக்காவும் நானும் ஒருநாள் பள்ளிக்கூடம் போகேக்க பொலீஸ்காரர் பகிடி விட்டாங்கள். எனக்கு ஆத்திரம் வந்திட்டுது. கண்டபடி அவங்களைப் பேசிப்போட்டு வந்திட்டன்.

எங்கட வீட்டுக்கு இயக்கக்காரர் வாறவை. எங்கையாவது இராணுவத்துக்கோ பொலீஸ்காரருக்கோ அடிச்சா இஞ்ச எப்ப அடிக்கப்போறீங்கள் எண்டுதான் கேப்பன். அவ்வளவுக்கு அவங்களில் ஆத்திரம்.

**சுதந்திரப் பறவைகளோடு இணைந்து கொண்டேன்**

அதற்குப் பிறகு நான் சுந்திரப் பறவைகள்' அமைப்போடு இணைந்து கொண்டேன். எங்களுக்கு முதல் அதிலே இருந்தவர்கள் ஆயுதப்பயிற்சி பெறுவதற்குப் போனார்கள். அவர்களது பணிகளை நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டோம். எங்களுக்கு ஆயுதப்பயிற்சி தரச்சொல்லி திலீபன் அண்ணாவிடம் கேட்டோம். முதலில் போனவர்கள் பயிற்சி முடித்து வரும் வரைக்கும் இந்த வேலையைத் தான் செய்ய வேணும் எண்டு அவர் எங்களுக்குச் சொன்னார்.

அந்த வேலைகளைச் செய்து கொண்டிருந்த போது 6,7 மாத காலத்துக்குப் பின்னர் - இந்திய இராணவத்தினர் இங்கு வந்தார்கள் அவர்களின் வருகையோடு அந்த வேலைகள் எல்லாம் இடைநிறுத்தப்பட்டன.

**இயக்கத்தில் சேர்வதற்கு நாங்கள் பட்டபாடு....!**

அதுக்குப்பிறகு இயக்கத்தில் சேர்வதற்கு நாங்கள் பட்டபாட்டை சொல்லேலாது. இயக்க அண்ணாக்களிடம் எங்களைச் சேர்க்கச் சொல்லிக் கெஞ்சிக் கேட்டோம். கேட்டும் பலனில்லாமல் போய்விட்டது. பிறகு நாங்கள் காங்கேசன்துறையில் இருந்து மயிலிட்டிக்கு வந்து இருந்தனாங்கள்.

இந்திய இராணுவத்தின் சண்டை தொடங்கி விட்டது. சில நாள்களுக்குப் பிறகு கடலுக்குள்ளால் காட்டுக்குள் போவதற்காக அக்காக்கள் கொஞ்சப்பேர் மயிலிட்டியில வந்து நின்றார்கள். அவர்களுக்குச் சாப்பாடு சமைத்துக் கொடுத்தோம். அப்பவும் அவர்களைப் பார்ப்பதற்கு ஆசையாக இருந்தது. ஆனால், போய் பார்ப்பதற்கு முடியாமல் இருந்தது.

பலாலி இராணுவ முகாமுக்கும் காங்கேசன்துறை இராணுவ முகாமுக்கும் இடையிலான போக்குவரத்துப் பாதைக்குக கிட்டத்தான் அவர்கள் இருந்தார்கள். நாங்கள் ஓடிப்போய் அவர்களை எட்டிப் பார்த்தால் ஆமிக்காருக்குத் தெரிஞ்சிடும். அதால எங்களை அங்க போகவிட மாட்டினம். சாப்பாட்டை சமைத்துக் கொடுத்து விடுவோம். எப்படியாவது அங்கு கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள்.

அவர்களோடு சேர்வதற்கு எவ்வளவோ பாடுபட்டோம். ஆனால், அப்போது அது எங்களால் முடியாமல் போய்விட்டது. இந்திய இராணுச் சண்டை உக்கிரமடைந்த பிறகு 8 மாதங்களாக இருக்கத்துக்கும் எங்களுக்குமான தொடர்புதுண்டிக்கப்பட்டிருந்தது. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் அவர்களுக்கு என்ன நடந்தது எதுவுமே தெரியாத நிலைமை.

**மூத்த பெண்புலிகளின் அனுபவப் பகிர்வுகள் 08**

அதற்குப் பிறகு தான் மீண்டும் தொடர்பு ஏற்பட்டது. அப்போது நாங்கள் இடம் பெயர்ந்து போய் ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்தோம். எங்களுடைய வீட்டுக்காரருக்கு என்னால் ஏதும் பிரச்சினை வந்துவிடுமோ என்ற பயம் இருந்தது. அதேபோல எங்களுடைய வீட்டுரைக்காரருக்கும் தங்களுடைய கண்ணுக்கு முன்னால் எனக்கு ஏதேனும் நடந்து

**சந்திரமதனா**

விடுமோ என்ற பயம் இருந்தது.

அப்படியிந்த போது அம்மாவே என்னிடம் சொன்னார். "நீ எங்கையாவது போறதென்றால் போ. எங்கட கண்ணுக்கு முன்னால உனக்கு ஒண்டும் நடந்திடக் கூடாது. எங்களுடைய மாமாவைப் பிடித்துக் கொண்டுபோய் எங்களைக் கேட்டு அவருக்கு அடிச்சவங்கள். அதனால், அவங்களுடைய அடுத்த இலக்கு நான் தான் என்று எனக்கு விளங்கிவிட்டது.

அப்போது நாங்கள் மாதகலில் இருந்தோம். பயிற்சிக்காக வல்வெட்டித்துறைக்குச் செல்ல வேண்டியிருந்தது. அங்கிருந்து இயக்கத்துடன் வல்வெட்டித்துறைக்கு போக வேண்டாம் என்று வீட்டுக்காரர் சொன்னார்கள். சொந்தக்காரர் வீட்டை போறம் எண்டு சொல்லி நாங்களே கொண்டு போய் அங்குவிடுகிறோம் என்று வீட்டுக்காரர் சொன்னார்கள். பிறகு அம்மாதான் என்னைக் கூட்டிக் கொண்டு போய் இயக்கத்திடம் கையளித்தார்.

*(அனுபவங்கள் இன்னும் வரும்)*

## செம்மணியில் புதைந்தோருக்காக...!

நீங்கள் கைதடி நாவற்குழி ஊடாக - கண்டி வீதியால் செம்மணி நோக்கி வந்து கொண்டிருக்கிறீர்கள்...

செம்மணி வெளிக்கு வந்து விட்டீர்கள்... இப்போது உங்களுக்கு இடது புறமாக கொஞ்சத் தூரத்துக்கு அப்பால் உங்களின் பார்வையை விடுங்கள்..

ஒரு பனங்கூடல் தெரியும். அங்கே ஒரு பெரிய ஆலமரம் விழுதெறிந்து கிளை பரப்பி நிற்கிறது... அருகில் ஒரு கட்டடம்...

ஆலமரத்துக்கு பக்கத்தில் பனை வடலிகள்

சரி, அதுக்கென்ன...? என்று நீங்கள் கேட்பது தெரிகிறது...

அந்த ஆலமரமும் அதனைச் சூழ்ந்திருக்கின்ற பனை வடலிகளும் சாதாரணமானவையல்ல...

அவற்றுக்குப் பெரும் வரலாறே இருக்கிறது.

2000ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை அரச படைகளிடமிருந்து விடுவிடுப்பதற்காக மேற்கொண்ட பெரும் நடவடிக்கையில் தென்மராட்சிப் பிரதேசம் புலிகளின் கைகளில் வீழ்ந்திருந்தது.

பின்னர் மீண்டும் பல்குழல் எறிகணைகள் சகிதம் படையினர் சாவகச்சேரி நகரை ஆக்கிரமித்து விட்டார்கள்.

புலிகளின் மகளிர் அணி ஒன்று செம்மணியில் நின்று கொண்டிருந்தது.

செம்மணி வெளியில் - நான் முன்னர் குறிப்பிட்டிருந்த பனங்கூடல் பகுதியில் - அந்த மகளிர் அணி நின்றது.

தாக்குதலுக்குத் தயாரான நிலையில் செம்மணியில் அன்றிரவு பதுங்கு குழிகளை அமைக்கும் வேலையில் பெண்புலிகளின் அணி ஈடுபட்டிருந்தது.

முதலாவது குழி சுமார் இரண்டரை அடி ஆழத்துக்கு வெட்டப்பட்டபோது அதற் குள் மனித எலும்புக்கூடு.. அதை அப்படியே விட்டு விட்டு கொஞ்சம் தள்ளி மற்றொரு குழி.. அதற்குள்ளும் எலும்புக்கூடு. அதையும் அப்படியே விட்டு இன்னும் கொஞ்சம் அப்பால்...

அதற்குள்ளும் எலும்புகள் தான்... ஒன்றுமே செய்யமுடியாது. எங்கும் இதே நிலைமையாகத்தான் இருக்கும்...

இரண்டு குழிகளுக்குள் இருந்த எலும்புகளையும் அள்ளி மூன்றாவது குழிக்குள் போட்டு விட்டு அங்கு பதுங்கு குழிகள் அமைக்கப்படுகின்றன.

அனைத்துப் போராளிகளினது முகங்களிலும் சோகம்... அதோடு சேர்ந்து கோபம், ஆத்திரம், ஆவேசம்...

"...எங்கட உறவுகளுக்கு இப்பிடிச் செய்து போட்டாங்களே..."

தங்களுக்குள் ஒவ்வொருவரும் குமுறுகிறார்கள்...

அங்கு நின்ற அணிக்கு பொறுப்பாக இருந்தவள் சீத்தா.

"... செம்மணியை நாங்கள் இனி ஆமியிடம் விடக்கூடாது. விட்டால் திரும்பவும் அவங்கள் எங்கட சனத்தை இதுக்குள்ள கொண்டு வந்து புதைப்பாங்கள்..."

சகபோராளிகளுக்கு ஆவேசமாகக் கூறினாள் சீத்தா...

மறுநாள் அங்கு சண்டை தொடங்குகிறது... செம்மணிச் சந்திப் பக்கம் இருந்து பனங்கூடல் நோக்கி கரைக ஆயுதங்களுடன் இராணுவத்தின் பெரிய அணி ஒன்று நகர்வைத் தொடங்குகிறது.

ஆலமரக்கூடலுக்குள் 40மி.மீ ஷெல்லுடன் சீத்தா. அதிலிருந்து ஆங்காங்கே பனங்கூடல்களுக்குள் ஏனைய போராளிகள். சண்டை உக்கிரமடைந்தது. அங்கு நின்று தொடர்ந்து சண்டை செய்வதற்குரிய சூழல் இல்லாததால் அனைவரையும் பின்னால் நகர்ந்து வந்து விடுமாறு பிரதான தளபதியின் உத்தரவு கிடைக்கிறது...

அதற்கமைவாக பெண்புலிகள் அனைவரும் பின்பக்கமாக நகர்ந்து தமது ஏனைய படையணிகளோடு இணைகிறார்கள்.

சீத்தாவைக் காணவில்லை. ..

சீத்தாவின் வோக்கியுடன் தொடர்பு கொண்டார் பிரதான தளபதி விதுஷா.

"... எல்லா பிள்ளையளும் வந்திட்டினம் நீர் மட்டும் ஏன் வரேல்ல...? உடன பின்னுக்கு வாங்கோ..." தளபதி கண்டிப்பாகக் கூறுகிறார்.

"...இல்லையக்கா நான் வரேல்ல... நான் ஆலமரத்துக்கு கீழ - கூடலுக்குள்ள நிக்கிறன். அவங்கள் கனபேர் வாறது எனக்குத் தெரியுது. ஆனால், அவங்களுக்கு என்னைத் தெரியாது. நான் விட்டிட்டு வந்தா இவங்களுக்குப் பாடம் படிப்பிக்கேலாது... என்னட்டை கனக்கச் ஷெல் கிடக்குது. அடிச்சுக் கொண்டிருக்கிறன். நான் அடிக்கிற ஒவ்வொரு செல்லுக்கும் இருபது பேருக்குக்கிட்ட விழுகிறாங்கள்... எனக்குத் தெரியுது. நான் வரமாட்டன்..."

பிடிவாதமாக மறுத்தாள் சீத்தா...

கொஞ்சம் கொஞ்சமாக இராணுவ அணிகள் ஆலமரத்தை நெருங்குகின்றன.

வோக்கியில் தனது தளபதிக்குச் சொல்லிச் சொல்லியே ஷெல்களை அடித்துக் கொண்டிருந்தாள் சீத்தா...

இப்போது சீத்தா இறுதியாகச் சொல்கிறாள்.

"... அக்கா என்னட்டை ஷெல் முடிஞ்சுது. நான் என்னால இயன்றளவு ஆமிகாரைக் கொண்டிட்டன். ... இனி நான் என்னை அழிச்சுக் கொள்ளப்போகிறன் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்...."

சுமார் நூறு வரையான இராணுவத்திரைத் அழித்து விட்டு இறுதியாகத் தன்னைத் தானே அழித்து வீரச்சாவடைந்தாள் மேஜர் சீத்தா...

# தமிழ் ஈழத்தின் முக்கிய தினங்கள் டென்மார்க்கில் சிறப்பாக அனுஷ்டிப்பு

டென்மார்க் 'போய்ரப்' காட்டுப்பகுதியில் வாழும் மூதாட்டியின் பெயர் திருமதி லில்லி ஜோன். இவரது


மூதாட்டி லில்லி ஜோன்

வயது 65ஆகும். இவர் வைத்தியசாலை ஒன்றில் சமையல் வேலை செய்துவந்தார். இவருக்கு மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும். மூவரும் திருமணம் முடித்துச்சென்று விட்டனர். இவரது கணவர் வாகனங்களின் 'றிம்' தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரும்புவகைகளை இறக்குமதி செய்வதற்குப் பொறுப்பான அதிகாரியாகச் செயற்பட்டு வருபவர். இதற்காக அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டியிருப்பதால் வீட்டில் தங்குவது குறைவு. இதனால் மூதாட்டி தனியாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இவரது கணவரும் மாதத்தில் ஒருமுறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறைதான் வீட்டிற்கு வருவார். மூதாட்டியின் வீடு 1872ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1937ஆம் ஆண்டு ஹிட்லரின் ஜேர்மன் படைகளால் இந்த வீடு ஆக்கிரமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


மூதாட்டியின் வீட்டில் உள்ள ஹிட்லர் கால ஆயுதங்கள்...

ஹிட்லரால் பயன்படுத்தப்பட்டு விட்டுச் செல்லப்பட்ட பொருள்கள் பலவும் வீட்டின் உட்சுவரில் அடுக்கப்பட்டிருந்தன. முன்னர் நகரப்பகுதியை அண்டித்தான் மூதாட்டி தன் குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்துள்ளார். பிள்ளைகள் மணம்முடித்துச் சென்றபின்னர் அமைதியான இடத்தைத்தேடி இந்தக்காட்டு பங்களாவிற்கு வந்துள்ளார்.

நகரப் பகுதிகளில் பாரிய இரைச்சலை எந்தநாளும் எதிர்கொள்ளவேண்டி இருக்கும். ஒரே சன சந்தடி.

காட்டுப்பகுதியில் எந்த இரைச்சலுமின்றி அமைதியான சூழலில் பறவைகளின் ஒலிகளைக் கேட்டபடி சுத்தமான தென்றலின் மத்தியில் வாழ்வது மனதுக்கு நிம்மதியைத் தருவதாக அந்த மூதாட்டி கூறுகின்றார். அத்துடன், பறவைகள் மற்றும் வளர்ப்பு மிருகங்களுக்கு உணவு கொடுப்பது வாயில்லா ஜீவராசிகளுக்கு உயிர்கொடுப்பது போன்ற மனநிறைவு தனக்கு தோன்றுவதாகவும் அந்த மூதாட்டி பெருமிதம் கொள்கிறார்.

மிருகங்கள் உதவிக்கு இருப்பதால் தனக்குப் பயம் ஏற்படுவதில்லை எனவும் அவர் கூறினார்.

ஆள்களைச் சந்திக்க வேண்டுமென்றால் இங்கிருந்து 13கிலோமீற்றர் தூரம் செல்லவேண்டும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை 15கிலோமீற்றர் தூரத்திற்குத் தனது காரில் சென்று இந்த மூதாட்டி வாங்கி வருவார்.

தனிமையில் இருக்கும் சமயங்களில் எப்போதாவது உங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுள்ளதா என நாம் கேட்டதற்கு -

ஒருமுறை எனக்கு தலைச்சுற்று ஏற்பட்டது .அப்போது தொலைபேசி மூலம் வைத்தியரின் உதவியை நாடித் தப்பிக்கொண்டேன். அந்தவேளையில் எனக்கு தலையில் பாரிய காயம் ஏற்பட்டது. மற்றொருமுறை மூளையில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டது .அப்போது எனது கணவர் வீட்டில் இருந்தார்.

இன்னொரு நாள் எனது குதிரைகளில் ஒன்று தூர இடத்திற்கு ஓடிவிட்டது. அதனைப்பிடிப்பதற்கு நான் பெரிய சிரமப்பட வேண்டியதாயிற்று. அப்போதுதான் எனது தனிமையின் கொடுமையை உணர்ந்தேன். அதன்பின்னர் இறைவனின் கருணையால் தற்போது எதுவித குறையுமின்றி வாழ்கின்றேன். என்றார் அந்த மூதாட்டி.

தீவிரப் போக்கு இன்றி அமைதியான வாழ்க்கையை விரும்பும் இந்த மூதாட்டி. "டென்மார்க்கிற்கு வெளிநாட்டவர்கள் வரக்கூடாது என அரசு நினைக்கின்றது. வெளிநாட்டவர்களுக்கு நாங்கள் எதிர்ப்பானவர்கள் அல்லர். எல்லோரும் ஏற்றுக்கொண்டால் நாமும் அவர்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்றார்.

விடைபெறமனமின்றி மூதாட்டியிடம் விடைபெற்றோம். மூதாட்டியும் கைகளை அசைத்து எம்மை வழியனுப்பிவைத்தார்.

டென்மார்க்கில் எல்லாப் பகுதிகளிலுமே எமது தமிழீழக் காற்று வீசிக்கொண்டுதான் இருக்கிறது. தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. எமது தேசத்தின் பற்றோடு பல உறவுகள் வலம் வருகின்றன.

கடந்த ஆண்டு ஆரம்பத்திலே கார் விபத்தொன்றில் சிக்கி கணேசையா விமலேஸ்வரன் என்ற தமிழ்பற்றாளர் ஒருவர் மரணமடைந்தார். அவருக்கு தேசியத் தலைவர் நாட்டுப்பற்றாளர் என்ற கௌரவத்தை வழங்கியிருந்தார். அவரை நினைவு கூர்ந்து டென்மார்க்கின் 'வயன்' என்ற நகரில் கல்லறை ஒன்று அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மிகவும் அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கல்லறையை நோக்கும்போது இது டென்மார்க் தானா என எண்ண வைத்தது - அருகில் டெனிஸ்காரர்களின் கல்லறைகளும் காணப்பட்டன. அவற்றின் மத்தியில் வித்தியாசமான முறையில் இது அமைக்கப்பட்டிருந்ததுடன் நாட்டுப்பற்றாளரின் புகைப்படமும் அந்தக் கல்லறையின் மேல் பதிக்கப்பட்டிருந்தது.

டென்மார்க்கின் சில நகரங்களில் தியாகி திலீபனின் நினைவு தினம் , கரும்புலிகள் தினம், மாவீரர் தினம் என எமது தாயகத்தில் அனுஷ்டிக்கப்படும் நிகழ்வுகள் அனைத்தும் நினைவு கூரப்படுவது வழமை. அத்துடன் இந்த நினைவு தினங்களுக்குரிய விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிகழ்வுகளில் எம்மவர்கள்




ஆர்வத்துடன் கலந்து கொள்வதில் பின் நிற்பதில்லை. அண்மையில் டென்மார்க்கின் கிறின்ஸ்ரற் (Grindsted) என்ற நகரத்தின் மைதான மொன்றில் இப்பகுதியில் உள்ள தமிழர்களினால் தமிழர் கலாசார விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றினர்.

எமது பாரம்பரியத்தை நினைவுகூரும் முகமாக கயிறு இழுத்தல், சங்கீதக்கதிரை போன்ற விளையாட்டுக்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



டென்மார்கில் உள்ள நாட்டுப்பற்றாளரின் கல்வெட்டு

இவ்விழாவில் கலந்துகொண்டவர்கள் 'தமிழர் கலாசார அமைப்பு' என பொறிக்கப்பட்ட 'ரிசேர்ட்' களை அணிந்திருந்தனர். நிகழ்வின் நிறைவில்

டென்மார்க்கிலிருந்து
**பகீர்**

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சரி, அடுத்த தொடரில் டென்மார்க்கின் முக்கியமான மூன்று இடங்களுக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன் பொறுத்திருங்கள்.

*(வளரும்)*

# பிரளயத்தை நோக்கிய கலியுகத்தின் கடுகதி வேகம்!

③ தண்ணீருக்கும் காசு கொடுத்து வாங்கிக் குடிக்கும் நிலை. அடுத்து பூமியின் வெப்பநிலை அதிகரித்து வெப்ப வலய நாடுகளில் சாவுகள் மலிந்துவிட்டன. காற்றில் மாசுக்கள் கரைந்தும் கலந்தும் சூழல் மாசுபட்டுள்ளது. விண்ணில் நடக்கும் ஆய்வுகளால் மாசுபடல் மேலும் அதிகரித்துள்ளது. விண்கற்களின் சூழற்சியும், கோள்களின் திசை மாறிய இயக்கமும் மோதல்களை ஏற்படுத்திவிடுமோ என்ற பீதியைத் தோன்றுவித்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சூக்குமமாக இருக்கும் ஒரு விடயத்தையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது தீநெறி ஓங்கிப் பரவும் காலங்களில் இயற்கை மரணங்களை விட, போர், கொலை, பட்டினி, இயற்கை அனர்த்தங்கள் விபத்துகள் போன்றவற்றாலே அதிக சாவுகள் ஏற்படுகின்றன. இதனால், இயற்கை மரணம் நடைபெறவெனக் குறிக்கப்பட்ட காலத்திற்கு முன்னரே 'அவமிருந்து' ஏற்பட்டு மக்கள் மரணிக்கின்றனர். இதனால், உடலை விட்டுப்பிரிந்த ஆத்மாக்கள் குறித்த காலம் வரும் வரை பிறிதோர் உடம்பு எடுக்காமலே பழிவாங்கும் நோக்கமாகச் சூக்கும சக்தியாக இயங்குகின்றன. இந்த சக்திகள் யாவும் கூட்டாகப் 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற முனைப்புடன் செயற்படுகின்றன. ஆவி உலகம் பேய், பிசாசு, பில்லி, சூனியம் என்றெல்லாம் கூறப்படுவதை இன்று அறிவியல் உலகும் ஆய்வு செய்கின்றது.

தற்காலத்தில் கணிப்பீடுகளுக்குப் பஞ்சமே இல்லை. அரசியல், பொருளாதாரம், நாட்டு நடப்புகள் என்பவற்றில் கணிப்பீடுகள் செய்து இப்படித்தான் நடக்கும் என்று கூறிவிடுகின்றனர். அப்படி நடந்தும் விடுகின்றது. ஒரு பிரளயத்தை நோக்கித்தான் கலியுகத்தில் கருமங்கள் நடைபெறுகின்றனவா? என்று தற்போது ஒரு கணிப்பீடு செய்து பார்த்தால் நிச்சயமாக அந்தக் கணிப்பீடு பிரளயம் ஒன்று வரப்போவதையே உறுதிப்படுத்தும் என்பதில் எந்த வித சந்தேகமுமே இராது.

'பாவம் செய்யாதிரு மனமே நாளைக் கோவம் செய்தே யமன் கொண் டோடிப் போவான்''

என்ற பாடல் வரிகள் பாவம் அதிகரித்தால் யமனுக்குக் கோபம் அதிகரிக்கும் என்பதை ஞாபகப்படுத்துகின்றது. இயற்கையின் குறியீடாகவே யமன் என்ற பதம் இங்கு பாவிக்கப்பட்டுள்ளது. இயற்கை சீற்றமடைந்தால் ஒரு சில மணித்துளிகளில் எல்லாவற்றையும் சர்வசங்காரம் செய்துவிடும். மனிதனின் அறிவியற் சக்தியோ அல்லது வேறெந்த மனித வலுவோ இயற்கையின் சீற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அண்மையில் ஏற்பட்ட 'சுனாமி' இதனைப் தத்ரூபமாக நிரூபித்துள்ளது.

'மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு மனிதன் பாவமென்று' என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் சிந்தனையைத் தூண்டுவனவாகும். பூரணமான ஓர் ஒடுக்கமோ அல்லது பரவலான பேரழிவோ நடக்கப்போகிறது என்பது உறுதியாச்சு. காலமும் இடமும் இதனைக் கடுகதியாக்கியிருக்கிறது. நேரத்தை நாம் குறிக்க முடியாது.

''மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்பது குறட்பா வரி. செய்த வினைகளெல்லாம் திரண்டு போகூழக வரப்போகிறது. இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா வீசிய அணுக்குண்டு கிரோசீமா, நாக சாகி என்ற, யப்பானிய நகரங்களைத் துவம்சமாக்கியது. இன்னும், என்றும் அந்த வடுக்கள் மாறாவகையில் கதிர்வீச்சுகளினால் கொடிய நோய்கள் ஏற்பட்டவண்ணமே இருக்கின்றன. உலக நாடுகள் இரண்டு அணிகளாகச் சேர்ந்து முன்னர் நடந்தது போன்ற ஒரு பேரழிவை உண்டாக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை நாம் தவிர்க்க முடியாதுள்ளது.

சகல செயற்பாடுகளிலும் ஏட்டிக்குப் போட்டியாக வல்லரசுகளும் விஞ்ஞானிகளும் ஈடுபட்டு வருகின்றனர். பத்தாவது கிரகமொன்றும் கண்டுபிடிக்கப்பட்டாயிற்று. ஆளில்லாத விண்கலங்கள் கோள்களை ஆய்வு செய்வதற்காக அனுப்படுகின்றன. வேற்றுக் கோள்களில் குடியேறவும் கடலுக்கடியில் வீடு கட்டி வாழவும், காற்றில் மிதக்கும் குடிசைகள் கட்டவும், எத்தனங்கள் செய்யப்படுகின்றன. இத்தனைக்கும் மேலாக வேறு கிரகங்களிலிருந்து பறக்கும் தட்டுகளில் எவரெவரோ வந்து போவதாகவும் அறியக்கிடக்கிறது. இவற்றையெல்லாம் தெரிந்து கொண்ட ஒரு மூதாட்டி ஒருவர் என்னைப் பார்த்துக் கேட்டார் 'எட தம்பி இந்தக் கொள்ளையில் போவார். கோதாரியில போவார். அம்மை விளையாட்டில போவான். சும்மா இராமல் ஏண்டா இதையெல்லாம் செய்து உலகத்தை அழிக்கப் பார்க்கிறார்கள்'' என்று இந்தக் கூற்றில் அர்த்தமில்லாமலில்லை. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு இயற்கை தந்த வசதிகளை - பயன்படுத்தி எல்லோரும் இன்புற்றிருக்க காணாமல் - பொல்லாப்பெல்லாம் செய்து கூண்டோடு அழிவதற்காக அறமற்ற - வாழ்வை நிலையென வாழ்ந்தால் இந்த உலகம் மண்மூடிப்போகும்.

'தீங்கான வழி முறையில் தினமும் ஈடுபட்டு
ஆங்காரம் கொண்டு ஆசையில் வாழ்ந்துவந்தால்
தாங்காது பூமி சாமி பொறுக்காது
நீங்காது துன்பம் நிச்சயம் அழிவுவரும்''


– நாக.சண்முகநாதபிள்ளை

*(முற்றும்)*

# முதுகெலும்பில்லா உயிரினங்கள்

நமக்கு நடுமுதுகு நெடுகிலும் முதுகெலும்பு அமைந்துள்ளது. அவ்வாறே சில உயிரினங்களுக்கும் முதுகெலும்பு உள்ளது. ஆனால், இவ்வுலகில் பல உயிரினங்களுக்கு முதுகெலும்பு கிடையாது. இவற்றை முதுகெலும்பில்லா உயிரினங்கள் என்பார்கள். உலகில் சுமார் பத்து லட்சம் உயிரினங்கள் உள்ளன. இவற்றுள் சுமார் எட்டு லட்சம் இனங்கள் முதுகெலும்பில்லாதவை.

முதுகெலும்பு இல்லாதது மட்டுமே இந்த உயிரினங்களுக்குள் உள்ள ஒற்றுமை. உடலமைப்பு, உண்ணும் உணவு, உண்ணும் முறை, இயங்கும் விதம், வாழும் இடங்கள் முதலிய மற்ற இயல்புகளில் இவை ஒன்றுக்கொன்று மிகுந்த வேறுபாடு உள்ளவை. அவ்வேறுபாடுகளின் அடிப்படையில் முதுகெலும்பில்லா உயிரினங்களைப் பல தொகுதிகளாகப் பகுத்துள்ளனர். அவற்றுள் மிகவும் எளிமையான அமைப்புடையவை புரோட்டோ சோவா என்ற தொகுதியாகும்.



புரையுடலிகள் எனப்படும் கடல்பஞ்சுகள் இரண்டாவது தொகுதி. கடல் சாமந்தி , பவளம், ஜெல்லிமீன் போன்ற முதுகெலும்பில்லா உயிரினங்கள், குழியுடலிகள் என்னும் தொகுதிகளைச் சேர்ந்தவை.

தட்டைப் புழுக்கள் என்பவை மற்றொரு தொகுதி. இவற்றின் உடல் தட்டையாக இருக்கும் நாடாப்புழு, ஈரல் புழு போன்றவை இத் தொகுதியைச் சேர்ந்தவை. நாக்குப் பூச்சி, நெல்வால்பூச்சி, கொக்கிப் புழு, நரம்புச் சிலந்திப் புழு முதலியவை உருண்டைப் புழுக்கள் என்னும் தொகுதியில் அடங்கும். இவற்றின் உடல்கள் உருண்டையாகவோ நூல்போன்றோ இருக்கும். மண்புழு, அட்டை போன்ற வற்றின் உடல், கண்டங்கள் கொண்டதாக இருக்கும். இவை வளையப் புழுக்கள் என்ற தொகுதியைச் சேர்ந்தவை.

சிப்பி, கிளிஞ்சல், நத்தை, ஆளி, கடம்பான் முதலியவற்றுக்குச் சுண்ணாம்புப் பொருளாலான ஓடுகள் உள்ளன. இவற்றின் உடல் மென்மையாக இருக்கும். இவை மெல்லுடலிகள் என்னும் தொகுதியைச் சேர்ந்தவை. இலை அட்டை , சோழி, எண்காலி போன்றவையும் இதில் அடங்கும்.

கடல் முள்ளெலி, கடல் வெள்ளரி, ஒடி நட்சத்திரம், கடல் லில்லி, நட்சத்திர மீன் முதலியவற்றுக்கு உடலின் மேல் குச்சிகளைக் குத்திவைத்தாற்போல் இருக்கும். இவற்றை முள்தோலிகள் என்ற தொகுதியில் அடக்குவர். இவற்றுக்கு இரத்தக் குழாய்களும் கடல் நீர் உட்செல்ல நீர்க் குழாய் மண்டலமும் உண்டு. தலை கிடையாது.

முதுகெலும்பில்லா உயிரினங்களிலேயே மிகப் பெரிய தொகுதி கணுக்காலிகள் ஆகும். இவற்றின் கால்கள் வளர்ந்து பல கணுக்களாக இணைந்திருக்கும். வெட்டுக்கிளி, கரப்பான் பூச்சி, வண்டுகள் முதலியனவும் மற்ற எல்லாப் பூச்சி களும் இத் தொகுதியைச் சேர்ந்தவை.

முதுகெலும்பில்லா உயிரினங்களில் பெரும்பாலானவற்றால் தீமையே உண்டாகிறது. சிலவகைப் புரோட்டோ சோவாக்களும், புழுக்களும் நோய் களை உண்டாக்குகின்றன. பூச்சிகள் நோய்களைப் பரப்புகின்றன. நமது உடைமைகளை நாசமாக்குகின்றன. வண்டுகள் உணவுப்பொருள்களைத் துளைத்து வீணாக்குகின்றன. நமக்கு உதவியாக இருக்கும் முதுகெலும்பில்லா உயிரினங்கள் சிலவும் உண்டு. பட்டுப் பூச்சிகளிலிருந்து பட்டுக் கிடைக்கிறது. தேனீக்கள் தேன் தருகின்றன. நண்டு, இறால் போன்றவை உணவாகின்றன. முத்துச் சிப்பிகளிலிருந்து முத்து எடுக்கிறோம். சங்குகள் ஊதுவதற்கும், அணிகலன்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன. அரக்கு, மெழுகு, வண்ணப்பொடிகள் முதலியன சில வகைப் பூச்சிகளால் கிடைக்கின்றன.

- கவிதா




## கண்டுபிடியுங்கள்



**தம்பி, தங்கைகளே!**

*மேல் உள்ள படத்தில் சில உருவங்கள் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.*

## விடுகதைகள்

- கறுப்புச் சட்டை அணிந்தவனாம்
  கபடம் மிகவும் உடையவனாம்
  ஒருவனை நாம் கூப்பிட்டால்
  ஊரையெல்லாம் அழைத்திடுவான்
  அவன் யார்?
- அத்துவான மேட்டில்
  வித்துவான் குடை பிடிக்கிறான்
  அவன் யார்?
- ஒட்டமாய் ஓடும் உருண்டு உருண்டு ஓடும்
  பள்ளத்தைக் கண்டால் பாய்ந்து பாய்ந்து ஓடும்
  அது என்ன?
- ஒடுது குதிரை ஒளியுது குதிரை
  தண்ணீரைக் கண்டால் தவிக்குது குதிரை
  அது என்ன?

- மதி

விடைகள்:- 1. காகம் 2. காளான் 3. தண்ணீர் 4. நெருப்பு

## செவ்வரத்தம் பூ



செவ் வரத்தம் பூவிதாம்
சிவப்பு நிறப் பூவிதாம்
அழகு தரும் பூவிதாம்
அழகான பூவிதாம்

காலையில் பூக்கும் பூவிதாம்
மாலையில் வாடும் பூவிதாம்
சாமிக்கு சூட்டும் பூவிதாம்
சிறந்த செவ்வரத்தம் பூவிதாம்

**கிருஸ்ணசாமி துளசிகரன்**
யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி.

## சிறுவர்களின் கைவண்ணங்கள்



**இ.லமேரிகா**
தரம் - 1 ஏ,
யா.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



**கௌ.கௌதமி**
தரம் - 1 ஏ,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



**க.நிரோஜினி**
தரம் - 4 ஏ,
யா.பெரிய புலம் மகா வித்தியாலயம்.

## சிந்தனைக்கு...

- **எவ்வளவுதான் கல்வியும் செல்வமும் இருந்தாலும் அடக்கம் இல்லாவிட்டால் அதனால் ஒரு பயனும் இல்லை.**
- **பிறர் நம்மைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதை விட இறுதியில் நாம் எந்த நிலையில் இருப்போம் என்பதே முக்கியம்.**
- **தர்மம் செய்யப் பழகிக் கொண்டால் மனமும் ஆத்மாவும் விருத்தியடையும்.**
- **ஒற்றுமையும் பிறருக்கு உதவி செய்வதும் தான் ஒரு மனிதனுக்கு முக்கியம்.**
- **மனம் சோர்ந்து போவதிலும் காரண மின்றி நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்வதிலும் ஒரு பயனும் இல்லை.**

**செல்வராசா நிஷா**
தரம் - 11டி,
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

## அப்பா



அப்பா என் அப்பா
ஆனந்தம் தரும் அப்பா
இனிய நல்ல அப்பா
ஈகை வள்ளல் அப்பா
உங்களைப் போல் தெய்வம்
ஊரினிலே யாரும் இல்லை
என்னை உயர்த்திடவே
ஏணியாய் நின்ற அப்பா
ஐயம் நீக்கி எனக்கு
ஒழுக்கம் தந்த அப்பா
ஓடம் ஒட்டியதால்
ஔவைக் கன்னம் கொண்ட அப்பா

**கி.இருதய நேசன்**
தரம் - 8 பி, யா/ஊர். புனித அந்தோனியார் கல்லூரி.

## உலக சாதனைகள்

**● உயரமான மனிதன் :-**

- **ஹாஜி முகம்மது ஆலம் சன்னா**
  பிறப்பு : 1953ஆம் ஆண்டு, பாகிஸ்தான்
- **மற்மாஹுட் போல்**
  பிறப்பு : 1962 ஆம் ஆண்டு, சூடான்

**● உயரமான பெண்:-**

- **சாண்டி ஆலன்**
  பிறப்பு : 1955 ஆம் ஆண்டு, கனடா
  உயரம் :- 8 அடி
  எடை : - 210 கிலோக்கிராம்

**● சிறிய மனிதன்:-**

- **குல் முகமது**
  பிறப்பு : 1957 ஆம் ஆண்டு, இந்தியா
  உயரம் : 67 15 சென்ரிமீற்றர் (22.5இஞ்)
  எடை :- 445 கிலோக்கிராம்

**● சிறிய பெண்: -**

- **மட்ஜே பெஸ்டர்**
  பிறப்பு :1963ஆம் ஆண்டு, தென்ஆபிரிக்கா
  உயரம் : 65 சென்ரிமீற்றர்

**● எடை கூடிய ஆண் :-**

- **டி.ஜே. ஆல்பேர்ட் ஜாக்சன்**
  பிறப்பு : 1941ஆம் ஆண்டு, அமெரிக்கா
  எடை : 445 கிலோக்கிராம்

**● எடை கூடிய பெண்:-**

- **ரோசிகார்னே மெல்லா**
  பிறப்பு :1944ஆம் ஆண்டு, அமெரிக்கா
  எடை : 385 கிலோக்கிராம்

**● முதல் சோதனைக் குழாய்க் குழந்தை :-**

- **லூயில் பிரவுண்**
  பிறப்பு : 1978ஆம் ஆண்டு, இங்கிலாந்து

**ம.மொறின் யூடினா**
யா/திருக்குடும்பக்கன்னியர் மடம்.

# தமிழர் பண்பாட்டுச் சடங்காக உயிர்க்கும் பொங்கு தமிழ்...




மனித பண்பாடு என்பது 'ஆளுமையின் வெளித்தோற்றம்' என ரூத் பெனிடிக்ட் கூறுகின்றார். இக்கூற்றினை மெய்யென நிரூபித்துப் புடம் போட்டுக் காட்டியது பொங்குதமிழ் - 2005. இந்த எழுச்சி நிகழ்வு தமிழ் மக்களின் ஒன்றுதிரண்ட ஆளுமையின் வெளிப்பாடாக நிமிர்ந்து நின்றது.

எள்ளுப் பொரியாக தெருவோரமெல்லாம் இறக்கி விடப்பட்ட சிங்கள இராணுவப் படைகளின் மத்தியில், அவசரகாலச் சட்டமென அச்சுறுத்திய பேரினவாத அரசின் நடுவில் நின்று அஞ்சா நெஞ்சுடைய வீரத்தமிழரின் ஆளுமையின் வெளிப்பாடாக பொங்குதமிழ் - 2005 நடந்தேறியது.


இது தமிழ் மக்களின் பண்பாட்டுச் சடங்கு. பிஞ்சுப் பாலகர் தொடக்கம் தொண்ணூறு வயதுப் பாட்டி வரை அனைத்து மக்களும் திரண்ட ஒரு கொண்டாட்டம். மக்கள் சக்தி அணி அணியாக, திரண்டு வந்து தங்கள் ஆசையை உரக்கக் கூறிய விழா. இவ்விழாவின் கதாநாயனாக - இச் சடங்கின் தெய்வமாக - நம் தேசியத் தலைவன் பிரபாகரன். ஒவ்வொரு தமிழ் கரங்களிலும் அவன் திருவுருவப் படம். பொங்கு தமிழுக்கான ஒரு பிரத்தியேக நிறம். பொங்கு தமிழர்கள் கூடி நிற்பதற்காக ஓர் உணர்வுக்களம்... என எல்லாமே பொங்குதமிழ்ச் சடங்கின் பிரதிநிதித்துவங்களைப் பறைசாற்றின.

பொங்குதமிழ் நடைபெற்ற களம் முழுவதும் சிவப்பும், மஞ்சளுமாக உணர்வுமிக்க வர்ணங்கள் புடைசூழ்ந்து இருந்தன. சிவப்பு, மஞ்சள் கொடிகளில் ஈழத்தின் புவியியல் பரப்பும் அதன் நடுவே தலைவன் முகமும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. சடங்கின் கற்பக்கிரகமாய் பன்னிரெண்டு அடி உயரத்தில் பரந்த மேடை, அதன்மேல் மிகப்பெரிதும் பிரமாண்டமானதுமான தலைவன் படம் நிறுத்தப்பட்டிருந்தது. எழுச்சி மிக்க அரங்க இசைப்படை முரசு கொட்டிப் பறை அதிர விண்ணெங்கும் வியாபிக்கும் பொங்குதமிழ் உணர்வு இசை முழங்கியது. அது அந்த மைதானம் முழுவதும் நிறைந்தது. இந்த எழுச்சி இசையின் உணர்வு தொற்றிய மக்கள் வான் முட்ட உரக்கத் தம் ஆசையை கூறினர். ''சூரியத்தேவன் பிரபாகரன்'' என்று விண் கூவிய வேதஒலியாய் மக்கள் வெள்ளத்தின் குரல் ஓங்கி ஒலித்தது. பல்லாயிரக்கணக்கான பிரபாகரன்களாக அவர்களின் கரத்திலிருந்த உருவப்படங்கள் உயிர் பெற்றன.


பொங்கு தமிழ் கொண்டாடிய பல்கலைக்கழக மைதானம் தமிழ் மக்களின் உணர்வுபொங்கும் ஆலயம் ஆகியது. அங்கு ஆண், பெண், இளைஞர்கள், முதியவர்கள், சிறுவர் என எந்தப் பாகுபாடும் இருக்கவில்லை. எல்லோருமே உணர்வுமிக்க 'கலை நிலையில்' கூடிநின்றனர். தேசியத்தின் அங்கீகாரத்திற்காய் தலைவன் பெயரினை மந்திரமாய் உச்சாடனம் செய்து யாகம் வளர்த்தனர்.

### சங்காரச் சடங்கு

இந்துக்களின் ஒவ்வொரு விழாக்களிலும் ஓர் தீய சக்தியுடைய அரக்கனை தெய்வங்கள் சங்காரம் செய்வதுண்டு. அப்படியொரு சங்காரச் சடங்கும் பொங்குதமிழ் - 2005 இல் நடந்தேறியது. சிங்களப் பேரினவாதத்தின் கொடூரமும், இராணுவ ஆக்கிரமிப்பின் பிரதிபலிப்புமாய் உருவாக்கப்பட்ட சின்னம் ஒன்று முப்பது அடி உயரத்தில் கோரமான உருவமாக வைக்கப்பட்டிருந்தது.








பேரினவாதத்தின் கோரங்களைப் பொறுக்க முடியாத மக்கள் வெள்ளம், தங்கள் ஆத்திரத்தை ஒன்று திரட்டி வெளிக்காட்டியது. தடிகளால் எறிந்தும், உருவத்தின் மீது ஏறி அதன் அங்கங்களைப் பிய்த்தும், சின்னாபின்னம் ஆக்கினர். இன்றுவரை தொடராய் அனுபவிக்கும் இன்னல் களுக்கெல்லாம் முடிவுகட்ட எண்ணி விட்டனர் - சிங்கள இராணுவத்தைப் பார்த்து -

*''நடையைக் கட்டு நடையைக் கட்டு*
*அவிழ்த்துக் கட்டி நடையைக் கட்டு*
*சுதந்திர வாசல் திறந்திட வேண்டும் -*

என ஆக்கிரமிப்பாளர் செவிகளுக்குக் கேட்கும் படியாகக் கோஷமிட்டு அசுர உருவை சங்காரம் செய்தனர். அது இத்தனை நாள்வரை தமிழ் மக்களின் மனங்களில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் சுவாலை. 30ஆம் திகதி மட்டும் திடீரென நிகழவில்லை. பொங்குதமிழின் மூச்சுக் காற்றுப்பட்ட பொழுதெல்லாம் புகையத் தொடங்கி மாதத்தின் ஒவ்வொரு நாள்களாய் படிப்படியாக வளர்த்தெடுக்கப் பட்டு பொங் குதமிழ் அரங்கில் அரங்கேறியது. கொழுந்து விட்டு எரிந்தது.

### கலைப்பண்பாட்டுப் பாணி

'பொங்கு தமிழ்' மாதத்தின் ஒவ்வொரு நாள்களிலும் சடங்கிற்கான ஆயத்தங்கள் படிப்படியாக நடைபெறத் தொடங்கின. பொங்குதமிழ் செய்தியைச் சொல்லும் குழுக்களின் படையெடுப்பும், கூட்டங்களும், அரங்க நிகழ்வுகளும், மாநாடுகளும் அலை மோதின. தமிழ் பானைகட்டிய ஊர்திகள் இரவு, பகல் பாராது யாழ்.குடாநாட்டின் சந்து பொந்து எல்லாம் முரசு கொட்டி ஊர்ந்து திரிந்தன. அது பொங்கு தமிழ் செய்தியை மட்டுமல்லாது, ஒரு கலைப்பண்பாட்டுப் பாணியையும் வளர்த்தது.

வீடுகளும் பொது இடங்களும் கடைகளும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தமையும் எல்லா இடங்களிலும் தேசியத்தின் இசைப்பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தமையும் ஓர் இனிமையான உணர்வுதான். பொங்குதமிழ் எழுச்சி நாளில் கலந்து கொள்ள வந்த இலட்சக்கணக்கான மக்கள் சிவப்பு, மஞ்சள் வர்ணம் சார்ந்த உடையணிந்து வந்ததும், குடும்பம் குடும்பமாக வந்து குவிந்ததும் கண்களுக்கு இதமானது. சின்னஞ் சிறுசுகள் சிவப்பு, மஞ்சள் வர்ணமாய் உடை அணிந்து வட்டமிட்டன. அவர்கள் தம் வீடுகளில் தங்களுடைய விளையாட்டு வாகனங்களில் சிறுபானைகளை வைத்து பொங்குதமிழ் ஊர்தியை சோடித்து விளையாடிய சம்பவங்களும் மெய்சிலிர்க்க வைத்தன. அவர்களில் பொங்குதமிழ் அதிர்வு தொற்றியிருப்பதும் எதிர்காலத்தில் அவர்கள் தேசியப்பற்றுடன் வளர்வதற்காமான செய்தியை உறுதிப்படுத்தியது.

இத்தனை ஆசைமிக்க தமிழ் சமூகத்தின் கொண்டாட்டமான பொங்குதமிழ் ஓர் சக்தியும், பெறுமதியும் மிகுந்தது. இதனை சர்வதேசம் தட்டிக்கழிக்க முடியாத ஒன்று. ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்று கிளர்ந்தெழுந்து உணர்வுடன் தமிழ்த்தேசியத்தின் அங்கீகாரத்தினை சர்வதேச உலகிற்குப் பறைசாற்ற முன்வந்து விட்டனர். தமிழரின் தாயகத்தின் தாகம், அதன் மேலுள்ள பற்று, தலைவரின் ஆட்சி மீதுள்ள விருப்பு இவற்றையெல்லாம் நிலை நிறுத்திக் காட்டியது பொங்கு தமிழ்.

தமிழ் மக்களின் வீரத்தனமும், உறுதியுடன் கூடிய பேருணர்ச்சியும் தாயகத்தின் மீதுள்ள ஆசையும் புடம் போட்டுக் காட்டிய ஓர் மயிர்க்கூச்செறியும் உயிர்ப்பின் சடங்குதான் பொங்குதமிழ். இது தமிழரின் பண்பாட்டின் உயிர்ச்சடங்கு. தமிழ்த் தாயக நடைமுறை அரசின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று தமிழர் தாயகம் நிர்மாணிக்கப்படும் காலங்களிலும் இந்தப் பொங்குத்தமிழ்ச் சடங்கு ஓர் பெரும் கொண்டாட்டமாய் தொடரும். ஏனெனில், இது தாயகத்தின் தேசியப் பண்டிகை. தமிழரின் கால் பதிந்துள்ள ஒவ்வொரு மண்ணிலும், அவன் மூச்சுக் காற்றுப்படும் ஒவ்வொரு இடத்திலும் இது உயிர்ப்புப் பெறும்.

- க.துகாரதி
அரங்க செயற்பாட்டுக்குழு

## நியாயத்தின் பால்....

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள பயணத் தடையின் பின்னணி குறித்தும் பல கருத்துருவாக்கங்கள் செயல்வடிவுகள் குறித்தும் பல தர்க்கங்களை முன்வைத்து நாம் சற்றில் மிக முக்கியமான விடயங்களை சொல்லி வைக்க விழைகின்றோம். ஏனென்றால் புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழீழ மக்களின் பார்வைக்காக இக் கருத்துக்களை முன் வைக்கின்றோம்...

அன்புக்குரிய எமது தமிழ் மக்களே!

எம்முடைய ஒருங்கிணைப்பின் பலத்தை நாமே உணரவேண்டிய வேளை இது! இப்போது நாம் முன் வைக்கின்ற தர்க்கங்களில் யதார்த்தத்தை சற்றே சீர்தூக்கி பார்க்கும்படியும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உலகின் பல பாகங்களிலும் நடைபெற்ற, நடைபெறுகின்ற உரிமைப் போராட்டங்களை மேற்குலகம் ஏற்றுக்கொண்டதில்லை. அதற்காக விடுதலைப் போராட்டங்கள் வெல்லாமலும் போனதில்லை. மேற்குலகத்தினைக் கேட்டோ அல்லது அவர்களது அங்கீகாரத்தை பெற்றோ மக்கள் தங்களது விடுதலைப் போராட்டங்களை ஆரம்பிக்கவோ அல்லது தொடரவோ போவதில்லை. இதுவரை காலமும் உலக வரலாற்றில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை பளிச்சிடும். அதாவது ஒரு விடுதலைப் போராட்டம் பலமுற்று விளங்கினால் உடனே உலக நாடுகள் சமாதானம் குறித்து பேச ஆரம்பிக்கும்.

### கிழக்குத் திமோர் முன்னுதாரணம்

போராட்டத்தின் பலம் குன்றினால் உலக நாடுகள் பாராமுகமாக இருக்கும். ஐந்து லட்சம் தமிழ் மக்கள் ஓர் இரவிலேயே அகதிகளாக மாறிய போது உலக நாடுகள் திரும்பியும் பார்க்கவில்லை. ஆனால் வன்னிப்பெரு நிலமும் ஆனையிறவுத் தளமும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட போது சம்பந்தப்பட்ட உலக நாடுகள் சமாதானம் குறித்துப் பஜனை பாட ஆரம்பித்து விட்டன. கிழக்குத் திமோரின் சுதந்திர தாகத்தை தணிப்பதற்கு இவர்களில் எவருமே முன்வரவில்லை. ஆனால் கிழக்குத் திமோரின் சுதந்திரம் தவிர்க்க முடியாத அளவிற்கு நெருங்கியபோது வாழ்த்துப்பா பாடுவதற்கு இவர்கள்தான் முன்நின்றார்கள்!

ஆகவே ஒற்றுமைதான் பலம்! வலிமைதான் வாழ்வு!

இந்த ஒருங்கிணைப்பின் ஊடே நாம் தெளிவான கருத்துக்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தெரிவிக்க வேண்டும்! வெறுமே அங்கலாய்ப்பதில் பயன் இல்லை!


ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள பயணத்தடையும், எதிர்காலத்தடை குறித்த எச்சரிக்கையும், தமிழ மக்களாகிய எங்களுக்கு அதிர்ச்சியை மட்டுமல்ல, அதிருப்தியை அளித்திருக்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தமானது ஒட்டுமொத்தமாகத் தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தம் என்றே தமிழினம் கருதுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் இதனை உடனடியாக மீள் பரிசீலனை செய்து தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது நியாயபூர்வமான நம்பிக்கையை தமிழ் மக்கள் வைத்துள்ளார்கள். அத்தகைய நியாயபூர்வமான நம்பிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் இழக்கும் நிலை வராது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். எது எப்படியிருப்பினும் தமிழீழ மக்களும் புலம்பெயர்ந்த தமிழீழ மக்களும் ஒரு விடயத்தில் உறுதியாக இருக்கின்றோம். அது நியாயத்தின் பால் நாம் உறுதியாக, ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதேயாகும். நியாயத்திற்கு எதிராக எத்தகைய அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றை நாம் கண்டிக்கவோ, எதிர்க்கவோ தயங்கமாட்டோம்.!

இதுவே இன்றைய தினம் நாம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விடுக்கக் கூடிய வேண்டுகோளும் செய்தியுமாகும்.!

*(அவுஸ்திரேலியா மெல்பேர்ன் 'தமிழ்க்குரல்' வானொலியில் ஒலிபரப்பாகிய ஆய்வின் எழுத்து வடிவம்)*

# தாய்மை



திருமணமாகி ஒரு சில வருடத்துள் ஒரு பெண்ணானவள் கருத்தரிக்கா விட்டால் வேதனை அடையும் தம்பதியர், பிறர் இதைக் குறித்து விசாரிக்கும் போது அடையும் துன்பமும் தாழ்வுணர்ச்சியும் சொல்லில் அடங்காது. நமது நாட்டில் மருத்துவத்துறை எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும் ஒரு தம்பதியினருக்குக் குழந்தை இல்லையென்றால் மனைவியை மட்டும் மலடு என்ற கடுஞ்சொல்லால் சொல்லித் தாக்கும் வழக்கம் உள்ளது.

மருத்துவர் கூற்றின்படி கருத்தரியாமைக்குப் பெண்கள் 30-40 சதவீதமும் ஆண்கள் 30-40 சதவீதமும் இருவரும் 20 சதவீதமும் எந்தக் குறையுமின்றி 10-15 சதவீதமும் காரணமாக இருக்கிறது. இதிலிருந்தே பெண்கள் மட்டுமே முழுக்காரணமில்லை என்பது தெளிவாகிறது. தாய் என்ற ஸ்தானத்தை இறைவன் பெண்ணுக்கு அளித்து இருக்கிறார். ஆனால், பெண்ணால் மட்டுமே கருத்தரிக்க முடியும் என்பதால் கருத்தரியாமைக்கு அவளை மட்டுமே காரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. குழந்தைப் பாக்கியம் வேண்டும் என்று சிகிச்சைக்குச் செல்வோர் கணவன் - மனைவி சகிதம் மருத்துவ ஆலோசனைக்குச் செல்ல வேண்டும். முடிந்தளவு உங்களது உறவினர், நண்பர்களை இதற்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டாம். எதிர் மறையான பரிசோதனை முடிவுகளை இயன்றளவு கணவன் - மனைவிக்குள்ளேயே வைத்திருத்தல் நலம்.

கருத்தரியாமை இரு வகைப்படுகிறது.

1. முதன்மையானது (Primary Subfertility)
2. துணையானது (Secondary Subfertility)

திருமணமாகி ஒரு வருடத்திற்கு எந்தக் கருத்தடைச் சாதனமும் உபயோகிக்காமல் இருந்தும் கருத்தரிக்கவில்லை என்றால் அவர்கள் முதன்மையான கருத்தரியாமை என்ற பிரிவிற்குள் அடங்குவர்.

ஒரு குழந்தைக்குப் பிறகோ அல்லது கருச்சிதைவு அல்லது குழந்தை இறத்தல் அல்லது குழந்தை இறந்து பிறத்தல் ஆகியவற்றுக்குப் பிறகு கருத்தரிக்காதோர் துணையான கருத்தரியாமை என்ற பிரிவிற்குள் அடங்குவர். உலகில் பல்வேறு காரணங்களால் குழந்தையின்மையின் சதவீதம் அதிகரித்து வருவதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**★ கரு எவ்வாறு உருவாகிறது எனப் பார்ப்போம்.**

1. கரு முட்டை வளர்ச்சியடைதல் (Maturation of ovum)
2. கரு முட்டை வெளியேறுதல் (Ovulation)
3. கரு இணைக் குழாயில் முட்டை நுழைதல் (Ovum enter the fallopian tube)
4. கரு இணைக் குழாயில் ஆணின் உயிரணுவுடன் கரு முட்டை இணைதல் (Fertilization)
5. ஜனித்த கரு கருப்பையில் பதிந்து வளர்தல் (Implantation of Fertilized Ovum and Development) போன்றவை நடக்கின்றன. இதில் எந்தஒரு இடத்தில் குறைஇருந்தாலும் கருத்தரிப்பு நடக்காது. பொதுவாக திருமணமானோர், திருமணமான ஒரு வருடம் வரை தானாகக் கருத்தரிப்பதற்கு முயற்சி செய்யலாம். வயது முதிர்ந்து திருமணம் புரிவோர், வியாதிகள் இருப்போர் மட்டும் கூடிய விரைவில் பரிசோதனைகளை மேற்கொள்வது நல்லது.

**★ ஆணின் குறைகள்**

1. உயிரணுக்கள் இல்லாமை 2. விந்து நீரில் உயிரணுக்கள் குறைவு
3. விந்து நீர் வெளியேறுவதில் குறைபாடு 4. ஆண்மைக்குறைவு
5. ஓமோன்களின் சமநிலையின்மை

**★ பெண்ணின் குறைகள்**

1. கரு முட்டை உருவாவதிலும், வெளியேறுவதிலும் குறைபாடு
2. கரு இணைக் குழாயில் அடைப்பு
3. கருப்பைக் கட்டிகள்
4. சூலக அழற்சி 5. கருப்பை நேராக இருத்தல்
6. சூலகக் கட்டி 7. மாதவிடாய் இல்லாமை
8. வலியுடன் கூடிய மாதவிடாய்
9. அதிகளவு மாதவிடாய் வெளியேறுதல்
10. குறைந்தளவு மாதவிடாய் வெளியேறுதல்
11. ஓமோன்களின் சமநிலையின்மை போன்றவை காரணங்களாக அமையலாம்.

மலடு என்ற வார்த்தையே இத்தகையோரை, புண்படுத்தும். கணவன் - மனைவிக்குள் மனவேறுபாடு, உறவினர்கள், நண்பர்களால் ஏற்படும் மன உழைச்சல், தாழ்வு மனப்பான்மை, கோபம், இயலாமை இதனாலேயே பல உடல் உபாதைகள் ஏற்படும்.

மன அழுத்தத்தின் காரணமாக வயிற்றில் புண் (Gastric ulcer), உயர் இரத்த அழுத்தம் (High Blood pressure), மாதவிடாய்க் கோளாறுகள் (Menstrual Disorders), அமைதியின்மை (Restlessness) போன்றவை ஏற்படலாம்.

இதைத்தவிர கருத்தரிக்காத பெண்களுக்கு கருப்பைக் கட்டிகள் (Uterine fibroids), மாதவிடாய்க் கோளாறுகள் (Menstrual Disorders), மார்பகப் புற்றுநோய் (Carcinoma of the Breast), கருப்பைப் புற்று நோய் (Carcinoma of the uterus) போன்றவை மற்றைய பெண்களை விட அதிக அளவில் ஏற்படச் சாத்தியம் உள்ளது.

இவற்றிற்கான சிகிச்சை முறைகளைப் பார்ப்போமானால், முதலில் கருத்தரியாமைக்குரிய அடிப்படைக் காரணத்தை அடையாளப்படுத்த வேண்டும். பின்பு அதற்குரிய தீர்வினை, வழிகளை ஆராயலாம். பொதுவான முறைகளை எடுத்துக் கூறுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. நம்பகமான மகப்பேற்று மருத்துவரை அணுகி அவரின் ஆலோசனைப்படி சிகிச்சைகளை மேற்கொண்டு தாய்மைப்பேற்றை அடைவதே சிறந்த வழியாகும்.

**நி.தர்ஷனோதயன்**
*4ஆம் வருடம், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.*

# குருதிச்சோகையை தடுப்பது எப்படி?

சுகநலம்

இன்றைய காலப்போக்கில் இலங்கையில் சகல தரத்திலான மக்களிடையே போசாக்குக் குறைபாட்டின் நிமித்தம் ஏற்படும் குருதிச்சோகை நோயானது முக்கியமான, ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சுகாதாரப் பிரச்சினையாயுள்ளது.

**★ குருதிச்சோகை என்றால் என்ன?**

குருதியின் சிவப்பு நிறத்திற்குக் காரணமான நிறப்பொருள் ஈமோகுளோபின் (Hemoglobin) ஆகும். இந்நிறப்பொருளே ஒட்சிசன் வாயுவைக் காவுகிறது. ஆகையால், நுரையீரல்களிலிருந்து உடற்கலங்களுக்கு ஒட்சிசனை எடுத்துச் செல்ல குருதியில் போதுமான அளவு நிறப்பொருள் இருப்பது அவசியம். இரும்புச்சத்துக் குறையும்போது ஈமோகுளோபினின் அளவும் குருதியில் குறைகிறது.இதுவே குருதிச்சோகை நிலையாகும்.

அத்துடன், குருதிச் சுற்றோட்டத்தில் உள்ள செங்குருதிச் சிறு துணிக்கைகளின் (Red Blood Cells) அளவு குறைவடைவதால் இழையங்களிற்குரிய ஒட்சிசன் விநியோகம் நலிவடைகிறது.

**★ நோய் அறிகுறிகளாவன :-**

1. விரைவில் களைப்படைதல் 2. சோம்பல் தன்மை
3. இளைப்பு 4. வளர்ச்சி குன்றுதல்
5. அவதானிக்கும் தன்மை, ஞாபகசக்தி குறைவடைவதல் 6. குறைப்பிரசவம் ஏற்படுதல்
7. இலகுவில் நோய்த்தொற்று ஏற்படல்
8. தீவிர நிலையில் இதயச் செயலிழப்பு (Cardiac failure)

இதைத் தவிர உடலின் மேலணி இழையங்களும் பாதிப்படைகின்றன. இதனால் தலைமுடி உதிர்தல், தலைமுடி வளர்ச்சியின்மை, உலர்ந்த பிளவுபட்ட தோல், கரண்டியுருவான நகங்கள் (Koilonychia), வாயின் ஓரங்களில் புண் தன்மை (Angular stomatitis), நாக்கில் நோவும் புண் தன்மையும் (Painfulg lossitis), உணவு விழுங்குவதில் கடினத்தன்மை (Dysphagia) மற்றும் உணவுப் பதார்த்தமல்லாத மண், கரி போன்றவற்றை உண்ணல் (Pica) என்பனவும் ஏற்படும்.

இரும்புச் சத்துக் குறைப்பாட்டினாலேற்படும் குருதிச்சோகை நோயானது தாய் மரணத்திற்கான மிக முக்கிய காரணமாகும். மற்றும் குறைப்பிரசவங்கள், முதிர்முலவுரு நிலையில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாட்டிற்கும் வழிவகுக்கும். குருதிச் சோகை நோயானது பிரதானமாகத் திருமண வயதையடைந்த இளம் பெண்களையே தாக்குகின்றது. மற்றும் வளரும் பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், குறைப் பிரசவக் குழந்தைகள், நீண்ட கால நோய் நிலைமையால் பாதிப்புற்றோர் போன்றோரும் அதிகம் பாதிக்கப்படும் குழுவினர்களாகும்.

வளர்ச்சிப் பருவத்திலிருந்தே இரும்புச்சத்து அதிகம் தேவைப்படுகிறது. பிறப்பிலிருந்து 18வயதுவரை சிறிதளவு இரும்பு உடலில் சேமிக்கப்படுகிறது. வளர்ந்த பெண் பிள்ளைகளிற்கு ஏனையோரைவிட கூடுதலான அளவு இரும்புச்சத்து தேவைப்படுகிறது. மாதவிடாய் ஏற்படும்போது, குருதியிழக்கப்படுவதால் செங்குருதிச் சிறுதுணிக்கைகளுடன் சேர்ந்து இரும்புச் சத்தும் இழக்கப்படுகிறது. ஆகவே, குறையும் இரும்புச் சத்தை நிவர்த்தி செய்யாவிடில் உடலிற்குப் பாதிப்பு ஏற்படும். இதனை விட கர்ப்ப காலத்தில் தாயிலிருந்து,கருப்பையினுள் உள்ள குழந்தைக்கு இரும்புச்சத்து கடத்தப்படுவதாலும், பாலூட்டும் போது தாய்ப்பாலூடாக இரும்புச்சத்து குழந்தைக்கு வழங்கப்படு வதாலும் மேலதிக இரும்புச்சத்து தேவைப்படுகிறது.

**★ குருதிச்சோகை நோய்க்குரிய காரணிகள்-**

1. உணவின் வழியாகத் தேவையான அளவு இரும்புச் சத்தைப் பெறாமை (Inadequate intake)
2. இரும்புச் சத்து முற்றாக சிறுகுடலில் அகத்துறிஞ்சப்படாமை (Malabsorption)
03. அதிகூடிய குருதிப் பெருக்கு
   - கொழுக்கிப்புழு நோய் (Hook worm infestation)
   - குருதிப்பெருக்கு(திடீர்விபத்தினாலான) (Massive haemorrhage)
   - மூலநோய் (pules)
   - மலேரியா
   - மாதவிடாய் பிரச்சினைகள் (Menstrual disorders)

**★ கொழுக்குப்புழுத் தொற்று-**

மனித மலத்தினால் அழுக்காக்கப்பட்ட மண்ணில் வெறுங்கால்களுடன் நடக்கும்போது, மண்ணில் உள்ள கொழுக்குப்புழு, கால்விரல்களிற்கு இடையிலான மென்மையான பகுதிகளைத் துளைத்து, உட்சென்று மனித சிறுகுடலைச் சென்றடைந்து, அங்கு குதியை அதிகளவில் உறிஞ்சுகின்றது. இதனால் குருதிச் சோகை நோயேற்படும்.

**★ நோய்த்தடுப்புவழி முறைகளாவன-**

1. பாதணியுடன் நிலத்தில் நடத்தல் - இதனால் கொழுக்குப் புழுவின் உட்செல்லுகை தவிர்க்கப்படுகிறது.
2. இரும்புச் சத்துள்ள உணவுவகைகளைப் போதிய அளவில் உள்ளெடுத்தல்

(உ-ம்) நிறைவான இரும்புச்சத்துள்ள உணவுவகைகள் :-
(Haem iron) சிறந்தவை
ஈரல்,சிறுநீரகம், மீன்.
நிரம்பாத இரும்புச்சத்துள்ள உணவு வகைகள் :-
(Non haem iron)

தானியவகை, பச்சை இலைவகை, முட்டை, காய்கறி, பாலூட்டும் கர்ப்பிணித் தாய்மார், பூப்படைந்த இளம் பெண்கள், இழப்பை நிவர்த்தி செய்யும் வகையில் மேலதிக உணவுகளை உள்ளெடுத்தல் அவசியம்.

சிறுபிள்ளைகள் ஞாபக வளர்ச்சி அடையவும், பாடங்களில் திறமை, கவனம் செலுத்தும் தன்மை, ஞாபகநிலை, மீள ஞாபகப்படுத்தும் திறன் போன்ற சகல காரியங்களிலும் சிறந்த நிலையைப் பெற குருதிச்சோகையிலிருந்து மீட்சிபெறுவது அவசியம்.

எதிர் காலத்தில் குருதிச்சோகையின் பிடியில் அகப்படாத புதியதோர் சமூதாயத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றாய் முயல்வோமாக!

*- செல்வி.கிறிஸ்ரா நிஷாந்தினி அன்ரன்,*
*4ஆம் வருடம், யாழ்.மருத்துவபீடம்.*